2973

T.N.L.A. Debates

Official Report

VOL 38 NO 2

10th April 1987

D
1211,31 N87
N87.38.2
136518

வெளியீடு 4–4–1988

Issued 4–4–1988

2973

1 - ஜூலை 1988

# தமிழ்நாடு
## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
### செயலக வெளியீடு

# TAMIL NADU
## LEGISLATIVE ASSEMBLY DEBATES
### OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 10, 1987-தொகுதி 38-எண் 2.

Friday, the 10th April 1987 Volume 38-No 2.

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

**Legislative Assembly Secretariat Fort St. George,**
**Madras-600 009**

விலை ரூ.3.00 காசுகள்]

[Price Rs-3.00 paise

D
V211,31 N87
N87-38-2

136518
சென்னை-600 008.

உள்ளடக்கம்

10—4—1987

பக்கங்கள்

1. இரங்கல் குறிப்பு—
முன்னாள் உறுப்பினர் மறைவு 169—170

2. வினாக்கள்—விடைகள்—
உடுக்குறியிட்ட வினாக்கள் 170—212

3. தகவல் கோரல்—
(அ) வறட்சி நிவாரணக் குழுவை உறுப்பினர்கள் சந்திக்க ஏற்பாடு 212
(ஆ) அரசு நிகழ்ச்சிகளுக்கு உறுப்பினர்கள் அழைக்கப்படாமை 212—213

4. விதி 110 இன் கீழ் அமைச்சரின் அறிக்கை—
வறட்சி நிவாரணப் பணிகள் குறித்து 213—215

5. கவன ஈர்ப்பு—
(அ) சீர்காழியில் தையல் தேர்வு மையம், அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து 217—219
(ஆ) பட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்கு கச்சாப் பொருள்கள் கிடைக்காததால் பாதிப்பு 219—226
(இ) மணப்பாறை வட்டத்திலுள்ள சில கிராம மக்கள் பத்திரப் பதிவுக்காக விராலிமலை செல்ல வேண்டியதில் உள்ள இடர்ப்பாடு 226—228
(ஈ) அதிக வருவாயுள்ள கோயில்களுக்கு கணக்கதிகாரிகள் நியமிக்கப் படாமலிருப்பது குறித்து 228—232
(உ) புன்னம்புழா-பாண்டியாறு திட்டம் பற்றி கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து 232—236

| | பக்கங்கள் |
|---|---|
| **6. அறிக்கை அளித்தல்—** | |
| (அ) பொதுக் கணக்குக் குழு | 236 |
| (ஆ) அரசு உறுதிமொழிக் குழு | 237 |
| **7. வரவு-செலவுத் திட்டம், 1987-88—வாக்கொடுப்பு—(தொடர்சி)** | |
| கோரிக்கை எண் 21—மீன்வளம் | 237 |
| கோரிக்கை எண்: 32—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் | 238 |
| *மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் | 239 |
| | 311—322 |
| *திரு. எஸ். வேணுகோபால் | 239—250 |
| திரு. எப். எம். இராசரத்தினம் | 250—258 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 258—266 |
| டாக்டர் கே. பி. இராமலிங்கம் | 266—276 |
| திரு. எஸ். ரெத்தினராஜ் | 276—28 |
| திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன் | 286—29 |
| திரு. பொ. உத்திராபதி | 291—297 |
| *திரு. அ. வெங்கடாசலம் | 297—303 |
| திரு. மா. சுந்தரநாதன் | 303—311 |
| 6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 323—325 |


2973

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1987 ஏப்ரல் 10, வெள்ளிக்கிழமை

**பங்குனி 27, அட்சய—திருவள்ளுவர் ஆண்டு 2018**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு"

குடிகளை அன்போடு அணைத்துக்கொண்டு செங்கோல் செலுத்துகின்ற அரசனுடைய அடியைப் பொருந்தி உலகம் நிலை பெறும்.

### 1. இரங்கல் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் மறைவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. டி. கணபதி அவர்கள் 24—3—1987 ஆம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு டி. கணபதி அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரை திருநெல்வேலி மாவட்டம் 'பறவூர்' தொகுதியிலிருந்தும், மற்றும் 1971 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரை திருநெல்வேலி மாவட்டம் 'நாங்குனேரி' தொகுதியிலிருந்தும் இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். மேலும் 1957 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரை திருநெல்வேலி மாவட்டம் திருச்செந்தூர் தொகுதியிலிருந்து பாராளுமன்ற மக்களவை உறுப்பினராகப் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப் பட்டார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)*

## 2. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### தஞ்சாவூர் மாவட்டத்தில் தண்ணீர் தட்டுப்பாடு.

366 (*வினா எண் 9611)—**திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு** நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டத்தில் தொடர்ந்து தண்ணீர் தட்டுப்பாடு இருப்பதால் இருபோக நிலம் வைத்திருக்கும் குத்தகை சாகுபடிதாரர் ஒரு போகம் நடும்போது அதற்குள்ள குத்தகையை வசூலிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நில வெளியேற்றத்திடமிருந்து பாதுகாப்பு) சட்டத்தில் இருபோகம் அல்லது ஒருபோகம் பயிரிடும் குத்தகை சாகுபடிதாரர் என்று வகைப்படுத்தப்படவில்லை. 1956 ஆம் ஆண்டு தமிழ்நாடு நியாய ஊதியச் சட்டத்தின் கீழ், சாகுபடி செய்யும் விளைச்சலில் குத்தகைதாரரும், நிலச் சுவான்தாரரும் 75 :25 விகிதப்படி பிரித்துக்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. தண்ணீர்த் தட்டுப்பாடு காரணமாக இருபோக சாகுபடி செய்யப்படும் நிலத்தில் ஒருபோகம் சாகுபடி செய்ய நேர்ந்தாலும். மேற்குறித்த விகிதப்படி நிலச் சுவான்தாருக்குக் குத்தகைத் தொகை அளிக்கப்பட வேண்டும். மேலும் குத்தகை என்பது நிலச் சுவான்தாரருக்கும், குத்தகைகாரருக்கும் உள்ள ஒப்பந்தம். இதில் அரசு தலையிட்டு வசூல் செய்து கொடுக்கும் வினா எழாது.



**திரு. மு. இராசாங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாக மேட்டூர் அணையிலிருந்து உரிய காலத்தில் தண்ணீர் கிடைக்காத காரணத்தாலும் இயற்கையின் மாறுபட்ட சூழ்நிலையின் காரணமாகவும் ஒரு போகமே பயிரிடுகின்ற ஒரு நிலை கடந்த சில ஆண்டுகாலமாக இருக்கிறது. அந்த நிலை காரணமாக, இருக்கிற பெரிய நிலச் சுவான்தார்களான 3 மடாதிபதிகளுக்கும் அறநிலையத் துறையினருக்கும் சொந்தமான நிலங்களும் அதிகமாக இருக்கிற காரணத்தால் அவர்கள் இரு போகத்திற்கு உரியதையே வசூலிக்கிறார்கள். அவர்கள் கொடுக்கின்ற ரசீதிலும் இரு போகத்திற்குரிய நெல்லைக் கொடுத்தது போக, பாக்கியைக் கட்ட, ரெவின்யூ கோர்ட் மூலம் வசூலிக்க முற்படுகின்றனர். அதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நான் விடையிலேயே தெளிவாகக் குறிப்பிட்டேன். இது நிலச் சொந்தக்காரர்களுக்கும் குத்தகைதாரர்களுக்கும் இடையிலே ஏற்படுகின்ற ஒப்பந்தம் 75:25 என்ற விகிதத்தில் ஏற்பட்டுள்ளது. இருபோக சாகுபடியாக இருக்குமானால் இரு போகத்திற்கானதை அந்த விகிதத்தின் அடிப்படையில் பிரித்துக் கொடுக்க வேண்டும். ஒரு போக சாகுபடி என்றால் அந்த ஒரு போக சாகுபடியில் வருவதை 75:25 என்று பிரித்துத் தரவேண்டும். ஒரு போக சாகுபடியே ஆகி, இரு போக சாகுபடிக்கான அளவு கேட்பார்களானால் அது தவறு. அந்த வகையிலே கொடுக்க முடியாது என்று சொல்லலாம். கோர்ட்டிலேகூட வழக்கும் தொடரலாம். ஆனால் ஒரு போகமாக இருக்குமானால் ஒரு போகத்தின் அளவிலே விகிதாசார அடிப்படையிலே தரவேண்டும். வாங்கித் தருகின்ற பொறுப்பை அரசு எடுத்துக்கொள்வதற்கு இயலாது. ஒரு போகத்திற்குரியது என்றால், ஒரு போகத்திற்குரியதையும் இரு போகம் என்றால் இரு போகத்திற்குரியதையும் தர வேண்டும். விகிதாசாரப்படி தர வேண்டும். அதைத் தள்ளுபடி செய்வதற்கு உரிமை கிடையாது.

**திரு. மு. இராசாங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு போகம் சாகுபடி செய்கின்ற காலங்களில் இரண்டு போகத்திற்கான குத்தகையைக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். என்னுடைய தொகுதியிலே 75 : 25 என்ற

குத்தகை விகிதத்தை அரசு அறிவித்து இருந்தாலும் நடைமுறைப் படுத்துவதில் அறநிலையத் துறையும் அதைச் சேர்ந்த தணிக்கைக் பிரிவும் தள்ளுபடி செய்து கொடுக்க ஒத்துக்கொள்ள மறுப்பதன் காரணமாக மடாதிபதிகளும் கோயில் நிர்வாகிகளும் அதைத் தள்ளுபடி செய்து கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். அதற்குரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே கூறியபடி ஒரு போகம் சாகுபடி செய்த நிலையில் இரண்டுபோகம் குத்தகை கேட்பார்களானால் அது தவறு, ஒரு போகத்திற்குத்தான் அந்த விகிதாச்சாரப்படிதான் பெறவேண்டும். மீறிக் கேட்பார்களானால் அதற்கு ரெவின்யூ கோர்ட் மூலமாகவோ வேறு வகையிலோ சட்டப்படி வழக்குத் தொடரலாம். அவர்கள் இரண்டு போகத்திற்கான குத்தகையைக் கொடுக்கவேண்டியதில்லை. ஒரு போகத்திற்குதான் தரவேண்டும்.

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அறிவித்தபடி 75 விவசாயிகளும், 25 நிலச் சொந்தக்காரர்களும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இருக்கிறது. ஆனால் குத்தகை விவசாயம் என்பது அரசு அதிகாரிகளால் குத்தகைப் பதிவு, அந்தப் பதிவுப் பத்திரம் வைத்திருக்கிற விவசாயிகளிடம்தான் 75, 25 என்று பெறுவதற்கான சாத்தியக் கூறு இருக்கிறது. மேலத் தஞ்சைப் பகுதியில் பாபநாசம், கும்பகோணம் இப்படிப்பட்ட தாலுக்காக்களில் பெரும்பகுதியினர் பதிவு இல்லாமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட விவசாயிகளிடம் மாவுக்கு 8 கலம், 10 கலம் என்று வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நெருக்கடிகள் எல்லாம் இருக்கின்றன. எனவே குத்தகைப் பதிவு இல்லாத பகுதிகளுக்கு சர்க்கார் அதிகாரிகளை விசேஷமாக அனுப்பி நேரடியாக விசாரணைசெய்து குத்தகைப் பதிவு இல்லாதவர்களுக்கு குத்தகைப் பதிவு செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? இன்னொன்று 1990 ஆம் ஆண்டு வரையிலும் 5 தவணைகள் என்று அரசு அறிவித்திருக்கிறது. பலர் ரெவின்யூ கோர்ட்டிற்கு, வழக்கு மன்றத்திற்குச் செல்லக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே 5 தவணைகள் என்பதை 3 தவணைகள் என்று குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? குத்தகைப் பதிவு



இல்லாதவர்களுக்கு குத்தகைப் பதிவு செய்வதற்கும், 5 தவணைகளை 3 தவணைகளாகக் குறைப்பதற்கும் இந்த இரண்டின் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தகைப் பதிவு சட்டப்படி குத்தகை பதிவின்கீழ் கொண்டுவரப்பட்டால்தான் சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடியும். பதிவு செய்யப்பட்டால்தான் சட்டப்படி செலுத்தமுடியும். இல்லாவிட்டால் சட்டப்படியோ அல்லது வேறு எந்தவித முறையிலோ நடவடிக்கை எடுக்க முடியாது. ஆகவே குத்தகை பதிவு செய்யவேண்டும். அப்படிப் பதிவு செய்வதற்கான உரிமை இருந்து பதிவு செய்யப்படாததன் சூழ்நிலை இருக்குமானால் அதைச் செய்வதற்கான முயற்சியைச் செய்வதற்கு மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்று அதற்கான விண்ணப்பத்தை வருவாய்த் துறை அதிகாரிகளிடத்திலே தெரிவிக்கலாம். அந்த வகையிலே அதற்கு ஏற்பாடு செய்யலாம்.

**திரு. க. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தினுடைய விவசாயமே மேட்டூரிலேயிருந்து வருகிற தண்ணீரை எதிர்பார்த்துத்தான் நடைபெறுகிறது. மேட்டூரிலே தண்ணீர் இல்லையென்றால் விவசாயம் அதனால் தாமதம் ஆனாலும் அல்லது தண்ணீர் இல்லை என்ற காரணத்தினால் விவசாயமே பாதிக்கப்பட்டாலும் அரசானது அங்கே 2 போகம் பயிர் செய்யக்கூடாது என்றும் குள்ளக்கார் 3-வது ரகம் பயிர் செய்யக்கூடாது என்றும் அறிவிக்கிறது. ஆகவே அப்போது விவசாயிகள் ஒரு போகம்தான் சாகுபடி செய்கிறார்கள். ஒருபோகம் சாகுபடி செய்யும்போது ஒரு போகத்திற்கான குத்தகையைத்தான் வசூலிக்க வேண்டும். ஆனால் இரண்டு போகம் என்று குத்தகைச் சட்டத்தில் இருந்தாலும் 2 போகம் அப்போது வசூல் செய்யக்கூடாது என்ற ஆணையை அரசு பிறப்பிப்பதன் மூலமாக பிற்காலத்திலே கோர்ட்டிற்குச் செல்லவேண்டிய சிரமங்கள் இல்லாமல் இருக்கும். எனவே அப்படிப்பட்ட ஆணையை அரசு பிறப்பிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஆணை பிறப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை. சட்டத்திலே அது தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு போகம் சாகுபடி இருந்தாலும் ஒரு போகத்திற்கான குத்தகையை விவசாயிகள் செலுத்தினால் போதும் இரண்டு போகம் பயிர் செய்தால்தான் இரண்டு போகம் செலுத்த வேண்டும். மேட்டூர் அணையிலே தண்ணீர் திறந்து விடுகிறபோது கடைமடை வரையில் அது செல்கிறதா இல்லையா என்று விவசாயிகளுக்கு அறிவிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. இல்லாவிட்டால் அவர்கள் தண்ணீர் வரும் என்று ஏமாந்து சாகுபடி செலவுகளையெல்லாம் செய்து நட்டத்திற்கு ஆளாவார்கள் என்ற காரணத்தினால் ஒரு போகம் மட்டுமே

(முற்பகல் 10-10)

செய்யுங்கள் என்று சிலபல இடங்களுக்கு வரையறைகள் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. நீர்ப்பாசன வசதி ஏற்படுகிற சிலபல இடங்களில் இரண்டு போகம் செய்யலாம் என்ற நிலைமை ஏற்படுகிறது. அதை அவ்வப்போது, நாளுக்கு நாள், வாரத்திற்கு வாரம், மாதத்திற்கு மாதம் நாம் கணக்கிட்டு, தண்ணீரினுடைய அளவையும் நீர்ப்பாசன அளவையும் கணக்கிட்டு முடிவு செய்ய வேண்டியிருப்பதன் காரணமாக, அவ்வப்போது உத்தரவுகள் பிறப்பிக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆனால், வாரத்திற்கு வாரம், நிலத்தைப் பயிரிடும் படியாகச் செய்ய வேண்டுமென்பதும் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்பதும் அதன் மூலமாக, விவசாயிகளுக்கு நன்மை ஏற்பட வேண்டுமென்பதும்தான் அரசினுடைய நோக்கமாகும். ஆனால், அதனால் இடர்ப்பாடுகள் ஏற்படாமல் தவிர்க்க வேண்டியது அரசினுடைய கடமையாக இருப்பதன் காரணமாக, சிலபல கட்டுதிட்டங்களுடைய அடிப்படையில், நீர்ப்பாசன வசதிகளை நாம் கணிக்க வேண்டிய அவசியத்தில் இருந்து வருகிறோம்.



## தமிழகத்தில் கூட்டுறவு பண்டக சாலைகளுக்கு வியாபார எல்லை விதிமுறைகள்.

367—(* வினா எண். 10756) திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள கூட்டுறவு பண்டக சாலைகளுக்கு வியாபார எல்லை (ஏரியா ஆப் ஆப்ரேஷன்) விதிமுறைகள் உள்ளதா ?

(ஆ) மேற்படி விதிமுறைகளுக்கு மாறாக தங்களின் எல்லையைத் தாண்டி வெளி மாவட்டங்களில் உள்ள நிறுவனங்களுக்கு பண்டங்கள் அல்லது உணவுப் பொருட்கள் விநியோகிப்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம்.

(இ) பண்டகசாலைகள் தங்களுடைய விவகார எல்லையிலுள்ள அரசுத்துறை மற்றும் அரசு நிறுவனங்களுக்கு மட்டும்தான் ஒப்பந்தப் புள்ளிகள் கொடுக்கலாம் என்றும் விவகார எல்லைக்கு அப்பாலுள்ள மேற்படி நிறுவனங்களுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் கொடுக்கக்கூடாது என்றும், அதுவும் பண்டக சாலைகள் தாங்கள் சாதாரணமாக வியாபாரம் செய்யும் பொருட்களுக்கு மட்டும்தான் ஒப்பந்தப் புள்ளி கொடுக்கலாம் என்றும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் துறை சுற்றறிக்கையில் பண்டகசாலைகளுக்கு அறிவுரைகள் வழங்கியுள்ளார்.

திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோல் Area of operation தாண்டி விதிமுறைகளுக்கு அப்பால் ஏதேனும் கூட்டுறவுப் பண்டக சாலைகள் விநியோகம் செய்திருக்கிறதா ? அதுபற்றிய குறிப்பை அறிவிக்க இயலுமா என அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கடலூர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் வேலூரிலுள்ள மத்திய சிறைச்சாலைக்குத் தேவையான பொருட்களை செப்டம்பர் 1985-க்கு முன் சப்ளை செய்தது. ஆகவே, விவகார எல்லைக்கு அப்பாற்பட்டு இன்னொரு மாவட்டத்தைச் சேர்ந்து செய்தது தவறு என்று கண்டு பிடிக்கப்பட்டு, அதற்குப் பிறகு அப்படிப்பட்ட நிலைமைகளுக்கு ஆளாகக் கூடாது என்ற பிறகு எல்லா மாவட்டங்களினுடைய மொத்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இனிமேல் அப்படிப்பட்ட அளவுக்கு, அந்த விவகார எல்லைக்கு உட்பட்டுதான் ஒப்பந்தப் புள்ளிகள் செய்ய வேண்டுமே தவிர, அந்த விவகார எல்லைக்கு அப்பாற்பட்டு எந்த ஒப்பந்தப் புள்ளிகளையும் எந்த மொத்தக் கூட்டுறவு விற்பனை சங்கமும் செய்யக் கூடாது என்று செய்யப்பட்டிருக்கிறது. எனக்குக் கொடுத்திருக்கிற குறிப்புகளின்படி அந்தக் கடலூர் கூட்டுறவுச் சங்கம் மீறி நடந்தது. இப்பொழுது தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது.

**ஜெயங்கொண்டம் தொகுதி, தா. பழூரில் அமராவதி கூட்டுறவு பல்பொருள் அங்காடி.**

368—(*வினா எண் 11300) **டாக்டர் ந. மாசிலாமணி:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள தா. பழூர் கிராமத்தில் அமராவதி கூட்டுறவு பல்பொருள் அங்காடி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**1985, 1986 ஆண்டுகளில் இறந்த தமிழக அரசு ஊழியர்கள்.**

369—(*வினா எண். 12485) **திரு. எஸ். வேணுகோபால்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985, 1986 ஆகிய ஆண்டுகளில் இறந்த தமிழக அரசு ஊழியர்கள் எத்தனை பேர்?





(ஆ) அவர்களில் எத்தனை குடும்பங்களுக்கு ரூபாய் இருபதாயிரம் நிவாரணத் தொகை வழங்கப்பட்டது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

| | |
|---|---|
| (அ) 1985-ம் ஆண்டு இறந்த தமிழக அரசு ஊழியர்கள் | 2,363 பேர் |
| 1986-ம் ஆண்டு இறந்த தமிழக அரசு ஊழியர்கள் | 2,609 பேர் |

(ஆ) 1985-ம் ஆண்டு இறந்த 2,363 அரசு ஊழியர்களில் 2,359 அரசு ஊழியர் குடும்பங்களுக்கும், 1986-ம் ஆண்டு இறந்த 2,609 அரசு ஊழியர்களில் 2,592 அரசு ஊழியர் குடும்பங்களுக்கும் குடும்ப நலத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

**திரு. எஸ். வேணுகோபால்:** தலைவர் அவர்களே, மீதி இருக்கிற ஊழியர்களுக்கு வெகு சீக்கிரமாகக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு விரைவிலே கொடுக்க வேண்டுமென்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சிலபல நேரங்களில், சிலபல இடர்ப்பாடுகள் ஏற்பட்டுவிடுகின்றன. அதற்குக் காரணம், அரசு ஊழியர், தான் பணியில் இருக்கும் போது இறந்தால், குடும்ப நல நிதி யாருக்கு வழங்கப்படவேண்டுமென்று வாரிசு நியமனச் சான்று அறிவிக்காமல் சிலபேர் இறந்து விடுகிறார்கள். வாரிசு நியமனச் சான்று கிடைக்காத காரணத்தால், வட்டாட்சியரிடத்திலிருந்து வாரிசுச் சான்றிதழ் பெறுவதில் சில நேரங்களில் காலதாமதம் ஏற்பட்டு விடுகிறது. இறப்புச் சான்றிதழ் பெறுவதிலும் சில நேரங்களில் காலதாமதம் ஏற்படுகிறது, காலத் தாழ்வு ஏற்படுகிறது. தற்கொலை, கொலை, விபத்து ஆகிய காரணங்களில் இறக்கும் அரசு ஊழியர்களைப் பொறுத்தவரை காவல் துறை விசாரணை அறிக்கை, இறப்புச் சான்றிதழ், பரிசோதனை அறிக்கை ஆகியவற்றின் மூலச்

சான்றிதழைப் பெறுவதில் காலத்தாழ்வு ஏற்பட்டு விடுகிறது. வாரிசுதாரர் யார் என்பது குறித்து முடிவு செய்யப்படுகின்ற பொழுது சில சமயங்களில் சச்சரவுகள் ஏற்பட்டு உண்மையான வாரிசு தான் என்று வருகின்றபொழுது, நீதிமன்றத்திற்குச் சென்று முடிவு கட்ட வேண்டிய அளவிலே இருக்கும்போது, நீதிமன்றம் யார் வாரிசு என்று நிர்ணயிக்கும்போது, அவர்களுக்குத் தரவேண்டிய அவசியம் ஏற்படுகின்றபொழுது காலத் தாழ்வு ஏற்படுகிறது. இவை தவிர மற்றவற்றில், ஐயப்பாட்டுக்கு இடமில்லாமல் இருப்பவர்களுக்கு உடனடியாக இந்த நல நிதி வழங்கப்பட்டு வருகிறது.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் பணியில் இருக்கும்போது இறந்து விட்டால், அவர்களது துணைவியார்களுக்கு அல்லது வாரிசுதாரர்களுக்கு பணிப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் வேலை கொடுக்கும் திட்டம் உடனடியாக நிறைவேற்றப்படாமல் சில இடங்களில் காலதாமதப்படுத்தப்படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா? இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கி, உடனடியாகப் பணி கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அரசுப் பணியிலிருந்து இறந்து விடுபவர்களின் வயது, பணி புரிந்த காலம், அவர்கள் குடும்பத்தில் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள், அவர்களில் எத்தனை பேர் வேலையில் இருக்கிறார்கள், எத்தனை பேர் வேலை செய்யாமல் இருக்கிறார்கள், அந்தக் குடும்பத்தை பாதுகாக்கும் சூழ்நிலை இவைகளையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு, இளமையிலே அரசு ஊழியர் இறந்து, அவரது துணைவியாரும் படித்திருந்தால், வயது வரம்பைத் தளர்த்தி, கல்வித் தகுதியைத் தளர்த்தி, ஓரளவுக்கு அவர்கள் குடும்பத்திற்குப் பாதுகாப்பு அளிக்கும் அளவுக்கு, விதி முறைகளைத் தளர்த்தி வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. அவர்கள் வேலை பார்த்த துறையிலேயே இவர்களுக்கும் வேலை தருகிறோம். சில நேர்வுகளில் அந்தத் துறையில் தர முடியாத நிலைமை ஏற்பட்டால், மனிதாபிமான அடிப்படையில் வேறு துறைகளில் வேலை கொடுக்க முயற்சி எடுக்கப்படுகிறது. எனவே





உடனடியாக என்று சொல்ல முடியாது. உடனடியாகத் தர வேண்டுமென்று எண்ணினாலும், சிலபல மாதங்கள் அதில் கழிந்து விடுகிறது.

திரு. எஸ். வேணுகோபால்: பேரவைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட விண்ணப்பங்கள் ஏராளமாக இருக்கின்றன என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, ஏராளம், சில என்பது இப்போது சொல்ல முடியாது. கணக்கு எடுத்துப் பார்த்தால் எவ்வளவு என்று திட்டவட்டமாகத் தெரியும். அதுபற்றிய நேர்வுகள் வந்துகொண்டிருக்கின்றன. அவற்றை அவ்வப்போது ஆராய்ந்து அந்தந்தத் துறைகள் அனுப்புகிறார்கள். அப்படி அனுப்பிய வுடனே, அந்தந்தக் குடும்ப நிலைமை, தகுதி எல்லாவற்றையும் பார்த்து, நியாயம் இருக்குமானால் 2, 3, 4 விதிகளைத் தளர்த்தி மனிதாபிமான அடிப்படையில் ஏதாவது ஒரு வேலை—கடைசி மட்டத்திலே இருக்கிற வேலையாவது தந்து, ஓரளவுக்கு அவர்களுக்கு ஊதியம் வர வேண்டுமென்ற அடிப்படையில் செய்யப்படுகிறது. அந்தக் குடும்பத்தில் யாரும் சம்பாதிக்கவில்லை என்றால் அதிகமான அளவுக்கு மனிதாபிமான உணர்வு காட்டப்பட வேண்டியிருக்கிறது. அதனால் தனித் தனி நேர்வாகக் கவனித்து வருகிறோம்.

திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கு அரசு ஊழியர்களாகப் பணி புரிகிறவர்கள் ஓய்வு பெற்றவுடன் அவர்களுக்குக் கொடுக்கப்படக்கூடிய பிராவிடன்ட் பண்ட் தொகை, கிராஜுட்டி தொகை ஆகியவற்றைப் பெற நீண்ட காலம் காத்திருக்க வேண்டிய நிலை இருந்து கொண்டிருக்கிறது. அந்த நிலையைப் போக்குகின்ற விதத்திலே, அவர்கள் ஓய்வு பெறும் தினத்தன்றே அவர்களுக்கு இந்தத் தொகைகளைக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, பெரும்பாலோரைப் பொறுத்த வரையில் அப்படிப்பட்ட இடர்பாடுகள் ஏற்படுவதில்லை. அவர்கள் ஓய்வு பெற்றவுடன் இந்தத் தொகைகள் கிடைக்க வழி

வகை இருக்கிறது. சில பேருடைய ஆவணங்களைப் பதிவு செய்வதில் சிக்கல்கள், வேறு பல நிலைமைகள் ஏற்படுகின்றது. அவர்கள் பல்வேறு துறைகளுக்குத் தாவித் தாவி, அங்கேயிருந்து இங்கே வந்தார்களா, அதை கணக்கில் எடுத்துக்கொள்வதா என்றெல்லாம் சிக்கல் ஏற்பட்டு, இடர்ப்பாடுகள் வரும்போது இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க அவசியம் ஏற்படுகிறது. பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய அவசியம் ஏற்படும்போது, அவற்றைத் தீர்த்ததற்குப் பிறகு தர வேண்டுமென்ற அடிப்படையில் நிலுவையில் வைக்கப்படும் சூழ்நிலை ஏற்படுகிறது. ஆனால் பெரும்பாலான நேர்வுகளில் அவர்களுக்கு உரிய காலத்தில் வழங்கப்படுகிறது. இதை உடனுக்குடன் கவனித்து, ஏ ஜி. அலுவலகத்தில் சீரியர் செய்ய வழி முறைகளைச் செய்திருக்கிறார்கள். இதற்காக கணக்கு கருவூலத் துறையில்கூட தனிப் பிரிவுகள் எல்லாம் ஏற்படுத்தப்பட்டு, காலத்தாழ்வு ஏற்படுத்தக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, அரசுப் பணியிலே இருந்து இறந்துவிடுபவர்களின் வாரிசுகளுக்கு பணி கொடுக்கும் நிலைமையைப் பற்றி நிதி அமைச்சரவர்கள் சொன்னார்கள். கணவன் இறந்துவிட்டால், மனைவி வாரிசு என்ற அடிப்படையில் பணி கொடுக்கப்படுகிறது. அப்படி பணி பெற்ற பின், ஓராண்டு, இரண்டு ஆண்டுகள் கழித்து அவர் மறுமணம் செய்துகொண்டால், அவரை அந்தப் பணியி லிருந்து நீக்குகிறார்கள். இதைப்போன்ற நிகழ்வுகள் அண்ணா மாவட்டத்தில் நடந்திருக்கிறது. மறுமணம் செய்துகொண் டாலும் அரசு கொடுக்கும் சலுகை இருக்கும், அவர்கள் தொடர்ந்து பணியில் இருக்கலாம் என்ற அளவுக்கு அரசு ஏதாவது வழிவகை செய்யுமா ?

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கணவன் இறந்தபிறகு விதவை என்ற மனிதாபிமானத்தின் அடிப்படையிலே அவர்களுக்கு வேலை வாய்ப்பு அரசு தருகிறது. அதற்குப் பிறகு ஏதோ ஒரு



காரணத்தினாலே மறுமணம் செய்து கொள்கின்றார்கள். அதற் காக அவர்களை பணியிலிருந்து எடுக்கவேண்டாமென்று, வேலை கொடுத்தபிறகு வேலையில் இருந்து எடுக்கவேண்டாம் என்று அரசு முடிவெடுத்து 2 கோப்புகளில் அந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர் களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, அரசு ஊழியர்கள் சில பேர்களுக்கு இரண்டு மனைவிகள் என்ற பிரச்சினை வரும்போது, எந்த மனைவிக்கு கொடுப்பது என்ற பிரச்சினை வரும்போது, அந்த நிவாரணத் தொகையை கொடுக்காமலேயே விட்டுவிடுகிறார்கள். முதலில் தாலி கட்டிய மனைவிக்கு கொடுக்க ஏற்பாடு செய்யுமா ? இந்த பிரச்சினையில் விரைவான தீர்ப்பு கொடுக்கப்படுமா ? சட்ட மன்ற உறுப்பினர்களையும் அரசு ஊழியர்களாகக் கருதி, பதவியில் இருக்கும்போதே இறந்துவிட்டால் அந்த நிவாரணம் கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற சட்டப் படி ஒரு மனைவியோடுதான் வாழவேண்டும். மாண்புமிகு உறுப் பினர்கள் எல்லோரும் ஒரு மனைவியோடு இருப்பார்கள் என்று தான் கருதுகிறேன். (சிரிப்பு) இரண்டாவது மணம் செய்யக் கூடாது. அப்படி இருந்தாலும் சொல்லவே கூடாது. ஆனால் அப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படுகின்றபோது, 'மொகமடன் லா'வில்தான் அந்தச் சட்டத்தின்படி 4 மனைவிகளுக்கு அங்கே இடம் வகுக்கப்பட்டிருக்கிறது. இந்திய அரசாங்கம் வகுத்திருக் கின்ற, திருத்தப்பட்டிருக்கின்ற சட்டப்படி ஒரு மனைவியோடு தான் இருக்கவேண்டும். ஆனால் வேறு பல 'வைப்பு' என்று வருகிறபோது ஜீவனாம்சம் தரவேண்டும் என்று 4, 5 நாட்களுக்கு முன்னால் உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு வந்திருக்கிறது. மனை விக்கு மட்டுமல்ல, வைப்புக்கும் ஜீவனாம்சம் தரவேண்டும் என்ற அந்த தீர்ப்பு காரணமாக வழக்கறிஞர்கள் கூட்டத்திலே ஒரு குழப்பமே ஏற்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கணவனுக்கும் வழங்கலாம் என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதையும் வழங்கியிருக்கிறது. அது மட்டுமல்ல. மகன்களுக்கு மட்டும் தாய் தந்தையரைக் காப்பாற்ற வேண்டுமென்று பொறுப்பு இருக்கிறது என்பதல்ல, தாய் தந்தையரைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு மகள்களுக்கும் உண்டு என்று சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு அளித்து இருக்கிறது. சமுதாயத்தில் ஏற்படுகிற பல்வேறு வளர்ச்சிகள், சமுதாயத்தில் உள்ள கட்டுப்பாடு, அதனுடைய பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையிலேதான் அவ்வப்போது உச்ச நீதிமன்றம் சில பல தீர்ப்புகளை வழங்கியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் ஒவ்வொரு உறுப்பினரையும் ஒரு மனைவியோடு இருக்கும்படி அறிவுறுத்துவார்களானால் மிக மிக நல்லது.

### மாநில அரசுகளின் கூட்டுக் கவுன்சில்.

*370—(*வினா எண் 5122)* **திரு. செ. செம்மலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில அரசுகளின் கூட்டுக் கவுன்சில் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை மைய அரசிடம் தமிழ்நாடு அரசு வற்புறுத்தி வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் முன் அறிக்கை@ ஒன்று அளிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்துள்ள விவர அறிக்கையிலே கண்டுள்ள விவரங்கள் எனக்கு முழுக்க முழுக்க உடன்பாடு. இந்திய அரசியல் அமைப்பு சட்டம், ஆர்ட்டிக்கிள் 263-ன்படி வழிவகையிருந்தாலும், இதுவரை அது கடைப்பிடிக்கப்படவில்லை. இனிமேல் கடைப்பிடிக்கப்பட்டாலும் இன்றைய நிலையில் Conventional method of approach is not of much use as

@ 158–159 பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



on date என்ற அடிப்படையிலே உள்ள அந்த அணுகுமுறை மறு பரிசிலனை செய்யப்பட வேண்டும் என்பது அவசியமாக இருக்கிறது. அது காவிரி நீர் பிரச்சினையாக இருந்தாலும் சரி, அது தெலுங்கு-கங்கை பிரச்சினையாக இருந்தாலும் சரி. மாநிலங்கள் அரசு பேசிப் பார்த்து முடியவில்லை என்பதால்தான் மத்திய அரசுக்கு அதை நாம் ஒரு கோரிக்கையாக வைக்கிறோம். இந்த நிலையில் மீண்டும் மத்திய அரசு மாநிலங்களிடம் நீங்களே பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று சொல்வது என்பது பிரச்சினையை ஆறப்போடுவதற்குச் சமமாக இருக்கும். அதுமட்டுமல்ல. அதனுடைய முக்கியத்துவம்கூட, சில சமயங்களில் குறைந்து விடுகிறது. ஆகவே மாநில அரசு மத்திய அரசுக்கு பிரச்சினையைக் கொண்டு செல்லலாம். அப்படி கொண்டு செல்கின்ற பிரச்சினைகளை மத்திய அரசு தனது மிஞ்சிய அதிகாரத்தை வைத்து பிரச்சினைக்கு தீர்வு காணலாம் என்ற புதிய அணுகுமுறையை கொள்ளவேண்டும் என்று நம்முடைய அரசு மத்திய அரசை வலியுறுத்துமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்துப்படி பார்க்கிறபோது, சில மாநிலங்களுக்கிடையே சில முக்கியமான பிரச்சினைகளில் ஒவ்வொருவரும் தங்களுக்குச் சாதகமான கருத்துக்களைப் பேசுகிறபோது, அந்தப் பிரச்சினை தீராமல் அதனால் இரண்டு மாநிலங்களிலேயும் இருக்கின்ற பொதுமக்களும் அவதிப்படுகிற சூழ்நிலையை ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். அந்த அடிப்படையிலேதான் இரண்டு மாநிலங்களும் ஒரு முடிவுக்கு வரமுடியாத சூழ்நிலையில் மத்திய அரசுக்கு அதை எடுத்துச் செல்கின்றபோது மத்திய அரசு அதனுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி அதிலே முடிவெடுக்க வேண்டும் என்று அவர்கள் தனிப்பட்ட கருத்தைச் சொன்னார்கள். அதைவிட இந்த அரசினுடைய நோக்கம் என்னவென்றால், அது தனிக் குழுவாக இருக்குமானால் மத்திய அரசின் மிஞ்சிய அதிகாரம் என்பதைவிட, மாநிலங்களுக்கிடையே ஏற்படுகிற பிரச்சினைகள் பற்றியும், மத்திய அரசுடன் உள்ள பிரச்சினைகள் பற்றியும் கூட ஆய்வு செய்யலாம். அந்த அடிப்படையில் ஒரு தனிக் குழுவாக

[திரு. சு. முத்துசாமி] [1987 ஏப்ரல் 10

இருந்தால் நல்லது என்று மத்திய அரசுக்கு பரிந்துரை செய்தோம். சமீபத்தில் ஓய்வு பெற்ற நீதிபதி திரு. ஆர். எஸ். சர்க்காரியா அவர்களை வைத்து மத்திய மாநில உறவுகளைப் பற்றியும், அதிகாரங்களைப் பற்றியும் ஆய்வு செய்தார்கள். அப்போது இந்தப் பிரச்சினையையும் அதனுடன் சேர்த்து ஆய்வு செய்யலாம் என்று சொல்லியிருந்தார்கள். அந்த அடிப்படையில் இந்தப் பிரச்சினை இருக்கிறது.

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வு பெற்ற நீதிபதி திரு. ஆர். எஸ். சர்க்காரியா அவர்களுடைய தலைமையில் அமைக்கப்பட்ட குழு தன்னுடைய அறிக்கையை மத்திய அரசுக்குக் கொடுத்துவிட்டது. அதன்மீது மத்திய அரசு என்ன முடிவு எடுத்தது? அது பற்றிய விவரங்களை அவர்கள் நமக்குத் தெரிவித்திருக்கிறார்களா? அப்படி இதுவரை தெரிவிக்கவில்லையென்றால் அந்த அறிக்கையின் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து அந்த முடிவுகளை இந்த அரசுக்குத் தெரிவிப்பதற்கு நமது அரசு மத்திய அரசை வலியுறுத்துமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்காரியா ஆணையம் பல்வேறு கேள்விகளைக் கேட்டு ஒவ்வொரு மாநில அரசுகளிடமும் கருத்துக்களைக் கேட்டார்கள். நம்மிடமும் அதுபோல கேட்டிருந்தார்கள். அதற்கான விவரங்களை நாம் கொடுத்திருக்கிறோம். அவர்கள் கொடுத்த அறிக்கை மீது மத்திய அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது, மத்திய அரசு அதுபற்றி பரிசீலித்திருக்கிறதா என்பதுபோன்ற எந்தவிதமான தகவலும் என்னிடத்தில் இல்லை. இதில் எல்லா மாநில அரசுகளும் சம்பந்தப்பட்டிருப்பதால், எல்லா மாநில அரசுகளின் கருத்துக்களையும் அவர்கள் கேட்டிருப்பதால், இதிலே முடிவை நாம் மட்டும் கேட்டுப் பெறுவது சரியாக இராது. ஆனால் விரைவிலே அவர்கள் இது குறித்து முடிவுகளை எடுப்பதன் மூலமாக தேங்கி நிற்கின்ற பல்வேறு பிரச்சினைகள் குறித்து விரைவில் தீர்வு ஏற்பட வாய்ப்பு இருக்கும் என்பதால் மத்திய அரசுக்கு அதுபற்றி நம்முடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறோம். ஆக, அதுபற்றி தெரிந்துகொள்வதற்காக நாம் தகவல்களைத் தேடுகிறோமே [illegible] இருக்க முடியாது.



1987 ஏப்ரல் 10]

**டாக்டர் கே. சமரசம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரிட்டிஷ் அரசு இந்திய நாட்டை ஆண்டுகொண்டிருந்த போது ஏற்படுத்திய இரட்டை ஆட்சி முறை தொடர்ந்து நடக்கும் வகையில் நாடு சுதந்திரம் அடைந்த பிறகும், பல மொழி, பல இன, பல நாகரிக கலாச்சாரம் கொண்ட இந்தியத் துணைக் கண்டத்திலே அத்தகைய முறை நீடிப்பது தொடரும்வரை பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது சாத்தியமில்லை. மாநில மத்திய அரசுக்குள் ஏற்படுகின்ற பல்வேறு பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட கருத்துக்களை ராஜமன்னார் அறிக்கையிலிருந்து எடுத்துக்காட்டத் தயாராக இருக்கிறேன். அந்த வகையில் இந்தியாவைப் பொறுத்தவரையில் United States of India என்கிற அமைப்பு இருப்பது நல்ல, சிறந்ததாக இருக்கும். இந்தக் கருத்து பல்வேறு வல்லுநர்களாலும், அறிஞர்களாலும் சொல்லப்பட்டிருக்கிறது. அரசுக்கு நான் அதுகுறித்து திரட்டி வைத்திருக்கிற கருத்துக்களை எல்லாம் தேவை என்றால் தரத் தயாராக இருக்கிறேன். அந்த வகையில் ஒரு புதிய மறுமலர்ச்சி ஏற்பட, புதிய அமைப்பு ஏற்படுத்துவது குறித்து இந்த அரசு மத்திய அரசை வலியுறுத்துமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்கள்பற்றி கொஞ்சம் பார்த்துதான் பதில் சொல்லவேண்டியிருக்கிறது. இப்போது அவர்கள் கேட்டிருப்பதில் எல்லாம் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. இன்றைக்கு கர்நாடகா அல்லது வேறு எந்த மாநிலத்தை எடுத்துக்கொண்டாலும் அந்தந்த மாநிலங்களோடு இன்னொரு மாநிலத்திற்கு பிரச்சினை இருக்கிறது. பிரச்சினைகள் என்று வருகிறபோது நாம் நமக்குச் சாதகமான கருத்துக்களை பேசுகிறோம். அதுபோல் அவர்கள் அவர்களுக்குச் சாதகமான கருத்துக்களைச் சொல்கிறார்கள். இதனால் முடிவு ஏற்படாமல் இரண்டு மாநில அரசுகளும் பல்வேறு வகைகளில் பாதிக்கப்படுகின்றன. ஆக, இது குறித்து நல்ல முடிவு விரைவில் ஏற்பட மத்திய அரசு ஏதாவது செய்தாக வேண்டும். மத்திய அரசு தன்னுடைய அதிகாரங்களை வைத்துக்கொண்டு ஏதாவது செய்ய வேண்டுமென்று

[திரு. சு. முத்துசாமி] [1987 ஏப்ரல் 10

சொல்வதுகூட நம்முடைய கொள்கைக்கு முறையல்ல, சரியாக இராது. மாநில அரசுகளுக்கு மத்திய அரசு அதிகாரம் கொடுக்க வேண்டும், இன்னும் அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும் என்று நாமே சொல்கிறபோது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒரு தனிக் குழு இருந்தால் பாரபட்சம் இல்லாமல் பொதுவாக நின்று முடிவு செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும். அந்த அடிப்படையில் தான் இந்த அரசு பரிந்துரை செய்தது. ஏற்கெனவே நான் இங்கே சொன்னதுபோல நீதிபதி சர்க்காரியா அவர்கள் இப்பொழுது அதுபற்றி ஆய்வு செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, தனிக் குழு அமைப்பது பற்றி இப்பொழுது முடிவெடுக்க முடியாது, இதையும் சேர்த்து ஆய்வு செய்யலாம் என்று மத்திய அரசு சொல்லியிருக்கிறது. அந்த அடிப்படையில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கையில் நிறைய கருத்துக்களை வைத்திருப்பதாக சொன்னார்கள். அதை எல்லாம் அரசுக்குக் கொடுத்தால் பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## திண்டுக்கல்-பழனி நெடுஞ்சாலை.

**371—(* வினா எண். 9102) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திண்டுக்கல்-பழனி நெடுஞ்சாலையை அகலமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இத்தகைய கருத்து ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1987 ஏப்ரல் 10]

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்** (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிக்க பேரவைத் தலைவரவர்களே, திண்டுக்கல்லிலிருந்து பழனி செல்லுகின்ற சாலை மிக முக்கியமான சாலை. மாநிலத்திலே 75 சதவீத பரப்பிலே இருக்கின்ற மக்கள் அந்தத் திருத்தலத்திற்குப் போகிற சாலை. வாகனப் போக்குவரத்து மிகக் கூடுதலாக இருக்கிறது. அதற்கு அப்பாற்பட்டு, ஒரு குறிப்பிட்ட விசேஷ காலம் என்று மட்டுமல்லாமல, ஆண்டு முழுவதும் பக்தர்கள் நடந்து செல்கின்ற ஒரு நிகழ்ச்சி இரண்டு மூன்று ஆண்டுகளாக உருவாகியிருக்கிறது. விசேஷ காலம் என்று இல்லாமல் எல்லா நாட்களிலும் அவர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கிற நிலைமையை மாண்புமிகு அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கிறேன். இப்பொழுது அகலப்படுத்தியிருக்கிறார்கள். அதிலே வாகனங்கள் மட்டும் போவதற்கான வாய்ப்புதான் இருக்கிறது. முழுக்க முழுக்க பக்தர்களெல்லாம் அந்தச் சாலைக்கு அப்பாலே நடந்து போய்க் கொண்டிருக்கின்ற நிலைமையிருக்கிறது. எனவே, இதைக் கருத்திலே கொண்டு மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்தத் திருத்தலம் இருக்கிறது என்பதைக் கருத்திற்கொண்டு, இன்னும் கூடுதலாக இந்தச் சாலையை அகலப்படுத்துவதற்கு விரைவாக நடவடிக்கையெடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, இப்பொழுது அகலப்படுத்தியிருப்பதாகச் சொன்னார்கள். நான் அதை மனத்திலே வைத்துக்கொண்டுதான் சொல்கிறேன். இப்பொழுதே அகலப்படுத்தியிருக்கிறார்கள். மேலும் அகலப்படுத்த வேண்டுமா என்பதைத்தான் என்னுடைய கேள்வியாகக்கூட வைக்கிறேன். இருந்தாலும் அங்கே இருக்கின்ற சூழ்நிலைகளைச் சொல்லியிருக்கின்றார்கள். நிதிப் பிரச்சினை ஒரு மாபெரும் பிரச்சினை என்பதை நீங்கள் எல்லோரும் உணர்ந்து இருக்கிறீர்கள். எனவே அந்தச் சூழ்நிலைக்கேற்ப, அங்கே இருக்கின்ற அவசியம் நிச்சயமாக எனக்குப் புரிகிறது. எனவே, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளை அழைத்து, நிதி நிலையைப் பொறுத்து அந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

[1987 ஏப்ரல் 10

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு கூடுதலாகப் போக்குவரத்து இருக்கிற இந்தத் திண்டுக்கல்-பழனி சாலையில் விருப்பாச்சி அருகிலே ஒரு பாலமும், டாங்கரை என்கிற இடத்திலே ஒரு பாலமும் மிகக் குறுகலாக இருக்கிறது. ஒரு கட்டை வண்டிகூடப் போவதற்கு இலாயக்கற்ற முறையில்—ஒரு பஸ் போகிறது என்றால் போக்குவரத்தே ஸ்தம்பித்து விடுகிறது. அதைப்போல, கூடுதலாகப் போக்குவரத்து இருக்கின்ற இந்தச் சாலையில் பல ஹேர்பின் பெண்ட்ஸ் இருக்கின்றன. அதிலே விருப்பாச்சி, கணக்கன்பட்டி, டாங்கரை ஆகிய இடங்களிலே அடிக்கடி விபத்து நேருகிற காட்சிகளைப்பற்றி புள்ளிவிவரங்கள் மூலமாகக் கிடைக்கக்கூடிய வாய்ப்பிருக்கிறது. எனவே, திண்டுக்கல்லிலிருந்து பழனி வரை செல்கின்ற சாலையிலே இருக்கின்ற இந்தப் பாலங்களை அகலப்படுத்துவதற்கும், இதிலே இருக்கின்ற வளைவுகளை நேர்படுத்துவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்கிற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவரவர்களே, குறுகலான பாலங்களை அகலப்படுத்துவதற்கும், அதேபோன்று சில இடங்களிலே—உதாரணமாக பழனி, ஒட்டன்சத்திரம் போன்ற இரண்டு ஊர்களில் பை-பாஸ் ரோடு அமைப்பதற்கும், இதை இன்னும் கொஞ்சம் ஸ்ட்ரெங்த்தன் செய்வதற்கும் ஏறத்தாழ 238 இலட்சம் ரூபாய் ஆகும் என்று ஒரு கணக்கைப் போட்டு வைத்திருக்கிறார்கள். அதிலே 238 இலட்சம் ரூபாய் என்ற காரணத்தால் இந்த ஆண்டு அதற்காகவோ அல்லது குறுகிய காலத்திற்குள்ளோ பணத்தை ஒதுக்க முடியாத நிலையிலேதான், இதைச் செய்ய வேண்டுமென்று அரசு ஆர்வம் கொண்டிருந்தாலும் நிதிப் பிரச்சினை காரணமாகத் தள்ளிப் போட்டுக்கொண்டு வருகிறது. சூழ்நிலைக்கேற்ப, நிதிநிலைமை சரியாகிறபொழுது நடவடிக்கை எடுக்கும்.



1987 ஏப்ரல் 10]

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்-பழனி சாலையில் நம்முடைய மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவரவர்கள் சொன்னதைப்போல ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருடம் முழுவதும் சென்று கொண்டிருப்பதை நாமும் கண்டு கொண்டிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்தச் சாலை ஏற்கனவே குறுகலாக இருந்தது சற்று விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னதும் உண்மை. விரிவுபடுத்தப்பட்ட சாலை, அதிகரிக்கப்பட்ட போக்குவரத்துகளுக்குப் போதுமானதாக இல்லாத நிலையில், பக்தர்கள் வந்து செல்வதற்காக தனியாகப் பாதை அமைப்பதுபற்றிக் கருதுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவரவர்களே, நான் இதுவரை சொன்னது, ஏற்கனவே இருக்கிற பாதையையே இன்னும் கொஞ்சம் அகலப்படுத்துவதற்கும், அதை வலுப்படுத்துவதற்குமே பணப்பிரச்சினை என்று சொன்னேன். புதிதாகப் பாதை அமைப்பது என்று சொன்னால் நிலங்களையெல்லாம் ஆர்ஜிதம் செய்ய வேண்டும் என்ற பிரச்சினையெல்லாம் இருக்கிறது. இந்தக் கேள்வியைக் கேட்டவுடனே, அப்படி ஒரு யோசனை வந்தது. நடந்து போவதற்கு மட்டும் தனியாக ஒன்று அமைத்து விடலாமா என்றுகூடக் கருதினோம். இருந்தாலும் நில ஆர்ஜிதம், பாதையை மீண்டும் அமைப்பதற்கு இதுவெல்லாம் மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கும். மிக அதிகமான தொகையை உள்ளடக்கும் என்று கருதுகின்ற காரணத்தால் பாதையிலே இதை வலுப்படுத்துவதற்கான ஏற்பாட்டை நிதி நிலைமைக்கேற்ப செய்யலாம். எதிர்காலத்திலே அதைப் பற்றி ஆலோசிக்கலாம்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திண்டுக்கல்-டு-பழனி, செம்பட்டி-டு-பழனி என்ற இரண்டு பகுதிகள். செம்பட்டியிலிருந்து பழனி போகிற வழியிலே கொஞ்சம் தூரம்தான் அகலப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் அந்த ரோடுகளிலே பஸ் வரும்பொழுது, எதிர்த்தாற்போல் காரில் வந்தால், அரை அடி உயரத்திற்குப் பள்ளம் இருக்கிறது. அந்த ரோடே பள்ளமாக இருக்கிறது. ஆகையினாலே,

ஒரு சக்கரம் கீழே வந்தால், அந்த டயர் பஞ்சராகக்கூடிய நிலைமைகூட இருக்கிறது. ஆகவே, இதற்கு அதிகப்படியான பணத்தை ஒதுக்கி, வேலை செய்வதற்கு முன்பாகவே, அந்த பேச் ஒர்க் என்று சொல்கிறோமே அந்த வேலையையாகிலும் இரண்டு புறங்களிலேயும், இரண்டு ரோடுகளிலேயும் செய்து, இரண்டு பகுதிகளிலேயும் அதிகமாகப் பள்ளமாக இருக்கக் கூடிய பகுதிகளிலே, மீண்டும் மண்ணைப் போட்டாகிலும், அதைச் சற்று கல் போட்டு, ரோலர் போட்டு உருட்டிச் செய்வதற்கான நிலைமைகளைச் செய்வதற்கு வழிவகைகளை அமைச்சரவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவரவர்களே, அதை அகலப்படுத்துவதற்கு இருக்கின்ற நிதிப் பிரச்சினையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்துகொண்டார்கள். அதற்காக நன்றி. ஆனால் அந்த தார் ரோட்டை விட்டுக் கீழே இறங்குகிற பொழுது குழியாக இருக்கிறது என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் இங்கிருந்து சட்டமன்றக் கூட்டம் முடிந்து ஊருக்கு போவதற்குள்ளாக அந்த ஏற்பாட்டை இந்தத் துறை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## தமிழகத்தில் போக்குவரத்துத் துறை அலுவலகங்களுக்கு அரசு கட்டிடம் கட்டுதல்.

372—(*வினா எண் 9530) **திரு. வே. கு. சின்னசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள தனியார் கட்டிடத்தில் இயங்கி வரும் போக்குவரத்துத் துறை அலுவலகங்களுக்கு, அரசு கட்டிடம் கட்டும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திட்டம் செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) நிதிநிலைமைக்கேற்ப படிப்படியாக இத்திட்டம் செயல்படுத்தப்படும்.



**திரு. வே. கு. சின்னசாமி:** தலைவரவர்களே, தமிழ்நாட்டிற்கு அதிகமான வருமானத்தை ஈட்டித் தருகின்ற துறை, கோடிக் கணக்கான ரூபாய் வருமானம் வருகின்ற துறை போக்குவரத்துத் துறை. இப்படிப்பட்ட ஒரு துறையை நிர்வகிக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்கு என்று பணியாற்றுகின்ற அதிகாரிகளுக்கும் அலுவலகங்களுக்கும் கட்டடம் கட்டித் தராமல் இருப்பது வருந்தத்தக்கது என்பதைத் தெரிவித்து, கூடிய விரைவில் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவரவர்களே, இந்தத் துறை அதிகமாக நிதி திரட்டுகிறது என்பதற்காக வரக்கூடிய வருமானம் முழுவதையும் நாமே செலவழித்துவிட முடியாது. எது எது முக்கியமான பிரச்சனை என்று அரசாங்கம் 'லிஸ்ட் அவுட்' செய்கிறது. அந்தப் பணிகளுக்கு முதலிடம் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு பிரச்சனையாகப் பார்க்கிறபோது ஒவ்வொரு உறுப்பினரும் வருந்தத்தக்கது, வருந்தத்தக்கது என்று சொல்கிறார்கள். மொத்தமாகக் கணக்கிட்டுப் பார்க்கும்போது 5, 6 ஆண்டுகளுக்கு ஒதுக்குகின்ற பட்ஜெட்டை ஒரே ஆண்டில் ஒதுக்கி செலவிடுவதாக இருந்தால் எல்லாவற்றையும் செய்து முடித்துவிடலாம். தண்ணீர் பிரச்சனை போன்ற பல்வேறு முக்கியமான பிரச்சனைகள் மக்களுக்கு இருக்கும்போது அதை எல்லாம் ஓரளவுக்கு செய்து முடித்துவிட்டு கட்டடங்களைக் கட்டுவதற்கும் ஆண்டுக்கு கொஞ்சம் செலவிடுகிறோம். இப்போதுகூட நில ஆர்ஜிதம் சில இடங்களில் செய்யப்பட்டிருக்கிறது. இப்படி படிப்படியாக, மற்றத் துறைகளில் வேலைகள் பாதிக்காமல், இந்தப் பணிகளை மேற்கொள்கிறோம்.

**திரு. வே. கு. சின்னசாமி:** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய தொகுதியான பெரியார் மாவட்டத்திலுள்ள ஈரோட்டை தலைமையிடமாகக் கொண்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டப்படாமல் இருக்கிறது. வேறு எத்தனையோ அரசு அலுவலகங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அதைப்போன்று தாளவாடியில் ஒரு அலுவலகம் இல்லாத காரணத்தால் எல்லாவற்றுக்கும் சத்திய

மங்கலத்திற்குத்தான் போக வேண்டியிருக்கிறது. ஆகவே, தனியாக போக்குவரத்து ஆய்வாளர் அலுவலகம் ஒன்றை தாளவாடியில் அமைக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவரவர்களே, ஈரோட்டிலே தனி கட்டடம் கட்டுவதற்காக இடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறோம். சரியான இடம் கிடைத்தவுடன் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். எல்லா மாவட்டங்களிலும் அலுவலகக் கட்டடம் கட்ட வேண்டுமென்பது அரசின் நோக்கம். தாளவாடியில் ஒரு தனி யூனிட்டை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதைப்போன்று எல்லா இடங்களிலும் அமைப்பது கஷ்டம். வாகனங்கள் எவ்வளவு இருக்கின்றன என்ற எண்ணிக்கையை வைத்து, நாம் வைத்திருக்கிற 'நார்ம்ஸ்' அளவுக்கு இருந்தால் அதுபற்றி பரிசீலனை செய்யலாம். வாகனங்கள் குறைவாக இருந்தால் அது முடியாது.

**திரு. கே. பாலஜி:** தலைவரவர்களே, காஞ்சிபுரத்தில் ஆர்.டி.ஓ. அலுவலகத்திற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் நிலம் கையகப்படுத்தப்பட்டு, இன்றுவரையில் அங்கே கட்டடம் கட்டப்படவில்லை. அந்த அலுவலகம் இப்போது அங்கே ஒரு தனியார் பஸ் முதலாளிக்குச் சொந்தமான கட்டடத்தில் வாடகைக்கு இயங்கி வருகிறது. அதன் காரணமாக பல தவறுகள் நடைபெறுவதாகவும் நண்பர்கள் பேசுகிறார்கள். ஆகவே, இந்த ஆண்டாகிலும் அங்கே கட்டடம் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். நிதிப் பிரச்சினைதான் இதற்கு எல்லாம் காரணம். வேறு மானியங்கள் வருகின்றபோது குடிதண்ணீர், பள்ளிக்கூடம் போன்ற பிரச்சனைகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கிறார்கள். அவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறபோது இப்படிப்பட்ட பணிகளைக் கொஞ்சம் தள்ளிவைக்க வேண்டியிருக்கிறது. தனிப்பட்டவருடைய கட்டடத்தில் வாடகைக்கு



இயங்கி வருவதால் தவறுகள் நடப்பதாகச் சொன்னார்கள். சில இடங்களில் தவறு இருக்கலாம்; இல்லை என்று சொல்ல முடியாது. காஞ்சிபுரத்தில் தனியார் டிரான்ஸ்போர்ட் நடத்துகிறவருடைய கட்டடத்தில் இயங்கி வருவதால் தவறு நடக்கிறது என்று சொன்னார்கள். அப்படி இருந்தால் அதைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

**திரு. கூடலூர் இ. வி. வேலு:** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே நடைபெற்றுக் கொண்டிருக்கிற போக்குவரத்துத்துறை அலுவலகங்களை வாடகைக் கட்டடத்திலிருந்து சொந்தக் கட்டடத்திற்கு மாற்றுவதற்கு நிதிநிலை ஒரு பிரச்சனையாக இருக்கிறது என்று சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையின்மீது விவாதம் நடைபெற்றபோது வடாற்காடு மாவட்டத்தில் போக்குவரத்து மண்டலம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஒரு மண்டலம் திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் என்று சொன்னார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். புதிதாக தொடங்கப்படுகின்ற மண்டலத்திற்கு தேவையான நிதியை ஒதுக்கி புதிய அலுவலகம் கட்ட மாண்புமிகு அமைச்சரவர்கள் முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு யோசனை இல்லை. அதற்கான முயற்சியும் எடுக்கவில்லை. இதையே இப்போதுதான் கேட்கிறோம். ஏற்கெனவே எத்தனையோ ஆண்டுகளாக தனியாரிடத்தில் இயங்கிக் கொண்டிருப்பதை முதலில் பார்த்துவிட்டு கடைசியாக அந்த இடத்திற்கு வரலாம்.

**திரு. இரா. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஹைவேஸ் அலுவலகங்களுக்காக ஒரு ஆண்டுக்கு சுமார் 25 இலட்சம் ரூபாய் வாடகையாகக் கொடுப்பதாகத் தெரிகிறது. இவ்வாறு வருடத்திற்கு 25 இலட்சம் ரூபாய் வாடகையாகக் கொடுப்பதைக் காட்டிலும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்தோ அல்லது ஹட்கோ நிறுவனத்திலிருந்தோ பணத்தைக்

கடனாகப் பெற்று அதன் மூலமாக இந்த அலுவலகங்களைக் கட்டிவிட்டு பிறகு பகுதி, பகுதியாக தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கும், ஹட்கோ நிறுவனத்திற்கும் கடனை அடைக்கின்ற வகையில் இந்த 25 இலட்ச ரூபாயையே அதற்குக் கொடுத்து வந்தால் அந்தக் கட்டிடங்கள் நிரந்தரமாக சொந்தக் கட்டிடங்களாக ஆகக்கூடிய வாய்ப்பு ஏற்படும் அல்லவா? ஆகவே அது குறித்து அரசு பரிசீலனை செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, நிதித் துறையோடு மிகத் தீவிரமாக ஆய்வு செய்யப்பட்டது. வாடகை கொடுப்பதைப் பொறுத்தவரையில் கணக்கிட்டுப் பார்க்கிறபோது சில நேரங்களில் அது கூடுதலாக இருக்கிறது என்ற கணக்கைக் கூட பார்த்தோம். ஆனால் கட்டிடமாகக் கட்டுவதற்கு எவ்வளவு செலவாகும் என்று பார்க்கும்போது, அதாவது வட்டி சதவீதத்தில் பார்க்கிறபோது, ஏறத்தாழ 12 சதவீதம், 10 சதவீதம் கூட வட்டியாக செலவழிக்காத நிலையில்தான் வாடகையாகக் கொடுக்கப் படுகிறது என்ற கணக்கு வருவதால் கட்டிடத்திற்காகப் பணத்தைச் செலவழித்து உடனடியாகக் கட்டுவதைவிட நம்மை நோக்கி நின்று கொண்டிருக்கின்ற பல்வேறு அத்தியாவசியமான முக்கியமான பிரச்சினைகளைத் தீர்க்க அந்தப் பணத்தைச் செலவழித்தால் நாட்டினுடைய வளர்ச்சிக்கு நல்லதாக இருக்கும் என்ற காரணத்தால் இவ்வாறு கட்டிடங்கள் கட்டுவதை கொஞ்சம் தள்ளிப் போட்டிருக்கிறோம். நிதிநிலையிலும் ஒரு சாதகமான நிலைமை வருகிறபோது நமக்குச் சொந்தமான கட்டிடத்தைக் கட்டிவிடுவதுதான் நல்லது. ஒரு சொத்தை ஏற்படுத்துவதாகக் கூட அது அமையும் என்று நான் கருதுகிறேன்.

உதாரணமாக பள்ளிக் கட்டிடங்கள் என்பது மிக அத்தியாவசியமானதாக இருக்கின்றது. குழந்தைகளை வசதியாக, பாதுகாப்பான இடத்தில் வைத்திருக்க வேண்டும் என்பதற்காக நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதுபோல் சத்துணவுக்கூடங்கள், இப்படிப்பட்ட அத்தியாவசியமான கட்டிடங்களை முதலில் கட்டி விட்டு அதன்பிறகு அலுவலகக் கட்டிடங்களைக் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கலாம் என்ற உணர்வில் அரசாங்கம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.



**பெரியார் மாவட்டம், சித்தோட்டில் போக்குவரத்துத் துறை பொறியியல் கல்லூரி.**

*373*—(*வினா எண் 10423) **திரு. எஸ். இராசாராமன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், சித்தோட்டில் சுமார் ரூபாய் 6 கோடி செலவில் 350 ஏக்கர் நிலப்பரப்பில் போக்குவரத்துத்துறை சம்பந்தப்பட்ட பொறியியல் கல்லூரி கட்டப்பட்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அந்தப் பணி எப்பொழுது முடியும்?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) எல்லா வேலைகளும் பூர்வாங்கமாக 1989 ஆம் ஆண்டுக்குள் முடியலாம்.

**தென்னை நார்ப் பொருள்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி.**

*374*—(*வினா எண் 10308) **திரு. கே. பி. கே. சேகர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னை நாரிலிருந்து தயாரிக்கப்படும் கார்பெட், கால்மிதியடிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அரசுக்கு கிடைக்கும் லாபம் எவ்வளவு?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. பி. கே. சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னை நாரிலிருந்து தயாரிக்கப்படுகிற கார்பெட் மற்றும் மிதியடிகள் போன்ற பொருட்கள் வெளிநாடுகளில் அதிகமாக விரும்பி ஏற்கப்படுவதாகத் தகவல் வருகிறது. அப்படியானால் அதற்கு அரசாங்கம் முயற்சித்து பல்வேறு இடங்களில் இதைத் துவக்க இனிமேலாவது ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நாம் ஏற்றுமதி செய்கிற அளவுக்கு இன்னும் செயல்படுத்தவில்லை. உற்பத்தியைப் பெருக்கவில்லை என்று கருதுகிறேன். அதுபற்றி தனியாக ஆய்வு செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

**சென்னை-விழுப்புரம் இரட்டை இரயில் பாதைத் திட்டம்.**

375—(*வினா எண் 12160) **திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை-விழுப்புரம் இரட்டை இரயில் பாதை அமைக்கும் திட்டத்தை விரைவில் துவங்கிட, மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி இவ்வரசு மத்திய அரசை அவ்வப்போது வற்புறுத்தி வருகிறது.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற இரட்டை இரயில் பாதைத் திட்டங்கள் எத்தனை இடங்களில் தமிழகத்தில் அமைக்கவேண்டும் என்ற கோரிக்கை மத்திய அரசினிடத்தில் வைக்கப்பட்டு இருக்கிறது என்பதையும், இந்தப் பணிகள் எல்லாம் ஆய்வு செய்யப்பட்டு விட்டதா அல்லது எந்த நிலையில் இருக்கிறது என்ற விவரங்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, குறுகிய இரயில் பாதையை அகல இரயில் பாதையாக மாற்ற வேண்டுமென்றும், இன்னும் பல வழிகளை அமைக்க வேண்டுமென்றும் நாம் பல்வேறு கோரிக்கைகளை மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கிறோம். அந்தப் பட்டியல் இப்போது என்னிடத்தில் இல்லை. சென்னையிலிருந்து விழுப்புரம் வரையில் பலவழிப்பாதை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தோம். சென்னையிலிருந்து திருச்சிராப்பள்ளி வரையில்



இரட்டை இரயில் பாதை அமைக்க வேண்டுமென்று மத்திய அரசை நாம் கேட்டோம். இவ்வாறு அவர்களிடத்தில் நாம் கேட்டபோது அவர்கள் சொன்ன பதில் ஏற்கெனவே அதிகமான நெரிசல் இருக்கிற இடம் சென்னை கடற்கரை-தாம்பரம் பகுதிதான் என்றும் மேலும் திருச்சி-பொன்மலை பகுதியில் அதிகமான நெரிசல் இருக்கிறது என்றும், ஆக இந்த இரண்டு இடங்களில் தான் அதிகமான நெரிசல் இருக்கிறது; அதாவது இரட்டை இரயில் பாதைக்கு மேலேயே இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். மற்றவற்றை இரட்டை இரயில் பாதையாக அமைக்க வேண்டுமென்று நாம் அவர்களிடத்தில் கேட்டபோது அதற்கு இப்போது சாத்தியம் இல்லை; மொத்தமாக நிதிப் பிரச்சினையை வைத்துப் பார்க்கிறபோது அவற்றிலே போக்குவரத்தை அதிகப்படுத்தினால்தான் சரியாக இருக்குமே தவிர இரட்டை இரயில் பாதையாக அமைப்பதில் இலாபம் இருக்காது என்று அவர்கள் ஆய்வு செய்து நமக்குச் சொல்லியிருக்கிறார்கள்.

இன்னொன்று. திண்டுக்கல்—கரூர்—தூத்துக்குடி இரயில் பாதையை அகலஇரயில் பாதையாக மாற்ற வேண்டுமென்று நாம் கேட்டதற்கிணங்க—சென்னையிலிருந்து திண்டுக்கல் வரையில் திருச்சி வழியாக அகல இரயில் பாதையாக அமைக்க வேண்டுமென்று நாம் கேட்டதற்கு அவர்கள் ஆய்வு செய்வதாகச் சொல்லி நமக்குப் பதில் அளித்திருக்கிறார்கள். ஆனால் எடுத்துக்கொள்கிறபோது நிதிப்பிரச்சினை இருக்கிறது என்றும் செங்கற்பட்டிலிருந்து தாம்பரம் வரையில் மட்டும் மீட்டர் கேஜ் பாதையை இரட்டிப்பு பாதையாக அமைக்க ஆய்வு செய்திருக்கிறோம். அதை இந்த ஆண்டிலே முடிக்கலாம் என்பதாக அவர்கள் தகவல் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர்-திண்டுக்கல் அகல இரயில் பாதை திட்டத்திற்கு ஒதுக்கியிருக்கிற நிதி போதுமானதாக இல்லை என்று சொல்லுகிறார்கள். அது உண்மையா? அதனுடைய விவரம் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, அதற்கான விவரம் இதில் இல்லை. ஆனால் நிதிப் பற்றாக்குறை இருக்கிறது என்பது உண்மை. நிதி அதிகம் ஒதுக்க வேண்டும், வேலைகளை இன்னும் துரிதப்படுத்த வேண்டும், வேகப்படுத்த வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

**திரு. கே. பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம்-வேலூர் ரயில் பாதையை புதியதாக அமைப்பதற்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த காலத்திலிருந்து மத்திய அரசுக்கு கோரிக்கை எடுத்து வைக்கப்பட்டிருந்தது, அது எந்த நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை. அண்ணாவின் கனவை நினைவாக்கும் வகையில் காஞ்சிபுரம்-வேலூர் ரயில் பாதைத் திட்டத்திற்கு நினைவூட்டல் கடிதம் வைத்து நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, ரயில்வே துறையிடமிருந்து நமக்குக் கிடைத்திருக்கிற தகவல்களில் இப்போது எடுக்கப்பட்டிருக்கிற பணிகளை முடிப்பதற்கே 20 ஆண்டுக் காலம் ஆகும் என்று அவர்கள் ஒரு கணக்கை கொடுத்திருக்கிறார்கள். இடையிலே புதிய பணிகள் எடுத்துக் கொள்வது சந்தேகமே. இருந்தாலும் அண்ணா அவர்கள் அப்படி கருத்து தெரிவித்திருப்பார்கள் என்றால், இல்லையெனில் துறையிலிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் நினைவூட்டல் கடிதம் எழுத நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. எம். இராசரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை-விழுப்புரம் அகல ரயில் பாதை அமைக்கும் திட்டம் போன்று, சென்னை-விழுப்புரம் நெடுஞ்சாலையமைக்கும் திட்டம் விரைவு படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புவதோடு, சென்னை-விழுப்புரம் நெடுஞ்சாலையில் செங்கல்பட்டு நகரத்தில் பாதை குறுகியதாக இருப்பதால் மோட்டார் வாகனங்கள் கடப்பதற்கு நீண்ட நேரம் ஆகிறது என்பது அரசுக்குத் தெரியுமா? தற்காலிகமாக ஒரு பை-பாஸ் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?





**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, ரயிலுக்கும், பஸ்ஸுக்கும் மாறி மாறி போய்க்கொண்டிருக்கிறார்கள். ரயிலைப் பற்றி கேட்டுக் கொண்டிருக்கும்போது சாலைக்கு வந்திருக்கிறார்கள். அந்தச் சாலையைப் பொறுத்தவரையில் நான்கு வழிப் பாதையாக ஆக்கவேண்டும் என்பதற்காக பணம் ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. தற்காலிகமாக பை-பாஸ் வேண்டும் என்று சொன்னார்கள். நிரந்தரமான பை-பாஸ் அமைப்பதற்கே கடுமையான நிதிப் பிரச்சினை இருக்கிறது. தற்காலிகமாக கட்டுவது என்பது கடினம், இருந்தாலும் அந்த நெரிசலைப் பார்த்து அவைகளை நீக்குவதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடு செய்யலாம்.

**Thiru T. VENKATA REDDY :** Hon. Speaker Sir, there is a meter gauge railway line from Bangalore to Cuddalore. The line has been measured for putting up a broad gauge line. I understand that there is a proposal to convert the meter gauge into broad gauge line. Is there any such proposal to convert it into broad gauge line or has the Government got any intention to request the Central Government to do it in view of the Steel Plant at Salem ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னேன். இப்படி பல்வேறு புரொபோசல்களை மத்திய அரசுக்கு நாம் கொடுத்து இருக்கிறோம். அவைகளில் இது சேர்ந்திருக்கிறதா என்பது குறித்த விவரம் என்னிடத்தில் இல்லை. காரணம் வேறு கேள்வியாக இருக்கிற காரணத்தால் என்னிடத்தில் விவரம் இல்லை. ஏற்கெனவே நாம் கொடுத்ததில் இது சேர்ந்து இருக்குமானால் அதை எடுத்துக் கொள்ளும்படி மத்திய அரசை நாம் வலியுறுத்துவோம். ஆனால் நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். மத்திய அரசாங்கம் ஏற்கெனவே தேவையான அளவுக்கு எடுத்துவிட்டதைப்போல ஒரு பதிலை நமக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்தப் பணிகள் முடியவே 20 ஆண்டுக்காலம் ஆகும் என்று தெரிவித்திருக்கிறார்கள். எனவே புதியதாக சேர்த்துக்கொள்வது பிரச்சினையாக இருக்கும், ஏற்கெனவே அனுப்பியதில் இதுவும் சேர்ந்திருந்தால் அதை மீண்டும் வலியுறுத்த இந்த அரசு தயாராக இருக்கிறது.

திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரத்திலிருந்து செங்கல்பட்டு வரை மீட்டர் கேஜ் ரயில் பாதை, இரண்டாவது ரயில் திட்டத்தை சென்ற ஆண்டே துவக்கி கல்வெர்ட்கள் எல்லாம் கட்டப்பட்டு, சென்ற ஆண்டு நடந்த வேலைகள் இந்த ஆண்டு சற்று குறைவான வேகத்தில் நடப்பதற்கு என்ன காரணம்? நிதிப் பற்றாக்குறை என்றால் இந்த ஆண்டிலாவது அதைச் சேர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, எனக்குக் கொடுத்திருக்கிற குறிப்பைப் பார்த்துதான் சொல்ல முடியும். காரணம், ரயில்வே துறையே நேரடியாகப் பார்த்து வருவதால் குறிப்புகளை வாங்கி அவர்கள் கொடுக்கிற தகவல்களைத்தான் நாம் கொடுக்கிறோம். காலதாமதம் இருக்கிறதா, இல்லையா என்பது கேள்வி. அப்படியிருந்தால் அதற்கு என்ன காரணம் என்பதற்கான விளக்கம் இப்போது என்னிடத்தில் இல்லை. ஆனால் அவர்கள் கொடுத்திருக்கிற குறிப்பு இந்த நடப்பாண்டில் முடிக்கப்படும் என்ற கருத்தை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எனவே வேகமாக நடைபெறும். விரைவாக முடிக்க வேண்டுமென்று அவர்களுக்கு வேண்டுமானால் அந்தக் கருத்தைத் தெரிவித்து இந்த ஆண்டில் முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளலாம்.

**நத்தம் தொகுதி, மடூர் ஊராட்சி, புகையிலைப்பட்டிக்கு திண்டுக்கல்லில் இருந்து போக்குவரத்துக் கழகப் பேருந்து.**

376—(*வினா எண் 13050) திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் சட்டமன்ற தொகுதியில் உள்ள மடூர் ஊராட்சி, புகையிலைப்பட்டிக்கு திண்டுக்கல்லிலிருந்து புகையிலைப்பட்டி, வடமதுரை வழியாக ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் விட அரசு ஆவன செய்யுமா?





**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லிலிருந்து புகையிலைப்பட்டி வழியாக சிங்காரக்கோட்டைக்கு தனியார் நிறுவனத்தைச் சேர்ந்த நகரப் பேருந்து ஒன்று தற்சமயம் ஓடிக் கொண்டிருக்கிறது. இதை வடமதுரை வரை நீட்டித்து ஓட்டுவதற்கு உரிமையாளரால் மனுச் செய்யப்பட்டு திண்டுக்கல் வட்டாரப் போக்குவரத்து அலுவலரால் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. வடமதுரை வரை இவ்வழித்தடம் நீட்டிக்கப்படும்பட்சத்தில் புகையிலைப்பட்டி பொதுமக்கள் வடமதுரை சென்று வருவதற்கு நேரடிப் பேருந்து வசதி கிடைத்துவிடும். எனவே கேட்டுக்கொண்டுள்ள வழித்தடத்தின் மூலம் இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகப் பேருந்து வசதி தேவையில்லை.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: தலைவர் அவர்களே, தனியார் பஸ் அங்கே ஓடிக்கொண்டிருக்கிறபோது அது பிரேக்டவுனாகி பொதுமக்களுக்கு பாதகமான சூழ்நிலை ஏற்படுகிறது. அதனால் புகையிலைப்பட்டிக்கு திண்டுக்கல்லிலிருந்து வடமதுரை வழியாக பேருந்து விடவேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வலியுறுத்தி அங்கே பேருந்து விடுவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, தனியார் பேருந்தைவிட போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் வந்தால் தடையில்லாமல் ஓடுமென்று அவர்கள் ஒப்புக்கொண்டமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து அவசியத்தைப் பொறுத்து அந்த வண்டிகள் பிரேக் டவுன் அதிகமாக ஆகிற சூழ்நிலை இருக்கிறதென்று தெரியுமானால் அதற்கான நடவடிக்கையை எடுக்கச் சொல்லலாம்.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: தலைவர் அவர்களே, நத்தத்திலிருந்து வி.எஸ். கோட்டைக்கு இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஓடிக்கொண்டிருக்கிறது. அதை மேலும் மார்க்கம்பட்டி, நிலப்பட்டி வழியாக திருமலைச்சேரி, செங்குறிச்சி வரையில் சென்று வர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, அவசியம் இருந்தால் நாம் இங்கேயிருந்து சொல்ல வேண்டிய தில்லை. அவர்களே செய்வார்கள். ஒருவேளை உங்களுக்கு அவசியமாக இருக்குமானால் நீங்கள் தனியாக கடிதம் எழுதிக் கொடுத்தால் அதுபற்றி நடவடிக்கையெடுக்கச் சொல்லலாம்.

**தமிழகத்தில் ஆதி திராவிட மாணவர்களுக்கு இ. கார்டு வழங்கல்.**

378—(*வினா எண் 9522) திரு. சா. ஜெயச்சந்திரன் மற்றும் திரு. கே. ஆர். கணபதி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பிளஸ்-1-லிருந்து கல்லூரி வரை பயிலும் ஆதி திராவிட மாணவர்களுக்கு இ. கார்டு (எலிஜிபிலிடி கார்டு) மீண்டும் வழங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுதிலிருந்து வழங்கப்படும் ?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. ஆர். கணபதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலில் இல்லையென்று சொல்லியிருக் கிறார்கள். மீண்டும் அது பரிசீலனை செய்யப்படுமா? தமிழ் நாட்டில் எத்தனை மாணவர்களுக்கு இதுவரையில் இது வழங்கப் பட்டது என்பதையும், மேலும் விரிவுபடுத்துகிற திட்டம் பரி சீலனையில் உள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** தலைவர் அவர்களே, எலிஜிபிலிட்டி கார்டை பொறுத்தவரையில் ஆதி திராவிட மாண வர்கள், கல்லூரியில், பள்ளிக்கூடத்தில் படிக்கிறபோது அவர்கள் ஸ்காலர்ஷிப் வாங்குவதற்கும், பீஸ் கட்டாமல் படிப்பதற்கும் முன்னாலே கொடுக்கப்பட்டு வந்தது. தற்போது கல்லூரி நிறுவ னத்தைப் பொறுத்து பிரின்சிபாலிடம் அந்தப் பொறுப்பு ஒப்ப டைக்கப்பட்டிருக்கிறது. அதனால் அவர்கள் அந்தக் கல்லூரியில்



சேருகிறபோது அப்ளிகேஷனில் கம்யூனிட்டி சர்டிபிகேட் காலத் தையும், இன்கம் சர்டிபிகேட் காலத்தையும் குறிப்பிட்டிருக் கிறார்கள். அந்தக் காலத்தில் அவர்கள் கையெழுத்து வாங்கிக் கொடுத்து விடுகிறார்கள். அப்படி கொடுக்கிறபோது அதைப் பார்த்து அவர்களை கல்லூரியில் சேர்த்துக் கொள்கிற சூழ்நிலை யில் அவர்கள் பணம் கட்டுகிற சூழ்நிலை ஏற்படுவதில்லை. ஆகவே 'இ. பார்மை' திரும்பக் கொண்டு வருகிற சூழ்நிலையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதில்லை.

**திரு. கே. ஆர். கணபதி:** தலைவர் அவர்களே, அவ்வாறு அந்த கம்யூனிட்டி சர்டிபிகேட், பணச் சர்டிபிகேட் வாங்குகிறபோது ஆண்டு வருமானம் 3,600 ரூபாய்க்கு உட்பட்டிருந்தால்தான் அந்தத் தகுதி உண்டு என்று சொல்லப்படுகிறது. இந்த ஆண்டு வருமானத்தை உயர்த்த அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட சூழ்நிலை எதுவும் இல்லை. அப்படிப் பிரச்னை இருக்குமானால் அரசு நடவடிக்கையெடுக்கும்.

**1984-85-ல் ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனைக்கு ஒதுக்கப்பட்ட தொகை.**

379—(* வினா எண். 11000) திரு. கே. உசிசி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனை வழங்குவதற் காக நிலங்களை கையகப்படுத்த 1984-85 ஆம் ஆண்டு ஒதுக்கப் பட்ட தொகை எவ்வளவு ?

(ஆ) செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 1984-85 ஆம் ஆண்டில் வீட்டுமனை வழங்குவதற்காக ரூ. 125 இலட்சம் ஒதுக்கப்பட்டு செயல்படுத்தப் பட்டது.

(ஆ) ரூ. 115.91 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

[1987 ஏப்ரல் 10

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு பெரிய தொகை ஒதுக்கியும், அங்குள்ள ஆதிவாசி மக்களுக்கு நிலப் பட்டா கிடைக்கவில்லை. இதனால் (R.L.E.G.P.) மற்றும் வீட்டு வசதித் துறை மூலமாக வீடுகள் கட்டுவது தடைப்படுகிறது. எனவே இதைத் துரிதப்படுத்துவதற்கு, அந்தந்தப் பகுதியிலே உள்ள ஆதிவாசி மக்களுக்கு, அரிசன மக்களுக்கு வீட்டு மனையைத் துரிதமாக பட்டா செய்து கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பகுதியைப் பொறுத்தவரையில், அங்கேயிருக்கின்ற ஆதி திராவிட பழங்குடி மக்கள் வாழ்கின்ற அந்த மலைப் பகுதியில் நிலத்தை எடுத்துக் கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஏன் என்றால் அங்கே பாரஸ்ட் சம்பந்தப்பட்ட இடங்களிலும் அவர்கள் குடியிருக்கின்ற நிலைமை இருக்கிறது. அதனால் நிலம் கிடைக்காத நிலைமை இருக்கிறது. எனவே அவருடைய பகுதியிலே எங்கெல்லாம் நிலங்கள் இருக்கிறதோ, வேறு இடங்களில் தூரமான இடத்தைப் பார்த்து, இடம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. வேறு ஏதாவது தடங்கல் இருந்தால் அரசு நடவடிக்கை எடுத்து, அந்தப் பழங்குடி மக்களுக்கு, ஆதி திராவிட மக்களுக்கு பட்டா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்.

திரு. கே. உச்சி: பேரவைத் தலைவர் அவர்களே, சில பகுதிகளில் அரசு நிலங்களை தனியார்கள் கையகப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலங்களிலிருந்து அவர்களை வெளியேற்றி, அதை ஆதி திராவிட மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் பட்டா செய்து கொடுக்க அரசு தீவிர கவனம் செலுத்துமா ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக அரசு பரிசீலனை செய்யும்.



1987 ஏப்ரல் 10]

திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே, என்னுடைய தொகுதியில் உள்ள பச்சைமலைப் பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கு வீடுகளுக்கான மனைப்பட்டா இதுவரையில் கொடுக்கப்படவில்லை. அது பாரஸ்ட் சம்பந்தப்பட்ட நிலமும் அல்ல. உண்மையிலேயே நீண்ட நாட்களாக அந்த இடத்திலே அவர்கள் குடியிருந்து வருகிறார்கள். அவசியம் 1 ஆண்டு, அல்லது 2 ஆண்டு என்று காலத்தைக் குறிப்பிட்டு, அதற்குள் குறைந்தது அவர்கள் குடியிருப்பதற்காகவாவது பட்டா வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதியைப் பற்றிய குறிப்புகள் என்னிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தனியாகக் கேள்வி போடுகின்ற நேரத்தில், அந்தக் குறிப்புகளைச் சேகரித்து, மாண்புமிகு உறுப்பினருக்கு விளக்கமான பதிலை அளிக்கிறேன்.

திரு. எம். சிவக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலங்களை கையகப்படுத்தும்போது, சில நில உடைமையாளர்கள் அரசு நிர்ணயித்துள்ள பணத்தை வாங்க முன்வருவதில்லை. காரணம் பணம் போதவில்லை என்று கருதுகின்ற காரணத்தால், நீதிமன்றத்திற்குச் செல்கிறார்கள். ஆகவே ஆதி திராவிட மக்களுடைய நலனைக் கருதி சிறிதளவு பணத்தை அதிகப்படுத்தி, நிலங்களைக் கையகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்திற்கு வேல்யூ போடுகின்ற நேரத்தில், பக்கத்தில் உள்ள அந்த நிலத்திற்கு என்ன மார்க்கெட் வேல்யூ நிர்ணயித்திருக்கிறார்கள், அதிலே எப்படி அந்த நிலம் விற்கப்பட்டு இருக்கிறது என்பதை டி.ஆர்.ஓ. மூலமாக, வருவாய்த்துறை மூலமாக கணக்கிடப்பட்டு, பின்னர் அந்த விவரங்கள் ஆதி திராவிட நலத்துறைக்கு வருகிறது. அரசு எந்த விலையை நிர்ணயித்திருக்கிறதோ—பக்கத்தில் உள்ள நிலத்தினுடைய

டாக்குமெண்டை வைத்துத்தான் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொல்லும்போது, ஆதி திராவிடர்களுக்கு நிலம் கையகப்படுத்தும்போது, நஞ்சை நிலங்களைப் பொறுத்தவரையில் சட்ட திட்டங்களில் சில விதிமுறைகள் இருப்பதாக முன்பு ஒருமுறை சொல்லியிருக்கிறார்கள். எனவே அப்படிப்பட்ட திட்டத்தாலே ஏழை ஆதி திராவிட மக்களுக்கு பட்டா வழங்கப்பட முடியாமல், மிகுந்த சிரமங்கள் ஏற்படுவதால், அதற்கு விதி விலக்கு அளித்து, நஞ்சை நிலங்களையும் கூட வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், நஞ்சை நிலங்களை எடுக்கின்றபோது, அதுவும் ஏழை எளிய மக்கள் வைத்திருக்கிற நஞ்சை நிலங்களை எடுக்கிற போது, அவர்கள் 1 ஏக்கர் ½ ஏக்கர் என்று வைத்திருப்பார்கள். அப்படிப்பட்ட நிலையில் அவர்கள் நிலங்களை எடுக்கும்போது, அந்த மக்களும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே ஆதி திராவிட மக்களுக்கு நிலம் வழங்கப்பட வேண்டும். அவர்கள் பகுதியிலே வாழ்கின்ற இடத்தில் நிலம் இருக்குமானால், அதை எடுத்துக் கொடுக்கின்ற சட்டத்தின் கீழ் ஆர்ஜிதம் செய்து கொடுக்கிறோம். அதைப்போல நஞ்சை நிலங்களை எடுக்கின்றபோது, மாண்புமிகு நிதியமைச்சருடைய ஒப்புதலைப் பெற்றும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்றும்தான் தவிர்க்க முடியாத சூழ்நிலையில், நஞ்சை நிலங்களை எடுக்கின்ற திட்டத்தின் கீழ் செயலாற்றிக்கொண்டு இருக்கிறோம்.



திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் மின் அழுத்த கம்பிகள் செல்லுகின்ற நிலங்களை ஆதி திராவிடர்களுக்காக கையகப்படுத்தக்கூடிய சூழ்நிலை இருந்தால் அதை அரசாங்கம் கண்டறிந்து ரத்து செய்யக்கூடிய எண்ணம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி தனியாகக் கேள்வி போட்டால் விளக்கமாகப் பதில் அளிக்கப்படும்.

(முற்பகல் 11-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றபோது 1984-85 ஆம் ஆண்டில் 125 லட்சம் ஒதுக்கப்பட்டு 115.91 லட்சம் செலவழித்திருப்பதாகச் சொன்னார்கள். ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒதுக்கப்படக்கூடிய பணம் செலவழிக்கப்படாமல் தேங்கி விடுகிறது. இதற்குக் காரணம் பொதுவாக இன்றைக்கு அரிசனங்களுக்காக, சுடுகாட்டுக்கு பாதை எடுத்தாலும் சரி, பள்ளப் பகுதியில் இருக்கக்கூடிய குடியிருப்புகளுக்கு ரோடுகளுக்காக எடுத்தாலும் சரி, இன்றைக்குப் பெரும்பகுதி இடங்களில் நீதிமன்றங்களுக்குச் சென்று தடை வாங்கிவிடுகிறார்கள். அதைப்போலவே விலை நிர்ணயம் செய்யப்பட்டு டைரக்டர் அலுவலகத்திற்கு வந்திருக்கின்ற பல்லாயிரக்கணக்கான சிபாரிசுகள் தேங்கி இருக்கின்றன. ஆகவே நான் கேட்டுக்கொள்வதெல்லாம், நஞ்சையாக இருந்தாலும், புஞ்சையாக இருந்தாலும், ஆதிதிராவிடர்களுக்காக சுடுகாட்டுக்குப் பாதையும், குடியிருப்புகளுக்கு ரோடு போடவும் நிலங்களை எடுக்கிறபோது இந்தத் தடை இல்லாமல் செய்ய சட்டத்தைத் திருத்த—அத்தியாவசியமான காரியங்களுக்கு நிலங்களை எடுக்க—நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகைக்கு கம்மியாக செலவு செய்திருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார்கள். ஆனால் அந்த ஆண்டு குறைந்ததற்குக் காரணம் மத்திய அரசு நில எடுப்புச் சட்டத்தின் கீழ் உள்ளூர் பத்திரிகைகளில் வெளியிடுதல் போன்ற சில புதிய முறைகளைச் சுட்டிக்காட்டி மத்திய அரசு திருத்தச் சட்டம் கொண்டு வந்ததன் காரணமாக 1984-85 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகையில் செலவு செய்ய முடியாத ஒரு நிலை ஏற்பட்டது. ஆனால் அதற்குப் பின்னால் தொடர்ந்து அந்தச் சட்டங்கள் போடப்பட்டு செயலாற்றிக் கொண்டிருக்கின்றன. இப்போது தீவிரமாக நிலத்தை ஆர்ஜிதம் செய்து பட்டா வழங்கிக் கொண்டிருக்கிறோம். இங்கே மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல அப்படிப்பட்ட பிரச்சினைகள் அரசின் கவனத்திற்கு வருகிறபோது அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் அவர்கள், நிலங்களை கையகப்படுத்தியதற்கு 1 கோடியே 15 லட்சம் ரூபாய் செலவு செய்திருப்பதாகச் சொன்னார்கள். இதன் மூலமாக எவ்வளவு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன? அதிகமான வீட்டு மனைப் பட்டாக்கள் எந்த மாவட்டத்தில், எத்தனை வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 21,508 பட்டாக்கள் இதுவரை வழங்கப்பட்டிருக்கின்றன. மாவட்ட வாரியான கணக்கு விவரம் என்னிடத்திலே இல்லை. தனியாகக் கேள்வி போட்டால், விளக்கமான பதில் அளிக்கப்படும்.





## நீலகிரி மாவட்டம், முதுமலை வனவிலங்கு சரணாலயம்.

314—(* வினா எண் 4709) **திரு. சீ. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்திலுள்ள முதுமலை வனவிலங்கு சரணாலயத்தை இயற்கை அழகு குறையாமல் பாதுகாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுமலை வனவிலங்கு சரணாலயத்தைப் பாதுகாக்க தேவையான எல்லா நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது. மத்திய அரசின் நிதி உதவியுடன், ஆண்டு தோறும் அங்கு பல அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இயற்கை எழிலைப் பாதிக்கும் எந்த வேலையும் அங்கு அனுமதிக்கப்படுவதில்லை. மரங்களை வெட்டுவது அடியோடு கைவிடப்பட்டுள்ளது.

## நாகை நீலாட்சி அம்மன் ஆலயப் பணியாளர்கள்.

315—(* வினா எண் 5061) **திரு. கோ. வீரய்யன்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை நீலாட்சி அம்மன் ஆலயப் பணியாளர்களுக்கு ஒரு வருட சம்பள பாக்கி உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் அருள்மிகு நீலாட்சி அம்மன் ஆலயப் பணியாளர்கள் அனைவருக்கும் டிசம்பர் 1986 முடிய சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. பிற மாதங்களுக்குச் சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[1987 ஏப்ரல் 10

நாகர்கோவில் வானொலி நிலைய ஒலிபரப்பு.

316—(*வினா எண் 6694) திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் வானொலி நிலைய ஒலிபரப்பு சக்தியை அதிகரிக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் 2 100 கிலோ வாட் உயர் சக்தி கொண்ட வானொலி நிலையம் நிறுவ இருப்பதாலும், திருநெல்வேலியில் 10 கிலோ வாட் சக்தி கொண்ட வானொலி நிலையம் இயங்கி வருவதாலும், மேலும் நாகர்கோவிலில் ஒரு குறைந்த சக்தி கொண்ட தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் அமைக்கப்படவிருப்பதாலும், தற்போது நாகர்கோவிலில் உள்ள 1 கிலோ வாட் திறன் கொண்ட வானொலி நிலையம் இயங்கி வருவதன் மூலம், நாகர்கோவிலைப் பொறுத்த மட்டில் "Media Coverage" நிறைவாக இருப்பதால் இதன் சக்தி அதிகரிக்கும் அவசியம் எழவில்லை என்று வானொலித் துறையினர் தெரிவித்துள்ளனர்.

தஞ்சை மாவட்டம், கொரடாச்சேரி ஒன்றியம் அம்மையப்பன் கிராமத்தில் புதிய கால்நடை மருந்தகம்.

317—(*வினா எண் 10534) திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், கொரடாச்சேரி ஒன்றியத்தைச் சார்ந்த அம்மையப்பன் கிராமத்தில் புதிதாக ஒரு கால்நடை மருந்தகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், கொரடாச்சேரி ஒன்றியத்தைச் சார்ந்த அம்மையப்பன் கிராமத்தில் ஏற்கனவே ஒரு கால்நடை கிளை நிலையம் இயங்கி வருகிறது. இந்தக் கால்நடை கிளை நிலையத்தைக் கால்நடை மருந்தகமாக மாற்றும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



1987 ஏப்ரல் 10]

கோத்தகிரி அணைக்கட்டில் மின்சார சப்-டிவிஷன்.

318—(*வினா எண் 11871) திரு. எம். சிவக்குமார்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோத்தகிரியில் அணைக்கட்டு பகுதியில் மின்சார சப்-டிவிஷன் எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோத்தகிரியில் ஒரு துணை மின்சார கோட்ட அலுவலகம் ஏற்கனவே இயங்கி வருவதால் இக் கேள்விக்கு இடமில்லை.

வட ஆற்காடு மாவட்டம் போளூர் கால்நடை மருந்தகம்.

319—(*வினா எண் 12513) திரு. ஜெ. ராஜாபாபு: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், போளூரில் உள்ள கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?;

(ஆ) ஆம் எனில், அரசு அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

முத்துப்பேட்டையில், லக்கூனை சுற்றுலா மையமாக்கல்.

377—(*வினா எண் 10207) திரு. ச. ஞானசுந்தரம், திரு. எம். தங்கமணி மற்றும் திரு. எஸ். இரத்தினவேலு: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முத்துப்பேட்டை அருகில் கடலில் லக்கூன் என்ற இடத்தைச் சுற்றுலா மையம் ஆக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?;

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

[1987 ஏப்ரல் 10

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை

(ஆ) வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 3. தகவல் கோரல்.

#### (அ) வறட்சி நிவாரணக் குழுவை உறுப்பினர்கள் சந்திக்க ஏற்பாடு.

**திரு. என். எஸ். வி. சித்தன்** : மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் சார்பிலே தமிழகத்திற்கு வர இருக்கிற வறட்சி நிவாரணக் குழு 2 நாட்கள் தமிழகத்தைச் சுற்றிப் பார்க்க இருப்பதாக மாண்புமிக்க நிதி அமைச்சர் அவர்கள் முன்பு ஒருநாள் இந்த அவையிலே அறிவித்தார்கள். தமிழகத்திலே கிட்டத்தட்ட எல்லா மாவட்டங்களிலும் வறட்சி நிலை நிலவுகின்ற காரணத்தினாலே அந்த வறட்சி நிவாரணக் குழுவைப் பல்வேறு குழுக்களாகப் பிரித்து எல்லா மாவட்டங்களையும் பார்ப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா? மாவட்டத் தலைநகரங்களில் மக்கள் பிரதிநிதிகளாக இருக்கின்ற சட்ட மன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்த வறட்சி நிவாரணக் குழுவைச் சந்திக்க விரும்புகின்ற காரணத்தினாலே போதுமான முன்னறிவிப்பு கொடுத்து, அவகாசம் கொடுத்து, அந்தக் குழுவைச் சந்திப்பதற்கான ஏற்பாட்டை மாவட்டத் தலைமை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.



### 4. விதி 110-இன்கீழ் அமைச்சரின் அறிக்கை.

#### வறட்சி நிவாரணப் பணிகள் குறித்து.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்களுடைய குறிப்புக்கு விளக்கம் அளிப்பதற்கு முன்னாலே விதி 110-ன்கீழ் ஒரு அறிக்கையை முதலிலே வைக்க விரும்புகிறேன். அதற்குப் பிறகு அவருக்கு நான் விளக்கம் தர விரும்புகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் நிலவி வரும் வறட்சி நிலைமையை ஆராய்ந்து பல்வேறு குடிநீர் பணிகளுக்காகவும், விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும் ரூபாய் 34 கோடியே 47 லட்சத்தை ஏற்கெனவே அனுமதித்து உள்ளார்கள். 8—4—1987 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிலைமையை மீண்டும் ஆராய்ந்து வறண்டு போன குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு மேலும் 2 கோடியே 50 லட்ச ரூபாயை அனுமதித்துள்ளார்கள் (மேசையைத் தட்டும் ஒலி)

8—4—1987 அன்று தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் தமிழ்நாட்டில் நடைபெற்றுவரும் நிவாரணப் பணிகளின் முன்னேற்றம் பற்றி ஆய்வு செய்தார்கள். சிறப்பு ஆணையர்கள், சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள் மற்ற அரசு நிறுவனங்களைச் சார்ந்த பிரதிநிதிகள் ஆகியோர் இந்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். 3—4—1987 வரை 3,528 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. குடிநீர் பணிக்காக 9 கோடியே 9 லட்சத்து 22 ஆயிரம் ரூபாய் இதுவரை செலவிடப்பட்டு இருக்கிறது. விவசாயிகளுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய திட்டங்களின் மூலம் 34 கோடியே 36 லட்ச ரூபாய் செலவிடப்பட்டு ஒரு கோடியே 75 லட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சென்னை நகர குடிநீர் வாரியம் குடிநீரை எவ்வாறு சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று முன்

கூட்டியே மக்களிடையே பிரச்சாரம் செய்வதுடன் மக்களுக்கு அறிவுரை வழங்க வேண்டுமென்றும் தலைமைச் செயலாளர் அவர்கள் உரிய அலுவலர்களை அறிவுறுத்தி இருக்கிறார்கள்.

வறட்சி நிவாரணக் குழுவால் மேற்கொள்ளப்படும் நிவாரணப் பணிகளின் பயன் உடனடியாக மக்களுக்குச் சேரும் வகையில் சிறப்பு ஆணையாளர்கள், துறை அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிர்வாக இயந்திரங்களை முடுக்கி விட வேண்டும் என்று தலைமைச் செயலாளர் அவர்கள் அனைவருக்கும் அறிவுறுத்தி இருக்கிறார்கள். வறட்சி நிலைமை பற்றிக் கண்டறிய தமிழகத்திற்கு 5 பேர் கொண்ட உறுப்பினர் குழு ஒன்றை மத்திய அரசு அனுப்பி வைக்க இருக்கிறது என்பதை இந்த அவைக்கு ஏற்கனவே நான் அறிவித்தேன். அந்தக் குழுவினர் 2 குழுவாகப் பிரிந்து பார்வையிட இருக்கிறார்கள். அவர்கள் தமிழகத்திற்கு இந்த மாதம் 12 ஆம் தேதி மாலை இங்கே வந்து சேருகிறார்கள். 13, 14 ஆகிய இரண்டு நாட்களில் தமிழகத்தினுடைய பல்வேறு மாவட்டப் பகுதிகளுக்குச் சென்று பார்வையிடுகிறார்கள். 15 ஆம் தேதி இங்கே வந்து அலுவலர்களோடும் மற்றவர்களோடும் கலந்துரையாடல் நடத்துகிறார்கள். அந்த வகையில் ஒரு குழு 13 ஆம் தேதி திருச்சி, புதுக்கோட்டை, பசும்பொன் முத்துராமலிங்கம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கும், ஏப்ரல் 14 ஆம் தேதி காமராஜ, திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களுக்கும் செல்ல இருக்கிறது. மற்றும் ஒரு குழு ஏப்ரல் 13 ஆம் தேதி காலையிலே கோவை மாவட்டத்திற்கும் அன்று மாலையிலும் 14 ஆம் தேதியும் மதுரை மாவட்டத்தினுடைய பல்வேறு பகுதிகளுக்கும் சுற்றுப்பயணம் செய்ய இருக்கிறது. இந்த 2 நாட்களிலும் அவர்கள் சுற்றுப்பயணம் செய்ததற்குப் பிறகு அவர்கள் 15 ஆம் தேதி இங்கே வந்து அரசு அலுவலர்களுடன் கலந்துரையாடல் நடத்துகிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் ஆங்காங்கு மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்கிறபோது ஆங்காங்கு இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களோடும் மற்றவர்களோடும் அவர்கள் கலந்துரையாடுவதற்கு நேரம் வகுக்க





வேண்டும் என்று எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் சுற்றுப் பயணத்தில் ஈடுபடுகிறபோது ஆங்காங்கு சில குறிப்பிட்ட வறட்சிப் பகுதிகளை நேரடியாக கண்டறிந்து நிலைமைகளை அவர்கள் அறிந்து கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. இடையிலே சில மணித் துளிகள் அவர்களுக்கு அவகாசம் இருக்குமானால், அதற்கான வாய்ப்பு கிடைக்குமேயானால், அதை வருவாய்த் துறை சிறப்பு ஆணையாளர் மூலமாகவும், தலைமைச் செயலாளர் அவர்கள் வாயிலாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குச் சொல்லி ஆங்காங்கு இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் விரும்புவார்களானால் ½ மணி நேரமோ, ¾ மணி நேரமோ ஒதுக்கிடு செய்வதற்கு அவர்களுடைய விருப்பத்தை அறிந்து ஏற்பாடு செய்யலாம். ஆனால் ஏற்பாடு செய்ய முடியும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. அதற்கு ஏற்பாடு செய்யலாம் என்று சொல்கிறேன். அப்படி இருந்தால் ஆங்காங்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அறிவிப்பார்கள்.

### 3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

### (ஆ) அரசு நிகழ்ச்சிகளுக்கு உறுப்பினர்கள் அழைக்கப்படாமை.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினையை உங்கள் மூலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எனது சேப்பாக்கம் தொகுதியில் சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள நேப்பியர் பூங்காவில் சென்னை மாநகராட்சியின் சார்பாக 62-வது வருடாந்திர மலர்க் காட்சி துவக்க விழா இன்று மாலை 6 மணிக்கு நடைபெற இருக்கிறது. நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதைத் துவக்கி வைக்கிறார்கள். தனி அதிகாரி அவர்கள் தலைமை தாங்குகிறார்கள். நான் அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர், அதேபோல் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி அவர்கள். இரண்டு பேரும் அந்த நிகழ்ச்சியில் புறக்கணிக்கப்பட்டு இருக்கிறோம். விளம்பரத்திலும் எங்கள் பெயர் இல்லை, அழைப்பிதழும் அனுப்பப்படவில்லை. ஒரு கட்சி சம்பந்தமான நிகழ்ச்சியாக இருந்தால் நான் கேட்கப் போவது இல்லை. அது அரசாங்க நிகழ்ச்சி. எதிர்க்கட்சியைச் சேர்ந்த

நாங்களும் வரி கொடுக்கிறோம். எங்களுடைய வரியிலும் இந்த அரசு நடைபெறுகிறது. சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் ஆகிய எங்களை ஆயிரக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் லட்சோப லட்ச மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கும் எங்களை இப்படி அரசாங்கம், தனி அதிகாரி, கமிஷனர் அவமதிப்பது எந்த விதத்திலே நியாயம் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அனைவரும் வருக என்று கமிஷனர் அவர்கள் அழைப்பு விட்டு இருக்கிறார்கள். எங்களுக்கு அழைப்பு இல்லாமலேயே—தொகுதி எம்.எல்.ஏ.—அனைவரும் வருக என்று சொன்னால் என்ன பொருள்? ஏற்கெனவே நாவலர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்க நிகழ்ச்சிகளுக்கு நிச்சயமாக அழைக்கப்படவேண்டும் என்று இந்தச் சட்ட பேரவையில் அறிவித்து இருக்கிறார்கள். கஸ்தூரிபா ஆஸ்பிட்டல் என்னுடைய தொகுதியில் இருக்கிறது, அங்கு நடந்த நிகழ்ச்சிக்கு நான் அழைக்கப்படவில்லை. தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராகிய என்னை அவமானப் படுத்துகிறார்கள். ஆகையால் உங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புவது அதிகாரிகள் உத்தரவை மீறினால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? அப்படி இல்லையென்றால், ஜனநாயக ரீதியில் மக்களைத் திரட்டி, கருப்புக் கொடி காட்டுவதைத் தவிர, வேறு வழியில்லை.

(முற்பகல் 11-10)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தகவல் எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களை வேண்டுமென்றே புறக்கணிக்கவில்லை. நான் இப்போதே அவர்களை இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேண்டுமென்று அரசின் சார்பாக அழைப்பு விடுக்கின்றேன். அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். இப்படியெல்லாம் நடக்கக் கூடாது என்ற வகையில், மாநகராட்சிகள், நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், இவற்றில் நடைபெறும் முக்கியமான திறப்பு விழாக்கள் போன்ற அரசு நிகழ்ச்சிகளில் யார் யார் கலந்துகொள்ள வேண்டும், யார் யார்





அழைக்கப்பட வேண்டுமென்பதைப் பற்றி ஒரு விரிவான உத்தரவை, ஒரு விதியை—ஒரு ரூலை, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் வகுத்து அதை நடைமுறைப்படுத்த இருக்கிறார்கள். அது இன்று அல்லது நாளை அரசின் சார்பில் வெளியிடப்படும். அந்த ரூல் வந்ததும், ஒரு தொகுதியில் நடக்கவிருக்கும் முக்கியமான விழாக்களில், சட்டமன்ற உறுப்பினர், எம்.பி., சென்ட்ரல் மினிஸ்டர்ஸ், ஸ்டேட் மினிஸ்டர்ஸ், பிரைம் மினிஸ்டர், பிரசிடெண்ட், வைஸ்-பிரசிடெண்ட், சீப் மினிஸ்டர், மினிஸ்டர்கள், இவர்கள் எல்லாம் அழைக்கப்பட வேண்டுமென்று முறைப்படுத்தி உத்தரவு வர இருக்கிறது. அதற்குப் பிறகு எந்தவிதமான சங்கடங்களும் எழ வாய்ப்பில்லை.

**5. கவன ஈர்ப்பு**

**(அ) சீர்காழியில் தையல் தேர்வு மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் கு. ரமணி, ஜே. ஹேமச்சந்திரன், கோ. வீரய்யன், வி. பி. சிந்தன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டுவருவார்.

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சீர்காழி, செம்பனார்கோவில், பூம்புகார், கொள்ளிடம், சிதம்பரம், மயிலாடுதுறை, மணல்மேடு போன்ற இடங்களில் தையல் பயிற்சி பெற்றவர்களுக்குத் தேர்வு மையம் சீர்காழியில் இல்லாததால், மாணவ-மாணவிகளுக்கு ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தஞ்சாவூர் வருவாய் மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் தையல் பாடங்களுக்கான தேர்வுகளுக்கு, தஞ்சாவூரில் இரு மையங்களும் (ஆண்களுக்கு ஒன்று; பெண்களுக்கு மற்றொன்று) அதேபோன்று கும்பகோணத்தில் இரு மையங்களும் ஆக நான்கு மையங்கள் அமைக்கப்படுகின்றன. இந்த நான்கு மையங்களிலும் சேர்ந்து 1984, 1985 மற்றும் 1986 ஆம் ஆண்டுகளில் முறையே 656, 664 மற்றும் 751 மாணவ/மாணவியர் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இம்மாவட்டத்தில் அதிக தேர்வர்கள் இல்லை என்பதால், வேறு புதிய மையம் ஏதும் இதுவரை அமைக்கப்படவில்லை. எனினும் சீர்காழி மற்றும் அதற்கருகிலுள்ள இடங்களிலிருந்து தையல் தேர்வெழுதவிருக்கும் மாணவ/மாணவியர்களுக்கு சீர்காழியில் 1987 ஆம் ஆண்டு தேர்வுக்காக ஒரு புதிய மையம் அமைப்பது குறித்து இடம், இருக்கை மற்றும் போக்குவரத்து வசதி பற்றி மயிலாடுதுறை மாவட்டக் கல்வி அலுவலரின் ஆலோசனை கேட்கப்பட்டு இதுகுறித்து அறிக்கை பெறப்பட்டவுடன் முடிவெடுக்கப்படும் என அரசுத் தேர்வுகள் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே குறிப்பிட்டிருக்கும்படியான இந்த மையங்களில் எல்லாம் பயிற்சி பெற்றுத் தேர்வு எழுத வேண்டிய மாணவ-மாணவியர்களுக்கு மிகத் தூரமாக இரண்டு மையங்களை ஏற்படுத்தி, அங்கே அவர்கள் செல்ல வேண்டியிருக்கிறது. தூரம் மட்டுமல்ல. அவர்களுக்கு ஏற்பட்டுவரும்படியான கஷ்டங்கள், தையல் இயந்திரங்களை ஒவ்வொருவரும் அவர்கள் வேலை செய்கின்ற, பயிற்சி பெறுகின்ற இடங்களிலிருந்து தேர்வு எழுதும் மையம் வரையிலும் தூக்கிச் செல்லவேண்டிய நிலையில், திரும்பவும் தேர்வு எழுதி முடிந்தவுடன் தூக்கிக்கொண்டு வர வேண்டிய நிலைமையும் இருக்கிறது. அந்த மாதிரி கஷ்டங்கள் இருக்கின்ற நிலையில், அவர்களுக்கு சமீபமாக, பக்கத்திலே இருக்கக்கூடிய வகையில் சில மையங்களை அமைத்தால் நன்றாக இருக்குமே, அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, தஞ்சையில் இரண்டு மையங்கள், ஆணுக்கு ஒன்று, பெண்ணுக்கு ஒன்றுமாக, இரண்டு மையங்கள் இருக்கின்றன. அதேபோன்று, கும்பகோணத்தில் இரண்டு மையங்கள் தற்போது இருக்கின்றன. சீர்காழியில் ஒரு மையம் அமைக்க அரசு கருதியிருக்கிறது. அதற்கான இடம் தேடப்படுகிறது. இடம் கிடைத்தவுடன் அங்கே ஒரு மையம் அமைக்கப்படும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, சீர்காழியில் ஒரு மையம் அமைப்பதற்கான ஆலோசனை கேட்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அது சரிபார்க்கப்பட்டு, ஒழுங்கான ஆலோசனையாக வரவில்லை என்றால், திரும்பவும் அவர்கள் அதே கஷ்டத்திற்கு ஆளாவார்கள். வேறு விதமான தேர்வு நடத்துகிறது. டைப்ரைட்டிங் எக்சாமினேஷன் என்று வருகின்றபோது, அதற்குக் குறிப்பிட்ட பள்ளிகளில் அரசாங்கமே ஏற்பாடு செய்து, டைப்ரைட்டர்களை வரவழைத்து, மாணவர்கள் அதில் பங்கேற்கிறார்கள். அந்த மாதிரி செய்வதில் என்ன தவறு? அதைச் செய்தாலே, இந்த மாணவர்களுக்கும்; மாணவிகளுக்கும் கஷ்டம் இருக்காது. அப்படிப்பட்ட முயற்சிகளைச் செய்வார்களா? சீர்காழி, மயிலாடுதுறை இந்த இரண்டிலே ஏதாவது ஒன்றில் அதை சென்ட்டரை ஏற்படுத்த முடியுமா? சீர்காழியிலே முடிய வில்லை என்றால் மயிலாடுதுறையிலாவது அந்த சென்ட்டரை ஏற்படுத்த முடியுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, அதற்குத்தான் ஏற்கனவே சொன்னேன். இடம் தேடப்படுகிறது. ஒருவேளை காலதாமதம் ஆகுமானால், மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனையை ஏற்று அரசு துரிதமாகப் பரிசீலிக்கும்.

**(ஆ) பட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்கு கச்சாப் பொருள்கள் கிடைக்காததால் பாதிப்பு.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் மு. இராசாங்கம், கி. கிருஷ்ணமூர்த்தி, எஸ். இராசாராமன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

***திரு. மு. இராசாங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு பட்டு விற்பனை இணையகம் மற்றும் கர்நாடகா பட்டு வாரியம் ஆகியவற்றில் கூட்டுறவுச் சங்கத்திற்குத் தேவையான அளவு கச்சா பொருள்கள் கிடைக்காத காரணத்தால் தமிழ்நாட்டில் கைத்தறி பட்டு நெசவாளர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

## அறிக்கை

தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் பட்டுநூலை நியாயமான விலையில் கொள்முதல் செய்து அதனைப் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் இதர நெசவாளர்களுக்கு விற்பனை செய்யும் நோக்கத்துடன் தமிழ்நாடு மாநில பட்டு உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவு விற்பனை இணையம் (டான்சில்க்) நிறுவப்பட்டது. பட்டு கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்குத் தேவையான தரமான பட்டைக் கொள்முதல் செய்து வழங்குவது இவ்விணையத்தின் முக்கிய பணியாகும். பட்டின் தரத்தைப் பரிசீலனை செய்ய தேவையான கருவிகளும், நிபுணர்களும் இவ்விணையத்தில் உள்ளனர். ஆகையால் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கிடைக்கப்பெறும் பட்டின் தரத்தைக் கருத்தில் கொண்டும், டான்சில்க் நிறுவனத்தைப் படிப்படியாக ஊக்குவிக்கும் நோக்கத்துடனும், அதே நேரத்தில் டான்சில்க் நிறுவனத்தால் ஏதாவது காரணத்தால் குறிப்பிட்ட ரக பட்டை வழங்க இயலவில்லையானால் அச்சந்தர்ப்பத்தில் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பாதிப்பு ஏற்படாமலிருக்கும் பொருட்டும், 24—12—1985 தேதியிட்ட கைத்தறி துணி நூல் மற்றும் கதர் துறையின் அரசாணை எண். 174-ல் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுக்குத் தேவையான





பட்டுநூலை டான்சில்க் நிறுவனத்திலிருந்தோ அல்லது கர்நாடக மாநில பட்டு விற்பனை வாரியத்திடமிருந்தோ மட்டும் வாங்க வேண்டுமென்று ஆணையிடப்பட்டது.

2. ஒவ்வொரு நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கும் 'நாபார்டு' (NABARD) நிறுவனத்தின் நிபந்தனைக்குட்பட்டு மத்திய கூட்டுறவு வங்கி நடைமுறை மூலதனக் கடன் வழங்குகிறது. ஆரம்ப காலத்தில் டான்சில்க் நிறுவனம், பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தியை மனதிற்கொண்டு கடன் பெறும் தகுதிக்கு மேலும் பல சங்கங்களுக்கு பட்டு கடனாக வழங்கி வந்தது. ஆகையால் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து டான்சில்க்குக்கு ஏராளமான தொகை வரவேண்டியிருந்தது. 31—3—1985 தேதிய கணக்குப்படி பட்டு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் டான்சில்க்குக்கு செலுத்த வேண்டிய கடன் தொகை ரூ. 2,70,15,653 ஆகும். நிலுவைத் தொகை இவ்வாறு அதிகமாகி வந்த காரணத்தாலும், கடன் வழங்குவதற்கு சில வேலைகளில் போதுமான பிணை ஆதாரம் இல்லாததாலும், சங்கங்களுக்குப் பட்டு கடன் கொடுக்கும் முறையை சீர்செய்யும்படி டான்சில்க் நிறுவனம் அறிவுறுத்தப்பட்டது. தற்போது அந்நிறுவனம் கடைப்பிடிக்கும் முறைப்படி பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இணையத்தில் பெற்ற பழைய கடனைத் திருப்பிச் செலுத்தும்போது அத்தொகையில் 70 சதவிகிதம் வரை மட்டும் புதிதாகக் கடன் கொடுக்கப்படும் என்ற முறை செயல்படுத்தப்படுகிறது. அம்முறையைக் கடைப்பிடித்தபடியால் 28—2—1987 அன்றைய கணக்குப்படி கடன் நிலுவை ரூ. 2,03,95,936 ஆகக் குறைந்துள்ளது. எனினும் இந்நிறுவனத்தின் ஆண்டு விற்பனைக் கணக்கை மனதில் கொண்டால் இது அதிகமான தொகையாகும்.

3. பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களது மாதாந்திர பட்டுநூல் தேவைகளை முன்மாதத்திலேயே தெரிவித்து ரொக்கம் செலுத்த இயலாத சூழ்நிலையில் ஏற்கனவே கூறியவாறு 70 சதவிகித கடன் பெறத் தேவையான பிணை ஆதாரங்களைக் கொடுத்தால், டான்சில்க் நிறுவனம் தேவையான தரமான பட்டுநூலைக் கொள்முதல் செய்து சங்கங்களுக்கு

[திரு. சு. முத்துசாமி] [1987 ஏப்ரல் 10

வழங்கும். நெசவாளர் சங்கங்கள் தங்களின் கடன் பெறும் தகுதிக்கேற்ப ஏற்கனவே மத்திய கூட்டுறவு வங்கிகளிலிருந்து காசுக் கடன் பெற்றிருக்கின்ற காரணத்தால், அதற்கு மேலும் டான்சில்க் நிறுவனம் கடன் கொடுப்பது சரியான முறையல்ல. 1—4—1986 முதல் 28—2—1987 வரையான 11 மாத காலத்தில் இந்நிறுவனம் 1,52,113 கிலோகிராம் பட்டைக் கொள்முதல் செய்து ரூ. 826.13 இலட்சம் மதிப்புள்ள 1,45,862 கிலோகிராம பட்டுநூலை விற்பனை செய்துள்ளது. அதற்கு முந்தைய ஆண்டு அதே கால அளவில் கொள்முதல் செய்யப்பட்ட பட்டுநூல் 99,916 கிலோ கிராம்; விற்பனை செய்யப்பட்டது 96,598 கிலோ கிராம். இதைப் பார்க்கும்போது இந்நிறுவனத்தின் செயலில் முன்னேற்றம் காண முடிகிறது. அதற்குமேல் தேவையான பட்டுநூலை கர்நாடக மாநில பட்டு விற்பனை வாரியத்திடமிருந்து வாங்குவதற்கு எத் தடையும் இல்லை. மேலும், பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டு றவுச் சங்கங்கள் தற்போது செலுத்த வேண்டிய கடன் தொகை யைச் செலுத்திவிட்டால் அச்சங்கங்களுக்குத் தேவையான பட்டு நூல் அனைத்தையும் கொள்முதல் செய்து வழங்க டான்சில்க்கை வலியுறுத்த இயலும்.

4. பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தற் போது செலுத்தும் தொகைகளுக்கு ஏற்ப தேவையான அளவு தரமான பட்டுநூல் கொள்முதல் செய்து வழங்க டான்சில்க் நிறு வனத்தால் இயலும். அதற்கு மேலும் கோரா, பாவு வகைகளை வாங்கிக் கொள்ள அனுமதி அளிக்க வேண்டுமென்று தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த சில பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங் களின் தலைவர்கள், தஞ்சை மாவட்ட அண்ணா கைத்தறி தொழி லாளர் சங்கத்தின் மூலமாக அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள் ளார்கள். இதுகுறித்து கைத்தறித் துறை மற்றும் பட்டு வளர்ச்சி துறைகளின் அதிகாரிகள் அச்சங்கங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாட இருக்கிறார்கள். டான்சில்க் நிறுவனம் மற்றும் கர்நாடக மாநில பட்டு விற்பனை வாரியம் ஆகியவற்றால் சங்கங் களுக்குத் தேவையான பட்டுநூலை வழங்க இடர்பாடுகள் நேரிட்டதாக நிரூபிக்கப்பட்டால் தகுந்த நிவாரண நடவடிக்கை எடுக்க வாய்ப்புள்ளது.



1987 ஏப்ரல் 10]

**திரு. மு. இராசாங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்
நாடு பட்டு இணையகம் தயாரிக்கின்ற பட்டு தமிழகத்திலே தர
மாக உள்ளது. ஆனால் அதே நேரத்தில் கர்நாடக சில்க் போர்டு
தயாரிப்பதை தனிப்பட்ட உற்பத்தியாளர்களிடம் பெற்று அதை
சில்க் போர்டு மூலமாக வழங்குவதால் அது தரமாக இல்லை என்
பதை நான் அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அரசினுடைய அறிக்கையில் தமிழகத்தினுடைய பட்டு
உற்பத்தி 1,52,113 கிலோகிராம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.
ஆனால் தமிழகத்தினுடைய மொத்த பட்டு தேவை எவ்வளவு
என்று குறிப்பிடப்படவில்லை. தஞ்சை மாவட்டத்தில் 28 கூட்
டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவர்களுடைய தேவை எவ்வளவு,
அவர்கள் கேட்டிருப்பது எவ்வளவு என்று அரசு தெரிவிக்க
வில்லை. தமிழ்நாடு பட்டு இணையகம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு
எவ்வளவு கிலோகிராம் பட்டு கொடுத்து இருக்கிறது
என்பதும் அறிக்கையில் இல்லை. அறிக்கையிலே சங்கம்
2,70,15,653 ரூபாய் கடனாக கொடுத்துள்ளது என்று குறிப்பிடப்
பட்டிருக்கிறது . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையே கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. மு. இராசாங்கம்:** ஆனால் அதே நேரத்தில் பட்டு கூட்
டுறவுச் சங்கங்களுக்கு பல இலட்சம் ரூபாய்களுக்கு ரிபேட்
தொகை அரசு வழங்கவேண்டியிருக்கிறது. அதற்கு வட்டி
கிடையாது. ஆனால் அரசு கூட்டுறவுச் சங்கங்களுக்குக்
கொடுக்க வேண்டிய தொகைக்கு வட்டி கொடுக்க வேண்டும்.
ஆகவே சங்கம் வளர வாய்ப்பு இல்லை. இதை மனதில் கொண்டு
அரசு உரிய முயற்சியை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்பு
கிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே,
இப்போது தமிழக அரசினுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்ற
டான்சில்க்கில் இருக்கின்ற பட்டு தரமானதாக இருக்கிறது என்ற
கருத்தைச் சொன்னார்கள். ஆனால் கர்நாடக மாநிலத்தில்
தயாரிக்கப்படுகின்ற, அந்த அரசுக்குச் சொந்தமான நிறுவனத்தி
லிருந்து கொடுக்கப்படுகின்றது தரமாக இல்லை என்று சொன்

னார்கள். சம்பந்தப்பட்டவர்களுக்கு நாம் அதைப்பற்றி அறிவுறுத்தலாம். ஆனால் தரமான இடத்திலேயே வாங்குவதற்கு முயற்சியை அவர்கள் எடுத்துக்கொள்வது நல்லது என்று நான் கருதுகின்றேன். கடந்த ஆண்டு பார்த்தால் ஏறத்தாழ 99,916 கிலோகிராம்தான் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு 28—2—1987 வரை 11 மாத காலத்திற்கு 1,52,113 கிலோகிராம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. எனவே முன்னேற்றம் அடைந்திருக்கிறது. அதைத்தான் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். கடந்த ஆண்டு குறைவாக இருக்கும்போது இந்தப் பிரச்சினை ஏற்படவில்லை. இப்போது உற்பத்தி அதிகமாகி பற்றாக்குறை என்ற பிரச்சினை வந்திருப்பதாக இங்கே கவன ஈர்ப்பு தீர்மானத்தில் வந்திருக்கிறது. உண்மை நிலை அதுவல்ல. மிக அதிகமான கடனை நாம் கொடுத்துவிட்ட காரணத்தினால் அந்தக் கடனை திருப்பிக் கட்ட வேண்டும் என்று கூட்டுறவுச் சங்கத்திலே கேட்கின்றபோது, இந்தப் பிரச்சினையை அவர்கள் கிளப்பியிருக்கிறார்கள். நாம் நல்ல தரமான பட்டை கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இது ஆரம்பிக்கப்பட்டதே ஒழிய இதிலிருந்து கடனைப் பெற்றுக்கொண்டு அந்தக் கடன் திரும்பி வராமல் இருக்குமேயானால் இதை ஆரம்பித்ததற்கு ஒரு அர்த்தம் இல்லாமல் போய்விடும். எனவே அந்தக் கடனை முழுவதுமாக அவர்கள் திருப்பிக் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதனால்தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் இந்தப் பிரச்சனை வந்திருக்கிறது. இருந்தாலும் அரசு ஆய்வுசெய்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து தேவையான நடவடிக்கையை எடுக்கச் சொல்லலாம். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கட்சி என்று எடுத்தால் ஒரு கேள்வி. ஒரு உறுப்பினர் என்று எடுத்தால் இரண்டு கேள்வி. இதுதான் விதி.

**திரு. மு. இராசாங்கம்:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலே தமிழகத்தினுடைய மொத்த உற்பத்தியே கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான பட்டில் 30 சதவிகிதம் தான் உற்பத்தியாகிறது. ஆனால், பாக்கி 70 சதவீதம் பட்டை



(முற்பகல் 11-20)

கூட்டுறவுச் சங்கங்கள் எங்கு வாங்குவது என்று அரசு அறிவிக்கவில்லை. அதேநேரத்தில் ஜரிகையைப் பொறுத்தவரையில் அரசு உற்பத்தியாகின்றதிலே 10 சதவிகிதத்தைக் கட்டாயமாக கூட்டுறவுச் சங்கங்கள் கொள்முதல் செய்யவேண்டும் என்று விதி வகுத்திருக்கிறது. அடுத்து கூட்டுறவுச் சங்கங்கள் இத்தனை சதவிகிதம்தான் கட்டாயமாக பட்டு கொள்முதல் செய்ய வேண்டும், மீதமுள்ளதை தனியாரிடம் பெற்றுக் கொள்ளலாம் அல்லது எங்கு தரமாக உள்ளதோ அங்கு பெற்றுக் கொள்ளலாம் என்று அரசு உத்தரவை வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, வேலையற்று இருக்கின்ற பல்லாயிரக்கணக்கான நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வர வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இது ஆரம்பிக்கப்பட்டதனுடைய நோக்கம், அவர்களுக்கு தரமானதை தயார் செய்து கொடுக்கவேண்டும் என்றுதான் நாம் செய்திருக்கிறோம். கூட்டுறவுச் சங்கங்கள் வெளியிலே, தனியாரிடத்திலே வாங்கிக் கொள்வதற்கு அனுமதியைத் தரவேண்டும் என்பதிலே அரசாங்கத்திற்கு ஒரு மாறுபட்ட கருத்து இல்லை என்றாலும், தவறுகள் நடப்பதன் மூலமாக அங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் பாதிக்கப்பட்டு விடுவார்கள் என்பதற்காகத்தான் இந்த முறை கொண்டுவரப்பட்டிருக்கிறது. எனவே, அங்கு ஒரு முறைக்காக, அதிலே இருக்கின்ற உறுப்பினர்களுடைய பாதுகாப்பிற்காக அதைக் கட்டுப்படுத்துவதுதான் முறையாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

இருந்தாலும், பற்றாக்குறை இருக்குமேயானால் அதற்கு எப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுப்பது என்பதைப்பற்றி அரசு ஆய்வு செய்யும். அதிலே பற்றாக்குறை ஏற்பட்ட காரணத்தால்தான் கர்நாடக மாநிலத்திலே தயாரிக்கப்படுகின்ற. பட்டு வாரியத்திலிருந்து நீங்கள் வாங்கிக் கொள்ளலாம் என்ற ஒரு உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பட்டு வாரியத்தி

லிருந்து வாங்குகிறபோது, அது நிச்சயமாக அரசுக்குச் சொந்தமாக இருக்கிற காரணத்தால் அதிலே தவறுகள் நடப்பதற்கு வாய்ப்பில்லை என்ற காரணத்தால்தான் அங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. பல்லாயிரக்கணக்கான பேருக்கு வேலைவாய்ப்பு இல்லை என்று சொன்னார்கள். அதைப்பற்றி இரண்டு துறைகளும் பார்த்து தனியாக நடவடிக்கை எடுக்கலாம்.

(இ) மணப்பாறை வட்டத்திலுள்ள சில கிராம மக்கள் பத்திரப் பதிவுக்காக விராலிமலை செல்லவேண்டியதில் உள்ள இடர்ப்பாடு.

திரு. க. சோலைராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டத்தில் உள்ள உசிலம்பட்டி, எப. கீரையூர், சாம்பட்டி, சூளியாம்பட்டி ஆகிய கிராமங்களில் வசிக்கின்ற மக்கள் பத்திரப் பதிவு சம்பந்தமாக மிக அருகில் உள்ள மணப்பாறையை விடுத்து, புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த விராலிமலை பதிவு அலுவலகத்திற்குச் செல்ல வேண்டியிருப்பதால் அம்மக்களின் நிலை குறித்த" அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

திருச்சி பதிவு மாவட்டத்திலிருந்து புதுக்கோட்டை பதிவு மாவட்டம் தனியாகப் பிரிக்கப்பட்டு 10—5—1951 முதல் இயங்கி வருகிறது. திருச்சி வருவாய் மாவட்டத்தைச் சேர்ந்த உசிலம்பட்டி, கீரையூர், சாம்பட்டி, சூளியாம்பட்டி ஆகிய நான்கு கிராமங்களும் புதுக்கோட்டை பதிவு மாவட்டத்தைச் சேர்ந்த விராலிமலை சார்பதிவகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்நான்கு கிராமங்களும் விராலிமலை சார்பதிவகத்தைக் காட்டிலும் மணப்





பாறை சார்பதிவகத்திற்கு அருகில் உள்ளன. விராலிமலை மற்றும் மணப்பாறை சார்பதிவகங்களுக்கும் இந்த நான்கு கிராமங்களுக்கும் உள்ள தூரம் விவரம் வருமாறு :—

| வரிசை எண். | கிராமம் | விராலிமலை சார்பதிவகத்திலிருந்து தூரம். | மணப்பாறை சார்பதிவகத்திலிருந்து தூரம். |
|---|---|---|---|
| 1. | உசிலம்பட்டி | 19 கி.மீ. | 10 கி.மீ. |
| 2. | சூளியாம்பட்டி | 20 கி.மீ. | 11 கி.மீ. |
| 3. | சாம்பட்டி | 18 கி.மீ. | 9 கி.மீ. |
| 4. | கீரையூர் | 16 கி.மீ. | 12 கி.மீ. |

இந்த நான்கு கிராமங்களையும் விராலிமலை சார்பதிவகத்திலிருந்து பிரித்து மணப்பாறை சார்பதிவகத்துடன் இணைக்கும் கோரிக்கை ஒன்று 2—3—1987 அன்று பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. க. சோலைராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோன்று திருச்சி மாவட்டத்திலிருந்து, நீதிமன்றத்திற்கும், காவல் நிலையத்திற்கும் 50 கிலோமீட்டர் தொலைவிலுள்ள புதுக்கோட்டை மாநகரத்திற்கு எங்கள் பகுதி மக்கள் சென்று கொண்டிருந்த துன்பகரமான சூழ்நிலையை இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தபோது, ஒரே வாரத்தில் அந்தப் புதுக்கோட்டை மாவட்டத்திற்குச் செல்ல வேண்டிய துயரச் சூழ்நிலையைத் தவிர்த்து, திருச்சி மாவட்டம் மணப்பாறைக்குச் செல்லவேண்டிய ஒரு உத்தரவைப் பிறப்பித்தார்கள். அதற்கு இந்த நேரத்தில் எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், தொடர்புடைய அந்தப் பத்திரப் பதிவுத் துறையைச் சேர்ந்தவர்கள், திருச்சி மாவட்டம் மணப்பாறை மிக, மிக அருகிலே இருக்கின்றது. இந்த விவர அறிக்கையிலேகூட 10 கிலோமீட்டர், 12 கிலோமீட்டர் என்று தவறுதலாகப் போட்டிருக்கிறார்கள். 5 கிலோ மீட்டர், 6 கிலோமீட்டர் தூரத்திலே இருக்கிற மணப்பாறையை விடுத்து, 10 கிலோமீட்டர், 20 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள விராலிமலைக்குச் செல்லவேண்டிய சூழ்நிலை இருப்பதால் மக்களுக்கு மிகவும் துன்பமான சூழ்நிலை

[திரு. க. சோலைராசு] [1987 ஏப்ரல் 10

இருக்கிறது. எனவே, தயவுசெய்து, உடனடியாக மணப்பாறையிலே அப்பகுதி மக்கள் பத்திரம் பதிவு செய்து கொள்ளலாம் என்கிற ஒரு அரசாணையை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல், மேற்கண்ட 4 ஊர்களும் மணப்பாறை சார்பதிவு அலுவலகத்திற்கு அருகில் உள்ளது என்பது தெளிவாகிறது. ஆனால் மக்கள் சார்பில் இப்போதுதான் முதன் முதலில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கோரிக்கையை விட்டிருக்கிறார்கள். அலுவலகத்திற்கு 2—3—1987-ல்தான் இதுமாதிரி மணப்பாறை சார்பதிவு அலுவலகத்துடன் சேர்க்க வேண்டும் என்று மனு வரப்பெற்றிருக்கிறது. ஆகவே, விரைவில், நீதிமன்றத்திற்கு நீதி வழங்கிய புரட்சித் தலைவர் ஆட்சியில் இதற்கும், மணப்பாறை சார்பதிவு அலுவலகத்துடன் இணைக்க ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

(ஈ) அதிக வருவாயுள்ள கோவில்களுக்கு கணக்கதிகாரிகள் நியமிக்கப்படாமலிருப்பது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் மா. மணிமாறன், ஆ. நடராசன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. மா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இந்து அறநிலையத் துறையின் கீழ் உள்ள அதிக வருவாய் உள்ள கோவில்களுக்கு, கணக்கதிகாரிகள் நியமிக்க 17—1—1985 ஆம் தேதியிட்ட அரசு ஆணை எண். 43-ல் வழிவகை செய்தும், இதுவரை அவ்வதிகாரிகள் நியமிக்கப்படாததால் அதிக வரவு-செலவு உள்ள கோவில்களின் கணக்குகள் சீர்கெடுவது குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



1987 ஏப்ரல் 10]

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையில் துணை ஆணையர் செயல் அலுவலராக உள்ள கோயில்களில் ஒவ்வொன்றிலும் முதுநிலைக்கணக்கு அலுவலர்கள் பணியிடங்களை ஏற்படுத்தி, அப்பணியிடங்களில் துறையிலுள்ள மண்டல தணிக்கை அலுவலர்களை அயல்பணியில் அமர்த்தலாம் என்று இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் அரசுக்குப் பரிந்துரை செய்து வருமானம் மிகுந்த கோயில்களில் கணக்குகள் சீரமைக்கப்பட்டு சரிவரப்பேணப்பட வேண்டும் என்ற கருத்தில் மேற்குறித்த ஆணையரின் பரிந்துரையினை அரசு கொள்கையளவில் ஏற்றுக்கொண்டது.

2. இதன் அடிப்படையில் 17—1—1985 நாளிட்ட வணிக வரி மற்றும் அறநிலையத்துறை ஆணை எண். 43-ல் மேலே குறிப்பிடப்பட்டுள்ள கோயில் நிர்வாகத்தின் இசைவோடு, முதுநிலைக் கணக்கு அலுவலர்கள் பணியிடங்களை ஏற்படுத்தி அப்பணியிடங்களுக்கு துறையிலுள்ள மண்டல தணிக்கை அலுவலர்களில் தக்க நபர்களின் பெயர்களை அயல்பணியில் நியமனம் செய்வதற்காக காலம் மற்றும் நிபந்தனைகளுடன் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு ஆணை வெளியிடப்பட்டது.

3. மேற்படி அரசாணையின் அடிப்படையில் முதுநிலைக் கணக்கு அலுவலர்களை நியமனம் செய்ய திருக்கோயில்களின் நிர்வாகங்களின் இசைவிற்காக ஆணையரால் அணுகப்பட்டபோது, தற்பொழுது ஆலயக்கணக்குகள் தணிக்கையாளர்களால் தொடர் தணிக்கை செய்யப்பட்டு வருகின்றது என்பதாலும் கூடுதல் செலவினத்தைக் கருதியும், குறிப்பில் உள்ள முதுநிலைக் கணக்கு அலுவலர் நியமனத்திற்கு இசைவளிக்க இயலவில்லையென்று திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் நீங்கலாக, ஏனைய திருக்கோயில்களின் நிர்வாகங்கள், ஆணையருக்கு தெரிவித்துள்ளன. திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலுக்கு மட்டும் கருவூலக்

கணக்குத் துறையைச் சார்ந்த அலுவலர் ஒருவரை நியமிக்க தக்கார் தீர்மானம் பெறப்பட்டுள்ளதால் முதற்கண் இத்திருக் கோயிலில் கணக்கு அலுவலரை நியமிக்கும் கருத்துரு தனியே அரசின் பரிசீலனையில் உள்ளது.

4. அதிக வருமானம் உள்ள திருக்கோயில்களில் தணிக்கைத் துறையைச் சேர்ந்த தணிக்கை பணியாளர்கள் அவ்வப்போது கணக்குகளை தணிக்கை செய்கின்றனர். (Concurrent Audit) மேலும் மண்டல தணிக்கை அலுவலர்களும் தலைமை தணிக்கை அலுவலரும், திடீரென கணக்குகளை ஆய்வு செய்கின்றனர். இந்நிலையில் கணக்குகள் சீர்கேடுகள் அடைய வாய்ப்பில்லை. மேலும் திருக்கோயில்களின் அலுவலர்களும், தக்கார் அல்லது அறங்காவலர் குழுவும், கணக்கு வழக்குகளை அவ்வப்போது மேற்பார்வை செய்வதால் தவறுகள் ஏற்படுவதற்கு சிறிதும் வாய்ப்பில்லை என இந்த சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் தெரிவித்துள்ளார்.

**திரு. மா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் சில கோயில்கள் வருவாய் குறைவாக இருந்தாலும் சில கோயில்களுக்கு வருவாய் அதிகமாக இருந்தாலும் எல்லா கோயில்களுக்குமே தணிக்கை அதிகாரிகள் நியமிக்க இருக்கிறோம் என்று சொல்லிவிட்டு அதற்குப் பின்னாலே மண்டல தணிக்கை அலுவலர் தக்க நபாகளின் பெயர்களை சொல்லக் கேட்டுக் கொண்டபோது தற்போது ஆலயக் கணக்குகள் தணிக்கையாளர்களால் தொடர் தணிக்கை செய்யப்பட்டு வருகிற காரணத்தால், மண்டல தணிக்கை அலுவலர்களும் தலைமை தணிக்கை அலுவலரும் திடீரென கணக்குகளை ஆய்வு செய்கிற காரணத்தாலும் கணக்குகள் சீர்கேடுகள் அடைய வாய்ப்பு இல்லை என்றும் சொல்லிவிட்டு, திருவேற்காடு கருமாரியம்மன் திருக்கோயிலுக்கு மட்டும் தற்போது ஒரு அலுவலர் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று முன்னுக்குப் பின் முரணாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு இடத்தில் தவறு நடக்க வழியில்லை என்று சொல்லிவிட்டு எதற்காக ஒரு கோயிலுக்கு மட்டும் நியமிக்க வேண்டும்? எனவே இந்த முரண்பாட்டைத் தவிர்க்க அனைத்து வருவாய் உள்ள கோயில்களுக்கும் ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்ட ஆணையைத் தொடர்ந்து கணக்குத்





தணிக்கை அதிகாரிகள் நியமிக்க அரசு முன்வருமா என்று கேட்டுக் கொள்வதோடு, இவ்வாறு கணக்குத் தணிக்கை அதிகாரிகள் நியமிப்பதால் கோயில் நிர்வாக அதிகாரிகளுக்கும் இவர்களுக்குமிடையே சிக்கல் ஏற்படும் என்று அரசு கருதுகிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுநிலைக் கணக்கு அலுவலர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்று 17—1—1985 நாளிட்ட அரசாணையில் சொல்லப்பட்டது. அதுவும் டெபுடி கமிஷனர்கள், என்பபடும் துணை ஆணையர்கள் மேற்பார்வையில் உள்ள கோயில்களுக்கு மட்டும்—அதாவது திருத்தணி, திருச்செந்தூர், இராமேஸ்வரம், மதுரை, திருவரங்கம், பழனி, திருவேற்காடு போன்ற 7 கோயில்களுக்கு மட்டும் தான் நியமிக்கப்பட வேண்டுமென்று 17—1—1985 அரசாணையில் சொல்லப்பட்டது. 18—1—1985 அன்றே அரசு சார்பில் மேற்கண்ட 7 கோயில்களுக்கும் கணக்குத் தணிக்கை அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்று இசைவு கோரப்பட்டு திருவேற்காடு கோயிலுக்கு மட்டும் இசைவு தரப்பட்டதால் அப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது. மற்ற கோயில்கள் இதற்கு இசைவு தரவில்லை. ஆனால் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மேற்சொன்ன எல்லா கோயில்களுக்கும் தணிக்கை அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு அந்தக் கோயில்களுக்கெல்லாம் கணக்குத் தணிக்கை அதிகாரிகள் நியமிக்கப்பட இருப்பதை குறித்து நான் மெத்தவும் பாராட்டுகிறேன். அறநிலையத் துறையிலேயே வைத்திருக்கிற தணிக்கைத் துறை அதிகாரிகளுக்கு ஏன் உத்தியோக உயர்வு கொடுத்து அந்தப் பதவிகளுக்கு நியமிக்கும் வாய்ப்பு கொடுக்கக்கூடாது? அப்படி அவர்களுக்கு வாய்ப்புக் கொடுப்பதைப்பற்றி அரசு கவனத்தில் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள்தான் முடிவெடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தணிக்கை என்பதே வேறு துறையிலிருந்து வருகிற போதுதான் சிறப்பாக இருக்கும். ஒரே துறையிலிருந்து போடுகிறபோது சரியாக இருக்காது என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

**(உ) புன்னம்புழா-பாண்டியாறு திட்டம் பற்றி கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சுப்பராயன் சார்பில் திரு. பொ. உத்திராபதி அவர்கள் அமைச்சரின் கவனத்தை ஈர்ப்பார்.

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்ட விவசாயிகள் புன்னம்புழா-பாண்டியாறு திட்டத்தை நிறைவேற்ற கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி திட்டத்தை நிறைவேற்றக்கோரும் முறையீடு குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை.**

பாண்டியாறு-புன்னம்புழா தமிழகத்தில் உற்பத்தியாகி மேற்கு நோக்கி பாய்ந்து, கேரள மாநிலத்தில் சாலியார் நதியுடன் கலக்கும் உப நதிகளாகும். கேரளம் மற்றும் தமிழக மாநிலங்களுக்கிடையேயான 1965-ம் ஆண்டு உடன்பாட்டின்படி, பாண்டியாறு-புன்னம்புழா நீர் பற்றி ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டத்தின் சிறப்பு அம்சங்களாவன:—

(1) பாண்டியாறு-புன்னம்புழா நீர்மின் திட்டத்திற்கான முழுச் செலவையும் தமிழக அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும்.



(2) மின் உற்பத்தியும் தண்ணீர் வெளியேற்றப்படுவதும் பருவ நிலையைப் பொறுத்தில்லாமல் ஒரே சீராக இருக்க வேண்டும்.

(3) மேற்குறிப்பிட்ட திட்டத்திலிருந்து கேரள எல்லைக்குள் முடிவாக வரும் தண்ணீரை அம்மாநிலம் அதன்பொருட்டு எந்த வித பணமும் கொடுப்பதற்கான பொறுப்பிற்கு உட்படாமல் சுயமாகப் பயன்படுத்தும். இதன்படி, தமிழ்நாடு மின்சார வாரியம் பாண்டியாறு-புன்னம்புழா நீர்மின் திட்டத்தைத் தயாரித்தது.

2. இருந்தபோதிலும் பாண்டியாறு-புன்னம்புழா நீர்மின் திட்டத்தின் மீது ஒரு முடிவு எடுப்பதற்கு முன்னதாக கோயம்புத்தூர் மாவட்ட விவசாயிகளிடமிருந்து பாண்டியாறு-புன்னம்புழா நதிகளின் தண்ணீரை, பாசனத்திற்காக திருப்பி விடுவது சம்பந்தமாக முறையீடுகள் வரப்பெற்றன. சட்டமன்ற மேலவையில் மதிப்பீட்டுக் குழுவும் கிழக்கு பகுதிக்கு அப்படி நீர் திருப்பிவிடுவதை பரிசீலனைக்கு பரிந்துரை செய்தது. முன்னோட்ட ஆய்வு முடிந்தவுடன் பாண்டியாறு-புன்னம்புழா நதி நீரை சுரங்கத்தின் மூலம் மின்வாரியத்தின் உத்தேசிக்கப்பட்ட தலைமைப் பணிகளுடன் பவானி ஆற்றின் கிளையான மொய்யாற்றுக்கு திருப்பிவிடுவது முடியக்கூடியதே என அறியப்பட்டது. இம்மாற்றுத் திட்டம் மாநிலங்களுக்கிடையேயான நதிகளில் ஒரு பகுதி நீரைத் திருப்பிவிடுவது சம்பந்தப்பட்டதாகும். ஆனால், இத்திட்டம் தமிழ்நாட்டில் பாசன வசதிக்கும் மின் உற்பத்திக்கும் பயன்படும்.

3. ஆகையால், தமிழக அரசு பாண்டியாறு-புன்னம்புழா நதி நீரின் ஒரு பகுதியை கிழக்கு நோக்கி பவானி ஆற்றுக்குத் திருப்பிவிடுவதுடன் மின் உற்பத்தியுடன் பாசனத்திற்குப் பயன்படுத்தும் வகையிலான இவ்வரசின் மாற்றுத் திட்டத்திற்கு கேரள அரசின் ஒப்புதல் கோரியது.

(Modified Hydro-Electric Scheme)

கேரள அரசு இம்மாற்றுத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கவில்லை. மீண்டும் 1972-74-க்கு இடைக்காலத்தில் இரு மாநிலங்களுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. இப் பேச்சுவார்த்தைகளின்போது, தமிழக அரசு 9 டி.எம்.சி. அளவு நீரை மட்டும் தமிழகத்தில் பாசனத்திற்குத் திருப்பிவிடுவதற்கும், 5

டி.எம்.சி. நீரை கேரளாவுக்கு திருப்பி அனுப்பவும் முன் வந்தது. 1974-ம் ஆண்டில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது, கேரள அரசு 1965-ம் ஆண்டில் ஏற்பட்ட உடன்பாட்டின் மூலத் திட்டமாக மின் உற்பத்தித் திட்டத்தை வலியுறுத்தியது.

4. 20—12—1978 அன்று திருவனந்தபுரத்தில் கேரள மாநில முதல்வருடன் தமிழக மாநில முந்தைய மின்சாரம், விவசாயம் மற்றும் பாசன அமைச்சர்கள் நடத்திய பேச்சுக்களின்போது, கேரள முதல்வர், பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் மின் உற்பத்திக்குப் பிறகு நீரை கிழக்கு நோக்கித் திருப்பிவிடும் சாத்தியக் கூறுகளை மறு பரிசீலனை செய்ய எந்தவித ஆட்சேபனையும் இல்லையெனத் தெரிவித்தார். 29—5—1979 அன்று முன்னாள் கேரள முதல்வரை தமிழக முதல்வர் பாண்டியாறு-புன்னம்புழா திட்ட நீரை கிழக்கு நோக்கித் திருப்பிவிடுவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து ஒரு விரிவான பேச்சுவார்த்தை நடத்த ஒரு தேதியைக் குறிப்பிடுமாறு கேட்டுக் கொண்டார். 7—6—1979 அன்று இப்பொருள் பரிசீலனையில் இருப்பதாக முன்னாள் கேரள முதல்வர் தெரிவித்தார்.

5. 1965-ம் ஆண்டின் உடன்படிக்கையின்படியும் மீண்டும் 1974-ம் ஆண்டு மார்ச் திங்களில் நடைபெற்ற இரு மாநில அமைச்சர்கள் பேச்சுவார்த்தையில் வலியுறுத்தியதின்படியும் பாண்டியாறு-புன்னம்புழா நீர்மின் திட்டத்தை நிறைவேற்ற தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி 1980-ம் ஆண்டு மே திங்களின் கடிதத்தில் கேரள மின்துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். 1980-ம் ஆண்டு நவம்பர் திங்களில் கேரள முதல் அமைச்சரை தமிழ்நாடு முதலமைச்சர் மேற்படி திட்டத்தை விவாதிக்க ஒரு தேதி மற்றும் விவாதிக்கும் இடம் முதலியவைகளைக் குறிப்பிடுமாறு கேட்டுக் கொண்டார். கேரள முதலமைச்சர் விரைவில் பதில் அனுப்புவதாகத் தெரிவித்தார்.

6. 22—2—1981 அன்று கேரளாவில் மேற்கு நோக்கிப் பாயும் நதிகளின் நீரை கிழக்கு நோக்கித் தமிழகத்துக்குத் திருப்புதல் பற்றி திருவனந்தபுரத்தில் முன்னாள் கேரள முதல்வருடன் தமிழக முதல்வர் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இக்கூட்ட முடிவின்படி, பாண்டியாறு-புன்னம்புழா மற்றும் சோமத்திப்புழா திட்டங்கள் தொடர்பாக 1965 மற்றும் 1974-ம் ஆண்டுகளில் ஏற்பட்ட ஒப்பந்தங்களில் மாற்றம் பற்றி



2—6—1981 மற்றும் 16—7—1981 தேதிகளில் அதிகாரிகள் மட்டத்தில் விவாதிக்கப்பட்டது. 23—7—1981 அன்று சென்னையில் தமிழக மின்துறை அமைச்சர் மற்றும் பாசன அமைச்சர்கள் அப்போதைய கேரள பாசன அமைச்சருடன் இத்திட்டங்கள் பற்றி விவாதித்தனர்.

7. கேரளம் பவானியிலிருந்து தனது பங்கில் 10 டி.எம்.சி.-யை மேற்கு நோக்கித் திருப்பிவிடுவதையும் பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தில் தமிழகம் விரும்பியபடி மாற்றம் செய்வதையும் இணைந்தே முடிவு எடுக்க வேண்டுமென 25—10—1982 அன்று கேரள மின்துறை அமைச்சர் அவர்களும் தமிழக மின்துறை அமைச்சர் அவர்களும் சென்னையில் கலந்து கொண்ட கூட்டத்தில் கேரளத்தால் வற்புறுத்தப்பட்டது. 7—11—1982 அன்று மேற்குறிப்பிட்ட திட்டங்களை நிறைவேற்றுவது பற்றி கேரள மற்றும் தமிழக அரசுகளுக்கிடையே அதிகாரிகள் மட்டத்திலும், அமைச்சர்கள் மட்டத்திலும் சென்னையில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. இக்கூட்டத்தில் கேரளா தனது திட்டங்களுக்கு பயன்படுத்திக் கொள்ள பவானி நீரை காவிரி படுகைக்கு வெளியே திருப்புவது சம்பந்தமாக தமிழகத்துக்கும் கேரளாவுக்குமிடையே ஓர் உடன்பாடு ஏற்படுத்துவது சம்பந்தமாக விவாதிக்கப்பட்டது. கீழ்க் குறிப்பிட்ட வரைவு ஒன்று தயாரிக்கப்பட்டு கேரள அலுவலர்களுக்கு காட்டப்பட்டது:—

“காவிரி நீர்ப் பங்கீடு பற்றி படுகை மாநிலங்களிடையே இறுதியான ஒப்பந்தம் ஒன்று ஏற்படும்பொழுது கேரள பவானியிலிருந்து தற்போது உபயோகிக்கும் நீர் உட்பட 10 டி.எம்.சி. நீரை கேரளம் தனது திட்டங்களுக்குப் பயன்படுத்த தமிழகம் ஆட்சேபனை செய்யாது”.

ஆனால் கேரளா இவ்வரைவுக்குச் சில திருத்தங்களைக் கூறியது. அந்தத் திருத்தங்கள் பற்றியும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. கேரள அலுவலர்கள் திருத்தியமைத்த வரைவு பின்வருமாறு:—

“காவிரி நீர்ப் பங்கீடு பற்றி படுகை மாநிலங்களிடையே இறுதியான ஒப்பந்தம் ஏற்படும் வரை கேரள பவானியிலிருந்து கேரளா தற்போது ஆண்டுதோறும் பயன்படுத்தும் நீர் உட்பட 10 டி.எம்.சி. நீரை கேரளம் தனது திட்டங்களுக்குப் பயன்படுத்த தமிழகத்துக்கு ஆட்சேபனை இல்லை”.

[1987 ஏப்ரல் 10

[திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்]

இப்பிரச்சினையின் முக்கியத்துவத்தைக் கருதி, கேரள அரசு தெரிவித்துள்ள மாற்று வரைவின் மீது சட்ட வல்லுநர்களின் கருத்துப் பெறப்பட்டு மறு பரிசீலனை செய்யப்பட்டது.

8. பவானிப் படுகை, காவிரி நதிநீர்ப் பிரச்சினையோடு இணைக்கப்பட்டுள்ளதால், பவானியை இணைக்காமல் பாண்டியாறு-புன்னம்புழா நீரின் திட்டத்தின் நீரை திருப்பிவிடுவதற்கான சாத்தியக்கூறுகளின் மீது தீர்வு காணவேண்டுமென்ற தமிழகத்தின் கருத்திற்கு கேரள அரசின் இசைவை பெற்றுத் தருமாறும், காவிரி நதிநீர்ப் பிரச்சினையுடன் இணைக்காது மறு பரிசீலனை செய்யப்பட்டு வருகின்ற பாண்டியாறு-புன்னம்புழா ஆற்று நீரை பாசனத்திற்காக கிழக்கு நோக்கித் திருப்பிவிடப் படும் மாற்றுத் திட்டத்தைக் குறித்து மேலும் பேச்சுவார்த்தை தொடர எற்பாடு செய்யுமாறும் கேரள மாநில சக்தி மற்றும் பன்மாநில நீர்த்துறைச் செயலாளரக் கேட்டுக்கொள்ளப் பட்டது. இதுகுறித்து, கேரள அரசின் பதில் எதிர்பார்க்கப் படுகிறது.

9. மேலும், இப்பொருளின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு தமிழக மற்றும் கேரள மாநில அமைச்சர்கள் மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் நடத்தலாம் என இவ்வரசு உத்தேசித் துள்ளது.

6. அறிக்கை அளித்தல்.

(அ) பொதுக் கணக்குக் குழு.

Thiru T. VENKATA REDDY : Sir. On behalf of the Chairman, Committee on Public Accounts, I present the following Reports of the Committee on Public Accounts :

Sixty-First Report of the Committee on the action taken by the Government on the recommendations contained in tht Sixteenth Report (Seventh Assembly) of the Committee on Public Accounts (1980-82) on the paragraphs pertaining to certain Departments in the Accounts of the Government of Tamil Nadu for the year 1976-77 and the Report of the Comptroller and Auditor-General of India for the year 1976-77 (Civil).

வளர்ப்பு ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :



1987 ஏப்ரல் 10]

Sixty-second Report of the Committee on the further action taken by the Government on the recommendations contained in the Twenty-fourth Report (Seventh Assembly) and Eighth Report (Sixth Assembly) of the Committee on Public Accounts on the Accounts of the Government of Tamil Nadu for the year 1973-74 and the Report of the Comptroller and Auditor-General of India for the year, 1973-74 (Civil).

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு.

**திரு. மெ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "1986-87 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் நான்காவது அறிக்கையை (எட்டாவது சட்டமன்றப் பேரவை) இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

7. வரவு செலவுத் திட்டம், 1987-88 வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

கோரிக்கை எண் 21—மீனளம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 21 மீனளம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,94,29,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

(முற்பகல் 11-30)

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைபூண்டி தொகுதியில் தொண்டக்காடு, கரையான் காடு, இடும்பவனம், கற்பகநாதர் குளம், தில்லை விளாகம் இந்தப் பகுதியில் உள்ள மீனவர்களுக்கு கடலில் சென்று மீன் பிடிக்க மானிய விலையில் வலைகள் கொடுப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானிய கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,94,29,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. மு. இராசாங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம் அணைக்கரையில் மீன்

"மானியக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 6,94,29,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

[1987 ஏப்ரல் 10

கோரிக்கை எண். 32.—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானிய கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 13,62,33,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

**திரு. சோ. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,62,33,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. மெ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,62,33,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைபூண்டி தொகுதி, முத்துப்பேட்டை யூனியன் முத்துப்பேட்டையில் பின்தங்கிய மாணவர்கள் தங்கி படிப்பதற்கு விடுதி ஒன்று கட்டிக் கொடுப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,62,33,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

328—382 ஆம் பக்கங்களில் இணைப்புகள் II III ஆக அச்சிடப் பெற்றுள்ளன.



1987 ஏப்ரல் 10] [திரு. ப. உ. சண்முகம்]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் முன் வைக்கப்பெற்றுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை ** நான் படித்ததாகக் குறிப் பேட்டில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் மேலான கருத்துக்களை தெரிவித்ததற்குப் பிறகு நான் அரசு சார்பில் ஏதேனும் சொல்ல வேண்டியிருந்தால் பதிலுரையில் சொல்லு கிறேன்.

***திரு. எஸ். வேணுகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டுக்கான மீனளத்துறை மானிய கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

தமிழகத்தில் வேளாண்மைக்கும், நெசவுத் தொழிலுக்கும் அடுத்தபடியாக நீண்ட நெடுங்காலமாக மக்கள் ஈடுபட்டிருக்கும் தொழில் மீன் பிடிப்புத் தொழிலாகும். ஆனால் என்ன காரணத்தாலோ உலகத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றம் இந்த நாட்டிலே ஏற்படவில்லை என்பது மிக வருத்தமாக இருக்கிறது. தமிழகத்திலே இதுவரைக்கும் இருக்கின்ற தொழில், அதிகமாகச் செய்கின்ற தொழில் விவசாய மானாலும், நெசவுத் தொழிலானாலும் பல முன்னேற்றங்களைக் கண்டு பசுமை புரட்சியை உருவாக்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற அளவிற்கு இன்றையதினம் நிலைமை இருக்கிறது. ஆனால் மீனளத்தைப் பொறுத்தவரையில் அப்படிப்பட்டதொரு நிலைமை இல்லாமல் கூனி குறுகி வளர்ச்சியில்லாமல் இருக்கிறது என்பதை உங்கள் முன்னாலே துரதிருஷ்டவசமாக சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

உலகத்தில் உள்ள மற்ற நாடுகளைப் பார்க்கும்போது நார்வே, சுவீடன் போன்ற நாடுகளில் இரண்டு தொழில்களை மையமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒன்று மீன் பிடித்தல், மற்றொன்று பால்வளத் தொழிலாகும். ஆனால் ஆயிரம் கிலோ மீட்டர் கடற்கரையுள்ள இங்கே மீன் பிடிக்கும் தொழில் மிகவும் குறைவாக இருக்கிறது. அதற்கு நல்லதொரு ஏற்பாட்டைக் காண முடியாமல் இருக்கிறது. இதற்குக் காரணம் மீனவர்கள்

[திரு. எஸ். வேணுகோபால்] [1987 ஏப்ரல் 10

ஒற்றுமையாக இல்லாததுதான் என்று இங்கே சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். புதிய உத்திகள், புதிய சிந்தனைகள், புதிய வழிமுறைகளைக் கொண்டு இந்த மீன் வளத்தைப் பெருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துறை முன்னேற வேண்டுமானால் இந்த துறைக்கென்று தனியாக ஒரு அமைச்சர் வேண்டும். ஏனென்றால், இன்றைக்கு இந்தத் துறையை வைத்துக்கொண்டுள்ள மூத்த அமைச்சரான அவர் மக்கள் நல்வாழ்வுத் துறையையும் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் மீனளத் துறை மிகச் சாதாரண இலாக்காவாக இருக்கிறது. இதிலே தனி முக்கியத்துவம் கொடுக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனி கவனம் செலுத்தி இதற்கென்று ஒரு தனி அமைச்சரைப் போட்டு அவர் கையில் இந்த இலாக்காவை ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் மீனவர்களின் எண்ணங்களில் இன்றைக்குள்ள முதலமைச்சர், அதிகமாக அக்கறை செலுத்துவதற்குச் சரியாக இருக்கும் என்ற எண்ணத்தைச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த துறைக்கான கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகம் இங்கே வைக்கப்பட்டுள்ளது. இதைப் பொறுத்தவரையில் முதலில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆண்டுதோறும் இந்த அவையின் முன் வைக்கப்படுகிற இந்த குறிப்புகளில் பெரும்பாலும், சென்ற ஆண்டில் சொல்லப்பட்ட பல்வேறு விஷயங்கள் இந்த ஆண்டில் மேலும் வேறு பக்கத்தில், வேறு பாராவில், வேறு வார்த்தைகளில் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர வேறு ஒன்றுமில்லை. இதைப் பார்க்கும்போது துறை அதிகாரிகளுக்கும், அமைச்சருக்கும் இதில் ஒரு அலட்சியப் போக்கு ஏற்படுகிறதோ என்ற ஐயப்பாடு இருக்கிறது. இதை சொல்லக் காரணம் சென்ற ஆண்டில் சொல்லப்பட்ட பல்வேறு திட்டங்களே இந்த ஆண்டும் விளக்கக் குறிப்பில் சொல்லப்பட்டு, அதில் முன்னேற்றம் கண்டுவருவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

நம் நாட்டு உணவு வகைகளிலே மீன் உணவு ஒரு முக்கியமான பங்கு வகிக்கிறது. அன்றாட உணவிலும் மீன் பல குடும்பங்களில் இடம் பெறுகிறது. அந்த வகையிலே மீன் உற்பத்தியை அதிகரித்து தரமான மற்றும் புரதச் சத்து மிகுந்த மீன் உணவை குறைவான விலைக்கு கிடைக்க ஆவன செய்ய வேண்டும்.

[illegible]



1987 ஏப்ரல் 10] [திரு. எஸ். வேணுகோபால்]

1000 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையை வைத்துக் கொண்டு இதைக்கூட நம்மால் சாதிக்க முடியவில்லை என்றால் நம்முடைய திட்டங்களிலே எங்கோ தவறு இருக்கிறது என்று பொருள். நம்மை விட மிகக் குறைந்த கடற்பரப்பை உள்ள பல நாடுகள் நல்ல உத்திகளைக் கையாண்டு அதிகப்படியான மீன் உற்பத்தியைச் செய்து வெளி நாடுகளுக்கு அனுப்பி இலாபம் சம்பாதிக்கும் முறையைப் பார்க்கிறோம். அப்படிப்பட்ட நிலைமையை இங்கேயும் கொண்டு வர அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து தமிழகத்தில் 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரை என்று சொல்லி, உள்நாட்டில் 3.69 இலட்சம் ஹெக்டேர் பரப்புள்ள நீர்நிலைகள் உள்ளன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டிலுள்ள 4.64 இலட்சம் கடல் மீனவர்களில் சுமார் ஒரு இலட்சம் மீனவர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளனர். உள்நாட்டு மீன் உற்பத்தியில் 60,000 பேர்கள் இருக்கிறார்கள். இந்த வளத்தாலே வெளி நாட்டுச் செலாவணியாக 60 கோடி ரூபாயை 1985-86-லே ஈட்டியிருக்கிறார்கள்.

தற்போது மாநிலத்தில் உபயோகப்படுத்துகின்ற கட்டுமரங்கள் 38,000 ஆகும். இந்த 38,000 கட்டு மரங்கள் நாட்டுப் படகுகளிலே 200-க்கு வெளிப்புறம், உட்புறம் பொருத்தும் இயந்திரங்களை பொருத்துவதற்கு அரசு மானியம் வழங்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை மேலும் விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீண்ட இடைவெளிக்குப் பின்னாலே, 10 ஆண்டுகளுக்குப் பின்னாலே இன்றைக்கு புதிய கொள்கையை வகுத்திருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். 50 படகுகள் கட்டப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். 1987-88-லே 50 மரத்திலான விசைப் படகுகள் கொடுக்கப்படும் என்று கொள்கைக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதைப் பாராட்டுகிறேன். பெருந்தலைவர் காமராஜர், கலைஞர் ஆகியோர்களின் ஆட்சிக்குப் பின்னாலே, இந்தத் திட்டம் தொடர்ந்து இருந்திருக்குமானால் இன்றையதினம் ஏராளமான படகுகள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கும். என்ன காரணத்தாலோ, தவறான ஆலோசனையின் பேரிலே, படகு கட்டுவது நிறுத்தப்பட்டு, யாருக்கும் கொடுக்கப்படாமல் இருந்தது கடந்த ஆண்டு வற்புறுத்தியதின் பேரில், 50 மர

[திரு. எஸ். வேணுகோபால்] [1987 ஏப்ரல் 10

விசைப் படகுகளைச் செய்து தருவதற்கு உத்திரவு இடப்பட்டிருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறேன். அதிலே 20 சதவிகிதத்தை மானியமாகவும், 20 சதவிகிதத்தை மீனவர்களிடமிருந்தும் பெற்று, மீதமுள்ள 60 சதவிகிதம் கடன் உதவியாகவும் அளிக்கப்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்காக மொத்த மானியத் தொகை 25 இலட்சம் ரூபாய் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது யானைப் பசிக்கு சோளப் பொறி போல இருக்கிறது. இது போதாது. அரசு இதில் மறு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் 38,000 கட்டுமரங்களும், நாட்டுப் படகுகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதில் 170 பேருக்கு 15,000 ரூபாய் மதிப்புள்ள கட்டுமரத்தை வாங்குவதற்கு 3,000 மானியம் தரப்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. மொத்தம் 38,000 கட்டுமரங்கள். ஆனால் 170 கட்டு மரங்களுக்குத்தான் தரப்படும் என்றால், இது என்ன பெர்சென்டேஜ் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இப்படி இருந்தால் என்றைக்கு மீனவச் சமுதாயம் வளரும், வாழும் என்பதை எண்ணிப் பார்த்து, இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் ஒன்று. 1987-88 ஆம் ஆண்டில் 25.4 இலட்சம் செலவில் 4 கண்ணாடியிழைப் படகுகளும், 3 சிமெண்ட் படகுகளும் கட்டப்படும் என்றும், அதற்கு 5.08 இலட்சம் மானியமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னாலே 1985-86-லே பப்ளிக் அக்கவுன்ட்ஸ் கமிட்டியின் அறிக்கையில் ஒரு குறிப்பைப் பார்த்தேன். அது என்னவென்றால் சிமிட்டியிலே கட்டப்படும் படகை எந்தவித காலகட்டத்திலும் நம்மால் உபயோகிக்க முடியாது, அதனால் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏனோ தெரியவில்லை, மறுபடியும் சிமெண்ட் படகுகள் கட்டும் சிந்தனை உருவாகியிருக்கிறது. புதிய சிந்தனை, புதிய யுத்திகள், புதிய விஞ்ஞான மறுமலர்ச்சியிலே கட்டுகிறோம் என்று சொல்லுகிறார்கள். அதை சரியான முறையிலே பயன்படுத்தி, நல்ல திட்டங்களை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 10] [திரு. எஸ். வேணுகோபால்]

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே, 1987-88 ஆம் ஆண்டில் 200 உட்புறம், வெளிப்புறம் பொருத்தக்கூடிய இயந்திரங்கள் வாங்குவதற்கு 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது போதாது. அதற்காக மீனவர்களுக்கு இன்னும் அதிகமாக ஒதுக்கப்பட வேண்டும். நாட்டுப்படகுக்காரர்களுக்கும், சிறு படகுக்காரர்களுக்கும் ஒதுக்குகின்ற இடங்களில் உருவாக்குகின்ற சாதாரண துறைமுகங்களைக் கட்டுவதற்கான திட்டங்களை கடந்த ஆண்டும் சொல்லியிருக்கின்றார்கள். இந்த ஆண்டும் சொல்லியிருக்கின்றார்கள். அதிலே இருக்கின்ற வாலிநோக்கம், ஏரவாடி, முட்டம் ஆகிய இடங்களுடன் கோவளம், ஆடம்பாறை, பழவந்தாங்கல் ஆகிய மூன்று இடங்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

அடுத்து இந்த ஆண்டு இந்த மானியக் கோரிக்கையின் மீது 11 கோடியே 12 லட்சம் ரூபாய் அளவுக்கு நிதி கோரப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு நிதியில் இந்த துறைக்கு 11 கோடியே 3 லட்சத்து 97 ஆயிரம் செலவிடப்பட்டிருக்கின்றது என்று புள்ளிவிவரம் போடப்பட்டு இருக்கிறது. அதாவது சென்ற ஆண்டைக்காட்டிலும் இந்த ஆண்டு 9 லட்சம் மட்டும் தான் கூடுதலாக ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்று அறிகிறேன். இது எந்த வகையிலே முறையானது என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஒதுக்கீடு இவ்வளவுதான் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, இந்த ஆண்டு கடல் அரிப்பு தடுப்புச் சுவர் வேலைகள் என்ற தலைப்பின்கீழ் திட்டங்கள் என்று சேர்த்து, மற்றும் திட்டங்கள் சேராத இனங்கள் என்று சுமார் 1 கோடியே 7 லட்சத்து 43 ஆயிரம் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொகையையும் சேர்த்துத்தான் 11 கோடி அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை துறை அமைச்சர் அவர்களுக்கு சொல்லி அதிக நிதி ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, சென்ற ஆண்டு இந்த கோரிக்கையின் மீது நான் பேசியபோது மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. கோவேந்தன் அவர்கள் சில கொள்கைகளை அறிவித்தார்கள். அந்த கொள்கை என்னவென்றால் கடன் பெற்றிருக்

[திரு. எஸ். வேணுகோபால்] [1987 ஏப்ரல் 10

கின்ற படகுக்காரர்களுக்கு ரூ. 4½ கோடி அளவுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக திருப்பிக்கொடுக்குமாறு ஒரு உத்தரவை வெளியிட்டிருக்கிறார்கள் என்ற அறிவிப்பை, ஒரு நல்லதொரு அறிவிப்பை வெளியிட்டிருந்தார்கள். அது மட்டுமல்ல அந்த 4½ கோடி ரூபாயை படகுக்காரர்களுக்கு அரசாங்கத்திலே இருக்கின்ற கடன்களுக்கு, வாங்கியிருக்கின்ற கடன்களுக்காக தள்ளுபடி செய்ய பேச்சளை செய்யப்பட்டிருக்கிறது என்பதை இங்கே சொன்னார்கள். ஆனால் இதுவரையில் அப்படிப்பட்ட நடைமுறை வந்ததாகத் தெரியவில்லை. அரசினுடைய துறைக்கு எந்தவிதமான கடிதங்களும், செயல்பாடும், குறிப்புகளும் வரவில்லை என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். சொல்லிவிட்டால் செய்கின்ற நல்ல எண்ணம் கொண்ட முதலமைச்சர் அவர்கள் உடனடியாக அந்த நல்ல திட்டங்களை உருவாக்கி அந்த அறிக்கையை அனுப்பிவைத்து மக்களுக்கு இருக்கின்ற துன்பத்திலிருந்து அவர்களை விடுவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து 113 தடுப்பு சுவர் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதிகளை, திட்டங்களை என்னுடைய தொகுதியில் இராதாகிருஷ்ணநகர், சீனிவாசநகர், பூங்காவன குப்பம், அண்ணாநகர் ஆகிய இடங்களில் கொண்டு வந்து அங்கே இருக்கின்ற மீனவ மக்களுக்கு என்று அந்த கடல் அரிப்பு ஏற்படுகின்ற இடத்தில் தடுப்புச் சுவர் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மீன் வளர்ச்சிக் கழகம் எப்போது இங்கே உற்பத்தியானதோ அன்றிலிருந்து மீன் இலாகா செயல்படவில்லை என்று சொன்னால் அதை யாரும் தவறாக எடுத்துக்கொள்ளக்கூடாது. மீனள இலாகாவிலே அதிகமானவர்கள் போட்டிருந்தும்கூட, கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னாலே அது மீன் வளர்ச்சி இலாகா என்று இருந்தது. ஆனால் அது மீன் வளர்ச்சி வாரியம் என்று ஆரம்பித்த பின்னாலே அங்கே மீன் இலாகாவில் எந்தவிதமான



1987 ஏப்ரல் 10] [திரு. எஸ். வேணுகோபால்]

செயல்பாடும் இல்லை. மீன் வறுப்பதிலிருந்து மீன் வாங்குவது, மீன் கொள்முதல் செய்வது, படகுகள் விடுவது எல்லாம் இருந்தும்கூட மீன் வளர்ச்சி இலாகா சரியாகச் செயல்படவில்லை என்பதை சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னையிலே ராயபுரம் கடற்கரையிலே ஒரு 100 டன் எடையுள்ள பனிக்கட்டி தயாரிக்கும் திட்டத்தை உருவாக்கவேண்டும் என்று திட்டம் போட்டு ஆரம்பித்துவிட்டார்கள். அங்கே தனியார்கள் எல்லாம் பனிக்கட்டி தயாரிக்க ஆரம்பித்துவிட்டார்கள். மீன் வளர்ச்சித் திட்டத்தில் வாரியம் எந்தவிதமான ஈடுபாடும் காட்டவில்லை. அடுத்து ஒரு டீசல் டாங்க் இருக்கிறது. அந்த டீசல் டாங்கியில் என்றைக்குப் பார்த்தாலும் வாரியத்தின் படகுகளுக்கு மட்டும் டீசல் போடுகிறார்களே தவிர மற்றவர்கள் யாருக்கும் டீசல் கொடுப்பதில்லை.

அது மட்டுமல்ல, இந்த அரசை நான் கேட்டுக்கொள்வேன். ஒவ்வொரு ஆண்டும் நான் சொல்வதுபோல, டீசல், ஏழையெளிய மக்களுக்கு, வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு, விசைப்படகுக்காரர்களுக்கு டீசலை மானியமாகத் தரவேண்டும். இங்கே கொடை வள்ளலாக இருந்து எதையும் தள்ளுபடி செய்கின்ற நீங்கள் மீனவர்கள் வாங்குகின்ற கடன்களையும், வாங்கியிருக்கின்ற கடன்களையும் தள்ளுபடி செய்தாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மீன் வலை. அந்த மீன்வலை செய்வதற்காக ஜப்பான் நிதி உதவி 70 லட்சம் ரூபாய், மாநில நிதி வசதி ரூ. 20 லட்சம் ரூபாய் என்று ஒதுக்கி 1986 ஆம் ஆண்டு 54 டன் மீன் பிடிக்கும் வலை தயாரிக்கும் திட்டம் ராயபுரத்திலே இந்த கழகத்தினால் தொடங்கப்பட்டது. அதனுடைய மதிப்பு ரூ. 19.2 லட்சம். ஆனால் 19 டன்தான் உற்பத்தி செய்யப்பட்டது. அந்த உற்பத்தி போதுமானதல்ல. இன்னும் அதிகமாக வலை உற்பத்தி செய்யவேண்டும்.

அதுமட்டுமல்லாமல் உற்பத்தி செய்யப்படுகின்ற வலைகள் அத்தனையும் பெரிய பெரிய வலைகளாக, விசாகப்பட்டினத்தில் இருக்கின்ற பெரிய பெரிய கப்பல்களுக்காக உற்பத்தி செய்யப்படுகின்றன. எனவே, ஏழை எளியவர்கள் பயன்படுத்துவதற்காக, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள் பயன்படுத்து

வதற்காக, சாதாரண மக்களுக்குத் தேவையான 50 எம்.எம். 70 எம்.எம்., போன்ற சாதாரண வலைகளை அதிக அளவில் உற்பத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பம்பாயில் இவற்றை செய்வதால் அவர்களுக்கு தேவைப்படுகின்றதை எடுத்துக்கொண்டு மீதியைதான் தமிழகத்திற்கு அனுப்புகிறார்கள். இங்கேயே அதற்குத் தேவையான மூலப்பொருள் கிடைப்பதால் தமிழகத்திலே நூல் உற்பத்தி ஆலை ஒன்றை தொடங்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நூல் உற்பத்தி ஆலை ஒன்றே ஒன்றுதான் இங்கே ஏற்கெனவே இருப்பதாக சொல்லப்படுகிறது. தமிழகத்திலே மிகவும் அதிகமான எண்ணிக்கையில் மீனவர்கள் இருப்பதால் அதிக அளவில் மீனவர்களுக்குத் தேவையான நூலை தயாரிக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மதுரை கண்மாயில் மீன் பிடிக்கிற தொழிலை செய்வதை அரசு தடை செய்திருக்கிறது. அங்கே பரம்பரையாக மீன் பிடிப்பவர்கள் இருக்கிறார்கள். இதற்காக என்று அரசு புதிதாக திட்டங்களைத் தீட்டாமல் ஏற்கெனவே பரம்பரையாக மீன்பிடி தொழிலை செய்து வந்தவர்களுக்கே அந்த கண்மாய்களில் மீன் பிடிப்பதற்கான வாய்ப்பினை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, செயற்கை இழை நூலை பொறுத்தவரையில் முன்பெல்லாம் கொடுத்து வந்தவை 7 ஆண்டுகள் நன்றாக இருந்தன. ஆனால் இப்பொழுது கொடுப்பவை எல்லாம் 7 ஆண்டுகளுக்குள் அறுந்து, பழுதடைந்து விடுகின்றன. அந்தவகையில் இதுவரை பழுதடைந்துள்ள செயற்கை இழை நூலை பயன்படுத்தியிருப்பவர்கள் வாங்கியுள்ள கடன் தொகையை எல்லாம் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் அவர்களுக்கு புதிதாக செயற்கை இழை நூலை வாங்க கடன் அளிக்க வேண்டுமென்றும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கடல் மற்றும் உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் உற்பத்தியை ஆண்டுக்கு 5.20 லட்சம் டன்னாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்த 1986-87 ஆம் ஆண்டில் அது 4.60 லட்சம் டன்னாக





இருந்தது. இந்த ஆண்டு அது 4.80 லட்சம் டன்னாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படி என்றால் இத்தனை நவீன முறைகளையும், அபிவிருத்திகளையும் நாம் செய்வதாகச் சொல்லிக் கொண்டாலும் உண்மையிலே ஆண்டொன்றுக்கு சுமார் 20 ஆயிரம் டன் மட்டுமே அதிகரிக்க முடிகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். 60,000 மீனவர்களுக்கும் அதிகமாக உள்ள தமிழகத்தில் ஆண்டுக்கு 20,000 டன் மீன் உற்பத்தி மட்டும் அதிகமாக்கப்படுகிறது என்றால் அது சரியான அணுகுமுறையாகத் தெரியவில்லை. என்வே மீன் உற்பத்தியை அதிகப்படுத்த, அதாவது மீன் பிடிப்பு முறைகளையும் உத்திகளையும் பயின்படுத்தி கடல் மற்றும் உள்நாட்டு நீர்நிலைகளில் இன்னும் அதிகமான மீன்களைப் பிடிக்க வேண்டுமென்றும் அதற்காகத் திட்டம் தீட்டப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மீனவர்களுக்கான சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் என்கிற வகையில் அவர்களுடைய குடியிருப்புகளையொட்டி சமுதாயக்கூடங்கள் கட்டித்தரப்பட வேண்டும். டெலிவிஷன் பெட்டிகளை அங்கே அமைத்து வெளிநாடுகளில் எப்படியெல்லாம் மீன்பிடிக்கும் முறைகளில் முன்னேற்றம் கண்டு மீன்பிடிக்கும் முறையை நவீனப் படுத்தியிருக்கிறார்கள் என்கிற விவரத்தையெல்லாம் வீடியோ படங்கள் மூலம் மீனவர்களுக்குப் போட்டுக் காட்ட ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அப்படியானால் தான் இன்னும் மீன் உற்பத்தியைப் பெருக்குவது சாத்தியமாகும்.

அடுத்து, மீனவர்களுடைய குடியிருப்புகளைப் பொறுத்தவரையில் அங்கே சாலை வசதியில்லை, கழிப்பிட வசதியில்லை, விளக்குகள் இல்லை, இப்படி ஏராளமான குறைகள் இருக்கின்றன. ஆகவே, இக்குறைகளைக் களைவதுடன் அவர்களுடைய குடியிருப்புகளுக்கு அருகிலேயே நவீன கழிப்பிட வசதிகளைச் செய்து தருவதுடன் அவர்கள் பிள்ளைகள் கல்வி கற்கவும், முதியவர்களுக்கு மாலை நேரத்தில் கல்வி கற்பிக்கவும் தேவையான பள்ளிகளைக் கட்டித் தர வேண்டுமென்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ். வேணுகோபால்] [1987 ஏப்ரல் 10

அடுத்து, வெகு காலத்திற்குப் பிறகு, கடந்த ஆண்டு மீனவர்கள் ஆலோசனைக் குழு என்ற அமைப்பு ஏற்படுத்தப் பட்டது. ஆனால் என்ன காரணத்தினாலோ அந்தக் குழு கூட கடந்த ஆண்டில் ஒரே ஒரு முறைதான் கூடியது. அதற்குப் பிறகு அது கூடியதாக தெரியவில்லை. இந்த மாதிரியான நிலைமைகள் இனி வரும் காலத்தில் இல்லாமல் இருக்க ஆலோசனைக் குழுக் கூட்டத்தை அடிக்கடி கூட்ட வேண்டு மென்றும், மீனவர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து விவாதிக்க போதுமான நேரம் அளிக்க வேண்டுமென்றும், அந்த வகையில் மீன் உற்பத்தியை அதிகரிக்கவும் மீனவர்களுக்கு வசதிகளைச் செய்து தரவும் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மீனவர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. 1986-87 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே தமிழகத்தில் 11,404 வீடுகள் கட்டுவதற்குத் திட்ட மிடப்பட்டு அந்த ஆண்டு வரையில் சுமார் 9,738 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டது. இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இதுவரை மொத்தம் 10,035 வீடுகள் கட்டப்பட்டு முடிந்திருக்கின்றன என்கிற விவரம் தரப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் கடந்த ஓராண்டுக் காலத்தில் மீனவர்களுக்காகக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை வெறும் 297 மட்டும்தான் என்பது தெளிவாகிறது.

(முற்பகல் 11-50)

அதுவுமல்லாமல் 300 வீடுகள் என்று வைத்துக்கொண்டால் கூட, மூன்றாண்டுகளில் முப்பது இலட்சம் வீடுகளைக் கட்டி திட்டத்தை நிறைவேற்றப் போகிறோம் என்று சொல்வதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. மீனவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்திற்கு இந்த ஆண்டு ஐம்பது இலட்சம் மட்டும் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது எந்தவகையில் போதும்? போதாது என்கின்ற காரணத்தினால், அதிகப்படியாக நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்களுக்காக பயிற்சி நிலையங்கள் ஆறுதான் இருக் கின்றன. இது போதாது. அவர்களுக்கு அதிகமான பயிற்சி கொடுக்க வேண்டும்



1987 ஏப்ரல் 10] [திரு. எஸ். வேணுகோபால்]

இறால் வெளிநாட்டுச் செலாவணியிலே அதிகமான முக்கியத் துவம் வாய்ந்தது. அதிகமான பணத்தைக் கொடுக்கிறது. அதை முறைப்படுத்திக் கொடுத்து பிடிக்க வேண்டும். முகத்துவாரத் திலே வருகின்ற இறாலை நல்லமுறையிலே கடலிலே கலந்து பிடிக்க வேண்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பொழுது மீன் பிடிப்பதில் சிறிய சிறிய கண்களை வைத்துப் பிடிப்பதனால் மீன் வளர்ச்சி குறைந்து விடுகிறது. அதற்கு அரசு நல்லவித ஆராய்ச்சி செய்து அதன்பேரிலே சிறிய மீன்களையும், சிறிய இறால்களையும் பிடிக்காத வகையிலே செய்து, உற்பத்தியை அதிகமாகச் செய்து இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும், மீனவர்களின் வளர்ச்சியையும் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பிற்பட்டோர் நலம் பற்றி இரண்டு மூன்று கருத்துக் களைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். பிற்பட்டோர் நலனைப் பொறுத்தவரையில் பிற்பட்டோர் பட்டியல் மிக நீண்டதாக உள்ளது. இதனால் மிகவும் பிற்பட்டவர் பயனடைய முடியாமல் இருக்கிறார்கள். எனவே, மிகவும் பிற்பட்டவர்களைப் பிற் பட்டவர்கள் பட்டியலிலேயிருந்து பிரித்தாக வேண்டும். மிகவும் பிற்பட்டவர்களுக்குத் தனி இலாக்காவை அரசு நியமனம் செய்ய வேண்டும். மிகவும் பிற்பட்டவர்களுக்குத் தனியிடம் ஒதுக்கி, ஒதுக்கீடு செய்து தர வேண்டும். செயல்படாமல் உள்ள பிற் பட்டோர் நல ஆலோசனைக் குழுவை விரைவிலே மாற்றி யமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சலவைத் துறை கட்டுதல் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், தமிழ்நாடு சலவையாளர் சங்கத்தின் சார்பிலே சலவைத் துறை கட்ட வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கோரி வருகிறார்கள். வறட்சி, தண்ணீர்ப் பற்றாக்குறை காரணமாகச் சலவைத் தொழி லைச் செய்ய முடியாமல் சலவைத் தொழிலாளர்கள் துன்பப்படு கிறார்கள். சலவைத் தொழில் பொதுமக்களின் சுகாதாரத் திற்கு 'முக்கியமான தொழில்'. அந்தச் சலவைத் தொழிலை அசுத்த நீரில் செய்வதால் பொதுமக்களுக்கு படை, சொறி, சிரங்கு போன்ற சருமநோய்கள் வரக்கூடிய அபாயங்கள் அதிக மாக இருப்பதாலே அவர்களுக்கு நல்ல தண்ணீரைக் கொடுக்க வேண்டுமென்று சங்கத்தின் பொதுச்செயலாளர் ஞானகிராமன்,

[திரு. எஸ். வேணுகோபால்] [1987 ஏப்ரல் 10

பல நேரங்களிலே அரசுக்கு மனுக்கொடுத்தும் காரியங்கள் நடைபெறவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, சலவைத் துறை கட்டுவதில் அரசு அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையிலே கீழ்ப்பாக்கம், மேற்கு அண்ணா நகர், வியாசர்பாடி போன்ற இடங்களில் புதிய சலவைத் துறைகளைக் கட்ட வேண்டும். சைதாப்பேட்டை சலவைத் துறையை அபிவிருத்தி செய்து தர வேண்டும். என்னுடைய தொகுதியிலே—டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியிலே—பழைய வண்ணையிலே இருக்கின்ற கோதண்டராம அய்யர் தெருவிலே உள்ள சலவைத் துறைக்குத் திறப்பு விழா செய்தாக வேண்டும். புச்சம்மாள் தெருவிலே இருக்கின்ற சலவைத் தொழிலாளர்களுக்கு விடப்பட்டுள்ள ஐந்து அறைகள் கட்ட வேண்டும். மின் விளக்குகள் வசதி செய்து தர வேண்டும் என்று இங்கே கேட்டுக்கொள்ள நான் விரும்பப்படுகிறேன். இருசப்ப தெரு, நாகூரான் தோட்டம், பூண்டி தங்கம்மாள் தெரு, ஜாபர்கான்பேட்டை சலவைத் துறையை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

சலவைக் கடைக்கு ரூ. 5,000 திட்டத்திலே சென்னைப் பெருநகரத்தில் செய்யப்படுவது என்பது இயலாத ஒன்று. ஆகவே, இந்தத் திட்டத்திற்கு அதிகமாக்க வேண்டும். சலவைத் துறை கட்டுவதற்கு அரசின் உதவித் தொகை 75 சதவீதமும், மாநகராட்சி உதவித்தொகை 25 சதவீதமும் இருக்க வேண்டும்.

சலவையாளர்கள் மிகவும் ஏழ்மை நிலையிலுள்ளவர்கள். கிராமங்களில் இன்னும் பழைய முறைப்படியே அரிசி, நெல் கொடுக்கிறார்கள். 5 சதவீதம் சலவையாளர் தர இயலாமல் இருக்கின்ற காரணத்தினாலும், அங்கே வறட்சி இருக்கின்ற காரணத்தினாலும் புதிய எண்ணங்களை உருவாக்க வேண்டுமென்று கேட்டு எனக்கு நேரம் அளித்ததற்காக நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எப். எம். இராசரத்தினம்:** மாண்புமிகு பேரவையினுடைய மாற்றுத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களாலே இந்த அவையில் கொண்டுவரப்பட்டிருக்கின்ற பிற்பட்டோர் நலத்



1987 ஏப்ரல் 10] [திரு. எப். எம். இராசரத்தினம்]

துறை, மீனளத் துறை ஆகிய மானியங்களின்மீது என்னுடைய கருத்துக்களை, இந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்தும், வரவேற்றும் ஒருசில உணர்வுகளை இணைத்து விடைபெறலாம் என்று கருதுகிறேன். பேரறிஞர் அண்ணா காலத்தில்—1967-68 ஆம் ஆண்டு ஏறத்தாழ 1,61,40,000 ரூபாய் பிற்பட்டவர்களுடைய நலனுக்காக ஒதுக்கப்பட்ட தொகை இன்றைக்குப் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே 13,62,33,000 ரூபாயாக உயர்ந்துள்ள இந்த நிலையைப் பார்க்கின்ற நேரத்தில் அண்ணாருடைய உணர்வுகளை இன்றைக்குக் கொண்டிருக்கின்ற தலைவராக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் விளங்குகிறார்கள் என்பதை நாம் திட்டவட்டமாகத், தெளிவாகப் பார்க்க முடிகிறது. மேலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலம் பேணும் உணர்வுகளின் பிரதிபலிப்பாகப் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களினுடைய ஆட்சி இன்றைக்கு நல்ல பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.

சத்துணவுத் திட்டத்தை எடுத்துக்கொண்டாலும், இலவசச் சீருடைத் திட்டத்தை எடுத்துக்கொண்டாலும், இலவச பாடப் புத்தகம் வழங்கும் திட்டத்தை எடுத்துக்கொண்டாலும், இலவச காலணி வழங்கும் திட்டத்தை எடுத்துக்கொண்டாலும், இந்தத் திட்டங்களினால் பயன்பெறுகின்றவர்களில் ஏறத்தாழ 70 சதவீதம் அல்லது 80 சதவீதம் மக்கள் பிற்பட்ட மக்கள்தான் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்வி அறிவிலே, ஆற்றலிலே ஒதுக்கப்பட்ட மக்கள் இன்றைக்கு உயர்வான நிலைமையினைப் பெறுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு நல்ல பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. மேலும் பிற்பட்ட மாணவர் இல்லங்களை அமைத்து, காலையிலும் மாலையிலும் பயிற்சி அளிக்க பகுதிநேர ஆசிரியர்களை நியமித்திருக்கிறோம். அந்தப் பகுதிநேர ஆசிரியர்களின் ஊதியத்தை இந்த ஆண்டிலே உயர்த்தி, அவர்களையெல்லாம் முழுநேர ஆசிரியர்களாக நியமிக்க வேண்டுமென்ற என்னுடைய கருத்துக்களை இணைத்துக்கொள்கிறேன். கிராமப்புறங்களில் படிக்கின்ற மாணவர்கள் பொறியியல் கல்வி, மருத்துவக் கல்வி, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வுகளில் வெற்றிபெற, அவர்களுக்கு நுழைவுத் தேர்வுக்கு பயிற்சி அளிக்க நாம் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பட்ட வகுப்பினருக்காக வீட்டுமனைகள் வழங்க நிலங்களைக் கையகப்படுத்தும் சிறப்பான திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் தொழில் அடிப் படையில் மிகவும் நலிவுற்று, பொருளாதாரத்திலே மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கும் பனை ஏறும் தொழிலாளர்கள், நெசவுத் தொழிலாளர்கள், கம்மாளர் என்று கூறப்படுகின்ற தச்சு வேலை செய்பவர், இரும்பு வேலை செய்பவர், பாத்திர வேலை செய்பவர், சிற்ப வேலை செய்பவர், தங்க வேலை செய்பவர், சலவைத் தொழிலாளர், சவரத் தொழிலாளர் ஆகிய அத்தனை பேர்களுக்கும் வீட்டுமனை வழங்கும் திட்டத்தை விரைவுபடுத்தி, அதற்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன் .

மேலும் சலவைத் தொழிலாளர்களையும் சவரத் தொழிலாளர் களையும் எடுத்துக்கொண்டால் அவர்கள் வாழ்க்கையில் மிகவும் பிற்பட்ட நிலையில் இருக்கிறார்கள். சலவைத் தொழிலாளர், சவரத் தொழிலாளர் எண்ணிக்கையும் தமிழ் நாட்டிலே மிகவும் குறைவாகத்தான் இருக்கிறது. ஆகவே அவர்களை தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கலாம் என்ற என்னுடைய கருத்தை இங்கே இணைத்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பட்ட மக்களுடைய உயர்வை உன்னதமாகக் கொண்டு மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தை உருவாக்கி, அதன் மூலம் பிற்பட்ட மக்கள் பொருளாதாரத்தில் மேம்பாடு அடையவும், சிறப்புத் தன்மையை அடையவும் பொருளாதாரத் திட்டங்கள், கால்நடை வளர்ச்சித் திட்டங்கள், கிராமக் குடிசைத் தொழில்கள் போன்ற அனைத்துத் தொழில்களுக்கும் நிதி உதவி அளித்து வருகின்றார்கள். இந்தப் புனிதத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் மாணவர்கள் ஜாதிச் சான்றிதழ் வாங்கச் செல்லுகின்றபோது கிராம நல அலுவலகத்திற்கும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கும் சென்று காத்திருக்க வேண்டிய நிலைமை





இருக்கிறது. இந்த நிலைமையைத் தவிர்க்க சட்டமன்ற உறுப்பினர்களே அவர்களுக்கு ஜாதிச் சான்றிதழ் கொடுக்க வேண்டும் என்பதற்கான அரசு ஆணையைப் பிறப்பிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மீனளத் துறையைப் பொறுத்தவரையில், மொத்த மதிப்பீட்டில் ஏறத்தாழ 60. சதவீதத்திற்குமேல் இன்றைக்கு அவர்களுடைய நலத் திட்டங்களுக்காக ஒதுக்கியிருக்கிறோம். அதிலும் இந்த ஆண்டு 53.20 ரூபாய் புதியத் திட்டங்களுக்குச் செலவழிக்க இருக்கிறோம். மேலும் மீனவர் வாழ்க்கை முன்னேற்றம் அடைவதற்காக, மீனவர் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்காக வேலை வாய்ப்பு அளிக்கவும், மீன் உற்பத்தியை அதிகப்படுத்தவும் மீனவர் நண்பரான மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் எந்த அளவுக்கு அக்கறை செலுத்து கிறார், திட்டமிடுகிறார் என்பதை எண்ணிப்பார்க்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே மீனவர் வாழ்க்கை முன்னேற அவர்களுக்கு மீன்பிடி படகுகள் வழங்குதல், நைலான் வலைகள் வழங்குதல், இணைப்புச் சாலைகள் வசதி செய்தல், தங்கு தளங்கள் அமைத்தல், பிடித்த மீன்களைப் பாதுகாக்கும் வசதி செய்தல், பிடித்த மீன்களை கரையில் கொண்டுவந்து ஏலம் இட்டு விற்க இடவசதி செய்தல் போன்ற பல்வேறு திட்டங்கள் 1978-79 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கப்பட்டு இன்றைக்கு சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இதுவரை இந்த நாட்டை ஆண்டவர்கள் இந்தத் திட்டங்களில் ஈடுபடவில்லை, செயல்படுத்தவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு வந்த பின்னால்தான், புரட்சித் தலைவர் அவர்கள் அரியணையில் அமர்ந்த பிறகுதான் மீனவர்களுக்கு நலன் தருகின்ற, நன்மை அளிக்கின்ற திட்டங்கள் செயல்படத் தொடங்கின. இந்த ஆண்டு கூட 131.99 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

எனது தொகுதியில் மூட்டம் மீனவர் கிராமத்திற்கு அந்த நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியைக் கேட்கும்போது அதற் காக இந்த அரசுக்கும் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர் களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரி வித்துக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் கோடி-

முன்னை, பிள்ளைவிளை போன்ற பகுதிகளுக்கும் இந்தத் திட்டம் ஆய்வில் இருப்பதாகத் தெரிகிறது. அவற்றை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று 1978-79 ஆம் ஆண்டுக்குப் பிறகு, இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகுதான் 108 புயல் பாதுகாப்பு இல்லங்கள் ஏறத்தாழ 3.44 கோடி ரூபாய்ச் செலவில் கட்டிக்கொடுக்கப்பட்டு மீனவர்களுக்கு நன்மை அளிக்கின்ற அரசாக இந்த அரசு விளங்குகிறது.

(நண்பகல் 12-00)

மேலும் அதுபோல் இரவு நேரங்களில் மீனவர்கள் பாதுகாப்பாகக் கரை வந்து சேரவேண்டும் என்கிற முயற்சியில் ஏறத்தாழ 55 கிராமங்களில் வழிகாட்டி விளக்குகளை அமைக்க ஏற்பாடு செய்து அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீன்தொழில் இல்லாத காலங்களில் பயன்படுகிற வகையில் மீனவர்கள் சேமிப்பு நிவாரணத் திட்டத்தை புரட்சித்தலைவர் திரு. எம். ஜி. ஆர். அவர்களுடைய அரசுதான் 1982 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தி அதனைச் சிறப்பாக நிறைவேற்றி வருகிறது. அதன் மூலமாக அரசாங்கத்தினுடைய உதவித் தொகை ஏறத்தாழ 109.88 இலட்சம் ரூபாய் இன்றைக்கு வழங்கப்பட்டு இருக்கிறது.

இன்றைக்கு கடற்கரையை ஒட்டி இலங்கை இருக்கிறது. கடற்கரையில் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்கிற நேரத்தில் எந்த நேரத்திலும் சிங்கள இராணுவத்தினரால் ஆபத்து ஏற்படலாம் என்கிற உணர்வை எண்ணிப்பார்த்து, கடற்கரையில் சிங்கள இராணுவத்தால் ஆபத்து ஏற்பட்டு மீனவர்கள் உயிர் இழக்கிற சூழ்நிலை ஏற்பட்டால் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து புரட்சித்தலைவர் அவர்களே 2000 ரூபாய் வழங்குகிறார்கள். அந்த மீனவர்கள் காயமுற்றால் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 500 ரூபாய் கொடுக்கிறோம். இது எந்த ஆட்சியிலும் இல்லாத திட்டமாகும். இந்த அரசுதான் இப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுகிறது. புரட்சித் தலைவர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள்தான் இவற்றை அறிமுகப்படுத்தி மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகுதான்





மீனவர்களின் நலனுக்காக எவ்வளவோ பணிகளைச் செய்து வருகிறார்கள். இவற்றை நாம் அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் அதற்குக் காலம் இடம் தராது.

கடந்த ஆண்டு கடல் மூலம் ஏற்றுமதியைப் பொறுத்த வரையில் கிடைத்த மொத்த அன்னியச் செலாவணியில் தமிழ் நாட்டினுடைய பங்கு மட்டும் ரூபாய் 60 கோடி என்று புள்ளி விவரங்களைப் பார்க்கிறபோது தெரிகிறது. அதேபோல் 1977 முதல் 1987 வரையிலான பத்தாண்டுக் காலங்களில்தான் அதாவது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் தான் மீன் உற்பத்தி பெருகி 30 சதவீதத்திற்கு உயர்ந்திருக்கிறது. இந்தச் செய்திகளைக் கேட்கிறபோது புரட்சித் தலைவர் அவர்களின் அரசு மீனவர்களுக்காகவும், மீன் வளர்ச்சிக்காகவும் எவ்வளவு நாட்டம் கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்க முடியும். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல் மீனவ சமுதாயத்திற்காக இந்த அரசு எந்த அளவுக்கு பணியாற்றி இருக்கிறது என்பதை இந்தத் திட்டங்கள், சாதனைகள், விளக்கங்கள் உலகுக்கு எடுத்துக் காட்டிக்கொண்டிருக்கின்றன. மேலும் இன்றைக்கு பல்வேறு திட்டங்களை நாம் நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம். மீன் குஞ்சு உற்பத்தி செய்வதற்காக நம்முடைய அரசு அதிகமான அக்கறை எடுத்துக்கொண்டு செயல்படுத்தி வருகிறது. இதனை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேசமயம் மீன் குஞ்சு உற்பத்தி செய்கிற பணிகளை அதிகரித்தால் இன்னும் கூடுதலான பலன் கிடைக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் ஏறத்தாழ 60,000 ஹெக்டேர் உவர் நீர் நிலப் பரப்பு கடற்கரை ஓரமாக இருக்கிறது. அவற்றில் மிகச் சிறிய அளவில்தான் நாம் இறால் பண்ணை அமைத்து இருக்கிறோம். அவை எல்லாம் கூட்டுறவுத்துறையில்தான் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது. அவற்றிலே பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன. என்னுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் மணக்குடி என்று சொல்லக்கூடிய ஊரில் பல ஆண்டுகளாக நடைபெற்று வந்த இறால் பண்ணை தற்போது செயல்பட வில்லை என்ற செய்தியை அறிகிறேன். அதுபோல் ராஜாக்க மங்கலம் துறை என்ற பகுதியில் இறால் பண்ணை அமைக்க

[திரு. எப். எம். இராசரத்தினம்] [1987 ஏப்ரல் 10

இயற்கை வசதிகள் உள்ளன. ஏற்கெனவே அந்தப் பகுதியில் ஆய்வு செய்திருப்பதாகவும் தெரிய வருகிறது. எனவே ராஜாக்கமங்கலம்துறையில் இறால் பண்ணை அமைக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். நான் ஏற்கெனவே சொன்னதுபோல் 60,000 ஹெக்டேர் உவர்நீர் நிலப்பரப்பில் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக இறால் பண்ணைகளை நடத்துவதால் அதிலே பல குறைபாடுகள் இருப்பதன் காரணத்தால் அவர்கள் உவர் நீர் நிலப்பரப்பில் இறால் பண்ணைகளை நடத்த வேண்டியதில்லை என்று தடை பிறப்பித்துவிட்டு அவற்றைத் தனியாருக்குக் கொடுத்தால் கூட அதிகமான மீன் உற்பத்தி செய்கிற வாய்ப்பு ஏற்படும். எனவே அதை இந்த அரசு பரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விசைப்படகுகள் வாங்குவதற்கும், கட்டுமரங்களில் இயந்திரங்கள் பொருத்துவதற்கும் இந்த அரசு அதிகமான அக்கறை காட்டிக்கொண்டு இருக்கிறது. அதேநேரத்தில் தமிழ்நாட்டில் ஏறத்தாழ 40,000 கட்டுமரங்கள் இருக்கின்றன. அனைத்து கட்டுமரங்களிலும் இயந்திரங்கள் பொருத்துகிற அளவுக்கு தீவிரமான திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

புயலாலும், காற்றாலும், இயற்கையின் சீற்றத்தாலும் அடிக்கடி பாதிப்புக்கு ஆளாவது கடற்கரை ஓரத்தில் இருக்கின்ற மீனவர்கள்தான். என்னுடைய தொகுதியில் வாணியப்பட்டி என்ற பகுதியில் ஏறத்தாழ இரண்டாண்டுகளுக்கு முன்பு 100 வீடுகள் தீயினால் எரிந்து விட்டன. அவற்றில் 21 வீடுகள்தான் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 79 வீடுகள் இன்னும் கட்டிக் கொடுக்கப்படவில்லை. அதேபோல் 6 மாத காலத்திற்கு முன்பு ராஜாக்கமங்கலம்துறை என்ற பகுதியில் ஏறத்தாழ 29 வீடுகள் கடற்கரை ஓரத்தில் தீயினால் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றைப் பொறுத்தவரையில் வீடுகள் கட்டவில்லை. சிறப்பான வீடு கட்டுகிற அந்தத் திட்டம் தொடரவேண்டுமென்று சொல்வதோடு கூடுதலாக இந்தக் குடிசைகளை மாற்றி இலவசமாகக் கட்டிக் கொடுக்க நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து கடல் அரிப்பினைப் பொறுத்த வரையில் கூடுதலாக நிதி ஒதுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்



1987 ஏப்ரல் 10] [திரு. எப். எம். இராசரத்தினம்]

கொள்கிறேன். அதேபோல மணவாளக்குறிச்சி என்று சொல்லுகிற மாதாரம் என்னுடைய தொகுதியில் இருந்தது. அதை விஸ்தரிப்பதற்காக கடற்கரை ஓரமாக உள்ள மீனவ கிராமங்களை எடுக்கிற சூழ்நிலை வந்தது. அதனாலே மீனவ கிராமங்களிலே தொழில் மிகவும் பாதிக்கும் என்ற நிலைமை உருவாகிறது. ஆகவே அந்த மீனவர்களுக்கு வேலை வாய்ப்பில் 50 சதவீதம் முன் உரிமை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1956 ஆம் ஆண்டுதான் நாங்கள் எல்லாம் கேரளாவில் இருந்து பிரிந்து தமிழ்நாட்டிற்கு வந்து சேர்ந்தோம். இன்றைக்கு கேரளாவிலே இருக்கக் கூடிய மீனவர்களுக்கு 4 சதவீதம் வேலை வாய்ப்பிலே முன் உரிமை கொடுக்கிற திட்டத்தை அரசு ஆணை மூலம் அறிவித்திருக்கிறது. ஆகவே கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக் கூடிய மீனவர்களுக்கு கேரளாவிலே இருக்கக் கூடிய அரசு ஆணைபோல் அல்லது அந்த அடிப்படையில் 4 சதவீதம் வேலை வாய்ப்பில் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கல்லூரி வரையிலும், அதற்கு மேலும் படிக்கிற மீனவர்களுக்கு அவர்களுடைய வகுப்பிற்கு ஏற்றவாறு கல்வி உதவித் தொகையும், 60 வயதான கடலோர மீனவர்களுக்கு ஓய்வு ஊதியமும் தருகிற ஒரு அறிவிப்பை கேரள அரசு அறிவித்திருக்கிறதாக நான் அறிகிறேன். அதனை இந்த அரசு பரிசீலித்து அதையும் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல என்னுடைய தொகுதியில் சைமன் காலனி என்று சொல்லக் கூடிய கடற்கரை ஓர இணைப்புச் சாலை பெரிதும் பழுதடைந்திருக்கிறது. அந்தச் சாலையிலே பேருந்துகள் கூட போக முடியாத ஒரு அபாயம் கூட ஏற்பட்டு வருகிறது. எனவே சைமன் காலனியில் இருக்கக்கூடிய அந்த மீனவ இணைப்புச் சாலையை உடனடியாக பழுது பார்க்கின்ற பணியைச் செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்வதோடு, கன்னியாகுமரி மாவட்டத்தில் கடற்கரை ஓர கிராமங்களில் பேருந்து வசதிகள் செய்து கொடுத்திருக்கிறீர்கள். அதற்காக நான் மனப்பூர்வமாக நன்றி தெரிவித்து பாராட்டுகிறேன். கொளச்சல் பகுதியில் இருக்கக் கூடிய மீனவர்களுக்கு பேருந்து

களிலே மீன்களைக் கொண்டு போக முடியாதபடிக்கு தடை இருக்கிறது. அப்படி இல்லாமல் பேருந்துகளில் மீன்களைக் கொண்டு செல்லும் வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு. . .

(மணியடிக்கப் பெற்று வேறு உறுப்பினர் அழைக்கப் பெற்றார்)

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள கணிசமான பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட இலாகா மீன் துறை என்பதை நாம் நன்கு அறிவோம். அவர்களுடைய வளர்ச்சிக்காக அரசு பல திட்டங்களை அறிவித்திருக்கிறது. சில திட்டங்களை அமல் படுத்திக் கொண்டிருக்கிறது. அந்தத் திட்டங்களிலே ஒரு சில பிரச்சனைகளை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். விவரமாக விஷயங்களை பேசுவதற்கு போதிய நேரம் இல்லாத காரணத்தால் மிகச் சுருக்கமாக சொல்லிக் கொள்ள இந்த நேரத்தைப் பயன்படுத்த விரும்புகிறேன். ஏற்கெனவே மீன் பிடிப்பதற்கு மெக்கானைஸ்டு போட்ஸ்களை பயன்படுத்தும் நிலை இருந்தது. அது சில வருடங்களாக நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது. போட் பில்டிங் யார்டு கூட கலைக்கப்பட் டிருக்கிறது. ஆனால் இந்த கொள்கை விளக்கக் குறிப்பிலே நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீனவர்களுக்கு விசைப் படகுகள் வழங்கும் திட்டம் புதுப்பிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக் கிறார்கள். இந்த வகையில் நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, ஏற்கெனவே அது வேலை செய்துக் கொண்டிருந்தபோது, அதில் பணியாற்றியவர்களுக்கே, அது மூடப்பட்டதால் வேலை இழந்தவர்களுக்கே, வேலை வாய்ப்பில் முன்னுரிமை கொடுக்கப் பட வேண்டும்.

அதேபோல கடல் அரிப்பு காரணமாக ஏற்படுகிற பிரச்னைகளைப் பற்றி எனக்கு முன்னாலே பேசிய உறுப் பினர்கள் இங்கே எடுத்துத் தெரிவித்தார்கள். கடல் அரிப்பு காரணமாக கடலோர மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள். சில இடங்களில் சுவர்கள் கட்டப்பட்டிருக்கிறது





ஆனால் அதுவும் முழுமையாக இல்லை. இன்று கேரள மாநிலத்திலே பல பகுதிகளிலே சுவர்களைக் கட்டியிருக் கிறார்கள். அந்த முறையில் கட்டினால் நலமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

அதேபோல இன்னொரு திட்டம் நல்லார் இறால் தயாரிப்புத் திட்டம். அந்த திட்டத்திற்காக லட்சக் கணக்கில் பணம் செலவு செய்யப்பட்டிருந்தது. அது என்னவாயிற்று, அந்தத் திட்டம் எங்கே சென்றிருக்கிறது என்பதற்கான விவரங்கள் இந்தக் குறிப்பில் இல்லை.

அதேபோல இன்னொரு பிரச்சினை. முத்து எடுக்கக்கூடிய தொழிலில் ஈடுபட்டிருக்கிற 40 ஊழியர்கள் மண்டபத்தில் பாதிக்கப்படுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் அரசு ஏற்று நடத்தி வந்த இந்தத் துறையை இன்றைக்கு ஸ்பிக் நிறுவனத்திற்கு ஒப்படைப்பதற்குள்ள ஏற்பாடுகள் முடிக்கப் பட்டிருப்பதாகத் தெரிகிறது. அப்படி ஸ்பிக் நிறுவனம் ஏற்று நடத்துகிற நிலையில் இவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு அவர்கள் தயாராக இல்லையென்று தெரிகிறது. ஆகவே இவர்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லாமல் இந்தப் பிரச்சினையை முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்னொரு விஷயத்தை சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். Circular Incubator, Chinese Hatcheries, Movable Hatcheries இந்தமாதிரியான திட்டங்களில் இன்றைக்கு மீனவர்களிடம் உற்சாகம் இருக்கிறதென்று கேள்விப்படுகிறோம். அப்படியானால் அந்தத் திட்டங்களை மேலும் ஊக்குவிக்க நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல 'ஃபிஷிங் ஹார்பர்' பொறுத்தவரையில் இந்தக் குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் தேங்காய்பட்டணத்தில் ஒரு மீன்பிடி துறைமுகத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் படுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. ஏற்கனவே சின்னமுட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கிற மீன்பிடித் துறை முகத்தில் வேலைகள் இன்றைக்கும் சரியாக முழுமையாக முடிக்கப்படவில்லையென்று தெரிகிறது. அதை எவ்வளவு

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 10

விரைவுபடுத்த முடியுமோ அந்த அளவிற்கு விரைவுபடுத்த வேண்டும். தேங்காய்பட்டணத்திலும், அதற்கு அருகிலே இணையன்துறை போன்ற இடங்களிலும் 'ஃபிஷிங் ஹார்பர்' ஏற்படுத்த நடவடிக்கையெடுக்க வேண்டும். மண்டைக்காட்டில் ஏற்பட்ட கலவரம் சம்பந்தமாக வைக்கப்பட்ட ஜஸ்டிஸ் வேணுகோபால் என்குயரி கமிஷன் ரிப்போர்ட்டில் கூட அவர்கள் இதனைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் மீனவர்களுடைய நலனுக்காக மேலும் அதிகமாக 'ஃபிஷிங் ஹார்பர்'-களை ஏற்படுத்த வேண்டுமென்று தெரிவித்து இருக்கிறார். ஆகவே அந்த முறையில் நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து இன்னொரு பிரச்சினையைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதாவது மீனவர்களுக்கு இப்போது வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. கன்னியாகுமரி மாவட்டம் சின்ன முட்டத்தில் கட்டப்பட்டிருக்கிற வீடுகள் இடிந்து மோசமான நிலையில் இருக்கின்றன. மழைக்காலங்களில் அந்த வீடுகளுக்குள்ளே தங்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. வீடுகளை மோசமான நிலையில் கட்டிக்கொடுக்கிற நிலைமைகளைத் தவிர்ப்பதற்கு, இப்படி வீடுகளைக் கட்டியவர்கள் மீது அரசாங்கம் உரிய நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்னொரு திட்டம். நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் புளியங்குடியில் (Fish Forming Scheme) என்ற திட்டத்திற்கு பயன்படுத்துவதற்கு 15 டாங்குகள் பி.டபிள்யூ.டி.-யில் ஒப்படைக்கப்பட்டு, இந்தத் திட்டத்திற்கு பயன்படுத்த வேண்டுமென்று நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். ஆனால் நிலைமை என்னவென்றால் வெள்ளைக்காரன் காலத்திலிருந்து ஒருசில குடும்பத்துக்காரர்கள் ஒரு குறைவான ரேட்டிற்கு எடுத்து அந்தக் குளங்களை கையில் வைத்துக் கொண்டு அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். ரெவின்யூ டிபார்ட்மென்ட் இது சம்பந்தமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை சரியான முறையில் எடுக்கவில்லை. இன்றைக்கு இப்படிப் திட்டங்களைத் தீட்டியிருக்கிறது. ஆனால் இன்று கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில்கூட நீண்டகாலமாக தேர்தல்



1987 ஏப்ரல் 10] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

பட்ட தனி நபர்கள் பல ஆயிரம் ரூபாய்களுக்கு அந்தக் குளங்களை மற்றவர்களுக்கு குத்தகைக்கு விட்டு பணத்தைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அந்தக் குளங்கள் இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உத்தரவு போட்டு, பி.டபிள்யூ.டி.-க்கு ரெவின்யூ டிபார்ட்மெண்டால் ஒப்படைக்கப்படுமானால், அதனால் பல ஆயிரக்கணக்கான மக்கள் பலன் அடைகிற நிலை ஏற்படுவது மட்டுமல்லாமல், அரசுக்கும் அதனால் இலாபம் ஏற்படுகிறது என்ற நிலை வருகிறது. ஆகவே அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து 'ஃபிஷ் பார்ம் ஸ்கீம்'. இதற்கு மீன்குஞ்சுகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் எங்கேயிருந்து எடுத்துச்செல்லப் படுகிறதென்றால் மணிமுத்தாறிலிருந்து எடுத்துச் செல்லப்படுகின்றன. காலையில் மணிமுத்தாறில் அவைகள் எடுக்கப்பட்டு இரவு நேரத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை போன்ற இடங்களுக்கு போய்ச் சேர்கின்றன. அவர்கள் எடுத்து வருகிற மீன்குஞ்சுகளில் பெருத்த சதவீதம் பயன் இல்லாத சூழ்நிலையில் இருக்கின்றன. ஆகவே பேச்சிப்பாறையிலே மீன் குஞ்சுகளை வளர்க்கும் ஒரு திட்டம் ஏற்கனவே உருவாக்கப் பட்டது. அதை உடனடியாக அமுல்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்று மீனவர்களைப் பொறுத்தவரையில், பல திட்டங்களின் படி வங்கிகளில் கடன் கொடுப்பதற்கான திட்டங்களை நாம் உருவாக்கி இருக்கிறோம். ஆனால், உண்மையான நிலை என்னவென்றால், வங்கிகளில் இன்றைக்கு அவர்களுக்கு பணம் கிடைக்காத நிலைமைதான் இருக்கிறது. அங்கு பார்சியாலிட்டி அடிப்படையிலே, பாகுபாடு அடிப்படையிலேதான் அவர்களுக்கு பணம் கொடுக்கப்படுகிறது என்றும், சரியான முறையிலே அவர்களுக்கு அந்த லோன் கிடைக்கவில்லை என்றும் புகார்கள் இன்றைக்கு மீனவர்களிடம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. எனவே இந்த நிலையைப் போக்கக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பணிவன்போடு நான் கேட்டுக்கொள் கிறேன்.

இன்று இந்தத் திட்டங்களைப் பொறுத்தவரையில்கூட கூட்டுறவுச் சங்கங்கள் வழியாகத்தான் இந்தத் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது,

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 10

நடைபெறாத காரணத்தால், அவைகளினுடைய செயல்பாடு இன்றைக்கு பல இடங்களில் நடைமுறையில் இல்லாத நிலைமை இருக்கிறது. சில தனி நபர்களுடைய சர்வாதிகாரம் அன்றைக்கு கூட்டுறவு சங்கங்களைப் பொறுத்த அளவிலே ஏற்பட்டிருக்கிறது.

குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் பள்ளம் என்ற இடத்திலே ஒரு கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது. அந்தக் கூட்டுறவுச் சங்கத்திலே உள்ள மீனவர் மக்களுக்கு பெரிய அளவிலே பயன் கிடைக்காத நிலை இன்றைக்கு ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே தேர்தலை நடத்தி, யதார்த்தமான மக்களுடைய பிரதிநிதிகள் ஆட்சிப் பொறுப்பிலே வரக்கூடிய நிலையை உருவாக்கினால்தான் உண்மையாக அரசு உருவாக்குகிற அந்த திட்டங்களினுடைய பலன் மீனவர்களுக்கு கிடைக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் மார்க்கெட்டிங் சொசைட்டிகளைப் பொறுத்த வரையில் இதே நிலைமைதான் இன்றைக்கு ஏற்படக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே அந்த சொசைட்டிகளுக்கும் தேர்தல் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு மாவட்டந்தோறும் மீன் பிடிக்கக்கூடிய சாதனங்களை இடைத்தரகர்கள் இடையிலே வராமல் நியாயமான விலைகளில் கொடுக்க விற்பனை நிலையங்களை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இன்றைக்கு மீனவர்கள் பிடித்த மீன்களுக்கு—இடைத்தரகர்களுக்கு இடம் இல்லாமல்—நியாயமான விலை கிடைக்கக்கூடிய வாய்ப்பு இல்லாததன் காரணமாக, மீனவர்களுக்கு யதார்த்தமாக கிடைக்க வேண்டிய, அவர்கள் உழைப்புக்குக் கிடைக்க வேண்டிய பலன் கிடைக்காத நிலை இருக்கிறது. இடைத் தரகர்கள் அதைச் சுரண்டிக் கொண்டு போகக்கூடிய ஆபத்து இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.

மீன் வள ஆலோசனைக் குழு என்று ஒரு குழு இருக்கிறது. அந்தக் குழுவைப் பொறுத்தவரையில், சர்வகட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அந்தக் குழுவிலே இடம் பெறக்கூடிய முறையிலே, அந்தக் குழுவை மாற்றி, அதைத் திருத்தி அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 10] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

வ.உ.சி மாவட்டத்திலே இயங்குவது போல், மீனவர் சமுதாயத்தில் உள்ள மாணவர்கள், பட்டதாரிகள் இலவசமாக தங்கி படிக்கக்கூடிய விதத்தில், ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரத்திலேயும், அரசு விடுதிகள் கட்டவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்கள் பெயருக்கு வாங்கிய விசைப்படகுகள், அரசு அதிகாரிகளுடைய உதவியோடு, இடைத்தரகர்கள் உதவியோடு வியாபார நோக்கத்தோடு வெளியார்கள் வாங்கியிருக்கிறார்கள். அதனால் அரசுக்கு வரவேண்டிய தவணை பாக்கி வராமல் பல கோடி ரூபாய் நிலுவையில் உள்ளது. இந்தத் திட்டத்தின் நோக்கம் செயல்படாமல் இருப்பதோடு பல கோடி ரூபாய்களை வெளியார்கள் ஏப்பம்விடும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இதையும் கண்டுபிடித்து, அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையிலிருந்து குமரி வரை உள்ள கடற்கரை கிராமங்களை இணைக்கும் ரோட்டை முடிப்பது கடலோர மக்களுக்கு, அவர்களுடைய வளர்ச்சிக்குத் தேவையானதாகும். அதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பொதுவாக மார்ச் மாதம் முதல் மே மாதம் வரையில் கடலிலே போய் மீன் பிடிக்க முடியாத நிலைமை இன்றைக்கு மீனவர்களுக்கு இருந்து வருகிறது. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்திலே அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. எனவே அந்தக் காலத்திலே, அவர்களுக்கு இலவச ரேசன் கொடுப்பதற்காக அரசு முன்வரவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12·20)

மீனவர்கள் குடியிருப்புகளைப் பொறுத்தவரையில் பட்டா போட்டு கொடுப்பதற்கான நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கன்னியாகுமரியைப் பொறுத்தவரையில் இன்றைக்கு குடிநீருக்குக்கூட கஷ்டமான ஒரு நிலை ஏற்பட்டு இருக்கிறது. ஒரு சர்வதேச டூரிஸ்ட் சென்டராக இருந்தாலும்கூட, இன்றைக்கு கன்னியாகுமரியிலே இப்படிப்பட்ட நிலைமை இருப்பதன் காரணமாக அந்தப் பகுதியிலே உள்ள மீனவர் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்

கிறார்கள். அரசே பல திட்டங்களைத் தீட்டியிருந்தாலும் ஒரு விஷயத்தை நான் சுட்டிக்காட்ட விரும்புவது, மீனவர்களுக்கு கலாச்சார துறைகளில் வளர்ச்சி ஏற்பட்டால் தான், சமூக பொருளாதார வளர்ச்சி அவர்களுக்கு ஏற்படக் கூடிய முறையிலே உள்ள நடவடிக்கைகளை அரசு எடுத்தால் தான், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தில் முன்னேற்றம் ஏற்படுத்த முடியும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். Justice Venugopal Enquiry Commission சொல்லியிருக்கின்ற ஒரு கருத்தை இந்த அவையிலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன் With regard to the fishermen living in the coastal areas, their present isolation must give place to their sharing the benefits of socio-economic development taking place in the country; they should be sucked into the main stream and should be given their share and participation in Government employment and service.

இந்த முறையிலே உள்ள நடவடிக்கைகளை அரசு போதுமான அளவுக்கு எடுக்கவில்லை என்ற கருத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் எப். எம். இராசரத்தினம் சொன்னதைப்போல இன்றைக்கு கேரள மாநிலத்திலே மீனவ மக்களுக்கு ஒதுக்கீடு செய்துள்ளதைப்போல, தமிழகத்திலும் அவர்களுக்காக 1 சதவீதம் ஒதுக்கீடு செய்யப்படவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு விஷயத்தைப் பொறுத்த அளவிலே நான் சுட்டிக் காட்ட விரும்புவது பேக்வேட்-கிளாஸ் மக்களைப் பொறுத்த அளவிலே இன்றைக்கு ஏகப்பட்ட குழப்பங்கள் நிலவுகின்றன. யார் இன்றைக்கு ஷெட்யூல்ட் காஸ்ட், யார் பேக்வேட்-கிளாஸ் என்று தெரியாத முறையிலே இன்றைக்கு அதிகாரிகளிடமிருந்து சான்றிதழ் கிடைக்க முடியாத ஒரு கஷ்டமான நிலை இருக் கிறது. எல்லா மாவட்டங்களிலும் இந்த நிலை ஏற்பட்டிருக் கிறது. நம்முடைய சட்டமன்றத்தினுடைய பெட்டிஷன் கமிட்டி மூலம் மக்கள் கொடுக்கின்ற மனுக்களைப் பார்க்கின்றபோது, வட ஆற்காடு மாவட்டத்திலே, தூத்துக்குடியிலே, மதுரையிலே,



கன்னியாகுமரியிலே, மற்றும் எல்லா மாவட்டங்களிலும் உள்ள ஷெட்யூல்டு வகுப்பைச் சேர்ந்தவர்கள், இப்போது ஷெட்யூல்டு வகுப்பைச் சேர்ந்தவர்கள் அல்ல என்று சொல்லப் படுகிறது. அவர்களுக்கு ஷெட்யூல்டு வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்ற சர்டிபிகேட்டும் கிடைப்பதில்லை. பேக்வேட்-கிளாஸ் என்ற முறையிலும் அவர்களுக்கு சர்டிபிகேட் கிடைக்காத ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. இன்று, குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள மீனவ வகுப்பிலுள்ள ஒரு பிரிவான 'கரவா' சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு காலத்திலே ஷெட்யூல்டு காஸ்ட் என்ற முறையிலே சான்றிதழ்கள் கொடுக்கப்பட்டிருந்தது. இப்போது என்ன நிலைமை என்றால், ஆர்.டி.ஓ.வோ தாசில்தாரோ இவர்களுக்கு சர்டிபிகேட் கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். அதேபோன்று 'கணியார்' என்ற சமுதாயத்தினருக்கு முன்பு ஷெட்யூல்டு காஸ்ட் என்ற முறை யிலே சர்டிபிகேட் கொடுக்கப்பட்டது. இப்போது கொடுக்க முடியாது என்று மறுக்கப்படுகிறது. இப்படிப்பட்ட ஒரு தெளி வில்லாத நிலைமை இருக்கிறது. அண்ணன் படிக்கக்கூடிய நேரத்திலே அவனுக்கு ஒரு இன சர்டிபிகேட் கிடைக்கிறது, அண்ணன் படித்த அதே இடத்தில் தம்பி படிக்கும்போது—ஒரே தகப்பனாருடைய மகன்கள்—தனக்கு அந்த சர்டிபிகேட் வேண்டு மென்று கேட்டால் தரமுடியாது என்று இன்றைக்கு ஆர்.டி.ஓ.-வும், தாசில்தாரும் சொல்லக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. நான் எதற்காக இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றால் சென்ற ஆண்டிலே உள்ள கொள்கை விளக்கக் குறிப்பிலே பேக்வேட்-கிளாஸ்-ஐப் பொறுத்த அளவிலே பிற்படுத்தப் பட்டோர் யார் என்பதை முடிவு செய்வதற்கு 'அம்பாசங்கர் கமிஷன்' என்ற ஒரு கமிஷனை இந்த அரசு நியமனம் செய்தது. அந்தக் கமிஷனுடைய அறிக்கைமேல் தெளிவான ஒரு முடிவை அரசு இன்னும் எடுக்கவில்லை. ஆகவே இன்றைக்கு அரசு சில சமுதாயத்தினரை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தும் சில சேர்க்காமலும் இருக்கிற சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலை மாற்றப்படவேண்டும். இதை நான் அரசியல் நோக்கத்திற்காகச் சொல்லவில்லை. ஒரு உண்மையைச் சொல்லுகிறேன். இந்த நிலை அரசியல் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகிறதோ என்ற ஒரு சந்தேகம் இன்றைக்கு மக்களுக்கு ஏற்படுகிறது.

திருநெல்வேலியில் தேர்தல் நடந்த நேரத்திலே, பிள்ளை வகுப்பைச் சேர்ந்தவர்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களாக மாற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்குப் பொறுப்பாக, ஆளுங்கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் பேசியது பத்திரிக்கைகளில் வந்திருக்கிறது. நான் எதற்கு இதைச் சுட்டிக்காட்டுகிறேன் என்றால், இன்றைக்கு அம்பாசங்கர் கமிஷனுடைய அறிக்கையின் மீது அரசு திட்டவட்டமான முடிவு எடுத்து, இந்த இந்த சமுதாயத்தினர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்றும்; இந்த இந்த சமுதாயத்தினர் ஷெட்யூல்ட் காஸ்ட் என்றும்; இந்த இந்த சமுதாயத்தினர் ஷெட்யூல்ட் டிரைப் என்கின்ற முறையிலே திட்டத் தெளிவான முடிவை அரசு எடுக்குமேயானால், இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய குழப்பங்களிலிருந்து மக்களுக்கு ஒரு பெரிய விமோசனம் ஏற்படும். அந்த அளவுக்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

ஒரு விஷயத்தை மட்டும் சுட்டிக்காட்டி விடைபெறுகிறேன். அதாவது இன்றைக்கு பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்ள அந்த வீடுகளுக்கு ஒதுக்கப்படுகிற பணம் காணாது, என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஒதுக்கப்படுகின்ற 6 ஆயிரம், 7 ஆயிரம் ரூபாயில் நல்ல வீடுகளாக அமைத்துக்கொள்ள முடியாது. ஆகவே அவர்களுக்கு தேவையான பணத்தை ஒதுக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக மத்திய அரசிடம் கேட்டு வாங்கவேண்டும். அதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் நலம். மீனளம் ஆகிய 2 மானிய கோரிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களுடைய சார்பாக





இங்கே வைக்கப்பட்டு அதன் மூலமாக பல்வேறு சமுதாய நல திட்டங்களை இந்த நாட்டுக்கு தந்து இருக்கிற இந்த மானிய கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் தமிழகத்தில் மாபெரும் மறுமலர்ச்சியை அவர் ஆண்டபோது கண்டார். இந்திய துணைக் கண்டத்தின் வரலாற்றில் தமிழகத்தில் வாழ்கிற பிற்படுத்தப்பட்டோர் உயரவேண்டும், சமுதாயத்தில் ஒரு நல்ல நிலைக்கு அவர்களைக் கொண்டு வரவேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது தந்தை பெரியார் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையை பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் தொடங்கினார். அண்ணாவின் கொள்கைகளையும், லட்சியங்களையும் அவர்கள் இந்த நாட்டுக்குச் சொன்ன கருத்துக்களையும் இதயத்தில் தாங்கி அவர்களுடைய கொள்கைகளையும் லட்சியங்களையும் இன்றைக்கு நாட்டுக்கு சட்டங்களாகவும், திட்டங்களாகவும் தந்து கொண்டு இருக்கிற அண்ணாவினுடைய மறுபதிப்பாக, அண்ணாவினுடைய மறு உருவாக, அண்ணாவினுடைய இதயக்கனியாக இருக்கும் தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் படிப்படியாக பல்வேறு நல திட்டங்களை இந்தத் துறை மூலமாக இந்த நாட்டுக்குத் தந்து சமுதாயத்தில் அவர்களை ஏற்றம் உடையவர்களாக ஆக்கி அண்ணாவோடு பழகிய, அவர்களோடு வாழ்ந்த ஒருவரை இங்கே இந்த பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சராக அமர்த்தி இன்றைக்கு இந்த நாட்டுக்கு நல்ல காரியங்களை செய்து கொண்டு இருக்கிறார்கள். அந்த வகையில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உதவவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கொள்கையைச் சொன்னார்கள். கொள்கையை சொல்வதற்கு கூட ஒரு சாதாரண அரசியல் கட்சித் தலைவர்களால் முடியாது. காரணம் நாட்டு மக்களில் ஒரு சாரார் ஏற்றுக்கொள்கிற கொள்கையாக சிலது இருக்கும்.

[டாக்டர் கே. பி. இராமலிங்கம்] [1987 ஏப்ரல் 10

எதிர்கால தமிழகத்திற்காக, எதிர்கால மக்களுக்காக, எதிர்கால சமுதாயத்திற்காக ஏற்றம் உடையதாக சில கொள்கைகள் இருக்கும். அதிலே சில எதிர்ப்புகள் வரும். சில பகுதியில் இருந்து அதற்கான எதிர்ப்புக் கணைகள் தொடுக்கப்படும். அதை எல்லாம் சமாளிக்கும் திறமை இருந்து ஆகவேண்டும் என்ற எண்ணத்துடன் தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு கொள்கையை ஆணித்தரமாக அன்றைக்கு வெளியிட்டார்கள். பொருளாதார அடிப்படையில் பிற்பட்டோர் பட்டியல் அறிவிக்கப்படவேண்டும் என்று அன்றைக்குச் சொன்னார்கள். அன்றைக்கு அவர் சொன்ன நேரத்தில் இந்த நாட்டு மக்களில் பெரும்பகுதியினர் ஏற்றுக் கொண்டாலும், இந்த நாட்டில் இருக்கிற பெரும்பாலான பிற்படுத்தப்பட்டோர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஆட்சியினுடைய திட்டங்களையும், ஆட்சியினுடைய சலுகைகளையும், ஆட்சியின் மூலமாக கிடைக்கின்ற அத்தனை சலுகைகளையும் ஒரு சாராரே, பிற்படுத்தப்பட்டவர் என்ற பெயரால், ஜாதியின் அடிப்படையில் சமுதாய அடிப்படையில் பிற்படுத்தப்பட்டோர் என்று அமைத்துக்கொண்டு வாய்ப்புகளை, வசதிகளை, அதிகாரங்களை எல்லாம் பயன்படுத்திக்கொண்டு அவர்கள் தங்களுடைய குழந்தைகளை வளர்க்கிற பாணியில் இருக்கிற காரணத்தாலே, இந்த தமிழகத்தில் இருக்கக்கூடிய பிற்படுத்தப்பட்டோர் சமுதாயம் எப்படி இருக்க வேண்டுமென்றால் பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கப்படுகின்ற சதவீதம், எத்தனை சதவீதமாக இருந்தாலும் அது அவர்களுக்கு தரப்படுகிறபோது பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு வழங்கப்படவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதில் பல அரசியல் கட்சிகள் அதிலே அரசியல் காண முனைந்து அதிலே எதிர்ப்புகள் தொடுத்து இந்த சமுதாய நோக்கோடு இல்லாமல் சமுதாயத்தைப் பற்றி எதிர் நோக்காமல், ஏழைகளுக்கு உதவிட வேண்டும், சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்டவர்கள் உண்மையான பொருளாதாரத்தின் அடிப்படையில் தாழ்ந்து போய் இருக்கிறவர்களுக்கு உதவவேண்டும் என்ற நோக்கோடு இல்லாமல் அன்றைக்கு அதை எதிர்த்தார்கள். அதை எதிர்த்ததால் தான் அந்த கொள்கையை கைவிடக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது.



1987 ஏப்ரல் 10] [டாக்டர் கே. பி. இராமலிங்கம்]

(பிற்பகல் 12-30)

ஆனால் இன்றைக்கு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு அந்த எண்ணம் மனதில் இருந்ததால் தான், நீங்கள் ஒரு கொள்கையை அறிவிக்கிற நேரத்திலே இப்படி எதிர்க்கிறீர்கள்; அதிலே அரசியல் களங்கம் கற்பிக்கிறீர்கள். ஒரு சிலர் தேர்தலை எதிர்நோக்கி சமுதாயத்தில் பொறுப்பான, பெரும்பான்மையான சமுதாயத்தில் இருக்கின்றவர்கள் பிற்படுத்தப்பட்டவர்களுடைய ஜாதியைச் சொல்லி அவர்கள் எல்லாம் பாதிப்பார்கள் என்று சொல்லி அரசியல் லாபம் காண நினைக்கின்றவர்கள் என்ற உணர்வை ஏற்படுத்திக் கொண்டு, தமிழக முதல்வர் அவர்கள் மக்களுக்குத் தந்திரமாக, ஆனால் அவர்கள் சொல்லிய கொள்கையான, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் இந்த நாட்டு மக்களுக்காக வேண்டி இலட்சியத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடு அனைத்து ஏழைக் குழந்தைகளுக்கு ஒரு வேளை மதிய உணவாக சத்துணவு வழங்கவேண்டுமென்று சொல்லி நிறைவேற்றிக் கொண்டு வருகிறார்கள்.

அதேபோன்று இலவசமாக சீருடை வழங்கவேண்டுமென்று அனைத்துக் குழந்தைகளுக்கும் எந்தவிதமான ஜாதிபேதமற்ற முறையில் இன்றைக்கு வரலாற்றிலே தமிழகத்தை உருவாக்கிக் காட்டினார்கள். அதை எதிர்த்தார்கள். அரசியல் உள்நோக்கத்தோடு இப்படிப் பட்ட பொருளாதாரத்தில் எப்படி சலுகைகளை அளிக்கமுடியும், பொருளாதாரத்தில் தாழ்ந்தவர்களுக்கு எப்படி சலுகைகளை அளித்துவிடமுடியும் என்று பத்திரிகை துணையோடும், அரசியல் கட்சியினுடைய தலைவர்கள் ஆதிக்கத்தோடும், அதிகாரிகளுடைய ஆதிக்கத்தோடும் அன்றைக்குக் கடுமையான பொருளாதாரத்தின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டிய அந்தச் சலுகைகளை எதிர்த்தார்கள். இந்த நாட்டில் அந்தக் கொள்கையை நிறைவேற்ற முடியாது என்று ஆணித்தரமான ஒரு எதிர்ப்பை, மிகப் பெரிய சுவற்றை எழுப்பிப் பார்த்தார்கள். ஆனாலும் தான் கொண்டிருக்கிற எண்ணத்தை, தான்

கொண்டிருக்கிற இலட்சியத்தை, இந்த நாட்டு மக்களுக்கு உதவிட வேண்டுமென்ற நோக்கத்தோடு இன்றைக்கு அனைத்துத் தரப் பினருக்கும், தமிழகத்து முதலமைச்சர் அவர்கள் சலுகைகளை வழங்கியிருக்கிறார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் நான் வேண்டிக் கொள்வ தெல்லாம், பொருளாதார நிலையில் யார் என்ன சொன்னாலும், அதைப்பற்றிக் கவலைப்படாமல், வழங்கப்பட்டிருக்கிற சலுகை களை வைத்துக்கொண்டு, அதிலே எவ்வளவு சலுகைகள் கொடுக் கப்பட்டிருக்கின்றதோ, அந்தச் சலுகைகளை குறிப்பிட்டவர் களுக்குக் கொடுத்து, அதிலே யாருக்குச் சலுகை போய்ச்சேர வேண்டுமென்றால், அதிலேயும் பொருளாதாரத்தின் அடிப்படை யில், யார் தாழ்ந்தவர்களாக, யார் பிற்படுத்தப்பட்டவர்களாக இருக்கின்றார்களோ அவர்களுக்கு அந்தச் சலுகைகள் போய்ச் சேரவேண்டுமென்ற நோக்கத்தோடு, திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். அதற்கு முதலமைச்சர் அவர்கள் விரைவில் ஆணை யிடவேண்டுமென்று இந்த நல்ல நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல் இன்னொன்றையும் நான் இங்கே விளக்கியாக வேண்டும். பிற்பட்டோர் நலக் கமிஷன், 'பேக்வர்டு கிளாஸ் கமிஷன்' அமைக்கப்படும்போது எந்த பெரிய ஜாதியைச்சேர்ந்த வர்களையும் பிற்பட்டோர் நலக் கமிஷனிலே அதற்குத் தலைவ ராக நியமிக்கக் கூடாது. குறிப்பிட்ட முறையிலே, தனிப்பட்ட முறையிலே குறிப்பிட்டு, குற்றம் சாட்டுவதாக நீங்கள் எண்ணி விடக் கூடாது. இந்தப் பெரிய ஜாதியைச் சேர்ந்தவர்கள் இதிலே நலக் கமிஷனுக்குத் தலைவராக நியமிக்கப்படுவாரே யானால், அங்கே வந்து அமர்ந்தவுடனே அவர்களுக்கு வேண்டிய வர்கள், அவர்கள் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், நண்பர்கள் அல்லது உறவினர்கள் சொல்கிற பேச்சைக் கேட்கிற துர்ப்பாக்கிய மான நிலைக்கு வந்து விடுகிறார்கள். காரணம் மனித ஜாதிக் கெல்லாம் இருக்கின்ற அந்த உள்ளம் காரணமாக, அப்படிப்பட்ட நிலைக்கு வந்து விடுகிற காரணத்தால், நீங்கள் வகுக்கிற கொள்கையிலே கூட அவர்கள் மாறுபடக் கூடிய சூழ்நிலை





ஏற்படுகிறது. பிற்பட்டோர் நலக் குழு பிற்பட்டோர் நல வளர்ச்சிக்கான திட்டங்களை, கொள்கைகளை வகுக்கவேண்டு மென்று நினைக்கிறபோது பிற்பட்டோர்களிலே பெரிய ஜாதி யினரை நியமிக்கக் கூடாது, மிகச் சிறுபான்மையினராக இருக் கின்றவர்களைக் கொண்டுவந்து போட்டால் யாருக்கும் எந்த விதமான பாகுபாடின்றி அவர்கள் இலட்சியத்தை நிறைவேற்ற முடியும் என்பதை இந்த நேரத்தில் நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று மாணவர்களுக்கென்று உதவுகின்ற வகையில் இன்றைக்குத் தமிழகம் முழுவதும் ஏறத்தாழ 558-க்கு மேற்பட்ட இல்லங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. அது செவ்வனே செயல் பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனாலும்கூட அங்கே வறட்சிக் காலங்களிலே எல்லாம் நகராட்சிப் பகுதிகளிலே, ஊராட்சிப் பகுதிகளிலே, பேரூராட்சிப் பகுதிகளிலே இருக்கின்ற அந்த இல்லங்களில் எல்லாம் குடிநீர் பற்றாக்குறை இருக்கிறது. அதுவும் மார்ச், ஏப்ரல் மாதங்களில் மிகப் பெரிய பற்றாக்குறை இருந்து வருகிறது. அந்த இல்லங்களிலே இருக்கின்றவர்கள் குடிதண்ணீருக்காக அலைய வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருக்கிறார்கள். ஒன்று, இரண்டு மைல் தூரத்திற்குச் சென்று அந்த மாணவர்களே கொண்டு வந்து சேர்க்கிற நிலை இருக் கிறது. ஆகவே ஒவ்வொரு இல்லத்திலும் ஆழ் துளைக் குழாய்ப் பணிகளை நமது பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் ஒவ்வொரு ஹாஸ்டலுக்கும், ஒவ்வொரு விடுதிக்கும் குடிதண்ணீர் கிடைக்கின்ற விதத்திலே மாணவர் களுக்குக் குடிதண்ணீர் கொடுப்பார்கள் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போன்று இந்த மானியக் கோரிக்கையில் 15 விடுதி களைத் திறப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. 15 விடுதிகளைத் திறக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அரசுக்குப் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அதேநேரத்தில் தமிழகத்தைப் பொறுத்தவரையில், இவ்வளவு பெரிய மாநிலத் திற்கு 15 விடுதிகள் போதுமானதாக இருக்காது. இன்றைக்கு ஏராளமான மாணவர்கள் தமிழக முதல்வர் அவர்களுடைய புதிய

திட்டங்களின் காரணமாக—சத்துணவுத் திட்டம், இலவசச் சீருடைத்திட்டம், இலவசப் பாடப் புத்தகம் வழங்கும் திட்டம்— ஏராளமான அளவில் பள்ளிக்கு வந்து படிக்கவேண்டுமென்ற ஆர்வத்துடன் இருக்கிறார்கள். அப்படிப் படிக்கின்ற காலங்களில் அவர்கள் பெரிய ஊர்களுக்கு வந்து ஹாஸ்டலில் தங்கித்தான் மேல்நிலைக் கல்வி கற்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவிடவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு இந்த 15 விடுதிகளை 20 ஆக உயர்த்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 15 விடுதிகள் என்பது மிகக் குறைவானது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அனுமதி பெற்று, அதை அதிகமான அளவிலே உயர்த்தவேண்டுமென்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களை இந்த நேரத்தில் நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்கள் பொறுத்தவரை, இதிலே அதிகமாக எனக்கு நேரடியாக தொடர்பு இல்லாவிட்டாலும் ஒட்டுமொத்தமாக பொதுவானவற்றை பேசியாகவேண்டும் என்ற நிலையில் சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். சென்னையிலே இருக்கக்கூடிய மீன் பிடிக்கின்ற துறைமுகம் ஃபிஷ்ஷிங் ஹார்பர் அதனுடைய போர்ட் நம்முடைய துறைமுகத்தோடு இணைக்கப்பட்டு அது மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டின் கீழே இருக்கிறது. அதனால் தமிழக அரசுக்கு, தமிழ்நாட்டு மக்களுக்கு எந்தவிதத்திலும் பயன் அளிக்காத நிலை இருக்கிறது. ஆகவே அதைப் பிரித்து தமிழ்நாட்டினுடைய மீனளத் துறைக்கு ஒப்படைக்க வேண்டும். அதன் மூலமாக இன்றைக்கு பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை போடுவதற்கு, இன்னும் பல மீனவர்களுக்குப் படகு வாங்கித் தருவதற்கு அதன்மூலம் இங்கே வளர்ச்சியை உருவாக்குவதற்கு பயன் அளிக்கின்ற விதத்திலே இருக்கும். ஏற்கனவே தமிழகத்திற்கு மீனளத் துறை மூலம் வளம் சேர்க்கின்ற விதத்தில், மீனவர்களுக்கு உதவுகின்ற விதத்தில், கச்சத்தீவு இருந்தது. அதன் மூலம் நம்முடைய மீனவர்கள் எல்லாம் அங்கே போய் மீன் பிடித்துக்கொண்டு வந்தார்கள். தென் மாவட்டத்தைச் சேர்ந்த மதுரை, இராமநாதபுரம், பக்கத்திலே இருக்கின்ற கடலோரப் பகுதி கிராமத்தில் இருக்கின்ற மீனவர்கள் எல்லாம் மிகப்பெரிய அளவிலே அதை வைத்து நம்பி வாழ்ந்துகொண்டிருந்த காலம்





அந்த கச்சத்தீவு துரதிர்ஷ்டவசமாக இலங்கை அரசிற்கு ஒப்படைக்கப்பட்டதற்கு பின்னால் ஏற்பட்ட நிலையின் காரணமாக இன்றைக்கு அந்தப் பகுதியிலே இருக்கின்ற மீனவர்கள் எல்லாம் மிகப்பெரிய பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கிறார்கள். ஏற்கனவே இருக்கின்ற கச்சத்தீவை நாம் இழந்திருக்கிறோம். அதை இன்னொரு நாட்டிற்கு கொடுத்திருக்கிறோம். இங்கே ஹார்பரில் இருக்கக் கூடிய, மீனளத் துறைக்குச் சேரவேண்டிய மீன் பிடிக்கும் துறைமுகத்தை மத்திய அரசு எடுத்து வைத்துக் கொண்டு, அது நமக்கு பயன் அளிக்காத விதத்திலே செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே நான் மைய அரசை, தமிழர்களை வாழவிடுங்கள், தமிழர்களை வாழ வைப்பதற்கான திட்டங்களைத் தீட்ட விடுங்கள் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதைச் சொல்வதால் யாருக்கும் கோபம் வரவேண்டிய அவசியம் கிடையாது. இது இருக்கக்கூடிய அப்பட்டமான உண்மை. இந்த உண்மையைச் சொல்கின்ற நேரத்தில் சில பேர்களுக்கு சுடத்தான் செய்யும். ஆனால் இதைச் சொல்வதிலே நிதர்சனமான உண்மை இருக்கிறது. கச்சத் தீவை இழந்த காரணத்தினால் இன்றைக்கு அந்தப் பகுதி மீனவர்கள் எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று மீனவர் சமுதாயத்தில் இருக்கின்ற, அவர்களுக்காக பாடுபட்டுக் கொண்டிருக்கிற மீனவ பெருமக்களுக்கு நன்றாகத் தெரியும். அதனால் தான் சென்னையிலே இருக்கின்ற இந்த நிலையை நான் சொல்கின்றேன். மத்திய அரசு இதற்குச் செவி சாய்க்க வேண்டும். உடனடியாக அதைத் திரும்பத் தருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

நம்முடைய மாநில அரசு இந்தக் கொள்கையின் மூலமாக இறால் பண்ணைகளை, உவர் நீர்ப் பரப்புகளில் அமைப்பதற்கான, தனியார்களை ஊக்குவிப்பதற்கான பல்வேறு திட்டங்களைச் சொல்லியிருக்கிறார்கள். இதை நல்ல முறையிலே செயல்படுத்துவதற்கான அதிகமான ஊக்கத்தை மாநில அரசு தரவேண்டும். அதைப்போலவே மீன் பிடிக்கக் கூடிய மீனவர்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதிக்கு 20 கடலோர கிராமங்களுக்கு ஒரு சின்ன துறைமுகம் போல அதில் அவர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்து, அந்த இடத்திலே அவர்களுக்கு டீப் ஃபிரீஸர் எல்லாம் வைத்துக் கொடுத்து,

அவர்களுக்கு உதவுகின்ற விதத்திலே திட்டங்களைத் தீட்டி நாட்டு மக்களுக்கு பழையாறு மீன்பிடி துறைமுகத்தை எப்படி உருவாக்கித் தருவது இந்த அரசு பாடுபட்டுக்கொண்டிருக்கின்றதோ அதைப்போலவே 20 கிராமங்களுக்கு ஒரு துறைமுகம் என்ற வகையிலே உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே இன்றைக்கு விவசாய கிணறுகளிலெல்லாம்— சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், தர்மபுரி மாவட்டங்களிலெல்லாம் ஆழ் கிணறுகளைப் பயன்படுத்தி விவசாயம் செய்கிறோம். அங்கேயிருக்கின்ற கிணறுகளிலெல்லாம்—மீனை வளர்ப்பதற்கு, மீன் குஞ்சுகளை இலவசமாகத்தர வேண்டும். மீன் குஞ்சுகளை ஒரு கிணற்றிற்கு 5 மீன் குஞ்சுகள், 10 மீன் குஞ்சுகள் என்ற வகையிலே மீன் குஞ்சுகளை இலவசமாக தருவதற்கான திட்டத்தை அரசு தீட்டி வழங்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

மீனவர்கள் மீன் பிடிக்கும்போது இறந்தால் அவர்களுக்கு உதவித் தொகை 10,000 ரூபாய் என்றும், ஊனம் உற்றால் அதற்கேற்ப அவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும் என்றும் நமது முதலமைச்சர், புரட்சித் தலைவர் அவர்கள் மீனவர் நண்பனாக இருந்து இந்தத் திட்டத்தைக் கடந்த சட்டமன்றத்திலே கொண்டு வந்தார்கள். அதற்கு நான் பாராட்டு தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் கடலிலே போய் மீன் பிடிக்கின்ற அந்த மீனவர்கள் தங்களுடைய கட்டுமரத்தைப் பயன்படுத்தி மீன் பிடிக்கின்ற மீனவர்கள், சிறிய படகைப் பயன்படுத்தி மீன் பிடிக்கின்ற மீனவர்கள், சில பேர்கள் வலையை இழந்து விடுகிறார்கள், சில பேர்கள் கட்டுமரத்தையே இழந்து விடுகின்ற சூழ்நிலை, சிறிய படகு ஆழ் கடலிலே கவிழ்கின்ற நிலைமை ஏற்பட்டு அவர்கள் மட்டும் உயிர் பெற்று திரும்புகிறார்கள். அவர்கள் மீண்டும் தங்கள் வாழ்க்கையை வளப்படுத்திக்கொள்வதற்கு எந்தவிதமான உதவியையும் நாம் செய்யாமல் இருக்கிறோம். அவர்களுக்கு உதவுகின்ற வகையில் ஏதாவது அரசு திட்டம் தீட்டி, அந்த கட்டுமரத்தை இழந்தால், அந்த இழப்பிற்கு ஏற்ப நஷ்ட ஈடு வழங்குகின்ற விதத்தில் உதவித்





தொகை வழங்க வேண்டும். அதைப்போலவே, மீன் வலைகளை இழந்தால், அந்த இழப்பிற்கு ஏற்ப, அதை ஈடு செய்கின்ற விதத்திலே உதவித்தொகை வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், சேலம் மாவட்டத்தில் ராசிபுரத்திலே தோ. ஜேடர்பாளையத்திலே ஒரு பிற்பட்டோர் நல வாழ்வு இல்லத்தை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திறக்கப்பட இருக்கிற மாணவர் இல்லங்களை 15-லிருந்து அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்தில் அதை அதிகப்படுத்தியாவது எனக்கு ஒன்று தர வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய மாவட்டமாக இருக்கிற அந்த மாவட்டத்தில், அவருடைய தாலுகாவாக இருக்கிற திருவண்ணாமலையிலே, தண்டராம்பட்டு பகுதியில் திரு. வேலு அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, சு. வாழபட்டி என்ற ஊரிலே ஒரு பிற்பட்டோர் நல விடுதியைக் கட்டித் தர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மீன் வளத் துறையிலே மீன் ஏலம் விடும் முறையில் பல்வேறு முறைகேடுகள் நடைபெறுகின்றன. நான் ஒட்டுமொத்தமாகச் சொல்லவில்லை. ஒரு சில பகுதிகளில் அந்த முறைகேடுகள் நடைபெறுகின்றன. அதைத் தவிர்க்கின்ற வகையில் சரியான கண்காணிப்புகளை நடத்த வேண்டும் என்று அதிகாரிகளை இன்றைக்கு எச்சரிக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக, விழுப்புரத்திலே கூட, வளவனூரிலே 15 ஆயிரம் ரூபாய்க்கு ஏலம் போன ஒரு ஏரியிலே 500 ரூபாய்க்குத்தான் ஏலம் போய் இருக்கிறது என்றால் ஏலம் கேட்டவர்களிடம் ஏதாவது பிரச்சினையா அல்லது அந்த ஏலம் விட்டவர்கள் என்ன செய்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டிய நிலையிலே நாம் இருக்கிறோம்.

இதையெல்லாம் போக்குகின்ற விதத்தில் ஏரிகள், குளங்கள் இருக்கிற பகுதிகளிலே எல்லாம், அந்தந்த பஞ்சாயத்துகளிடம் அவைகளை ஒப்படைத்து, எப்படி புளியமரங்களை அவர்கள் ஏலம் விடுகிறார்களோ, அப்படி இவைகளையும் ஏலம் விடுவதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாகவே, பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இனிமேலும் கொண்டுபோய் அவைகளையும் சேர்த்துக்கொண்டிருப்பது என்பது நல்லதல்ல. நியாயம் அல்ல. இன்னும் சொல்லப்போனால், ஏற்கனவே பிற்படுத்தப்பட்டோர் என்று பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் காலத்திலேயே யார் எல்லாம் சமுதாயத்திலே பிற்படுத்தப்பட்டவர்கள் என்பதை எல்லாம் உணர்ந்து சேர்த்திருக்கிறார்கள். இனியும் வரிசைப்படுத்தி, இருப்பவர்களை எல்லாம் கொண்டுபோய் அதிலே சேர்த்து, உண்மையிலேயே யாருக்கு சலுகை போய்ச் சேரவேண்டுமோ, அவர்களுக்கு சலுகை போய்ச் சேராத நிலை ஏற்படுகிறது. ஒட்டுமொத்தமாக ஒன்று செய்யுங்கள். எல்லோருக்கும் ஒன்றாக, அனைத்து ஜாதிகளுக்கும் சமமான முறை என்ற வகையிலே செய்து, புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்த அந்த அடிப்படையில் பிற்படுத்தப்பட்டோர் நலச் சலுகைகளை வழங்கவேண்டும். அதுதான் இந்த நாட்டிற்கும் நல்லது. எதிர்கால சமுதாயத்திற்கும் நல்லது. அப்போதுதான் இந்தியத் துணைக் கண்டத்திலே தமிழன் தமிழனாக வாழ்வதற்கு, அவனுடைய திறமைகளை இந்த நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்துவதற்கு உதவியாக அமையும் என்று கூறி இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று விடை பெறுகிறேன்.

**திரு. எஸ். ரெத்தினராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீன் வளத்துறை, பிற்பட்டோர் நலத்துறை ஆகிய மானியங்கள் மீது என்னுடைய சில கருத்துக்களை, குறுகிய நேரத்தில் சொல்ல விழைகிறேன். மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கிறபோது எவ்வளவு தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள் என்பதையெல்லாம் இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள்.





மாண்புமிகு உறுப்பினர் இராமலிங்கம் அவர்கள் பேசுகிறபோது, கச்சத்தீவை நாம் இழந்துவிட்ட காரணத்தால் நமக்கு எவ்வளவு இழப்பு ஏற்பட்டிருக்கிறது, நம்முடைய மீனவர்கள் எவ்வளவு இழப்பிற்கு ஆளாகிறார்கள் என்பதைத் தெளிவாக சுட்டிக்காட்டிப் பேசினார்கள். நம்முடைய கடலோரப் பகுதிகளில் இருக்கிற கச்சத் தீவு இலங்கை அரசுக்கு ஒப்படைக்கப்பட்டு விட்ட காரணத்தினால் அந்தப் பகுதியிலே மீன் பிடிக்கிறபோது, அங்கே சென்று ஓய்வு எடுக்கிற மீனவர்கள், அந்தத் தீவை பயன்படுத்துகிற மீனவர்கள் இன்றைக்கு பாதிப்புக்குள்ளாகி, அங்கே போகிறபோது—சில நேரங்களில் காற்றால் பாதிக்கப்பட்டு அந்தப் பகுதிகளில் போகிறபோது, அவர்கள் இலங்கை மீனவர்களால் அல்லது இலங்கையிலுள்ள சிங்களர்களால் அங்கே கொல்லப்படுகிறார்கள் என்ற செய்தி எல்லாம் பத்திரிகையில் வருகிறது. இது மிகவும் வேதனைக்குரியதாக இருப்பதால், அந்தக் கச்சத் தீவை மீண்டும் நம்முடைய அரசிற்குப் பெறுவதற்கு நாம் தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் என்று இந்த நல்ல நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கடலோரப் பகுதிகளில் இருக்கிற மீனவர்கள் பெரும்பாலும் பொருளாதாரத்தில் நலிவுற்றவர்களாக இருக்கிறார்கள். பொருளாதாரத்தில் நலிவுற்றவர்களாக அவர்கள் இருக்கிற காரணத்தால், அவர்கள் கல்வியறிவு கூட அவ்வளவு இல்லாத நிலையில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள் என்பதை அனைத்து உறுப்பினர்களும் அறிவோம். ஆனாலும், பிற்படுத்தப்பட்ட மக்களாக இருக்கிற, பொருளாதார நிலையில் பின்தங்கிய மக்களாக இருக்கிற அந்த மீனவப் பெருங்குடி மக்கள் குடிசைகளில் வாழ்கிற காரணத்தால், இந்த வறட்சி நேரத்தில், இந்த வறண்ட நேரத்தில், கோடைக் காலத்தில் தீ விபத்துக்களுக்கு அவர்களுடைய குடிசைகள் ஆளாகி குடிசைகள் எல்லாம் பாதிக்கப்படுகின்றன.

[திரு. எஸ். ரெத்தினராஜ்] [1987 ஏப்ரல் 10

எனவே அவர்களுக்கு தீப் பிடிக்காத வீடுகள் கட்டிக் கொடுக்கிற திட்டத்தை விரைவுபடுத்த வேண்டும் என்று பல்வேறு முறைகள் பல்வேறு உறுப்பினர்களும் இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். மீனவ மக்கள் வாழுகிற அனைத்துப் பகுதிகளிலும் அனைத்து வீடுகளையும், குடிசைகளையும் தீப் பிடிக்காத கான்க்ரீட் வீடுகளாக மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று இந்த நல்ல நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அண்மையில்கூட இரண்டு மூன்று மீனவர்களின் கிராமங்களில் தீ விபத்து ஏற்பட்டது. அதற்கு சாதாரணமாகத் தாசில்தார் கொடுக்கிற நிவாரண உதவிகள் மட்டுமே கொடுக்கப்பட்டது. அந்த உதவியை வைத்துக்கொண்டு அவர்களால் குடிசைகளைக் கூட போட்டுக்கொள்ள முடியவில்லை. அவர்கள் எல்லாப் பொருள்களையும் தங்கள் வலைகளையும் கட்டுமரங்களையும் இதர சொத்துக்களையும் இழந்துவிட்ட நிலையில் தொழில் செய்யக் கூட இயலாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே இவ்வாறு வலைகள் போன்ற பொருள்கள் சேதம் ஏற்பட்டால் அதற்குத் தனியான காம்பன்சேஷன்—நிவாரணத் தொகை கொடுக்க அரசு வழிவகை செய்ய வேண்டுமென்ற கருத்தை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன்.

மேலும் குமரி மாவட்டத்தில் இருக்கிற தெண்பகாமன்புதூர் புக்கத்துறை, மணக்குடி போன்ற பகுதிகளில் இருக்கிற மீனவர்கள் தற்போது நல்ல குடிநீர்கூட கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் பல மைல்கள் சென்று குடிநீர் கொண்டுவரும் நிலைமை இருக்கிறது. கடலோரப் பகுதியில் எங்கே ஆழ்துளாய் கிணறு போட்டாலும் கடல் தண்ணீர் உள்ளே வந்துவிடுகிற



1987 ஏப்ரல் 10] [திரு. எஸ். ரெத்தினராஜ்]

நிலைமை இருக்கிறது. நல்ல தண்ணீர் மேல்மட்டத்தில் இருந்தாலும் ஆழ் குழாய் கிணறுகளைப் போடுகிறபோது கடல் தண்ணீர் உள்ளே வந்து மக்கள் குடிக்கத் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிற நிலைமை இருக்கிறது. எனவே மீனவர்களின் பகுதிகளுக்கு குடிதண்ணீர் வழங்குவதில் முன்னுரிமை வழங்குவதோடு அவர்களுக்கெல்லாம் வேறு பகுதிகளிலிருந்து குழாய் மூலமாகத் தண்ணீர் கொண்டு வந்து தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே கடற்கரைச் சாலைகள் என்பவை மீனவர்களுக்கு மிகவும் பயனுள்ளவைகளாக இருக்கின்றன. ஆனால் கடற்கரைச் சாலைகள்—பெரிய சாலைகளாக, நல்ல முறையில் சீரமைக்கப்பட்ட சாலைகளாக இருந்தால்தான் அவர்கள் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு மீன்களை எடுத்துச் செல்ல முடியும். அதைப்போலவே ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு ஐஸ் போன்றவற்றை எடுத்துச் செல்ல இலகுவாக இருக்கும். மணக்குடி மற்ற பகுதிகளிலிருந்து காயலால் பிரிக்கப்படுகிற காரணத்தால் அங்கே உள்ள பாலம் அழிக்கப்பட்ட காரணத்தால் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு வாகனங்களை எடுத்துச் செல்ல முடியாமல் பல ஆண்டுகளாக மீனவர்கள் தொல்லைக்கு ஆளாகி வருகிறார்கள். அதைப்போலவே சைமன் காலனி பாலம் அமைக்கப்படாத காரணத்தால் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குச் செல்ல முடியாத நிலை இருக்கிறது.

மேலும் இனக் கலவரங்கள் அங்கே அடிக்கடி நடக்கின்றன என்பதையும் மண்டைக்காடு கலவரத்தையொட்டி அந்தப் பகுதி இன்னும் கலவரப் பகுதியாகவே இருந்து கொண்டிருக்கிறது என்பதையும் அரசு உணர்ந்திருக்கிறது. கலவரப் பகுதிகளில் இருந்து மீனவர்கள் பல்வேறு பகுதிகளுக்குப் போக முடியாத நிலைமை தொடர்ந்து பல மாதங்களாக—ஏன் ஆண்டுக்கணக்கில்—இருந்து வருகிறது. இதை உணர்ந்து அந்தப் பகுதிகளில் இருக்கிற கூட்டுறவுச் சங்கங்களுக்கு—உணவு தானிய பண்டங்களை தேவையான அளவுக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கலவரங்களைத் தடுத்து நிறுத்துகிற வகையில் கடற்கரையோரச் சாலைகளை நீண்ட நெடிய சாலைகளாக, நல்ல சாலைகளாக ஆக்கி செப்பனிட்டுத் தர வேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும் மணக்குடி, மணவாளக்குறிச்சி, ஜ்சமன் காலனி பாலங்களையெல்லாம் வெகு விரைவில் முடிக்க வேண்டும் என்றும் சர்க்காரை வலியுறுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து பல்வேறு மீனவர் கூட்டுறவு சங்கங்களில் பெறப்பட்ட கடன்களைக் கடந்த 10, 15 ஆண்டுகளாகத் திருப்பிக் கட்டவில்லை என்ற காரணம் காட்டி மீனவர் சங்கங்கள் பல இடங்களில் செயலற்ற சங்கங்களாகவே இருக்கின்றன. 10 அல்லது 15 ஆண்டுகளுக்கு முன்னால் வாங்கப்பட்ட கடன் எல்லாம்—முதல் ரூ. 100 அல்லது 200 என்றுதான் இருக்கும்—அசல் 100 என்றாலும் வட்டித் தொகை மட்டும் அதிகமாக வளர்ந்துவிட்ட நிலை இருக்கிறது—இதுவரை வாங்கியவர்களில் பலரால் கட்ட முடியாமல் இருக்கின்றன. பல இடங்களில் கடன் வாங்கியவர்கள் இறந்துவிட்டார்கள். பலர் நொந்துபோய் நலிந்துபோய் தொழில் செய்ய முடியாத வயதான நிலையில் வாழ்கிறார்கள். எனவே 5 ஆண்டுகளுக்கு முன்னால் பெறப்பட்ட கடன்கள் என்று நிர்ணயித்து அப்போது வாங்கப்பட்ட கடன்களையெல்லாம் அரசு ரத்து செய்ய வேண்டும் அல்லது 10 ஆண்டுகளுக்கு முன்னால்—அல்லது 15 ஆண்டுகளுக்கு முன்னால் கடன் வாங்கியவர்கள் இன்றையதினம் பொருளாதாரத்தில் நலிவுற்ற நிலையில் கூலி வேலைகூட செய்ய முடியாத அளவுக்கு வயிற்றை நிரப்ப முடியாத நிலையில் கஷ்டப்படுகிற நிலையை உணர்ந்து பார்த்து அவர்கள் வாங்கிய கடன்களையெல்லாம் ரத்து செய்துவிட்டு அந்தக் கூட்டுறவு சங்கங்களுக்கு மீண்டும் மறு வாழ்வு தர வேண்டும். அந்தச் சங்கங்கள் மீண்டும் நல்ல முறையில் நடக்க ஏற்பாடு செய்தால் மட்டுமே மீனவர்கள் பயன் அடைய முடியும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து கடலில் உயிர் நீத்தால் மீனவர்களுக்கு ரூ. 10,000 தருகிறோம். ஆனால் எத்தனைதான் உதவிகளைச் செய்தாலும் சில நேரங்களில் அந்த உதவிகள் மீனவர்களுக்குக் குறிப்பிட்ட





காலத்தில் போய்ச் சேருவதில்லை. மீனவர்கள் கடலில் போகிற போது அவர்கள் மழையால், புயலால் கடலில் உள்ள சூழலால் நீரோட்டத்தால் இன்னும் எத்தனையோ காரணங்களால் அங்கே உயிரை விடுகிறார்கள்.

(பிற்பகல் 12-50)

அவர்கள் உயிரை விடுகிறபோது அவர்களுடைய உடல் கரைக்கு வந்து சேர்வதில்லை. பல்வேறு பகுதிகளில் ஹெலிகாப்டர் மூலமாகத் தேடுகிறார்கள். இங்கே இரண்டு தினங்களுக்கு முன்பு கூட ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் கடலோரத்தில் தவறிவிட்ட பத்து பேரை தேட ஹெலிகாப்டரை பயன்படுத்தவில்லை என்று குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட நேரங்களில் ஹெலிகாப்டரை பயன்படுத்த வேண்டும். அவர்களுடைய உயிருக்கு ஆபத்து என்ற தகவல் வந்தவுடனே இனிமேலாவது ஹெலிகாப்டரை பயன்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் அரசையும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அவர்களுடைய உடல் கிடைத்தால்தான் நிவாரணத் தொகையான பத்தாயிரம் ரூபாய் கிடைக்கும் என்ற நிலை இருக்கிறது. டாக்டர் சர்டிபிகேட், போஸ்ட்மார்ட்டம் சர்டிபிகேட் வந்த பிறகுதான் நிவாரணத் தொகையைக் கொடுக்க இன்றைக்கு வழிவகை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை தொடரக் கூடாது. அவர்கள் தவறிவிட்டார்கள் என்று அதிகாரிகள் உணர்ந்தால், அது நிச்சயமாக தெளிவுபட்டால் உடனடியாக கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மீனவர்கள் சார்பிலும், பிற்பட்ட மக்கள் சார்பிலும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பிற்பட்ட நலத்துறையைப் பொறுத்தவரையில், நலிந்த பிரிவினர், பிற்பட்ட நிலையில் இருப்பவர்கள், பொருளாதார ரீதியில், கல்வி ரீதியில் மிகவும் பிற்பட்ட நிலையிலேயே இருக்கிறார்கள். இதிலே ஒரு சிலர் பொருளாதார ரீதியில் மேம்பட்டுவிட்டாலும் மற்றவர்கள் பிற்பட்ட நிலையிலேதான் இருக்கி

றார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் பேசுகின்றபோது பொருளாதார அடிப்படையில் மட்டுமே, பொருளாதார நிலையில் பிற்பட்ட நிலையில் இருப்பவர்களுக்கு மட்டுமே சலுகைகள் நீட்டிக்கப்பட வேண்டும் என்றும் அப்படியானால்தான் ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை அமைக்க முடியும் என்றும் சொன்னார்கள். சாதி வகையில், பிரிவுகள் இருக்கின்ற வகையில் பொருளாதார நிலையில், சமூக ரீதியில் தாழ்ந்த நிலையில், பிற்பட்ட நிலையில் இருப்பவர்களுக்கு ஒரு பாதுகாப்பு கொடுத்தால் மட்டும்தான் தாழ்ந்த நிலையிலும் பிற்பட்ட நிலையிலும் உள்ள சமூக நிலையை சற்று உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர முடியும் என்பதை சுட்டிக் காட்டுவது என்னுடைய கடமை.

மண்டல் கமிஷன் ரிப்போர்ட்டு எல்லாம் வந்து, அந்த ரிப்போர்ட்டை பற்றி கடந்த நான்கைந்து ஆண்டுகளாக சட்ட மன்றத்திலே பிற்பட்ட நலத் துறை பற்றி பேசுகின்றபோது பல்வேறு உறுப்பினர்கள் மண்டலக் கமிஷன் ரிப்போர்ட்டை அடிப்படையாக வைத்து சலுகைகள் தரப்பட வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள். வகுப்புவாத பிரதிநிதித்துவக் கொள்கை என்பது பெரியார் காலத்திலேயிருந்து சொல்லப்பட்ட ஒன்று. மண்டல் கமிஷனைப் பொறுத்தவரையில் பிற்பட்டோர் எந்தெந்த பகுதியில் எப்படி எப்படிப்பட்ட நிலைமையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் தெளிவாகப் புரிந்து அவர்கள் விசாரித்து அந்த ரிப்போர்ட்டில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

(மணி அடிக்கப்பட்டது).

சார் பிளீஸ்: பல்வேறு பிரிவினர், கள்ளர் என்ற பிரிவினர் இன்னும் எத்தனையோ பிரிவினர் மிகவும் பின்தங்கிய நிலைமையில் இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். டி.என்.டி. பிரிவினர் முகவை மாவட்டத்தில், முதுகுளத்தூர், கடலாடி ஆகிய பகுதிகளில் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு தொழில் தொடங்க தனியாக சலுகைகளை நீட்டித்துக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு ஹாஸ்டல் வசதி





களை அதிகம் செய்து கொடுக்க வேண்டும். அவர்கள் கைத் தொழில் செய்வதற்கு, பிரம்பு நாற்காலி செய்தல் போன்ற தொழில் செய்வதற்காக சலுகை கொடுக்கப்படுகிறது என்று இந்த புத்தகத்திலே தரப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் தையல் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன, பிரம்பு மற்றும் பல பிரிவுகளில் பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்றும் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. இவைகள் மட்டும் அவர்களை பொருளாதார ரீதியாக உயர்த்துவதற்கு போதுமானதாக இல்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். அந்த மாணவர்கள் கல்வி கற்க, இங்கே ஐ.ஏ.எஸ். தேர்வுக்காக பயிற்சி கொடுப்பதற்காக பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு இருப்பதைப்போல், என்ஜினியரிங், மெடிக்கல் ஆகிய கல்லூரிகளில் சிறப்பான மதிப்பெண்கள் பெறுவதற்காக பயிற்சி வகுப்புகளை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஐ.ஏ.எஸ். தேர்வில் அவர்கள் வெற்றி பெற வேண்டுமானால் மீடியம் ஆஃப் இன்ஸ்ட்ரக்ஷன் ஆங்கிலத்திலே இருக்கின்ற நல்ல தரமான பள்ளிகளில் குறிப்பாக பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களையும் ஷெட்யூல்ட் காஸ்ட் மாணவர்களையும் குறிப்பிட்ட அளவிலே சேர்க்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்க வேண்டும். அத்தகைய மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு, பாடசாலைகளில் ஆங்கில மீடியம் ஆஃப் இன்ஸ்டிரக்ஷன் ஒரே ஒரு பிரிவுக்குத்தான் என்பதை மாற்றி, இன்னொரு பிரிவையும் ஆரம்பிக்க வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக குமரி மாவட்டத்தில் கார்மல் ஹையர் செகண்டரி பள்ளியிலும், எஸ்.எல்.பி. ஹையர் செகண்டரி பள்ளியிலும் கூடுதல் ஆங்கில மீடியம் பிரிவுகளை ஏற்படுத்த வேண்டும். பிற்படுத்தப்பட்ட மாணவர்களை இங்கிலீஷ் மீடியம் வகுப்புகளில் சேர்த்துக்கொண்டால், அவர்கள் ஐ.ஏ.எஸ். தேர்வு எழுத பயிற்சி பெறுவதற்கு வசதியாக இருக்கும் என்பதால், ஆங்கில மீடியம் பிரிவுகளை அதிகம் ஏற்படுத்த முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் கவரா கம்யூனிட்டியினருக்கு, பிரிவினருக்கு அரசு சர்ட்டிபிகேட் வழங்குவதில்லை என்று சொன்னார்கள். அதை நான் வலியு

[திரு. எஸ். ரெத்தினராஜ்] [1987 ஏப்ரல் 10

றுத்துகிறேன். கவரா பிரிவு பி.சி. பிரிவாக இருக்கிறது. இப்போது கவரா பிரிவைச் சேர்ந்தவர் என்று யாருக்கும் சர்ட்டிபிகேட் கொடுக்க ரெவின்யூ அதிகாரிகள் முன்வருவதில்லை. காரணம், கவரா கம்யூனிட்டி இப்போது இல்லை என்று அவர்கள் சில நேரங்களில் வாதாடுகிறார்கள். ஆனால் குமரி மாவட்டத்தில் நாவிதர் என்றும், பண்டிதர் என்றும், கேரள முதலி என்றும், காவதி என்றும் பல்வேறு பிரிவினர் சவரத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள் பிற்பட்டோர் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறார்கள். அதில் ஒரு பிரிவினர் கவரா என்ற பிரிவினர். அவர்கள் முன்பு அதிகாரிகளிடம் சர்ட்டிபிகேட் வாங்கி பள்ளிகளில் பயின்று வேலை வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். வேலை வாய்ப்பு பெற்ற அவர்களுடைய குழந்தைகளுக்கு இப்போது சர்ட்டிபிகேட் வழங்க அதிகாரிகள் தயாராக இல்லை. அண்ணனுக்கு வழங்கியிருக்கிறார்கள். தம்பிக்கு வழங்கத் தயாராக இல்லை. இதை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

இதைப்போல வண்ணார் என்ற சாதியும், நாவிதர் என்ற சாதியும் இன்றைக்கு மிகப் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். இன்றைக்கு சவரத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள் சவரக் கடை வைக்க 5,000 ரூபாய் வழங்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதில் 1,500 ரூபாய் இனாமாகவும், 3,500 ரூபாய் கடனாகவும் கொடுக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்களை அந்தத் தொழிலில் ஈடுபடுவதை விட தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்த்து, அவர்களுக்குச் சலுகைகளை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பட்டோர் பட்டியலில் இடம் பெற்றிருக்கிற பல்வேறு பிரிவினர் இன்றைக்கு நெசவுத் தொழிலிலும், விவசாயத் தொழிலும் இன்னும் பல தொழில்களிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற சாலியர் என்ற இனத்தைச் சேர்ந்தவர்கள் இன்றைக்கு குமரி மாவட்டத்தில் இருக்கிறார்கள். அவர்களில் நிரம்பப் படித்தவர்கள் என்று சொல்வதற்கு யாருமில்லை. வேலை வாய்ப்பு அளிப்பதில் ஜாதிவாரியாக பிரதிநிதித்துவம் கொடுத்தால் மட்டும்தான் அவர்களுக்கு அந்த



1987 ஏப்ரல் 10] [திரு. எஸ். ரெத்தினராஜ்]

வாய்ப்பு கிடைக்கும். இல்லாவிட்டால், பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருக்கிற சில வாய்ப்பு பெற்றவர்கள், வளர்ந்துவிட்ட நிலையில் உள்ள சிலர் அந்த வாய்ப்புகளைப் பெற முடிகிறதே தவிர, மற்றவர்களுக்கு அந்த வாய்ப்புகள் கிடைக்கவில்லை. ஜாதிவாரியாக, இவர்களுக்கு இத்தனை சதவிகிதம் என்று ஒதுக்கினால் மட்டுமே இவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க முடியும்.

அடுத்து மோஸ்ட் பேக்வார்ட் கிளாஸ் என்று வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பில் 5 சதவிகிதம், 10 சதவிகிதம் என்று ஒதுக்கப்படுகிறதா என்றால் இல்லை. பள்ளிகளிலே சேர்க்கிறபோது மோஸ்ட் பேக்வார்ட் கிளாசைச் சேர்ந்தவர்களுக்கு சலுகைகள் இல்லை. குறைந்தபட்சம் 5 சதவிகிதமாவது அவர்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று நான் மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல சாலியர், பணிக்கர், பண்டாரம் முதலிய சமுதாயங்களிலே உள்ள நலிந்த பிரிவினர் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் பொருளாதாரத்தில் மேம்பாடு அடையவில்லை. இதர தொழில்களை அவர்கள் செய்ய முன் வந்தால் அவர்களுக்கு தாராளமான சலுகைகளை வழங்க முன் வரவேண்டும். தொழில் துறையில் ஒதுக்கீடு செய்யும்போது, பிற்பட்ட சமுதாயத்தினருக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை ஒதுக்கி, சலுகைகளை வழங்கலாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

அடுத்து பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் படிப்பதற்கு சிறப்பான வாய்ப்புகளை ஏற்படுத்துகிற வகையில் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் எத்தனை சதவிகிதம் பேர் அனைத்து பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் சேர்க்கப்படுகிறார்கள் என்பதை அரசு கண்காணிக்க வேண்டும். அந்த முறையை தவிர்ப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் அவர்களை வலியுறுத்த வேண்டும். அவர்களில் 50 சதவிகிதம் பேர்களை பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்த்திருக்கின்றார்களா என்பதைப் பார்க்க வேண்டும். அத்தனைக் கல்லூரி

களிலும், இன்னும் சொல்லப்போனால் டெக்னிக்கல் நிறுவனங்கள், பாலிடெக்னிக்குகள், தனியார் பயிற்சி நிறுவனமாக இருந்தாலும், "இன் ஆல் கவர்ன்மெண்ட் அப்ரூவ்ட் இன்ஸ்டிடியூஷன்ஸ், இட் மஸ்ட் பி ஃபாலோட்" என்பதை நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இதைச் சொல்கிறபோது, பல்வேறு பாடசாலைகளில் இன்றைக்கு ஆங்கில மீடியம் படிப்பதற்கு பேக்வேர்ட் மாணவர்கள் மூவு செய்தாலும் அவர்களுக்கு வாய்ப்பு கிடைப்பது அரிதாக இருக்கிறது. காரணம் அங்கே ஒரே ஒரு பிரிவு மட்டும் ஆங்கிலத்திலே இருக்கின்ற காரணத்தினாலேதான். மீடியம் ஆஃப் இன்ஸ்ட்ரக்ஷன் ஆங்கிலத்திலே இருந்தால் ஐ.ஏ.எஸ். தேர்வுகளிலும், மருத்துவக் கல்லூரி தேர்வுகளிலும், என்ஜினியரிங் கல்லூரி தேர்வுகளிலும் அவர்களுக்கு வெற்றி பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும். கன்னியாகுமரி மாவட்டத்திலே காரமலை பாடசாலை, எஸ்.எல்.பி. பாடசாலை ஆகியவற்றிற்கு, அங்கு சிறப்பாக மதிப்பெண்களைப் பெறுகின்ற மாணவர்கள் இருப்பதால், அந்தப் பாடசாலைகளுக்கு ஆங்கிலப் பிரிவு ஒன்று கூடுதலாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்தமைக்காக நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்களுக்காகப் பல்வேறு நல்ல திட்டங்களைத் தீட்டி சரித்திரத்திலே காணாத வகையிலே செயல்படுத்திக்காட்டிக்கொண்டிருக்கின்றார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு என்பதை இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணாவோடு நெருங்கிப்பழக்கமுள்ள மாண்புமிகு அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்களாலே இந்த மாமன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த மீனளம் பற்றிய மானியக் கோரிக்கை மற்றும் பின்தங்கிய வகுப்பினர் மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை இந்த மாமன்றத்திலே வைக்க இருக்கிறேன்.





இங்கே முதலிலே கடந்த 10 ஆண்டுகள் சரித்திரத்தை எடுத்துக்கொண்டோமானால், அது மீனவர்கள் பற்றிய துறையானாலும் சரி, இந்தத் துறையிலே சீர்படுத்துகிற திட்டமானாலும் சரி, ஒரு மிகப்பெரிய சாதனையாக செய்திருக்கின்றது. அதையெல்லாம் நாம் கண்கூடாகக் காணலாம். 10 ஆண்டுக்காலத்திலே எத்தனை சாதனைகளை இந்தத்துறை பெற்றிருக்கிறது என்பதை பார்த்தோமானால், முன்பு இருந்த பல ஆட்சிகளை விட நல்ல திட்டங்களைத் தீட்டி ஏழையெளிய மீனவர்களுக்கு ஒரு ஸ்டான்டர்ட் ஆஃப் லிவிங் மிகப்பெரிய அளவிலே கிடைக்கச் செய்து இருக்கின்றார்கள் என்று தெரியும். அந்தத் துறையிலே பல்வேறு திட்டங்களைத் தீட்டி முனைப்பாகவும், இந்த நாட்டிற்கு மட்டுமல்லாமல் இந்த உலகத்துக்கு ஒரு வழிகாட்டி என்ற விதத்திலேயும் நல்ல பல திட்டங்களை எல்லாம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இங்கே செயல்படுத்திக் காட்டிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை நாம் கண்கூடாகக் காணலாம். அந்த முறையிலே இந்த ஆண்டு இந்த மன்றத்திலே சமர்ப்பித்துள்ள கோரிக்கையிலும் சரி, கொள்கையிலும் சரி, பல்வேறு நல்ல திட்டங்களை புதிதாகப் போட்டு செயல்படுத்துவதை நாம் காண்கிறோம். அந்த மீன்துறையின் சார்பிலே, இந்தத் தீர்மானத்தை, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் வைக்கப்படுகிற இந்தத் திட்டத்தை நான் வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். மீனளத் துறையை சார்ந்தவர்கள், அந்த சமுதாயத்தைச் சார்ந்த மக்கள் சார்பாக நான் அரசை வேண்டிக்கொள்வது அவர்களை அரசே தாழ்த்தப்பட்டவர்கள் சமுதாயத்திலே சேர்க்க வேண்டும் என்பதுதான் அந்த சமுதாயத்தினர் தாழ்த்தப்பட்டவர்கள் சமுதாயத்தில் சேர்க்கப்படுவதால், அவர்களுக்கு அரசினுடைய பல்வேறு நல்ல திட்டங்கள், கல்வியிலே முன் உரிமை, வேலைவாய்ப்பிலே முன் உரிமை போன்ற திட்டங்களைச் செயல்படுத்த வாய்ப்பாக அமையும். எனவே இந்த அரசு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு மத்திய அரசோடு கலந்துகொண்டு இந்த சமுதாயத்தினரை தாழ்த்தப்பட்டோர் பட்டியலிலே சேர்க்கவேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன்] [1987 ஏப்ரல் 10

அதே போன்று இந்த சமுதாயத்திலே எங்கள் பகுதியிலே அடிக்கடி தோன்றுகிற பிரச்சினையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். அந்தத் துறையிலே இன்று சிறப்பானதொரு நிர்வாகத்தினரைக் கொண்டிருந்தபோதிலும், அடிக்கடி ஏற்படுகின்ற பிரச்சினை, நாட்டுப்படகு வைத்திருக்கும் மீனவர்களுக்கும் இயந்திரப் படகு வைத்திருக்கின்றவர்களுக்கும் அடிக்கடி ஏற்படுகிற தொழில் பிரச்சினைதான். அந்தப் பிரச்சினையை இந்தத் துறை நடைமுறையிலே பரிசீலனை செய்து, தொடர்ந்து இந்த மாதிரி மனக்குறைகள் ஏற்படாத வண்ணம் என்னென்ன வழிமுறைகள் பின்பற்றப்படவேண்டுமோ அந்த முறைகளை பின்பற்ற வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் துறையிலே ஈடுபட்டிருக்கின்ற அதிகாரிகள் எல்லாம் அந்த கட்டுப்பாட்டுக்கு இணங்கவேண்டும். உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், கடற்கரையிலிருந்து 3 கிலோ மீட்டர் தூரம் வரை இயந்திரப் படகுகள் செல்லக்கூடாது என்பதை நடைமுறைப்படுத்தவேண்டும். ஆனாலும் அதையும் மீறி ஏற்படுகின்ற சம்பவங்கள் மிகப் பெரிய மோதலாக அங்கே உருவாகிக்கொண்டிருக்கிறது. சட்டம் ஒழுங்குப் பிரச்சினை பல இடங்களிலே ஏற்படுகிறது. எனவே, இந்தத் துறையைச் சேர்ந்த பெரிய அதிகாரிகளும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இந்த நிகழ்ச்சி மேற்கொண்டு நடக்காமல் நல்ல முறையில் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எனது தொகுதியிலுள்ள புன்னக்காயல் பகுதியில் இரால் வளர்க்கும் திட்டம் பற்றி நல்ல முறையில் ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. இத்திட்டம் குறித்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்காக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அங்கேயுள்ள இரால் எல்லாம் இன்றையதினம் மேற்கு நோக்கி கேரளாவிற்கு பெரிய பெரிய நிறுவனங்களால் கொண்டு போகப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறையை கலந்தாலோசித்து அந்தப் பகுதியில் 'பிஷ் ப்ராசசிங் யூனிட்'



1987 ஏப்ரல் 10] [திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன்]

ஒன்றை ஏற்படுத்தினால் அந்தப் பகுதி மக்களுக்கும், மீனவர்களுக்கும் நன்மை செய்வதாக இருக்கும். ஆகவே அந்தப் பகுதியில் இதனை அமைத்து, சிறந்த முறையில் அது செயல்பட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மீனவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தைப் பொறுத்த வரையில், மிகப் பெரிய திட்டமாக, உள்ளபடியே ஏழையெளியவர்களுக்காக செயல்படுத்தப்பட்டு வருவதற்காக இத்திட்டத்தை நான் மனதாரப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன்.

ஆனால் அங்கே கட்டியிருக்கின்ற வீடுகளில் எல்லாம் ஓட்டை, உடைசல்கள் காணப்படுகின்றன. அந்த ஏழை மக்களின் பொருளாதார நிலை கருதி, அவர்களுடைய குறைபாடுகளை எல்லாம் நீக்கவேண்டும். அந்த வகையில் அவர்களுடைய வீடுகளை எல்லாம் அரசு செலவிலேயே மீண்டும் இத்துறை மூலம் செப்பனிட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, புன்னக்காயல், ஆலங்காயம், மணப்பாடு போன்ற இடங்களில் கட்டப்பட்டிருக்கின்ற வீடுகளை எல்லாம் ரிப்பேர் செய்யவேண்டும். அதுபோன்று புதிதாக குடியிருப்புப் பகுதிகளை அமைக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் இப்போது வழங்கப்படுகின்ற மானியத்தைப் பொறுத்தவரையில் 1/3 என்கிற விகிதத்திலே கொடுக்கிறார்கள். அது போதாது. அதை 50 பெர்சென்ட் என்று கொடுத்தால் அந்த மீனவர்களுக்கு நல்வாழ்வு கிடைக்கும். அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, புன்னக்காயல் பகுதியில் அடிக்கடி வெள்ளச்சேதம் ஏற்படுகிறது. அதைத் தடுக்க 55 லட்சம் ரூபாய் செலவிலே நல்ல பாலம் அமைக்கும் திட்டம் ஒன்று ஏற்கெனவே அரசின் ஆய்வில் இருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செயல்படுத்த இருக்கிறார்கள் என்பதால் அதையும் நான் வரவேற்கக் கடமைப்பட்டுள்ளேன்.

[திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன்] [1987 ஏப்ரல் 10

அடுத்து, மீனவர்களின் கட்டுமரங்களில் 'மெஷின்' பொருத்துகின்ற திட்டம் சிறந்த திட்டம். ஆனால் அவர்களுக்கு இருக்கின்ற சிரமம் என்னவென்றால் டீசல், மண்ணெண்ணெய் போன்றவைகள் அவர்களுக்கு கிடைக்கவில்லை. அவைகள் அவர்களுக்கு தட்டுப்பாடின்றி நியாய விலையில் கிடைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் பகுதியில் உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கம் என்கிற ஓர் அமைப்பு மிக நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. அது தொடர்ந்து, இன்னும் நல்லமுறையில் செயல்படுவதற்கு அரசு போதுமான மானியத்தை அந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மீனவப் பெண்களுக்கு அரசு நல்ல பல திட்டங்களைத் தீட்டி, பல்வேறு கால கட்டங்களில் அவற்றை செயல்படுத்தி வந்தாலும்கூட ஒரு செயல்பாடற்ற நிலைமை இருக்கிறது என்பதை இந்தத் துறை அதிகாரிகள் உணர்ந்து இந்த ஏழையெளிய மீனவப் பெண்களுக்கு நல்வாழ்வு அளிக்கும் திட்டங்களை நல்லமுறையில் நடைமுறைப்படுத்த தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அந்தப் பகுதியில் வாழ்கிற மீனவ மக்களுக்காக சாலை வசதி, குடிநீர் வசதி போன்றவைகளை எல்லாம் நல்லமுறையில் செய்து கொடுக்க இன்னும் அதிக அளவில் நிதி ஒதுக்கி திட்டங்களை நல்லமுறையில் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இறால் பண்ணையைப் பொறுத்தவரையில் மணப்பாட்டில் அதனை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இதுகுறித்து ஏற்கெனவே இந்தத் துறையைச் சார்ந்தவர்களிடம் கேட்டுக் கொண்டேன். ஆனால் இந்தத் துறை அதிகாரிகள் அந்தப் பகுதியில் அமைப்பதற்கு சாத்தியம் இல்லையென்று கூறியிருக்கிறார்கள். அதனை மறுபரிசீலனை செய்து அவசியம் மணப்பாடு அல்லது புன்னக்காயல் பகுதியிலே அமைக்க தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று விரும்பி, வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 10] [திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன்]

அடுத்து, இல்லங்கள் கட்டுவதைப் பொறுத்தவரையில் அதற்காக 50 லட்சம் ரூபாய் இன்றையதினம் ஒதுக்கியிருந்தாலும், எல்லா மீனவர்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, அனைவரின் நலன் கருதி, 1 கோடி ரூபாயாக அதனை உயர்த்தி அனைவருக்கும் இல்லங்கள் கட்டிக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, காயாமொழியில் 'பேக்வர்ட் கிளாஸ் ஹாஸ்டல்' ஒன்று மகளிருக்காக கட்ட வேண்டுமென்று ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளேன். அந்த மகளிர் இல்லத்தை அவசியம் அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று வேண்டி, விரும்பிக் கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று, இத்துடன் என் உரையை முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

(பிற்பகல் 1-10)

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய பிற்படுத்தப்பட்டோர் நல மானியக் கோரிக்கையின் மீதும், மீனளத் துறை மானியக் கோரிக்கையின்மீதும் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். மீனளத் துறையில் ஐந்தாண்டுக் காலத்திற்குமுன் ஐந்து ரூபாய்க்கு விற்ற இறால் மீன் இன்றைக்கு 35 ரூபாய்க்குக்கூட கிடைக்கவில்லை. அந்த அளவிற்கு மீன்கள் விலை—ஒவ்வொரு மீனின் விலையும் உயர்ந்துவிட்டது. இரண்டாவதாக, கிராமங்களில் குத்துமதிப்பாக ஐந்து ரூபாய்க்கு மீன் கேட்டால் கொடுப்பார்கள்; ஆனால் இப்பொழுதெல்லாம் எடைபோட்டுத்தான் வாங்க வேண்டிய நிலை வந்தாகிவிட்டது. எனவே, ஏழை எளிய மக்கள் இன்றைக்கு மீன் வாங்கிச் சாப்பிட முடியாத ஒரு நெருக்கடியான நிலை இருக்கிறது.

[திரு. பொ. உத்திராபதி] [1987 ஏப்ரல் 10

மீனளத்துறை என்பது நமது நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொடுக்கக்கூடிய ஒரு பெரிய துறை. ஆகவே, இந்தத் துறையை மத்திய சர்க்கார் கையிலே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். எதிர்காலத்தில் அந்தந்த மாநிலங்களில் இருக்கக்கூடிய மீன்களைப் பிடித்து அந்த மாநில அரசே முழு அந்நியச் செலாவணியை ஈட்டக்கூடிய அளவிற்கு மத்திய சர்க்காரை வற்புறுத்துவதற்கு மாநில சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நமது மாநிலத்திற்கு மத்திய உவர் நீர் மீன்வள ஆராய்ச்சி நிலையத்தின் தலைமையகம் அமைப்பதற்கு இந்திய தேசிய ஆராய்ச்சிக் கழகம் உவர் நீர் மீன் ஆராய்ச்சி நிலையம் முடிவு செய்திருக்கிறது. நான்கு மாநிலங்களிலே இடம் கேட்டிருக்கிறார்கள். நான்கு மாநிலங்களிலே என்று சொல்கிறபொழுது முன்பே தமிழக அரசு முட்டுக்காட்டில் 90 எக்கர் நிலப்பரப்பையும், இரண்டு எக்கர் நிலம் தமிழக மீன் துறை மேம்படுத்திய இடத்தையும் இந்திய தேச ஆராய்ச்சிக் கழகத்திற்கு விலைக்குக் கொடுத்துள்ளது. அதன் சர்வே நம்பர் 113. அதன் பக்கத்தில் சர்வே நம்பர் 111-இல் அடங்கிய 120 எக்கர் பரப்பும், சர்வே நம்பர் 112-இல் 97, 98-இல் அடங்கிய 35 எக்கரும். கிரீன்வேஸ் ரோட்டிலுள்ள உவர் நீர் மீன் பண்ணை 3.5 எக்கர், அதைச் சுற்றியுள்ள இடம் 8.10 எக்கர் கொடுக்கப்பட வேண்டும். இந்த இடத்தைக் கொடுத்தால் இந்த நிலையத்தைத் தமிழகத்திலேயே அமைப்பதற்கான ஒரு சாத்தியக்கூறு இருக்கிறது. அதை அமைப்பதன் மூலமாக ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்கான ஒரு சூழ்நிலை இருக்கிறது. அமைச்சரவர்கள் அதை என்ன என்று ஆராய்ச்சி செய்து, அந்தத் தலைமையிடம் தமிழகத்திலேயே அமைவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு இராமேஸ்வரம் என்று பார்த்தால்—தமிழகம் என்று சொல்கின்றபொழுது சென்னையிலிருந்து கடலூர், தஞ்சை மாவட்டத்தில் கோடியக்கரை, இராமேஸ்வரம், மண்டபம் என்று இப்படி கன்னியாகுமரி வரையிலும் கடற்கரையைச் சுற்றியிருக்கக்கூடியது. ஆயிரம் கிலோ மீட்டர்



1987 ஏப்ரல் 10] [திரு. பொ. உத்திராபதி]

தூரம் இருக்கிறது. இந்த ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்தில் வாழக்கூடியவர்கள் மீனவர்கள். ஆகவே, இந்த ஆயிரம் கிலோ மீட்டரிலேயும் ரோடுகளை நல்லபடியாக அமைக்க வேண்டும். இன்னொன்றையும் நான் சொல்லிக்கொள்கிறேன். ஆயிரம் கிலோமீட்டர் தூரத்தில் கிட்டத்தட்ட கடலூர் வரையிலும் ஒரு பெரிய வசதி படைத்தவர், அந்தக் கரை முழுவதையும் ஆக்கிரமித்து வைத்துக்கொண்டு, அதுவும் மகாபலிபுரத்திற்கு அருகாமையில் பனைமட்டையில் ஒரு உல்லாச பங்களா அமைத்துக்கொண்டு, இன்றைக்குப் பலவேறு தவறுகள் நடந்து கொண்டிருக்கின்றன. அவர் 99 வருட லீசிலே எடுத்துக் கொண்டு இந்த ஆதாயங்கள் பூராவையும் தனியார் எடுத்துக்கொண்டு இருக்கிறார். நான் அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்வது, அந்த உல்லாச இடங்கள் முழுமையையும் அரசே மேற்கொண்டு வெளிநாடுகளிலேயிருந்து வரக்கூடியவர்கள், மகாபலிபுரத்திற்குச் செல்லக்கூடியவர்கள் தங்கியிருப்பதற்கான வசதியை மேற்கொள்ள வேண்டும். அதைத் தனியாரிடத்தில் கொடுப்பதைத் தடுக்க வேண்டும் என்று நான் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு இராமேஸ்வரம் இருக்கிறது. பக்கத்தில் கச்சத் தீவு. இன்றைக்கு அங்கே தொடர்ந்து—இலங்கையிலிருந்து நம் தமிழகத்திற்கு அகதிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். அதன் மூலம் பல்வேறு தவறுகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, இதைத் தடுப்பதற்கு, கச்சத்தீவு நம்மிடத்திலே இருந்தது; மத்திய சர்க்கார் என்ன காரணத்தினாலோ அதை தாரை வார்த்து விட்டதன் விளைவாக இன்றைக்கு அந்தத் தீவுக்கு இலங்கையில் இருக்கக்கூடிய அந்த அரசாங்கத்தினுடைய கொடியவர்கள் அங்கே வந்து இருந்து கொண்டு இருப்பதால் தமிழகத்தினுடைய மீனவர்கள் வலையைக் காய வைத்துக்கொள்ள முடியவில்லை. அங்கே போய்த் தங்குவதற்கான வாய்ப்பும் கிடையாது. ஆகவே, தமிழகத்தினுடைய உரிமைகளை, நமது நாட்டினுடைய உரிமைகளை இன்றைக்கு இலங்கை அரசு பறித்துக் கொண்டு விட்டது. மத்திய சர்க்கார் இன்றைக்குப் பாராமுகமாக இருந்து கொண்டு, இப்பொழுது இலங்கைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் முன்முயற்சி எடுக்கவில்லை; தமிழகத்தினுடைய அருகாமையிலே இருக்கக்கூடிய கச்சத் தீவினுடைய உரிமைகளைப் பறி கொடுத்துவிட்டு,

மத்திய சர்க்கார் இருந்துகொண்டிருக்கிறது. அதிலே பாதிக்கப்படுவது தமிழகத்துடைய மீனவர்கள்; தமிழகம் இன்றைக்குப் பாதித்திருக்கிறது. தமிழக அரசு விரைவாக மத்திய சர்க்காரை வற்புறுத்தி, நமது கச்சத் தீவில் இருக்கக்கூடிய உரிமைகளைப் பெறுவதற்கு அமைச்சரவர்கள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல இன்றைக்கு மண்டபம் இருக்கிறது. அங்கே சங்கு ஏராளமாக எடுக்கப்படுகிறது. சங்கு ஒன்று 1 ரூபாய், 1.50 ரூபாய், 2 ரூபாய் என்ற குறைந்த விலைக்கு எடுக்கின்ற அந்தத் தொழிலாளர்களிடமிருந்து வாங்குகிறார்கள். அவர்கள் எடுக்கிற சங்குகளை எல்லாம் ஏலம் விடுகிறார்கள். ஏலம் விடுகிறபோது தனியார் மிகக் குறைந்த விலைக்கு எடுத்து, அதிக விலைக்கு மேற்கு வங்காளத்திற்கு விற்கிறார்கள். அங்கே எடுத்துச்சென்று அவர்கள் சங்கிலிருந்து மோதிரம், கழுத்தில் அணியும் மணிவகைகள் போன்ற பல்வேறு பொருள்களை உற்பத்தி செய்து, அந்தப் பொருள்களை தமிழ்நாட்டில் கொண்டு வந்து அதிக விலைக்கு விற்பனை செய்கிறார்கள். ஆகவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால் மண்டபம், இராமேஸ்வரம் பகுதிகளில் எடுக்கிற சங்குகளைப் பயன்படுத்த அங்கே ஒரு சங்குத் தொழிற்சாலை அமைத்து, இந்தப் பொருள்களை உற்பத்தி செய்து இங்கேயே குறைந்த விலைக்கு நமது மக்களுக்குக் கொடுக்க, தேவையான நடவடிக்கை எடுக்க **வேண்டும்.**

மீனளத் துறையைப் பொறுத்தவரையில், மீன்பிடித் தொழிலுக்காக நாட்டுப் படகு, விசைப்படகு தயார் செய்யப்படுகிறது. தனியார் துறையில் தயார் செய்யப்படுகின்ற படகுகள் குறைந்த விலைக்குக் கிடைக்கின்றன. அரசுத் துறையில் தயாரிக்கின்ற படகுகளுக்கு அதிக விலை கொடுக்க வேண்டியிருப்பதால், அந்தப் படகுகளை வாங்க மீனவர்கள் முன்வாராத நிலையில் நாகப்பட்டினம் போன்ற இடங்களில் அந்தத் தொழிலை மூடுகின்ற நிலை ஏற்பட்டு, மீண்டும் திறக்கப்படவிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அரசுத் துறையில் நல்ல தரமான படகுகளை உற்பத்தி செய்து, தொழிலாளர்களுக்கு வேலை கொடுப்பதோடு,





குறைந்த விலையில் மீனவர்களுக்கு அந்தப் படகுகளை வழங்க ஆராய்ச்சி செய்து, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் தொண்டியக்கரை இருக்கிறது. சுமார் 10 பஞ்சாயத்துக்களைச் சேர்ந்த பிற்பட்ட மக்கள் தான் அங்கே மீன்பிடிப்பதற்காக கடலுக்குச் செல்கிறார்கள். அங்கே ஒரு சிறிய துறைமுகம் வேண்டுமென்று கேட்டபோது இல்லை என்று சொல்லிவிட்டார்கள். அந்த பத்து பஞ்சாயத்துக்களையும் சேர்ந்த சாதாரண மக்கள், ஏழை, எளிய மக்கள் மீன் பிடிக்கச் செல்கிறார்கள். மற்ற பகுதிகளைப்போல நேரடியாக அவர்கள் கடலில் செல்ல வழியில்லை. சுமார் மூன்று கிலோ மீட்டர் சகதியும், சேறும் நிறைந்த நிலத்தைக் கடந்து செல்ல வேண்டும். நடந்துதான் செல்ல வேண்டும். அங்கே முழங்காலுக்குமேல் சேறு இருக்கிறது. முழங்காலுக்குமேல் சேற்றில் மூன்று கிலோமீட்டர் தூரம் நடந்து சென்று தூவலை வைத்து தான் மீன் பிடிக்கிறார்கள். படகில் சென்று மீன்பிடிக்க வசதி இல்லை. ஆனால் அடுத்த கரையில் இருப்பவர்கள், ஆறு இருப்பதால் படகில் சென்று மீன் பிடிக்க வசதியாக இருக்கிறது. ஆற்றின் ஒரு பகுதியில் இருப்பவர்களுக்கு அந்த வசதி இல்லை. ஆகவே, அந்த மூன்று கிலோமீட்டர் தூரத்திற்கு வெட்டிக் கொடுத்தால் படகு விடுவதற்கு சாத்தியக்கூறு இருக்கிறது. அந்த அளவுக்கு அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று மீனவர்களுக்கு வீட்டுப் பிரச்சினை இருக்கிறது. அவர்களுக்கு போதுமான அளவுக்கு வீட்டுமனைகள் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தஞ்சையில் 77 இலட்சம் ரூபாயில் இறால் குஞ்சு வளர்க்கும் ஏற்பாடு ஒன்று இருந்தது. அது இன்னும் முடிவு பெறாமல் இருக்கிறது. விரைவிலே முடித்து, அதை செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு பஞ்சாயத்துக் குளங்களை எல்லாம் மீனளத்துறை ஆக்கிரமித்திருக்கிறது. குளங்களை ஏலம் விடும் பணம் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களுக்குப்

போவதில்லை. பஞ்சாயத்துக்களுக்கு நிதிவசதி இல்லாத காரணத்தால் குளங்களைச் சீர் செய்தல், மற்ற வசதிகளைச் செய்தல் போன்ற பணிகளைச் செய்ய முடியவில்லை. ஆகவே, எதிர்காலத்தில் அந்தக் குளங்களை எல்லாம் பஞ்சாயத்துக்களிடமே ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பட்ட வகுப்பினர் என்று வருகிறபோது தமிழ்நாட்டில் வாழ்கிற பெரும்பகுதி மக்கள் பிற்பட்ட மக்கள்; ஏழை எளிய மக்களாக இருக்கிறார்கள். அவர்களுக்காகத் திட்டப்படுகின்ற திட்டங்கள் மிகவும் குறைவாக இருக்கின்றன. 1971 ஆம் ஆண்டு இந்தத் துறை தனியாகத் தொடங்கப்பட்டு, இன்றைக்கு இந்தத் துறைக்கு 13,62,33,000 ரூபாய் என்ற அளவுக்கு தொகை பெருகியிருக்கிறது. நிதி பெருகி இருக்கிறதே தவிர அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரவில்லை; பயன்பெறவில்லை. ஆகவே கூடுதலாகப் பணம் ஒதுக்கப்பட வேண்டும்: அதிகமான வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட வேண்டும் மற்றும் முக்கியமான திட்டங்கள் பல வகுக்கப்பட வேண்டும்.

முடிதிருத்துவோருக்கு 1,500 ரூபாய் மானியமும் 3,500 ரூபாய் வங்கிக் கடனும் தொழில் நடத்துவதற்காக வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 1986-87 ஆம் ஆண்டில் 76 பேர்களுக்குத்தான் வழங்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு 1,14,000 ரூபாய்தான் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போன்று சலவைத் தொழிலாளர்களுக்கு இஸ்திரிப் பெட்டி வாங்க, மற்ற காரியங்களுக்காக 1,500 ரூபாய் மானியமாகவும் 3,500 ரூபாய் கடனாகவும் வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை என்ன என்று பார்த்தால் ஒரு இலட்சம் ரூபாய்தான். இதை வைத்துக் கொண்டு எத்தனை பேர்களுக்குக் கொடுக்க முடியும்? எப்படி அவர்கள் வாழ்க்கை முன்னேறும்?

சலவைத் துறை கட்ட நகராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும் அரசு 75 சதவீதம் நிதி உதவி கொடுக்கிறது; உள்ளாட்சி மன்றத்தின் பங்கு 20 சதவீதம்; பயன்பெறுவோர் பங்கு 5 சதவீதம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இலட்சக் கணக்கான சலவைத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆனால்



ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை ஒரு இலட்சம் ரூபாய்தான். இதை வைத்துக்கொண்டு எத்தனை சலவைத் துறை கட்ட முடியும்? இந்தத் திட்டத்திற்கு முக்கியத்துவம் அளிக்கக்கூடிய வகையில் தொகை ஒதுக்கப்படவில்லை. ஆகவே, ஒரு கணிசமான தொகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போன்று சீர்மரபினர் சமுதாயத்திற்கு 1979-80, 80-81 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கு 967 வீடுகள் தான் கட்டுவதற்குத் திட்டம் இருக்கிறது. ஆனால் கட்டிக்கொடுக்கப்பட்டது 785 வீடுகள்தான். ஒரு கணிசமான பிரிவினர் இருக்கிறார்கள். அவர்களுக்கு இரண்டு ஆண்டுகளில் 785 வீடுகள்தான் கட்டிக் கொடுக்க முடிந்தது என்றால் இன்னும் எத்தனை ஆண்டுகளில் இந்தச் சமுதாயத்தினருக்கு வீடு கட்டிக்கொடுக்கப் போகிறீர்கள்? எப்படி இந்தத் திட்டத்தை நிறைவேற்றப்போகிறீர்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

(பிற்பகல் 1-20)

எதிர்காலத்தில் கணிசமான அளவில் வீடுகள் கட்டுகிற திட்டத்தை உருவாக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நரிக்குறவர்களுக்கு 76 வீடுகள்தான் கட்டிக் கொடுக்கப்பட்டு இருப்பதாக அறிவிக்கப்பட்டு இருக்கிறது. தமிழ்நாட்டில் நரிக்குறவர்கள் பரவலாக இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்த இடம் சொந்த இடம் என்பதில்லை. பரந்து வாழக்கூடிய மக்களை ஒன்றுதிரட்டி அவர்களும் உற்பத்தியினைப் பெருக்கக்கூடிய அளவில், அவர்களும் மனித சமுதாயத்தில் மனிதனாக வாழக் கூடிய அளவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. அ. வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதயதெய்வம் புரட்சித்தலைவர் அவர்களுடைய ஆட்சியில் நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள பிற்பட்டோர் நலத்துறை மற்றும் மீன் வளத்துறை ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகளை வரவேற்று நான் ஒருசில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

[திரு. அ. வெங்கடாசலம்] [1987 ஏப்ரல் 10

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகுதான் பொருளாதாரம், கல்வி மற்றும் அனைத்துத் துறைகளிலும் பின்தங்கியுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக முதன்முதலாக பிற்பட்டோர் நலத்துறை ஒன்றை ஏற்படுத்தினார்கள். இன்றைக்கு அந்தத் துறையில் பல்வேறு மாற்றங்களை நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்படுத்தி பல்வேறு நல்ல பணிகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

பிற்பட்டோர் நலத்துறைக்கென்று தனியாக ஒரு மானியக் கோரிக்கையை ஏற்படுத்தி, அதற்காக பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஒருவரையும் நியமித்ததுபோல் இந்தியத் துணைக் கண்டத்தில் நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள், மத்திய அரசிலும் இவ்வாறு ஒரு பிற்பட்டோர் நலத்துறையைத் தனியாக உருவாக்கி இந்தியத் துணைக் கண்டத்திலும், தமிழகத்திலும் இருக்கக்கூடிய பிற்பட்ட சமுதாயத்தினருக்காக தனியாக நிதி ஒதுக்கி அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குரிய ஒரு நல்ல திட்டத்தை உருவாக்கித் தரவேண்டும். அவ்வாறு மத்திய அரசிலும் அப்படி ஒரு பிற்பட்டோர் நலத்துறையை உருவாக்கவேண்டும். அந்த வகையில் அவர்கள் உருவாக்க வேண்டும் என்று நம்முடைய மாநில அரசு ஒரு பரிந்துரையை அனுப்பும்படி கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு நாம் உற்றுநோக்கிப் பார்க்கிறபோது தமிழகத்தில் தோராயமாக 281 பிற்பட்ட வகுப்பினர் பல்வேறு பிரிவினராக, பல்வேறு சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அந்த 281 பிரிவுகளில் குறிப்பாக 21 பிரிவினர்தான் அரசுப் பணியாளர்களாக, அரசு கொடுக்கிற சலுகைகளை முழுமையாகப் பயன்படுத்தக்கூடிய அளவில் இன்றைக்கு நிலைமை இருக்கிறது. மிக மோசமான நிலைமையில் இருக்கக் கூடிய பிறமலைக் கள்ளர், படையாச்சி, முத்துராஜா, கோனார், உடையார் போன்ற சாதாரணமான வகுப்பைச் சேர்ந்தவர்கள் பிற்பட்டோர் சமுதாயத்தில் இருக்கிறார்கள். இன்றைக்குக் கூட புதுக்கோட்டை மாவட்டத்தில் சூற்றப்பரம்பரையினர் என்ற பெயரில் இருந்தவர்களை சீர்மரபினர் என்று மாற்றி இருக்



1987 ஏப்ரல் 10] [திரு. அ. வெங்கடாசலம்]

கிறோம். ஆனால் மதுரையில் உள்ள சீர்மரபினருக்கு வழங்கக் கூடிய சலுகைகளை புதுக்கோட்டை மாவட்டத்தில் கந்தர்வக்கோட்டை ஒன்றியத்தில் இருக்கக் கூடிய சீர்மரபினராக பெயர் மாற்றம் செய்யப்பட்டவர்களுக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை என்று தங்களுடைய மேலான கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

புரட்சித்தலைவர் அவர்களின் அரசு 1980-81-ல் அம்பாசங்கர் கமிஷன் தமிழகத்தில் பிற்பட்ட வகுப்பினைச் சேர்ந்தவர்கள் எத்தனை வகுப்பினராகப் பிரிந்திருக்கிறார்கள், பொருளாதாரம் மற்றும் பிற நிலைமைகளில் ஒவ்வொரு பிரிவினரும் எந்த அளவில் இருக்கிறார்கள் என்பதை எல்லாம் ஆராய்ந்து மிகத் தெளிவாக ஒரு அறிக்கையை மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கிறது. மத்திய அரசு அந்த அம்பாசங்கர் கமிஷன் அறிக்கையை ஏற்று உரிய வகையில் திட்டத்தை வெளியிடுகிறபோது இன்றைக்குத் தமிழகத்தில் மட்டுமல்லாமல் இந்தியத் துணைக்கண்டத்தில் இருக்கக்கூடிய பிற்பட்டோர் சமுதாயத்தினர் அனைவரும் முன்னேறுவதற்கு அது ஒரு சான்றாக இருக்கும் என்று இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே இன்றைக்கு புதுக்கோட்டை மாவட்டத்தை எடுத்துப் பார்க்கின்றபோது, அங்கே ஜாதிய லிஸ்டைப் புரட்டிப் பார்த்து அனைத்துபேரும் ஜாதிச் சான்றிதழ்கள் வாங்குகிறார்கள். ஆனால் புதுக்கோட்டை மாவட்டத்தில், திருச்சியிலிருந்தும், திருச்சிக்குப் பக்கத்தில் இருந்தும் திருவெரம்பூரில் இருந்தும், மணப்பாறையில் இருந்தும் காட்டுநாயக்கர்கள் 100 ஆண்டுகளுக்கு முன், 50 ஆண்டுகளுக்கு முன் குடிபெயர்ந்து வந்திருக்கிறார்கள். குறிப்பாக என்னுடைய தொகுதியைச் சார்ந்த கீரனூர், குளவாய்ப்பட்டி போன்ற இடங்களிலும், ஆலங்குடி பேரூராட்சியிலும் கூட அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் சென்று வட்டாட்சியரிடத்தில் ஜாதிச் சான்றிதழ் கேட்கிறபோது, நீங்கள் காட்டுநாயக்கர்கள் இல்லை என்று ஒரு அரசு ஆணை புதுக்கோட்டை மாவட்டத்தில் இருக்கிறது. ஆகவே உங்களுக்குத் தர மாட்டோம் என்று மறுக்கிறார்கள். ஆனால் அவர்கள் பூர்வீகமாக எங்கேயிருந்து வந்தார்கள் என்று பார்க்கிறபோது திருச்சி மாவட்டத்திலிருந்தும் மணப்பாறை

[திரு. அ. வெங்கடாசலம்] [1987 ஏப்ரல் 10

போன்ற இடங்களிலிருந்தும் வந்து 10 வீடுகள், 3 வீடுகள் என்று ஆங்காங்கே அமைத்துக் கொண்டு சொர்க்கற்சூளையில் வேலை செய்யும் பணியைச் செய்து வருகிறார்கள். கூலி வேலை செய்பவர்களாகத்தான் அவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு அரசுப் பணியில் பணியாற்ற போதிய உத்தரவாதம் இல்லை. ஜாதிச் சான்றிதழ்களும் கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவே அரசு தனியாக இதற்கென்று ஒரு குழுவை புதுக்கோட்டை மாவட்டத்திற்கு அனுப்பி காட்டுநாயக்கர்கள் எங்கெங்கே இருக்கிறார்கள், அவர்களின் பூர்வீகம் என்ன, தொழில் என்ன என்று பார்த்து, அவர்களுக்கு காட்டுநாயக்கர்கள் என்ற சான்றிதழ் வழங்கக்கூடிய வகையில் தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஐ.ஏ.எஸ். தேர்வு எழுதுவதற்கான ஒரு பயிற்சியை சென்னை நகரத்திலே புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு ஆரம்பித்து அதில் 84 பேர்களுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும். மேலும் 100 பேர்கள் பயன் அடைவார்கள் என்றும் கொள்கை விளக்கக் குறிப்பில் கொடுத்திருக்கிறீர்கள். மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் கே. பி. இராமலிங்கம் அவர்கள் பிற்பட்ட சமுதாயத்தினருக்கு உயர்வு வேண்டும் என்றால் பொருளாதார அடிப்படையில் இருக்க வேண்டும் என்ற புரட்சித் தலைவரின் கருத்தை எடுத்துக் காட்டி அதை இன்னும் நிறைவேற்றாததினால் பல்வேறுபட்ட தொல்லைகளுக்கு பிற்பட்ட சமுதாயத்தினர் ஆளாகிறார்கள் என்பதையும் எடுத்துக் காட்டினார்கள்.

ஆகவே பிற்பட்ட சமுதாயம் பொருளாதார அடிப்படையில் இட ஒதுக்கீடும், கல்வி போன்ற சலுகைகளில் இட ஒதுக்கீடும் பெற முடியாமல் பல்வேறு சோதனைகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த இட ஒதுக்கீட்டினால், படித்தவர்களுடைய குழந்தைகள் மட்டும் நுழைவுத் தேர்வில் தேர்ச்சியுற்று பொறியியல் கல்லூரியிலும், மற்றவைகளிலும் இடம் பெறுகிறார்கள். கிராமங்களிலே இருக்கக்கூடியவர்களின் குழந்தைகள், நுழைவுத் தேர்வுக்கு செல்வதற்கே அஞ்சுகிறார்கள். நுழைவுத் தேர்வு என்றால் என்னவென்றே அவர்களுக்குத் தெரியவில்லை. கிராமப்புறங்களில் இருப்பவர்கள்



1987 ஏப்ரல் 10] [திரு. அ. வெங்கடாசலம்]

அப்படியே வந்து நுழைவுத் தேர்வு எழுதினாலும் தேர்ச்சி பெறுவதில்லை. அவர்கள் அடையக் கூடிய சலுகைகளை நிச்சயமாக அடைய முடியாமல் இதனால் அல்லலுறக் கூடிய நிலைமை இருக்கிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தை எடுத்துப் பார்த்தால் 10 பேர்களாவது—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்ஜினீயர்களாக, மருத்துவர்களாக வந்திருக்கிறார்களா என்று எடுத்துப் பார்த்தால் நிச்சயமாக இல்லை. ஆகவே நுழைவுத் தேர்வு என்னும் நல்ல திட்டத்தைக் கொண்டு வந்த இந்த அரசு, எப்படி ஐ.ஏ.எஸ். தேர்வுக்காக சென்னையிலே பயிற்சி கொடுக்கிறதோ அதைப்போல ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரிலும், நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி முகாமை ஏற்படுத்தி கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த அந்த மாணவர்களுக்கு, நுழைவுத் தேர்வுக்கு பயிற்சி அளிக்கக் கூடிய பயிற்சி முகாம் மூலம் பயிற்சி கொடுத்து, நுழைவுத் தேர்வை எழுதலாம் என்று செய்தால் அது மிக நலமாக இருக்கும். ஆகவே நம்முடைய அரசு ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும், நுழைவுத் தேர்வு பயிற்சி முகாமை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-30)

அடுத்தாற்போல இங்கே பேசுகிறபோது பல உறுப்பினர்கள் பொதுவாகச் சொன்னார்கள். இங்கே இருக்கக் கூடிய பிற்பட்ட ஜாதிகள், ஒட்டர், நாவிதர், மருத்துவர், காட்டு நாயக்கர் இவர்களோடு சலவைத் தொழிலாளியையும் பிறபட்ட சமுதாயத்தில் சேர்த்திருக்கிறார்கள். இதைப்போலவே புதர்வண்ணார் என்ற பிரிவினர் கிராமப்புறங்களிலேயே, அந்த மக்களாலேயே மிகவும் கேவலமாக நடத்தப்படக் கூடியவர்கள். அவர்கள் தமிழ் நாட்டில் 50,000-க்கும் குறைவாக இருக்கக்கூடியவர்கள். அவர்களை ஷெட்யூல்டு காஸ்டில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதனை நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு தீவிரமாக பரிசீலித்து, வாழ்க்கையில் எந்தப் பலனும் அடையமுடியாத அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை ஆதிதிராவிடர் வகுப்பில் சேர்ப்பதற்கு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

V2ll, 31 ... N87·38·2
136518

[திரு. அ. வெங்கடாசலம்] [1987 ஏப்ரல் 10

அடுத்து மீன்வளத் துறையில் நமமுடைய புரட்சித் தலைவர் அரசு பல்வேறு மாற்றங்களை மீனவச் சமுதாயத்திற்குச் செய்தாலும் மாவட்ட அளவில் இருக்கிற மீனவர் சங்கங்களை தாலுக்கா அளவில் விரிவுபடுத்த வேண்டும். தாலுக்கா அளவில் சங்கம் அமைக்கவேண்டுமென்று இன்றைக்கு இந்த அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது. இருந்தாலும மாவட்ட அளவில் இருக்கக்கூடிய சங்கங்கள இப்போது வசதிபடைத்தவர்கள் கையில் தான் இருக்கின்றன. ஆகவே மீன் பிடிப்பது ஒருவர், பலனை அனுபவிப்பது ஒருவர் என்ற நிலையில் வசதி படைத்தவர்கள் பலனை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கும் வசதி படைத்தவர்கள்தான் மீனவச் சங்கத்திற்குத் தலைவராக இருக்கிறார்கள். புதியதாக மெம்பராகச் சேர வேண்டுமென்றாலும் சேர்க்க மறுக்கிறார்கள். ஆகவே புதியதாக யார் யார் அந்த மீனவச் சங்கத்தில் மெம்பர்களாகச் சேர வேண்டுமென்று சொல்கிறார்களோ, அவர்களைக் கட்டாயம் மெம்பர்களாகச் சேர்க்க வேண்டுமென்ற உத்தரவைப் பிறப்பித்து ஆணையிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தாலுக்கா சங்கங்களாக புதிய சங்கங்களை ஏற்படுத்தி வருகிறார்கள். அந்தத் தாலுக்கா சங்கங்களில் உண்மையாக மீனவர்கள் அந்தப் பகுதியில் யார் என்று பார்த்து, யார் மீன் பிடிக்கிறார்கள் என்று பார்த்து அவர்களைத் தலைவர்களாக நியமிக்க வேண்டும் உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்து கிராமப்புறங்களில் இருக்கிற விவசாயிகள் பயன் பெறுகிற அளவிற்கு அவர்கள் வைத்திருக்கிற கிணறுகள், ஊற்றுகள், தனியாரிடத்தில் இருக்கக்கூடிய குளங்கள் போன்ற இப்படிப்பட்ட இடங்களில் மீன்குஞ்சுகளை வளர்ப்பதற்கு மானியத்தைக் கொடுத்தால் அது பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக என்னுடைய ஆலங்குடி தொகுதியில் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக் கிறார்கள். திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு உயர் நிலைப் பள்ளி இருக்கிறது. அந்தப் பகுதியில் இருக்கிற மக்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள். கூடை முடைகிற



1987 ஏப்ரல் 10] [திரு. அ. வெங்கடாசலம்]

தொழிலைச் செய்கிறார்கள். அந்தப் பகுதியில் இருக்கிற திருவரங்குளம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சீர்மரபினர் விடுதி ஒன்றினை இந்த ஆண்டில் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டு, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று அமர்கிறேன்.

**திரு. மா. சுந்தரதாஸ்:** தலைவர் அவர்களே, இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிற மீன்வளத் துறை, பிற்பட்டோர் நலத் துறை மானியக் கோரிக்கைகள் மீது நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சி சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல முன் வந்துள்ளேன்.

இந்த நாட்டில் ஐந்து லட்சம் மீனவர்கள் வாழ்ந்தாலும் கூட அவர்களுடைய வாழ்க்கை பாதுகாப்பில்லாத நிலையில் இருக்கிறது. கேரளா மாநிலத்தைப் பொறுத்தவரையில் கடலில் சென்ற ஒருவர் காணவில்லையென்றால் உடனடியாக ஹெலி காப்டர் மூலம் சென்று தேடுகிறார்கள். ஆனால் நம்முடைய மாநிலத்தில் 10 மீனவர்களுக்கு மேல் காணாமல் போயிருந்தால் தான் ஹெலிகாப்டர் மூலம் சென்று தேடுவதற்கு இயலும் என்று சட்டமிருப்பதாக மாவட்டத்தில் இருக்கிற அதிகாரிகள் தெரிவிக் கிறார்கள். கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னால் என்னுடைய தொகுதியில் தூத்தூர் என்ற இடத்தில் ஏறத்தாழ 5 மீனவர்கள் கடலில் சென்று திரும்பி வரவில்லை. அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டுமென்று மீனவர் சங்கம் மூலமாக டைரக்டர் அலுவலகத்திற்குச் சென்றால், ஒரு மணி நேரத்திற்கு மேல் காத்திருந்த பின்னரும் எங்களைக் கூப்பிட்டு அவர்கள் பேச வில்லை. ஐந்து மீனவர்கள் இறந்திருக்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் குடும்பங்கள் தெருவில் நிற்கின்றன. அவர்களுக்கு எந்த உதவியும் செய்யப்படவில்லை. டைரக்டரைப் பார்க்க முடியவில்லையென்றதும், செயலாளரைக் காணச் சென்றால் அவரையும் பார்க்க முடியவில்லை. பிறகு அவர் அலுவலகத்தில் இதுகுறித்து கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு வந்தேன். அந்த மீனவர்களுக்கு இதுவரையில் எந்த உதவியும் கொடுக்க வில்லை. கடலில் ஒருவர் இறந்துவிட்டார் என்றால் ஆழ்கடலில் சென்று உடலைக் கொண்டு வரவேண்டு மென்றும், அதனைப் பார்த்த பிறகு தான், போஸ்ட் மார்ட்டம் செய்த பிறகு தான் 'டெத் சர்டிபிகேட்' கொடுக்கப்படும் என்றும் இருக்கிறது. நான் கேட்டுக்கொள்வது

[திரு. மா. சுந்தரதாஸ்] [1987 ஏப்ரல் 10

ஆழ்கடலில் போன ஒருவர் இறந்துவிட்டால் அவரை எப்படி கொண்டு வர முடியும்? ஆகவே இந்த நிலைமையை கருத்தில் கொண்டு உரியவகையில் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்ஷூரன்ஸ் கம்பெனி மூலம் கொடுக்கிற பணம் என்ற காரணத்திற்காக 'டெத் சர்டிபிகேட்' கொடுத்தால் தான் பணம் கொடுப்பார்கள். இதனை கேரள மாநிலத்தில் எப்படி செய்கிறார்கள் என்றால், ஆர்.டி.ஓ. மட்டத்தில் ஒரு விசாரணை நடத்துகிறார்கள். அங்கேயுள்ள பெரியவர்களிடம் சம்பந்தப்பட்ட நபர் உண்மையில் இறந்து விட்டார் என்று சான்றிதழ் வாங்கிவிட்டு, 'டெத் சர்டிபிகேட்' கொடுக்கிறார்கள். ஆனால் எங்கள் பகுதியில் தாசில்தாரிடம் சென்று 'டெத் சர்டிபிகேட்' கேட்டால் போஸ்ட் மார்ட்டம் சர்டிபிகேட் எங்கே என்று கேட்கிறார். ஆகவே இதுவரையில் இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைந்த குடும்பங்கள் 300-க்கும் குறைவாகத் தான் இருக்கின்றன. இந்த விவரத்தை நம்முடைய நிதிநிலை அறிக்கையில் கொடுத்திருக்கிறார்கள்.

ஆகவே நான் கேட்டுக்கொள்வதெல்லாம் என்னுடைய சட்ட மன்றத் தொகுதியிலே ஏறத்தாழ 10 பேர்கள் இறந்திருக்கிறார்கள். ஏறத்தாழ ஓர் ஆண்டுக்காலம் ஆகிறது. இதுவரையில் ஒரு காசு கூட கொடுக்கவில்லை என்றால், அந்த மீனவ மக்களுக்கு நாம் என்ன உதவி செய்திருக்கிறோம். அதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன். ஆகையினாலே இந்தச் சட்ட மன்றத்திலே நான் உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், சட்டத்தைத் திருத்துங்கள். ஒருவர் இறந்துவிட்டார் என்று சொன்னால்கூட, ஆர்.டி.ஓ. மூலமாகவோ, தாசில்தார் மூலமாகவோ ஒரு பெரிய அதிகாரி மூலமாகவோ, என்கொயரி செய்து, உண்மையிலே அவர்கள் இறந்துவிட்டார்கள் என்று சான்றிதழ் வாங்கி ஒரு மாதத்திற்குள்ளே இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு பணம் கொடுத்தால்தான் நாம் அவர்களுக்கு ஏதாவது உதவி செய்தவர்களாக இருப்போம். ஆகவே அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், சட்டத்தைத் திருத்தி இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும். ஒருவர் கடலுக்குச் சென்றபின் வரவில்லை என்றாலும் கூட, ஹெலிகாப்டரை அனுப்பி ஏன் அவர்களைக் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்யக்கூடாது? அங்கே மக்கள்



1987 ஏப்ரல் 10] [திரு. மா. சுந்தரதாஸ்]

கேட்கிறார்கள். கேரளாவிற்கு ஒரு சட்டமா, தமிழ்நாட்டுக்கு ஒரு சட்டமா என்று கேட்கிறார்கள். நம்முடைய பகுதியிலே ஒரு மீனவர் காணாமல் போய்விட்டாலும் கூட, ஹெலிகாப்டரை அனுப்பி, அவர்களுடைய உயிரைக் காப்பாற்றுவதிலே எந்தத் தப்பும் இல்லை. ஆகையாலே இந்தச் சட்டத்தை திருத்தி, ஒருவர் கடலுக்குச் சென்று திரும்பி வரவில்லை என்றாலும் கூட, ஹெலிகாப்டரை அனுப்பி தேடுகின்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் இன்று காம்பன்சேசன் வேண்டுமென்றால், சொசைட்டியிலே அங்கத்தினராக இருக்கவேண்டும். ஒருவர் இறந்துவிட்டால், அவர் அங்கத்தினராக இருந்தால்தான் பணம் கிடைக்கும். ஆனால் இங்கு என்ன நிலைமை என்று சொன்னால், 15 ஆண்டுகளுக்கு முன்னாலே ஒரு சொசைட்டி நிறுவப்பட்டது. அந்த சொசைட்டியினுடைய தலைவர் இறந்துவிட்டார். அதற்குப் பின்னாலே தேர்தல் நடந்து தலைவர் தேர்ந்தெடுக்கப் படவில்லை. இதைப்போல பல சொசைட்டிகள் எங்கள் பகுதி யிலே இன்றைக்கு டார்மெண்ட் ஆக இருக்கின்றன. சொசைட்டி கள் ஃபங்ஷன் பண்ணவில்லை. நான் போகும்போதெல்லாம் சொல்வதுண்டு, நீங்கள் எல்லாரும் அந்த சொசைட்டியிலே உறுப்பினராகச் சேருங்கள், அப்படிச் சேரவில்லை என்றால், உங்களுக்கு ஒன்றும் கிடைக்காது என்று சொல்வதுண்டு. அதற்கு அவர்கள் என்ன காரணம் சொல்கிறார்கள் என்றால், அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் இல்லையே, அதிகாரிகள் ஒரு மாவட்டத்திற்கு எப்போதோ ஒரு தடவைதான் வருகிறார்கள், அதனால் நாங்கள் அங்கத்தினராக சேரவில்லை என்று சொல் கிறார்கள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வ தெல்லாம், தயவு செய்து, நீங்கள் ஸ்பெசல் ஆபீசரை நியமனம் செய்யுங்கள், உறுப்பினர்கள் சேருவதற்கு வழிவகை செய்யுங்கள். தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதில் பல சிக்கல்கள் இருப்பதால், தேர்தல்களை உடனே நடத்தாவிட்டாலும் பரவாயில்லை, டார்மெண்ட்டாக இருக்கக்கூடிய சங்கங்களுக்கு ஸ்பெசல் ஆபீசரை நியமனம் செய்து, யார் யாரெல்லாம் மெம்பராக வர விரும்புகிறார்களோ அவர்களைச் சேர்ப்பதற்கு ஆணையிட வேண்டும். இல்லை என்றால், 5 பேர்கள் கொண்ட குடும்பத்தில்,

[திரு. மா. சுந்தரதாஸ்] [1987 ஏப்ரல் 10

ஒருவர் அங்கத்தினராக இல்லை என்றாலும் கூட, ஒரு காசு கூட கிடைக்காது என்கிறார்கள். ஆகவே தயவுசெய்து நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் எல்லா சொசைட்டிகளிலும் தேர்தல் வைக்க முடியவில்லை என்றாலும் கூட நாமினேசன் மூலமாகவோ, அல்லது அதிகாரிகள் மூலமாகவோ உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு ஆணையிட வேண்டும்.

அடுத்து வீடுகள் கட்டுகின்ற திட்டத்திலே 7 ஆண்டுக் காலத்திலே பல இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சொல்லப் படுகிறது. வரவேற்கக் கூடிய ஒன்றுதான். என்னுடைய பகுதியில் கடந்த ஆண்டிலே 300 வீடுகள் கட்டி இருப்பதாகச் சொல்கிறார்கள். 150 வீடுகள் கட்டுவதாக என்னுடைய பகுதியில் உள்ள மீனவ மக்கள் சொல்கிறார்கள். ஆனால் உண்மையிலே ஒரு வீடு கூட கட்டப்படவில்லை. ஏன் என்று சொன்னால், வீடு கட்ட 10 ஆயிரம் ரூபாயாக இருப்பதை, 14 ஆயிரமாக ஆக்கப் போகிறோம் என்று சொல்லி, டெண்டர் போட்டு அந்த ஆர்டர் கூட தூக்கிப் போடப்பட்டு இருக்கிறது. எனவே தற்போது முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள 30 லட்சம் வீடுகள் கட்டும் திட்டத்திலாவது வீடுகளைக் கட்டித்தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எங்கள் பகுதியிலே தாட்கோ மூலமாக ஒரு வீடு கூட கட்டப்படவில்லை. எங்கள் பகுதி மிகவும் பிற்பட்ட பகுதியாக இருந்தாலும் கூட, தாட்கோ மூல மாக ஒரு வீடு கூட கட்டப்படவில்லை. எனவே 30 லட்சம் வீடுகள் கட்டும் திட்டத்திலாவது எங்களுடைய கடலோரப் பகுதியில் இருக்கிற மீனவர்களுக்கு வீடுகள் கட்டித்தரப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் உள்ள மக்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு கேரளாவிலே இருந்தபோது 4 சதவீதம் ரிசர்வேஷன் கொடுத்திருந்ததாகச் சொல்கிறார்கள். 56-க்கு முன்னாலே நாங்கள் கேரளாவோடு இருந்தோம். 56-க்குப் பின் தமிழ்நாட்டுக்கு வந்த பிறகு, எந்த அரசுமே—காங்கிரஸ் ஆட்சியாக இருந்தாலும் சரி, எந்த ஆட்சியாக இருந்தாலும் சரி தான்—அவர்களுக்கு 4 சதவீதம் ரிசர்வேஷன் கிடைக்கவில்லை, என்று சொல்லி, கோர்ட்டுக்குப் போகின்ற நிலைமை இருந்து



1987 ஏப்ரல் 10] [திரு. மா. சுந்தரதாஸ்]

கொண்டிருக்கிறது. எனவே அந்த சமுதாயத்தினருக்கு உரிய ரிசர்வேஷன் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய பகுதியைப் பொறுத்தவரையில், அந்த மீனவ மக்களுக்கு எந்தவிதமான வேலைவாய்ப்பும் இல்லை. இப்போது அங்கே பிஷ்ஷிங் டெவலப்மென்ட் கார்ப்பரேசனின் நெட் பேக்டரி, அதாவது மீன்வலைத் தொழிற்சாலை அங்கே இருக்கிறது. அந்தத் தொழிற்சாலையிலே, அந்தப் பகுதியில் உள்ள படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி வேலைவாய்ப்பு கொடுத் தால்தான் அவர்களை முன்னேற்றத்திற்குக் கொண்டு வர முடியும். எனவே ஐ.டி.ஐ. போன்ற நிறுவனங்கள் மூலமாக படித்தவர்களுக்கு பிஷ்ஷிங் நெட் பேக்டரியிலே வேலைவாய்ப்பு கொடுக்கவேண்டும், அவர்களை ஊக்குவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியில் உள்ள இந்த நெட் பேக்டரி மிகவும் சிறியதாக இருக்கிறது. எங்களுடைய மாவட்டத்திலே அதிகமான மீனவர்கள் வாழ்கின்றார்கள். தனியார்கள் இந்த தொழிற்சாலை தொடங்க லைசென்ஸ் கொடுக்கமாட்டேன் என்று சொல்கிறார்கள். ஆகையினாலே அரசாங்கமே, பிஷ்ஷிங் டெவலப் மெண்ட் கார்ப்பரேஷன் மூலமாக—தனியாருக்குக் கொடுக்க வில்லை என்றாலும் கூட—எங்களுடைய பகுதியிலே ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்கவேண்டும்.

மேலும் எங்கள் பகுதியிலே இருக்கிற மீன்களை கேரளா விற்குத்தான் கொண்டு செல்கிறார்கள். நமக்கு என்று ஒரு கூலிங் வசதியோ, ஸ்டோரேஜ் வசதியோ கிடையாது. எங்களுடைய பகுதியிலே ஒரு ஐஸ் பிளாண்ட் இருக்கிறது. மீனை பதப் படுத்தக்கூடிய ஒரு தொழிற்சாலை இருக்கிறது. ஆனால் மின்சாரம் இல்லாமல் கடந்த 10 ஆண்டுக்காலமாக அது மூடப் பட்டு இருக்கிறது. தூத்தூரிலே உள்ள அந்த ஐஸ் பிளான்ட் கடந்த 10 ஆண்டுக் காலமாக மூடப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அந்த மீனவர்களுக்கு என்ன வசதியை நாம் செய்து கொடுக்கிறோம்? பக்கத்திலே உள்ள கேரளாவிலே

யிருந்து வந்து லாரி லாரியாக வாங்கிக் கொண்டு போகிறார்கள். நம்முடைய பகுதியிலே உள்ள மீனவர்கள் மீனை ஸ்டோரேஜ் பண்ணி வைப்பதற்கு, ஐஸ் பிளாண்ட்டிலே வைப்பதற்கு எந்த வசதியும் இல்லை. அதைப்போல நம்முடைய மீன்களை கேரளா விற்கு கொண்டு செல்கிறார்களே தவிர இங்கே அவற்றை பயன் படுத்தமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே தமிழகத் திலே பல தொழிற்சாலைகளை உருவாக்கினால் அந்நிய செலாவணியை அதிக அளவிலே நாம் உருவாக்க முடியும். எங்கள் பகுதியைப் பொறுத்தவரையில் பிஷ்ஷிங் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் கிளை இயங்கவில்லை. பிஷ்ஷிங் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷனுடைய கிளை எங்கள் பகுதியிலே இயங்கி இருந்தால் எல்லா கிராமங்களுக்கும் மீன் கொண்டு செல்ல முடியும். ஆனால் அது சென்னையிலேதான் பிரமாதமாக இயங்கிக்கொண்டிருக்கிறது. ஆகையால் பிஷ்ஷிங் டெவலப் மெண்ட் கார்பரேஷனுடைய கிளை ஒன்றை எங்களது மாவட்டத் திற்கு ஒதுக்கித் தரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-40)

அதேபோன்று போட் வாங்கும் திட்டம் பற்றி நீங்கள் அறிவித்து இருக்கிறீர்கள். அது ஒரு நல்ல திட்டம்தான். போட் வாங்குவதற்கு அரசு 3 ஆயிரம் ரூபாய் மானியமாகவும், 3 ஆயிரம் ரூபாயை மீனவர்களும், அத்துடன் 9 ஆயிரம் ரூபாயை வங்கியிலிருந்து கடனாகவும் பெறவேண்டுமென்றிருக்கிறது. ஆனால் எங்கள் பகுதியில் எந்த ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலும் மீனவர்களுக்கு கடன் கொடுப்பதில்லை. ஆகையால் மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வதெல் லாம் அந்த ஏழை மீனவர்களுக்கு லோன் கிடைக்கின்ற வகையிலே, அந்த 9 ஆயிரம் ரூபாயை கோஆப்பரேடிவ் சொஸைட்டி மூலமாக கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டு மென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





எங்களுடைய பகுதியிலே 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விசைப் படகுகள் இருக்கின்றன. அதில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் வேலை செய்கின்றார்கள். ஆனால் கேரளத்திலே நம்முடைய தமிழக மீனவர்களை இரண்டாந்தர குடிமகனாகப் பார்க்கிறார்கள். ஏனென்று சொன்னால் எங்கள் பகுதியில் பிஷ்ஷிங் ஹார்பர் இல்லை. இரண்டு வாரத்திற்கு முன்புகூட மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இதுபற்றி நான் ஒரு மனு கொடுத்திருக்கிறேன். நேரடியாகவே கொடுத்திருக் கிறேன். எங்கள் பகுதியைப் பொறுத்தவரையில் 10 ஆயிரம் விசைப் படகுக்காரர்கள் இருக்கிறார்கள். எங்கள் பகுதியில் 'நேச்சுரல் ஹார்பர்' என்று சொல்லக்கூடிய அளவுக்கு தேங்காய் பட்டிணத்தில் ஒரு அழகான இடம் இருக்கிறது. அந்த இடத்தில் ஆவன செய்வதற்காக அமைச்சர் அவர்களிடத்திலே வேண்டு கோளாகக் கொடுத்தேன். ஆகவே அமைச்சர் அவர்கள் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளைச் செய்தால் அந்த 10 ஆயிரம் விசைப் படகுக்காரர்கள் தமிழகத்திலேயே இருந்து நமக்கு அதிக மான அந்நியச் செலாவணியை ஈட்டித் தர முடியும். இதனால் அங்கிருக்கக்கூடிய நம்முடைய தமிழக மீனவர்கள் அங்கே இரண் டாந்தர குடிமக்களாக இருக்கவேண்டிய அவசியம் இருக்காது. அதைத் தவிர்க்கும்பொருட்டு தேங்காய்பட்டினத்தில் ஒரு 'பிஷ்ஷிங் ஹார்பர்'-ஐ உடனடியாக ஏற்படுத்தித் தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, படிக்கின்ற மாணவர்களை ஊக்குவிக்கின்ற முறையிலே முதல் மாணவர்களாக வருகின்றவர்களுக்கு பிரைஸ் கொடுப்பதாக அறிவித்து இருக்கிறார்கள். அவர்களுக்காக அதிகமான அளவிலே நிதி ஒதுக்கி அவர்களுக்கு உதவவேண்டு மென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று பிற்படுத்தப்பட்ட பிரிவினரைப் பொறுத்த வரையில் ஆண்டு வருமான வரம்பு ரூ. 1,500 இருக்கின்றவர் களுக்குத்தான் அரசு சான்றிதழ் கிடைக்கும் என்று இருக்கிறது. வருமானம் 1,500 ரூபாய் என்று சொன்னால், ஒரு கூலி வேலை செய்கின்றவன்கூட ஒரு நாளைக்கு 5 ரூபாய், 10 ரூபாய் சம்பளம்

[திரு. மா. சுந்தரதாஸ்] [1987 ஏப்ரல் 10

வாங்குகிறான். அந்த நிலையிலும் அவர்களுடைய ஆண்டு வருமானம் 3 ஆயிரம் ரூபாய்க்கு தாண்டிப்போகிறது என்று சொல்லி அவர்களுக்கு 1,500 ரூபாய்க்கு ஆண்டு வருமானச் சான்றிதழ் வழங்கப்படுவதில்லை. பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்கு இது ஒரு மிக முக்கியமான பிரச்சினை. ஆகையால் 3 ஆயிரம் ரூபாய் ஆண்டு வருமானம் என்று வைக்கவில்லை என்று சொன்னால் அங்கிருக்கும் தாசில்தார், ஆர்.ஐ. போன்றவர்கள் அதற்கான சான்றிதழ்களை எப்படி கொடுப்பார்கள்? அதன் காரணமாக பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்கு ஒதுக்கப்படும் பணம்கூட அந்த மாணவர்களுக்குப் போய்ச் சேருவது இல்லை. மேலும் 1,500 ரூபாய்க்கு ஆண்டு வருமானச் சான்றிதழ் கொடுக்க மாட்டார்கள். ஏன் கொடுக்கமாட்டீர்கள் என்று தாசில்தாரிடம் காரணம் கேட்டால், 5 ரூபாய் கூட சம்பளம் பெறமுடியவில்லையென்றால் எப்படி இன்றைய நிலையில் வாழமுடியும் என்று கேட்கிறார்கள். ஆகவே அந்த 1,500 ரூபாய் ஆண்டு வருமான வரம்பை குறைந்தபட்சம் 3 ஆயிரம் ரூபாயாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று உதவி நிதி பெறுகின்ற மாணவர்களுக்கு 5,000 ரூபாய் வருமான வரம்பு இருக்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறது. ஆனால் அந்த மாணவர்களுக்கு 90 சதவீதம் அட்டென்டன்ஸ் இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. 90 சதவீதம் அட்டென்டன்ஸ் என்பதைக் குறைத்து 70 சதவீதம் அல்லது 80 சதவீதம் என்று ஆக்கி அந்த மாணவர்களுக்கு அந்த நிதி வழங்குகின்ற திட்டத்தை மாற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இன்றைய தினம் ஹாஸ்டல் வசதி இல்லை. இந்த ஹாஸ்டல்களில் படிக்கின்ற மாணவர்களுக்கு ரூபாய் 135 கொடுக்கப்படுகிறது. இன்றைய விலைவாசியில் 135 ரூபாய் என்பது மிகவும் குறைவான தொகை. ஆகவே, அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 200 ரூபாயாக உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 10] [திரு. மா. சுந்தரதாஸ்]

அதேபோன்று, முதிய, வயதுவந்தோருக்கு 35 ரூபாய் கொடுக்கப்படுவதாக சொல்லப்பட்டிருக்கிறது. அதை 50 ரூபாயாக ஆக்கிக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மத்தியிலே ஒரு 'மண்டல் கமிஷன்' அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த 'மண்டல் கமிஷன்' அறிக்கை கொடுக்கப்பட்டும், மத்தியிலே பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்காக ரிசர்வேஷன் கொடுக்கப்படவில்லை, மத்தியிலே, வேலை வாய்ப்பிலே ரிசர்வேஷன் கொடுக்கப்படவில்லை. பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு மத்தியிலோ அல்லது வேறு நிறுவனங்களிலோ வேலை வாய்ப்பு பெறக்கூடிய நிலை இல்லை. மண்டல் கமிஷனுடைய ரிப்போர்ட்-படி பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு ரிசர்வேஷன் கொடுக்கும்படி நமது அரசு மத்திய அரசை வற்புறுத்தவேண்டும். அப்படியில்லையென்றால், மத்தியிலே ஒரு பேக்வர்ட்-கிளாஸ் கமிஷனை உருவாக்கி, மத்திய அரசிலே எல்லா பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் ரிசர்வேஷன் அடிப்படையில் வேலைவாய்ப்பு கிடைக்கின்ற வகையிலே மத்திய அரசை வற்புறுத்தவேண்டும். மத்திய அரசுத் துறைகளில் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர் ஐ.ஏ.எஸ்., போன்ற பெரிய பதவிகளில் மிகக் குறைவாக இருக்கிறார்கள். காரணம், நமக்கு ரிசர்வேஷன் கிடையாது. நம்முடைய, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர், காம்பெட்டிஷன் காரணமாக அங்கே பல பெரிய பதவிகளுக்கு வரமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது.

ஆகவே மத்திய அரசில் இருக்கின்ற எல்லா துறைகளுக்கும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இந்த ரிசர்வேஷன்படி ஒதுக்கிக் கொடுக்கவேண்டும் என்று இந்தச் சமயத்தில் கேட்டுக் கொள்கிறேன். வயதானவர்களுக்கு இப்போது அரிசி 1 கிலோ கொடுக்கப்படுகிறது. அதை 2 கிலோவாக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி சொல்லி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் மற்றும் மீன் வளத்துறை ஆகிய இரண்டு தலைப்பின்கீழ் கோரி

[திரு. ப. உ. சண்முகம்] [1987 ஏப்ரல் 10

இருக்கின்ற மானியங்கள்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் மேலான கருத்துக்களைத் தெரிவித்ததற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மானியத்தின்மீது துவக்க உரை ஆற்றிய திரு. வேணுகோபால் அவர்கள் வழக்கம்போல காரசாரமாக இல்லாமல், சற்று காரசாரம் குறைவாக இருந்தாலும்கூட பேச வேண்டியவைகளை எல்லாம் வலியுறுத்திச் சொன்னார்கள். அப்படி அவர் சொல்லும்போது, இந்த இலாகாவை தனி ஒரு அமைச்சரிடம் கொடுக்கவேண்டும் என்றும், ப.உ.ச.-விடம் வேண்டாம் என்றும் சொன்னார்கள். (குறுக்கீடு) என் மீது அவருக்கு தனிப்பட்ட கோபம் இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. என் மீது நம்பிக்கையும் இருக்கிறது என்று நான் நம்புகிறேன். இலாக்காக்கள் கூடுதலாக இருக்கின்றன, ஆகவே இந்த இலாகாவை தனியாக பிரிக்கவேண்டும் என்று சொன்னார் என்று நினைக்கிறேன். இலாக்காக்கள் கூடுதலாக இருந்தாலும் பிற்படுத்தப்பட்டோர் துறையும், மீன் வளத் துறையும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களைப் பொறுத்தவரையில் மிக முக்கியமாக கருதப்படுகிற இரண்டு துறைகள் ஆகும். ஏன் என்றால் பிற்படுத்தப்பட்டோர் துறைக்காகத்தான் திராவிட இயக்கம் காலம் எல்லாம் பாடுபட்டு உழைத்து வந்திருக்கிறது. அதேபோல்தான் மீன் வளத் துறைக்கும் முதலமைச்சர் அவர்கள் செய்து இருக்கின்ற மகத்தான சேவையை தவறாக கருத மாட்டார்கள் என்று நினைக்கிறேன். எனவே இதில் அக்கறை இல்லாமல் போகவில்லை, மிகுந்த அக்கறையோடு நாம் ஒதுக்கீடு செய்து இருக்கிறோம். இங்கே பேசியவர்கள் எல்லாம் பொதுவான குறைகளை மிகவும் குறைவாக சொல்லியிருக்கிறார்கள். • பெரிய குறைகள் எதையும் இதில் காண முடியவில்லை என்று தெரிகிறது. அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதிலே மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பி இருக்கிற சில ஐயங்களுக்கு மட்டும் நான் பதில் சொல்லிவிட்டால் போதும் என்று நான் கருதுகிறேன். ஒரு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் பேசும்போது உறுப்பினர்களைச் சேர்ப்பது பற்றிச் சொன்னார்.



1987 ஏப்ரல் 10] [திரு. ப. உ. சண்முகம்]

புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதிலே எவ்வித தடையும் இல்லை, மீனவர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் சேர்ப்பதில். எங்காவது சேர்க்கமாட்டேன் என்று சொல்லி மறுக்கிறார்கள் என்று தெரிவித்தால் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் அவருக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

செயல்படாத கூட்டுறவுச் சங்கங்களில் எப்படிச் சேர்ப்பது என்று கேட்டார்கள். அதைப்பற்றி நிச்சயமாக பரிசீலித்து விரைவில் அங்கு உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு அரசு ஆணை பிறப்பிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீனவர்கள் காணாது போய்விட்டால் 10 பேர் காணாமல் போனால்தான் ஹெலிகாப்டர் அனுப்புகிறார்கள். ஒருவர் போனால்கூட அனுப்பவேண்டும் என்று கேட்டார்கள். ஒரு உயிரும் பொன்னான உயிர்தான், 10 பேர் உயிர்களும் பொன்னான உயிர்கள்தான். தனி உயிரை மட்டும் நாம் மதிக்காமல் இருக்கக்கூடாது. எனவே கோஸ்டல் கார்டு மூலம் மீனவர்களை தேடுகிறோம். மீன் வளத் துறை படகு மூலம் அந்தப் பகுதியில் செல்லும் படகு மூலம் தேடுகிறோம், பிறகு கோஸ்டல் கார்டு மூலம் தேடுகிறோம். அது இல்லை என்று சொன்னால் ஹெலிகாப்டர் மூலம் தேட ஆணை பிறப்பிக்கப்படுகிறது. பொதுவாக 5-க்கு மேற்பட்ட மீனவர்கள் காணாமல் போய்விட்டால் தேடுவதற்கு ஹெலிகாப்டரை பயன்படுத்துகிறோம். ஒருவர் போனால்கூட பயன்படுத்தவேண்டும் என்று சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்லும்போது, 10 பேர் போனால்தான் ஹெலிகாப்டர் அனுப்பமுடியும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் யாரோ சொன்னதாகச் சொன்னார்கள்.

**திரு. மா. சுந்தரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 பேர் போனதற்குப் பிறகு நான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் சொன்னேன், அப்போதுகூட,- 2 மாதங்களுக்கு முன்பு நடந்த சம்பவம்—ஹெலிகாப்டர் அனுப்பவில்லை.

[1987 ஏப்ரல் 10

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 பேர் போனால்கூட ஹெலிகாப்டர் அனுப்பவேண்டும் என்று விதி இருக்கிறது. அவர் எப்படி சொன்னார் என்று தெரியவில்லை. எழுதிக் கொடுத்தால், அதைப் பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்கச் சொல்கிறேன்.

(பிற்பகல் 1-50)

புதுக்கோட்டையைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் வெங்கடாசலம் அவர்கள் பேசும்போது சீர்மரபினர் நிலையைப் பற்றி கேட்டார்கள். புதுக்கோட்டையைப் பொறுத்தவரையில், சீர்மரபினர் பட்டியலில் சற்றேறக் குறைய 32 வகுப்பினரை சேர்த்து வைத்திருக்கிறோம். இல்லை என்று சொல்லவில்லை. அந்த வகுப்பைச் சார்ந்தவர்கள் வேறு இடத்திற்குப் போய் விட்டால் கூட, சான்றிதழ் கொடுக்கப்படவேண்டும். இடம் மாறினால் வகுப்பு மாறி விடாது. ஆளுக்குத்தான், வகுப்பிற்குத் தான் சான்றிதழ் கொடுக்கிறோமே தவிர, மாவட்டத்திற்குத் தான் சான்றிதழ் என்று கிடையாது. யாராவது தவறாக செய்திருந்தால் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரும்படி நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சங்கு எடுப்பதில் தனியார்களிடத்தில் கொடுத்து அவர்கள் கொள்ளை லாபம் அடித்துக்கொள்கிறார்கள் என்று திரு. உத்திராபதி அவர்கள் சொன்னார்கள். சங்கு எடுப்பதை தனியார்களிடத்தில் கொடுக்காமல், மேற்கு வங்க அரசுக்குத் தான் கொடுக்கிறோம் என்ற மகிழ்ச்சியான செய்தியை அவர்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே அவர்களுக்குக் குறை இருக்காது, பாராட்டுவார்கள் என்று கருதுகிறேன்.

குமரி மாவட்டத்திலுள்ள கவரா என்ற ஜாதியினர் பிற்படுத்தப் பட்டோர் பட்டியலில் இப்போது இருக்கிறார்கள். அவர்கள் தொடர் என் 45-லே வைக்கப்பட்டிருக்கிறது. சான்றிதழ் கொடுக்க மறுத்தால், யாரேனும் மறுத்திருப்பார்களேயானால், அதைப்பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் சான்றிதழ் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும். ஏற்கெனவே இருக்கின்ற பட்டியலில் 45 ஆம் இடத்தில் இருக்கிறது. குமரி மாவட்டத்தில் கவரா என்ற இனம் இதிலே சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 10] [திரு. ப. உ. சண்முகம்]

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடக்கவில்லை என்றும் தேர்தல் நடத்த வேண்டுமென்றும் சொன்னார்கள். ஏற்கனவே தேர்தல் நடந்த இடங்கள் எல்லாம் அப்படியே இருக்கின்றன. புதியதாக தேர்தல் நடக்கவில்லை. அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும். நிச்சயமாக எவ்வளவு விரைவாக செய்ய முடியுமோ, அவ்வளவு விரைவாக தேர்தலை நடத்தலாம் அரசுக்கு ஒன்றும் அதிலே பயம் கிடையாது. தேர்தலைப்பற்றி நிச்சயமாக கவனிக்கும். மாண்புமிகு உறுப்பினர் ஹேமச் சந்திரன் அவர்கள் பேசும்போது இறால் மீன் ஆராய்ச்சிப் பண்ணையைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். இறால் ஆராய்ச்சிப் பண்ணை வளர்ச்சியில் ஆராய்ச்சி தொடர்கின்றது. இவ்வாண்டு நன்னீரில் 6 இலட்சம் இறால் குஞ்சுகள், பல குளங்களில் இருப்பு செய்யப்பட்டு, நன்கு வளர்ந்து வருகிறது என்பதை அவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

விசாகப்பட்டினப் பகுதியில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் சார்பாக, 'தஞ்சை' மற்றும் 'நெல்லை' என்ற இரண்டு டிராலர்கள் இறால் மீன்களைப் பிடிக்கின்றன. நம்முடைய மீன் படகுகள் இரண்டு டிராலர்கள், விசாகப்பட்டினத்தில் வைத்திருக்கிறோம். அங்கே கிடைக்கின்ற மீன்களை பிடித்து எடுத்துக்கொண்டுபோய் விற்றுக் கொண்டிருக்கிறோம். இதனால் இந்த ஆண்டு மட்டும் நமக்குக் கிடைத்த நிகர இலாபம் ரூ. 73 இலட்சம்.

தமிழகத்திலுள்ள பனிக்கட்டி நிலையங்கள் பெரும் பாலானவை தனியாரிடத்தின்கீழ்தான் இருக்கின்றன. சில அரசுத் துறையின்கீழ் இயங்கி வருகின்றன. தமிழகத்தில் பனிக் கட்டி மற்றும் பதனிடும் நிலையங்கள் தேவையானவற்றை பூர்த்தி செய்கிறது. அதில் ஒன்றும் குறைபாடு இல்லை. எனவே அரசு தனியாக துவக்க வேண்டிய அவசியமில்லை என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்களுக்கு தெரிவிப்பது, நமது மாநிலத்தில் சுமார் 3,000 ஹெக்டேர் பரப் புள்ள சிறிய ஏரிகளில் தீவிர மீன்பிடிப்பு உற்பத்தித் திட்டம் அமல்

[திரு. ப. உ. சண்முகம்] [1987 ஏப்ரல் 10

படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் ஒரு ஏக்கரில் சராசரி 800 கிலோ மீன் உற்பத்தி செய்யப்படுவதால் இப்போது இருந்து வரும் நடைமுறையே தொடரலாம் என்று அரசு கருதுகிறது. சிறிய, பெரிய ஏரிகளில், பி.டபிள்யு. ஏரிகள் அல்லாது, மற்ற ஏரிகளில் அதை நாம் பயன்படுத்திவருகிறோம். இந்த முறை தொடர்ந்து இருக்கலாம் என்று இப்போது முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பரவர் என்ற இனத்தைச் சார்ந்த மக்கள் ஆதிதிராவிடர்களாகத்தான் கருதப்படுகிறார்கள். எண் 57-ல் இந்த இனம் முன்பே இடம் பெற்றிருக்கிறது. அப்படி சான்றிதழ் கொடுக்கத் தவறினால், இப்போது சொல்லப்பட்டிருக்கின்ற உத்திரவாதத்தை கேட்டு சான்றிதழ் பெற்றுக் கொள்ளலாம்.

அடுத்து மீனவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்ததில் 297 வீடுகள்தான் கட்டிக் கொடுக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வேணுகோபால் அவர்கள் ஒரு புள்ளிவிவரம் சொன்னார்கள். 1975-76-ஆம் ஆண்டு முதல் 1986-87-ஆம் ஆண்டு வரையில் 11,704 வீடுகளுக்கு அங்கிகாரம் செய்யப்பட்டு, 10,098 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. 1987-88 ஆம் ஆண்டு ரூ. 97 இலட்சம் செலவில் 510 வீடுகள் கட்டுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கொடுத்த புள்ளிவிவரம் 297 வீடுகள் தான் என்பது சரியல்ல. அதைத் திருத்திக் கொள்ளுமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

டீசல் பங்கைப் பொறுத்தவரையில் சென்னையிலே இராயபுரத்தில் 'டீசல் பங்க்' ஒன்று இருக்கிறது. மீனவர்களுக்கான படகுகளுக்குத்தான் டீசல் போடுவதற்கு அது இருக்கிறதே தவிர, வெளியாருக்குப் பயன்படுத்துவதற்கு இல்லை. மீனவர்களுக்காகத்தான் பயன்படுத்தி வருகிறோம்.

சென்னையிலே நைலான் வலை பின்னுவதற்கான நூல் உற்பத்தியைப் பற்றிச் சொன்னார்கள். இப்போது இந்தியாவிலே 9 தொழிற்கூடங்கள் நூல் உற்பத்தி செய்கின்றன. நமது



1987 ஏப்ரல் 10] [திரு. ப. உ. சண்முகம்]

நாட்டில் வலை நூலுக்குப் பஞ்சமில்லை. எனவே அதற்கும் குறைவில்லாமல் இருக்கின்ற காரணத்தால் அரசு அதிலே இப்போதைக்கு ஒன்றும் செய்வதற்கில்லை. மேலும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தங்கள் தொகுதிகளின் தேவைகளை எல்லாம் குறிப்பிட்டார்கள். பேசிய உறுப்பினருக்கெல்லாம் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக மீனளத் துறையில் மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு இந்த அரசு எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகிறது. மீனவர் ஆலோசனை குழுவைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதை புதுப்பிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற உத்திரவாதத்தை இப்பொழுதே நான் அவர்களுக்குத் தருகிறேன். அதைப்பற்றிய முழு விவரம் என்னிடத்தில் இப்போது இல்லை. இருந்தாலும் நலிந்துபோன மீனவர்கள் கடன், யாருக்குத் தள்ள வேண்டுமோ அதை தள்ளுவது பற்றி அரசு பரிசீலிக்கும் என்ற உத்திரவாதத்தை அளிக்கிறேன். அடுத்தமுறை அவையிலே இதுபற்றி வரும் போது எத்தனை பேர்களுக்கு தள்ளபட்டிருக்கிறது என்ற முழு விவரத்தைச் சேர்த்துத் தருகிறேன் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்டோர் நிலையைப் பொறுத்தமட்டில் பிற்படுத்தப்பட்டோருக்காக அந்தத் துறையில் ஒரு தனிக் கழகமே துவக்கி, மேம்பாடு கழகம் என்று உருவாக்கி அவர்களுக்கு நிதியுதவி அளித்து, கடன் கொடுத்து ட்ரேட் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொல்லி இந்த ஆண்டு 40 இலட்சம் ரூபாய் அதற்காக அரசினுடைய வட்டியில்லாக் கடனாக நாம் கொடுத்து வைத்திருக்கிறோம். இந்த ஆண்டு செயல்படும் என்று நம்புகிறேன். பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் விடுதிகளில் மாணவர்களுக்கு கொடுக்கப்படுகின்ற பணத்தை அதிகப்படுத்த வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். சமீபத்தில் ஒரு மாதத்திற்கு முன்பு தான், இரண்டு மாதங்களுக்கு முன்பு தான் முதலமைச்சர் அவர்கள் மாற்றியமைத்து இருக்கிறார்கள். இப்போது மாற்றியமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். இருக்கின்ற விடுதிகளில் எல்லாம் கொடுக்கின்ற பணம் போதும்

என்று அனைவரும் ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். விடுதிகளில் சோதனை போடுகின்ற சட்டமன்ற உறுப்பினர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம் ஒவ்வொரு விடுதியிலும் ஒவ்வொரு நாளும் என்னென்ன சாப்பாடு போட வேண்டும் என்ற பட்டியலை வெளியிலே போர்டு போட்டு வைத்திருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த விளம்பரப் பலகையில் இருப்பதுபோல் சாப்பாடு போடுகிறார்களா என்பதை, சட்டமன்ற உறுப்பினர்கள் போய் சோதிக்கும்போது மாணவர்களை விசாரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எங்கேயாவது குறை இருந்தால் அதைப்பற்றி அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். பிற்படுத்தப்பட்டோருக்காக இது வரையில் தமிழ்நாட்டில் துவக்கப்பட்டிருக்கின்ற விடுதிகள் 558 ஆகும். வருட வாரியாக என்னிடத்தில் பட்டியலே இருக்கிறது. இதில் அதிகமாக துவக்கப்பட்ட ஆண்டு 1971-72 ஆகும். 60 துவக்கியிருக்கிறார்கள். பிறகு 43, 30, 34, 19, 20, 15 என்று இருக்கிறது. மொத்தம் 558 இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் இதுபற்றி என்னிடத்தில் நேற்றுதான் கேட்டார்கள். எவ்வளவு இருக்கிறது, எவ்வளவு துவக்க வேண்டும் என்று கேட்டார்கள். புள்ளிவிவரத்தை கொடுத்திருக்கிறேன். கொடுத்ததற்கு பிறகு முதல்வர் இந்த ஆண்டு ஆண், பெண் கல்லூரி, பள்ளி மாணவர்களுக்கு சேர்த்து ஒட்டுமொத்தமாக 113 பிற்படுத்தப்பட்ட விடுதிகளைத் திறக்க வேண்டும் என்று ஆணையிட்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இந்த ஆண்டு 113 பிற்படுத்தப்பட்டோர் விடுதிகள் திறக்கப்படும். அதே போல இவ்வாண்டு கல்லூரி மாணவிகளுக்காக புதியதாக 5 விடுதிகள் கட்டிடம் கட்டப்படும். கட்டிக் கொடுக்கப்படும். பள்ளி படிக்கின்ற மாணவர்களுக்கு 10 விடுதிகள் கட்டிக் கொடுக்கப்படும். தனிப்பட்ட ஒருவருடைய வீட்டிலே போய் தங்கிப் படிக்கும்போதும், வாடகை இடத்திலும் வசதிகள் மிகவும் குறைவாக இருப்பதால் கல்லூரியில் படிக்கின்ற பெண்களுக்கு பல தொந்திரவுகளும் தொல்லைகளும் ஏற்படுகின்றன என்ற காரணத்தால் விடுதிகளை கட்ட வேண்டும் என்ற முடிவு எடுத்து ஐந்தும் மாணவிகளுக்கே கட்டிவிட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்





அவை இந்த ஆண்டு செய்து முடிக்கப்படும். இந்தத் துறையைப் பொறுத்தமட்டில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வலுவான குரலிலே எதுவும் எதிர்ப்பு தெரிவிக்காத காரணத்தினால் வெட்டுத் தீர்மானத்தை அவர்களே பெருந்தன்மையோடு திரும்பப் பெற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். இதில் மேற்கொண்டு எந்த சந்தேகத்திற்கும் வழியில்லை. நான் விளக்கம் தந்தது அவர்கள் பேசியதற்கு பதிலை குறிப்பாக தந்திருக்கின்றேனே தவிர வேறு எதுவும் இல்லை என்று தெரிவித்துவிட்டு தீர்மானத்தை திரும்பப் பெறவேண்டும் என்று பேரவைத் தலைவர் அவர்களே தங்கள் மூலமாக உறுப்பினர்களை கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கின்றேன்.

(பிற்பகல் 2-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் சிறிது நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

**திரு. எஸ். வேணுகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் டீசல் பங்கைப் பற்றிச் சொன்னது, 'லாரிகளுக்குப் போடவேண்டும் என்று சொல்லவில்லை. நான் அங்கே இருக்கின்ற எல்லா விசைப் படகுகளுக்கும் போட்டால்தான் அந்த வாரியத்தின் வருமானம் உயரியாகும் என்று தான் சொன்னேனே தவிர, லாரிகளுக்குப் போடவேண்டும் என்று சொல்லவே இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொண்டு, வீடுகளைப் பொறுத்தவரையில், 1986-87-இல் 11,400 வீடுகள் கட்டப்படும் என்று இருக்கிறது. அதில் 9,738 வீடுகள் என்று கொள்கைக் குறிப்பிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு, 10,035 போனால் 297 தான். புள்ளிவிவரத்தோடு நான் கையிலே வைத்திருக்கிறேன். அமைச்சருக்கு தவறான தகவல் தரவில்லை என்பதைத் தான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தவறான தகவல், திருத்திக்கொள்ளவேண்டும் என்று நான் சொன்னேன். நான் படித்ததும் புத்தகத்திலிருந்து தான் படித்தேன், விவரங்களைக் கொடுத்து இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் டீசல் பங்கைப் பற்றிச் சொன்னார்கள். கூட்டுறவுத் துறையிலே

இயங்குகின்ற அது, அதற்காகத் துவக்கப்பட்ட போது. அந்த நிபந்தனைகளின் கீழ் அந்த உரிமம் பெற்றிருக்கிற காரணத்தால், தனியாருக்கு வழங்கமுடியுமா என்பது சந்தேகமாக இருக்கிறது. முடியும் என்றால் வழங்கலாம். ஆனால் தனியாருக்குக் கொடுப்பது அவ்வளவு சரியாக இருக்காது என்று நினைக்கிறேன். அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 113 பிற்பட்டோர் நல இல்லங்கள் திறக்கப்படும் என்று அறிவித்தமைக்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் நன்றி. அதேநேரத்தில், மைய அரசினுடைய கட்டுப்பாட்டின் கீழ் இருக்கக்கூடிய நம்முடைய சென்னை மீன் பிடிக்கும் துறைமுகம், நம்முடைய மீனளத் துறைக்கே திரும்பப் பெறுகிற முயற்சியில் மாநில அரசு ஈடுபடுமா என்பதைப் பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றி மாநில அரசு, மைய அரசிற்கு எழுதி இருக்கிறது. மீன் பிடித்துறைமுகத்தை மாநில அரசிற்குத் தான் கொடுக்கவேண்டும் என்று எழுதியிருக்கிறோம். இன்னும் மைய அரசிடமிருந்து அதற்குரிய பதில் வரவில்லை.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்** : பேரவைத் தலைவர் அவர்களே, மண்டபத்திலே செயலாற்றி வரும் முத்துப் பண்ணை ஸ்பிக் நிறுவனத்திற்கு கை மாற்றப்படுவதாக சொல்லப்படுவது உண்மையா ? அப்படியானால், அதிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளிகளுக்கு வேலை உத்தரவாதம் செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : பேரவைத் தலைவர் அவர்களே, முத்துக் குளிப்பதைப் பற்றி, நாமும், ஸ்பிக் நிறுவனமும் சேர்ந்து அதைச் செய்யலாம் என்று முடிவு எடுத்து, அதற்காக ஒரு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் முத்துக்கள் கடலின் அடியில் மூன்று இலட்சம் முத்துக்கள்—



நத்தைகள் இருக்கும் என்று ஒரு ஆராய்ச்சியின் மூலமாகத் தெரிந்து—நத்தைகளை எடுத்து செயற்கை முத்துக்களை வைக்கவேண்டும் : நாம் அவைகளை எடுத்துக்கொண்டு போய் மண்டபத்திலே இருக்கின்ற ஒரு தொழிற்சாலையில் செயற்கை முத்துக்களை வைத்து அதன் பிறகு மீண்டும் கொண்டு போய் அதைக் கடலிலே விட்டு, அது மீண்டும் வளரவேண்டும். வளர்ந்ததற்குப் பிறகு முத்தை எடுக்கவேண்டும். ஆனால் எதிர்பார்த்தபடி கீழே 3 இலட்சம் என்று சொன்னார்கள்—கீழே இல்லை. இல்லாது போன குறையினால் முத்துக்கள் எடுப்பதற்கு—அதிகம் நாம் பிடிப்பதற்கு வழியில்லாததன் காரணத்தால், தற்காலிகமாக அதைத் தள்ளி வைத்து இருக்கிறோமே தவிர, ஸ்பிக் நிறுவனத்திடம் கொடுத்துவிட்டோம் என்பது சரியல்ல. நாமும், ஸ்பிக் நிறுவனமும் சேர்ந்து தான் இதைச் செய்து கொண்டிருக்கிறோம்.

**திரு. பொ. உத்திராபதி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களிடம் நான் எதிர்பார்ப்பது, மத்திய உவர் நீர் மீன் நிலையம்—தலைமையகம் நாகையிலே அமைக்கிறதைப் பற்றி ஒரு விவரம் கேட்டேன். அதுசம்பந்தமாக . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : சென்னையிலேயே அதை ஆரம்பிப்பதற்கு அரசு அதைப் பற்றி கடிதம் ஏற்கனவே எழுதியிருக்கிறது. இப்போது அவர்கள் இடம் கேட்டிருக்கிறார்கள். அதைப் பற்றி இன்னும் ஒரு இரண்டு, மூன்று நாட்களில் முழுத் தகவலும் மத்திய அரசாங்கத்திற்குப் போய்விடும். அநேகமாக அடுத்த ஆண்டு துவங்குவதற்கான ஏற்பாடு நடக்கும் என்று நம்புகிறேன்.

**திரு. அ. வெங்கடாசலம்** : தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலிருந்து புதுக்கோட்டை மாவட்டத்திற்கு பல பகுதிகளில் குடியேறி இருக்கக்கூடிய காட்டுநாயக்கர்களுக்கு, புதுக்கோட்டையில் அந்த காட்டுநாயக்கர் சான்றிதழ் வழங்கப்படவில்லை. எனவே, அதைத் தயவுசெய்து—அந்த காட்டுநாயக்கர் சான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நான் அதைத்தான் துவக்கத்திலேயே சொன்னேன். ஒரு ஜாதியினர் ஒரு இடத்தை விட்டு இடம் மாறிவிட்டால், ஜாதி மாறிவிடாது. இடம் மாறி விட்டாலே ஜாதி மாறிவிடப் போவது இல்லை. அப்படி என்று சொன்னால், வாழுகின்றவர் தாழ்த்தப்பட்ட மக்கள்களை யெல்லாம் கொண்டுவந்து அக்ரஹாரத்தில் குடியேறவிட்டால் அவர்கள் ஐயர்களாக ஆகிவிட முடியாது. ஒத்துக்கொள்ள மாட்டார்கள், அந்தச் சமுதாயம். எனவே, அப்படி இல்லை. எனவே தான் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த இடத்திலிருந்து போய்விட்டாலும் ஜாதிச் சான்றிதழ் மனிதனுக்குத் தானே தவிர, இடத்திற்கு அல்ல. அவர்களுக்கு ஏற்கெனவே கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் எனக்கு செயற் குறிப்பு வந்திருக்கிறது. இல்லையெனில், கொடுக்கும்படி ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு.

### கோரிக்கை எண். 21—மீனளம்.

திருவாளர்கள் பொ. உத்திராபதி, மு. இராசாங்கம் ஆகியவர் களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண்: 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ், ரூ. 6,94,29,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.



### கோரிக்கை எண்: 32—பின் தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன்.

திரு. சோ. மா. இராமச்சந்திரன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாக கருதப்பெற்றது.

திருவாளர்கள் எ. எஸ். ஏ. ஆறுமுகம், பொ. உத்திராபதி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண்: 32—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 13,62,33,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (11—4—1987) காலை 10.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.05 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

72. 1984-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொலைக் காட்சியில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் (காணொலிச் சுருள் பேழை) திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) விதி களில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 9—7—1986 ஆம் நாளிட்ட 1745 ஆம் எண் அரசாணையில் வெளி

பிடப்பட்ட அறிவிக்கை. (1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொலைக் காட்சியில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் (காணொலிச் சுருள் பேழை) திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/1984) 22 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

73. 1985-86-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் மூன்றாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ்).

**(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.**

142. கோரிக்கை எண் 21—மீனளம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88. (தமிழ், ஆங்கிலம்).

143. மீன்வளத்துறையின் செயல்வினை முறைத் திட்டம், 1987-88. (ஆங்கிலம்).

144. கோரிக்கை எண். 32—பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88. (தமிழ், ஆங்கிலம்).

145. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் செயல்வினை முறைத் திட்டம், 1987-88. (ஆங்கிலம்).

146. 1976-77-ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்கு களின் மீதும் அவ்வாண்டிற்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் துறைகள் பற்றிய அறிக்கையின் மீதும் பொதுக் கணக்குக் குழு (1980-82) அளித்த பதினாறாவது அறிக்கை (ஏழாவது பேரவை) யில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்தொன்றாவது அறிக்கை.

147. 1973-74-ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் துறைகள் பற்றிய அறிக்கை மீது பொதுக் கணக்குக் குழு



அளித்த எட்டாவது அறிக்கை (ஆறாவது பேரவை) மற்றும் இருபத்தி நான்காவது அறிக்கை (ஏழாவது பேரவை) களில் அளித்துள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேலும் எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்தி ரெண்டாவது அறிக்கை.

148. அரசு உறுதிமொழிக் குழுவின் நான்காவது அறிக்கை.

## இணைப்புகள் I

(82 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 370-க்கான விடையைக் காண்க.)

அ.1. மாநிலங்களிடை உறவு மன்றம் (Inter-State Council) ஒன்றை நிறுவினால், மாநிலங்கள் ஒன்றோடொன்று அடிக்கடி சந்தித்துக் கொள்ளவும், தங்களுக்கிடையே எழும் பொதுவான பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக் கொள்ளவும் ஏதுவாக அமையுமென இந்த அரசு கருதுகிறது என்று பலமுறை மைய அரசுக்குத் தெரிவித்திருந்ததோடு, அத்தகைய மன்றமொன்றை நிறுவுமாறும் மைய அரசை இந்த அரசு வற்புறுத்தி வந்துள்ளது. இதற்கிடையே, மைய அரசு, மைய-மாநில உறவுகளைப்பற்றி ஆராய ஓய்வு பெற்ற நீதிபதி ஆர். எஸ். சர்க்காரியா அவர்கள் தலைமையில், ஆணையொன்றை அமைத்துள்ளது என்றும், அரசமைப்பின் 263 ஆம் உறுப்பில் குறிப்பிடப் பட்டுள்ள மாநிலங்களிடை உறவு மன்றத்தைப் பற்றியும் அந்த ஆணையம் நிச்சயமாகப் பரிசீலனை செய்யும் என்றும் இந்த அரசுக்குத் தெரிவித்தது. எனவே, இந்த அரசு மேற்சொன்ன ஆணையத்திடம் மைய-மாநில உறவுகள் பற்றிய இந்த அரசின் கருத்தையும் மற்றும் நீதிபதி ஆர். எஸ். சர்க்காரியா ஆணையத்தின் வினாப்பட்டியலுக்கான பதில்கள் அடங்கிய அறிக்கையையும், 1985-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் அளித்தது. அந்த அறிக்கையில், மாநிலங்களிடை உறவு மன்றம் பற்றிய பொருளையும் ஆராய்ந்து இந்த அரசு தனது கருத்தினை தெரிவித்திருக்கின்றது. அதாவது மாநில அரசுகளுக்கிடையிலான குழு ஒன்றை அமைப்பதற்கு அரசமைப்பின் 263 ஆம் உறுப்பில் தனி வகைமுறை இருந்தபோதிலும், அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியதிலிருந்து நாளது தேதிவரையிலும், அத்தகைய குழு ஒன்றை ஏற்படுத்துவது பற்றி எண்ணியோ, கருதியோ பார்க்காத காரணத்தால் அத்தகைய குழு ஒன்றை அமைப்பதற்கு வகை செய்கின்ற அரசமைப்புச் சட்டத்தின் 263-ஆம் உறுப்பையே முழுமையாக நீக்கி (எடுத்து) விடலாம் என்று இந்த அரசு மேற்சொன்ன ஆணையத்திற்குப் பரிந்துரை செய்திருக்கின்றது.



2. மேலே குறிப்பிடப்பட்ட சூழ்நிலைகளிலும், அரசமைப்பின் 263-ஆம் உறுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாநிலங்களிடை உறவு மன்றமொன்று அமைக்கப்படுவதற்கு வாய்ப்பு இல்லை என்பதோடு, அப்படியே அமைக்கப்பட்டாலும் மக்களின் விருப்பத்திற்கிணங்க செயல்படுத்தச் செய்வதற்கு வாய்ப்பு எதுவும் இல்லை என்பதாலும் மைய—மாநில அரசுகளுக்கிடையி லான உறவுகள் குறித்த ஆலோசனைக் குழு (Advisory Commission on Inter-State Governmental Relations) என்கின்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தினால். பல்வேறு மாநில அரசுகளுக்கிடையேயும் மற்றும் மைய அரசுடனும் ஒருங்கிணைப்பையும் ஒத்துழைப்பையும் மேம்படுத்துவதற்குள்ள விரைவான வழிவகைகளில் ஒன்றாக அது அமையும் என்பது இந்த அரசின் கருத்தாகும்.

ஆ. கேள்விக்கு இடமில்லை.

(239 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க).

மீன்வளத் துறை.

கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88.

1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரை மற்றும் ஆறுகள் நீர்த்தேக்கங்கள், கால்வாய்கள், குளங்கள், உவர் நீர்ப்பரப்புகள் போன்ற 3.69 இலட்சம் ஹெக்டேர் பரப்புள்ள உள்நாட்டு நீர் நிலைகளையுடைய தமிழகத்தில் பலதரப்பட்ட உள்நாட்டு மற்றும் கடல் மீன்வளத்தைப் பெருக்குவதற்கான வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன. தமிழ்நாட்டிலுள்ள சுமார் 4.64 இலட்சம் கடல் மீனவர்களில் சுமார் ஒரு இலட்சம் மீனவர்கள் மீன்பிடி தொழிலில் மும்மரமாக ஈடுபட்டுள்ளனர். மேலும், 60,000 பேர்கள் மாநிலத்தில் உள்நாட்டு மீன் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர்.

1.2. மீன்வள மேம்பாட்டுத் திட்டங்கள் மீன்துறை மற்றும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின்மூலம் செயலாக்கப்படுகின்றன. மீன்துறை மாநிலத்தில் பயனளிக்கக்கூடிய மீன்வள அபிவிருத்தி பற்றிய கொள்கைகள் குறித்து அரசுக்கு ஆலோசனை கூறும் பொறுப்பேற்றுள்ளது. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் குறிப்பாக கடல் மீன்வளத்தைப் பெருக்குதல் மற்றும் உள்நாட்டு நீர்த்தேக்கங்களில் மீன்பிடித்து அவைகளை விற்பனை செய்வதில் முக்கிய கவனம் செலுத்துகிறது. மாவட்ட அளவில் இயங்கும் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் உள்நாட்டு மீன்வளத்தை பெருக்குவதில் கவனம் செலுத்துவதுடன், மீனவர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள், கிராமங்களில் கூட்டுறவின் மூலம் மீனவர்களின் முன்னேற்றத்திற்கு வகை செய்கிறது.

1.3. நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு சுமார் 15 சதவீதமாகும். 1985-86-ஆம் ஆண்டில் நாட்டின் கடல் பொருள் ஏற்றுமதி மூலம் ஈட்டப்பட்ட மொத்த அந்நிய செலாவணியில் தமிழ்நாட்டின் பங்கு ரூ. 60 கோடி ஆகும். அடுத்தடுத்த



ஐந்தாண்டு திட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்தியதன் மூலம், தமிழ்நாட்டில் மீன் உற்பத்தி ஐந்து மடங்கு அதிகரித்துள்ளது: 1951-52-ல் மீன் உற்பத்தி 81,700 டன்னிலிருந்து 1986-87 இறுதியில் 4.6 இலட்சம் டன்னாக உயருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 10 ஆண்டுகளில் மீன் உற்பத்தி 30 சதவீதம் அதிகரித்துள்ளது. 1977-78-ல் 3.55 இலட்சம் டன்னிலிருந்து 1986-87-ல் 4.60 இலட்சம் டன்களாக உயர்ந்துள்ளது.

2. **மீன்வளம் குறித்த அரசின் கொள்கை :**

2.1. கடல் வளத்திலிருந்து மீன் உற்பத்தியை பெருக்க உதவி புரிவது ஒரு முக்கியமான குறிக்கோளாகும். பல்வேறு இடங்களிலுள்ள மீன்வளம், அவற்றை பிடிப்பதற்கு தேவையான பல்வேறு வகையான கலன்கள், ஆகியவற்றை மீனவர்களின் தேவைக்கேற்ப அளிப்பதன்மூலம் மேற்கண்ட குறிக்கோளை அடையலாம். எனவே, வரவிருக்கும் ஆண்டில் பலதரப்பட்ட மீனவர்களும் உற்பத்தியையும், தங்களுடைய வருவாயையும் பெருக்கிக் கொள்ளும் நோக்குடன் பல்வேறு திட்டங்களை மீனவர்களுக்கு அளிக்க இருக்கிறோம். ஒருபுறம் தற்போது உபயோகத்திலுள்ள கட்டுமரங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதுடன் மறுபுறம் அவற்றில் சிலவற்றையாவது இயந்திரமயமாக்க வேண்டும். தற்போது மாநிலத்தில் சுமார் 38,000 கட்டுமரங்கள் உபயோகத்திலுள்ளன. துவக்க முதலீடு குறைவாகவும், மீனவர்களுக்கு உடனடியாக வேலை வாய்ப்பு அளிக்கும் கட்டுமரங்கள் மிகவும் உபயோகமான ஒரு கலன். எனவே, வரும் சில ஆண்டுகளுக்கு கட்டுமரங்கள் தொடர்ந்து உபயோகத்திலிருந்து வரும் நாட்டுப் படகுகளையும் கட்டுமரங்களையும் இயந்திரமயமாக்குவதற்கு 200 நாட்டுப் படகுகளில் வெளிப் பொருத்தும்/உட்பொருத்தும் இயந்திரங்களை பொருத்துவதற்கு அரசு மானியம் வழங்குகிறது. மேலும், கடல் மீன் வளத்தை பெருக்கும் நோக்குடன் கடல் பொருள் ஏற்றுமதிக் கழகம் மற்றும் இந்திய அரசின் உதவிபெறும் திட்டங்களின் மூலம் நாட்டுப் படகுகளை இயந்திரமயமாக்கும் சாத்தியக்கூறுகளை அரசு ஆராய்ந்து வருகிறது. நாற்பது கரையேற்றும் படகுகளை அறிமுகப்படுத்தவும் பெர்ரோ சிமெண்ட் படகுகளின் திறனை சோதிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. நாட்டுப் படகுகளையும் கட்டுமரங்களையும் இயந்திரமயமாக்குவதற்கு, வெளிப்பொருத்தும்/உட்

பொருத்தும் இயந்திரங்களை வாங்குவதற்கு அரசு மானிய உதவி அளித்து வருவதுடன், நாட்டுப் படகுதாரர்களுக்கு 200 இயந்திரங்கள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது தவிர கடல் பொருள் ஏற்றுமதிக் கழகம் மற்றும் இந்திய அரசின் உதவியுடன் நாட்டுப் படகுகளை இயந்திரமயமாக்கும் திட்டம் இவ்வாண்டிலும் தொடரப்படும்.

2.2. கரையோரங்களில் இறால் மீன்களைப் பிடிப்பதோடு உவர்நீர்ப் பரப்புகளில் இறால் உற்பத்தி செய்ய இயலும் என்ற விழிப்புணர்ச்சி உண்மையிலேயே மீனவர்களிடையே ஏற்பட்டுள்ளது. இறால் உற்பத்தி செய்வதன் முக்கியத்தை கருத்திற் கொண்டு, உவர்நீர் பரப்புகளில் இறால் உற்பத்தி செய்வதற்கான பல புதிய திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. உவர் நீர் பரப்புகளில் இறால் உற்பத்தி மற்றும் இறால் குஞ்சுகள் உற்பத்திப் பண்ணைகளை நிறுவ அரசு ஊக்கமளித்து வருகிறது.

2.3. தமிழ்நாட்டிலுள்ள உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் உற்பத்தியைப் பெருக்குவதும் அரசின் குறிக்கோளாகும். இதில் மீன் குஞ்சுகளின் பற்றாக்குறை ஒரு பெரிய தடையாக இருப்பதால் மீன் குஞ்சுகளின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மேலும் பல்வேறு இடங்களில் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தென் ஆற்காடு மற்றும் செங்கற்பட்டு மாவட்டங்களில் உள்ள நீர்த்தேக்கங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கும் இந்த அரசு கவனம் செலுத்தி வருகிறது. மீனவர் கூட்டுறவு சங்கங்கள் லாபகரமாக இயங்க அவற்றின் தொழில் திறனை பலப்படுத்த தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து அரசு நிதியுதவி பெற்று வருகிறது.

2.4. நன்கு வரையறுக்கப்பட்ட யுத்திகளுடன் நல்ல முறையில் உருவாக்கப்பட்ட திட்டங்கள், அவற்றை சரியான முறையில் செயல்படுத்துவது ஆகியவற்றின் மூலம் மீனவர்கள் முன்னேற்றமடையச் செயல்படும் நோக்கமாகக் கொண்டது. மீன்வளம் குறித்த அரசின் கொள்கைகள் கீழ்க்காணும் குறிக்கோள்களைக் கொண்டது :—



(அ) மீனவர்களின் சமூகப் பொருளாதாரத்தை மேம்படுத்தி அதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் ;

(ஆ) நுகர்வோருடைய உணவின் புரதசத்தை அதிகரித்தல் ;

(இ) கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்துதல் ;

(ஈ) கிராம மக்களுடைய வருவாய் வளர்ச்சிக்கு உத்வேகமளித்தல் ;

(உ) மாநிலத்தின் அந்நிய வருவாயை அதிகரித்தல்.

3. ஏழாவது திட்டவினை முறைத்திறன் :

3.1. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ரூ. 2,400 இலட்சங்கள் முதலீடு செய்யப்படவுள்ளது. இத்திட்டம் 1989-90 இறுதியில் மீன் உற்பத்தியை 5.20 இலட்சமாக உயர்த்தும் நோக்குமுடையது. இத்திட்டத்தின் முதல் இரண்டு ஆண்டுகளில் மீன் உற்பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| அண்டு. | | கடல் மீன் உற்பத்தி. | உள்நாட்டு மீன் உற்பத்தி. | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| | | | (இலட்சம் டன்களில்). | |
| 1985-86 | .. | 2.45 | 1.40 | 3.85 |
| 1986-87 | .. | 2.80 | 1.80 | 4.60 |

1987-88 ஆம் ஆண்டிற்கு 4.80 இலட்சம் டன் மீன் உற்பத்தி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (2.9 இலட்சம் டன் கடல் மீன் மற்றும் 1.9 இலட்சம் டன் உள்நாட்டு மீன்).

3.2. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் குறிக்கோளை அடைய கையாண்டு வரப்படும் யுக்திகள் பின்வருமாறு :—

1. மீன் உற்பத்தியை அதிகரிக்க தொன்றுதொட்டு பயன்படுத்தப்பட்டு வரும் கட்டுமரங்களுடன் கூடுதலாக எளிதில் கரையேற்றக்கூடிய கண்ணாடியிழை படகுகளை வாங்க மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு மானியத் தொகை வழங்குதல் ;

2. சிறுதொழில் மீனவர்களால் இயக்கப்பட்டுவரும் பழமையான மீன்பிடிக் கலன்களின் இயக்கத்திறனை அதிகரித்து அதன் மூலம் அதிகமாக மீன்பிடித்து வருவாயை பெருக்க ஏதுவாக்க, மீனவர்கள் படகின் உட்புறம் மற்றும் வெளிப்புறம் பொருத்தக் கூடிய இயந்திரங்களை வாங்குவதற்கு மானிய உதவி செய்தல்;

3. அனைத்து முக்கிய மீன் இறங்கு தளங்களிலும், மீன் பிடித்துறைமுக தங்குதள வசதிகள், பனிக்கட்டி உற்பத்தி மற்றும் பதனிடும் கூடங்கள், ஏலமிடும் கூடம், சிப்பக்கூடம் ஆகிய உள்ளமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்;

4. தனிப் பொருளாதார கடல் மண்டலத்தின் உள் ஆழ் கடல் மீன்பிடிப்பை முனைப்புடன் தீவிரப்படுத்த தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் செயற்திறனை அதிகரித்தல்;

5. உவர்நீர் நிலைகளை சிறப்பாக பயன்படுத்துதல் மற்றும் உவர்நீர் பண்ணைகளை விரிவாக்குதல்;

6. உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் உற்பத்திகளை உச்ச நிலைக்கு உயத்த அனைத்து பாசனத்திற்கு உதவும் மற்றும் பாசனத்திற்கு உதவாத நீர்நிலைகளில் தீவிர மீன் உற்பத்தி முறைகளைக் கையாளுதல்;

7. மீன் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் வளர்ச்சிப் பணியை ஊக்குவிக்கும் நோக்கத்திற்கு நிதி நிறுவனங்களிடமிருந்து அதிக அளவில் நிதி கிடைக்க ஊக்கம் அளித்தல்;

8. மீன்பிடித் தொழில், மீன் விற்பனை மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களை மேற்கொள்வதற்கு உதவி செய்யும் வகையில் மீனவர் கூட்டுறவு சங்கங்களைப் பயன்படுத்துதல்;

9. அடிப்படைத் தேவையான வீட்டுவசதி, இணைப்புச் சாலைகள், குடிநீர் வசதி மற்றும் இதர வசதிகளை மீனவர் கிராமங்களில் ஏற்படுத்துதல் ஆகியவையாகும்.

3.3. தமிழ்நாட்டில் மீன்வள அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்த ஏழாவது திட்ட முதலீடான ரூ. 2,400 இலட்சத்தில் முதலிரண்டு ஆண்டுகளில், பல்வேறு மீனள வளர்ச்சித் திட்டங்களை செயலாக்க செலவழிக்கப்பட்டிருக்கும் செலவினத் தொகை:





(ரூபாய் இலட்சத்தில்.)

| | | |
|---|---|---|
| 1985-86 | | 301.41 |
| 1986-87 | | 472.87 |
| | மொத்தம் .. | 774.28 |

1987-88 ஆம் ஆண்டுத் திட்டத்தில் ரூ. 671.06 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டுத் திட்டத்தில் கடல் உள்நாட்டு மற்றும் உவர்நீர் மீன் உற்பத்தியைப் பெருக்குவதற்கு முக்கியத்துவம் அளிப்பதுடன் மீனவ சமுதாயத்தின் சமூகப் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கான திட்டங்களை செயல்படுத்துவதும் அடங்கும். இதில், புதிய திட்டங்களை செயலாக்க ரூ. 53.19 இலட்சம் ஒதுப்பட்டுள்ளதும் அடங்கும். மீதித் தொகை தற்போது செயலாக்கப்படும் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டதாகும். இதைத் தவிர திட்டத்தில் சேரா பணிகளின் செயலாக்கத்திற்கு ரூ. 441.85 இலட்சம் செலவிடப்படும்.

1987-88-ல் செயலாக்கப்படவிருக்கும் திட்டங்களின் விவரம் சுருக்கமாக பின்வருமாறு:—

கடல் மீன் உற்பத்தியைப் பெருக்குதல்:

4.1. நாட்டுப் படகுகளை இயந்திரமாக்குதல், விசைப் படகுகள் மற்றும் ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளை அறிமுகப் படுத்துதல், புதிய மீன்பிடி கருவிகளை விளம்பரப்படுத்துவது, மீன்பிடித் துறைமுகம் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவது ஆகியவற்றின் மூலம், கடல் மீன் உற்பத்தியை வெகுவாக அதிகரிக்க இயலும்.

4.2.1. மீன்பிடிப் படகுகளை இயந்திரமயமாக்குதல்:

ஏழாவது திட்டக் குறியீடான 500 கரையேற்றும் படகுகளில் திட்ட முதலிரண்டு ஆண்டுகளில் அதாவது 1985-86 மற்றும் 1986-87 ஆம் ஆண்டுகளில் 20 கரையேற்றும் படகுகள் வழங்கப் பட்டுள்ளன. இன்னும் 40 கரையேற்றக்கூடிய படகுகள் வழங்க, 1987-88 ஆம் ஆண்டுத் திட்டம் வழிவகுக்கிறது. இத்திட்டத்தின்

கீழ், படகின் 20 சதவீதம் விலையை அரசு மானியமாக ஏற்றுக் கொள்கிறது. 20 சதவீதம் மீனவரால் செலுத்தப்பட வேண்டும். மீதம் 60 சதவீதம் வங்கிகளிடமிருந்து கடனாக மீனவர் பெற வேண்டும்.

4.2.2. நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீனவர்களுக்கு விசைப் படகுகள் வழங்கும் திட்டம் நடப்பு ஆண்டில் மீண்டும் புதுப்பிக்கப்படவுள்ளது. தொடக்க நிலையாக 1987-88-ல் 50 மரத்தினாலான விசைப் படகுகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வகைப் படகுகள் அனைத்து மீன்பிடி முறைகளிலும் மிகவும் செயல் திறனுடன் இயங்குவதால் இவற்றை பெற மீனவர் அதிக விருப்பம் தெரிவிக்கின்றனர். 20 சதவீதம் மீனவர்களிடமிருந்தும் 60 சதவீதம் வங்கி உதவியையும் பெற இத்திட்டம் வழி வகுத்துள்ளது. மீதம் 20 சதவீதத் தொகையை அரசு மான்யமாக அளிக்கும். படகின் விலையில் 20 சதவீதம் பயனடையும் மீனவர்களிடமிருந்தும், 60 சதவீதம் வங்கிக் கடனும், மீதமுள்ள 20 சதவீதம் அரசு மானியமாக வழங்கவும் இத்திட்டம் வகை செய்கிறது. மானியத் தொகை வழங்கும் பொருட்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 25.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.2.3. தமிழ்நாட்டின் மொத்த கடல் மீன் உற்பத்தியில் சுமார் 70 சதவீதம் மீனை தொன்றுதொட்டு பயன்படுத்தப் பட்டுவரும் 38,000 நாட்டுப் படகுகளும் வள்ளங்களும், கட்டு மரங்களும் பிடிக்கின்றன. பெரும்பான்மையான மீனவர்களுக்கு சொந்தமான படகுகள் இல்லை. அவர்கள் படகு உரிமைதாரர்களிடமிருந்து பிடித்த மீனை பங்கிட்டுக்கொள்ளும் முறையில், படகுகளை பெறுகின்றனர். இதனால் படகு உரிமைதாரர்கள், பட்ட மீனில் பெரும் பகுதியை எடுத்துக் கொள்வதால் ஈட்டப்பட்ட வருவாயில் ஒரு சிறு பகுதியே மீனவர்களுக்குக் கிடைக்கிறது. இம்மாதிரி மீனவர்களுக்கு ஒரு படகு கிடைக்கச் செய்யும் வகையில் 1987-88-ல் ஒரு புதிய திட்டம் அறிமுகப் படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நாட்டுப்படகுதாரர்கள் ரூ. 15,000 விலையில் ஒரு கட்டுமரம் வாங்குவதற்கு நிதியுதவி வழங்குவதற்கு வகை செய்கிறது. இவைகளின் 20 சதவீதம் விலை அல்லது அதிகபட்சமாக ரூ. 3,000 வரை அரசு மான்ய உதவித் தொகையாக வழங்குகிறது. இத்திட்டத்தினால் பயன்



பெறும் மீனவர்கள் தங்களின் பங்காக ரூ. 3,000 செலுத்த வேண்டும். மீதம் உள்ள தொகை ரூ. 9,000 அரசுடமை வங்கிகளிடமிருந்து கடனாகப் பெறப்படும். 1987-88 ஆம் ஆண்டில் இவ்வாறான 170 யூனிட்கள் வாங்குவதற்கு மீனவர்களுக்கு மான்யம் வழங்க ரூ. 5.10 இலட்சம் செலவிடப்படும்.

4.2.4. இயக்கச் செலவினத்தை குறைக்கவும், உற்பத்தியைப் பெருக்கவும் உதவும் வெவ்வேறு வகைப் படகுகள் கடந்த சில ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்டன. துறையின் பல்வேறு முன்னேற்ற ஊக்க முயற்சிகளினால் சிமெண்ட் படகுகள் கட்டுவதற்கான தொழில் நுட்பம் விளம்பரப் படுத்தப்படுகிறது. படகு கட்ட தேவைப்படும் மரங்கள் கிடைப்பது அரிதாகவும், விலை கூடுதலாகவும் இருப்பதால், அதன் விலை அதிகமாக இருப்பதாலும், மற்றப் பொருட்களாலான கண்ணாடியிழைப் படகுகள் மற்றும் சிமெண்ட் படகுகளை பயன்படுத்த மீனவர்களை ஊக்குவிப்பது மிகவும் அவசியம். 1987-88-ம் ஆண்டில் ரூ. 25.40 இலட்சம் செலவில் 4 கண்ணாடியிழைப் படகுகளும், 3 பெர்ரோ சிமெண்ட் படகுகளும் அறிமுகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளன. இதில் 20 சதவீத தொகையான ரூ. 5.08 இலட்சம் அரசால் மான்ய உதவித் தொகையாக வழங்கப்படும். இதிலும் பயன்பெறும் மீனவர்கள் 20 சதவீத செலவுத் தொகையை ஏற்கவேண்டும். மீதமுள்ள 60 சதவீதம் வங்கிகளிடமிருந்து கடனாகப் பெற வேண்டும்.

4.2.5. நாட்டுப் படகுகளில், உட்புறம் மற்றும் வெளியில் இயந்திரங்களைப் பொருத்த அவைகளை இயந்திரமயமாக்கும் திட்டம் 6 வது ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து செயல் படுத்தப் பட்டு வருகிறது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலிரண்டு ஆண்டுகளில், 400 உட்புறம்/வெளிப்புறம் பொருத்தக்கூடிய இயந்திரங்களை துறை வழங்கியுள்ளது. இந்த பிரபலத் திட்டம் 1987—88 ம் ஆண்டிலும் தொடரப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 200 உட்புறம்/வெளிப்புறம் பொருத்தக்கூடிய இயந்திரங்கள் வாங்குவதற்கு ரூ. 500 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏழாவது திட்ட காலத்தில் 1,300 நாட்டுப் படகுகளை இவ்வாறு இயந்திரமயமாக்க அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

4.2.6. வெவ்வேறு வகைப் படகுகளை வழங்குவதன் மூலமாக கடல் மீன் உற்பத்தி வருடத்திற்கு 10,000 டன் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**4.3. நைலான் இழைகள் வழங்குதல்:**

சிறுதொழில் மீனவர்கள் அதாவது தோன்றுகொட்டு பயன்படுத்தி வரும் நாட்டுப் படகுகளின் உரிமைதாரர்கள், இத்திட்டத்தினால் பெரிதும் பயனடைகின்றனர். இத்திட்டத்தின் கீழ் கடன் மற்றும் மான்ய உதவித்தொகை அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் ரூ. 8.00 இலட்சம் மதிப்புள்ள நைலான் இழைகள் மீனவர்களுக்கு வழங்கப்படுகின்றன. மீனவர்கள் தங்களுக்கு தேவையான நைலான் வலையை சொந்தமாகவும், மான்ய விலையிலும் விலையை மாதத் தவணைகளில் திருப்பி செலுத்தவும் உதவி செய்கிறது. 1987-88-ல் இத்திட்டத்திற்கு ரூ. 8.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.4. இறங்குதள மற்றும் அடிப்படை வசதிகள்:**

4.4.1. தொடர்ந்து ஐந்தாண்டுத் திட்ட காலங்களில் செயல்படுத்தப்பட்டுவரும் இயந்திரமயமாக்கும் திட்டத்தினால், 1,000 கி.மீ. நீளமுள்ள தமிழ்நாடு கடற்கரைப் பகுதியில் உள்ள 343 மீன் இறங்கு தளங்களில் 4,000-க்கும் மேற்பட்ட வெவ்வேறு வகையான விசைப்படகுகள் மீன்பிடிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ளன. இப்படகுகள் மீனை இறக்கவும் எரிபொருள் மற்றும் பனிக்கட்டியை ஏற்றிக் கொள்ளவும், பாதகமான பருவ காலங்களிலும் பத்திரமாக கரையில் இருக்கவும், தங்குதள வசதிகள் தேவைப்படுகின்றன. இதைத் தவிர விற்பனை மையங்களுக்கு செல்லும் வரையில் பிடித்த மீனைப் பாதுகாத்திடவும், படகுகளை பழுது பார்த்திடவும், மீனை ஏலமிடவும் கரையிலும் வசதிகள் தேவைப்படுகின்றன. விசைப்படகுகளின் மேற்படி தேவைகளை பூர்த்தி செய்திட மத்திய அரசின் நிதியுதவியுடன் ஒன்பது இடங்களில் பெரிய மீன் பிடித் துறைமுகங்கள் சிறு தங்கு தளங்கள் ரூ. 1,590.78 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன.



4.4.2. இதேபோன்ற வசதிகள் கீழ்க்கண்ட இடங்களில் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன :—

| இடத்தின் பெயர். | திறன். | செலவினம் (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகம். | 240 மீன்பிடி விசைப்படகுகள், 10 நாவாய்கள். | 684.00 |
| 2 வாலிநோக்கம் மீன்பிடித் துறைமுகம். | 150 விசைப் படகுகள். | 162.00 |
| 3 தொண்டி ஜெட்டி .. | 100 விசைப் படகுகள். | 57.00 |
| 4 கோட்டைப் பட்டினம் ஜெட்டி | 40 விசைப் படகுகள். | 32.82 |
| | மொத்தம் .. | 9,35.82 |

4.4.3. செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள மாமல்லபுரம், தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள பரங்கிப்பேட்டை, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பாம்பன் மற்றும் மூக்கையூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குளச்சல் மற்றும் தேங்காபட்டினம் ஆகிய இடங்களில் தங்கு தளங்கள் மற்றும் சிறிய அளவிலான கரையோர வசதிகள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு பெங்களூரிலுள்ள கடலோர பொறியியல் ஆய்வு மையத்தின் இயக்குநரை கேட்டுள்ளோம்.

4.4.4. நாட்டுப் படகுதாரர்களின் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு கீழ்க்கண்ட இடங்களில் இணைப்புச் சாலைகள், தங்குதளம், பழுது பார்த்தல் வசதிகள், பதனிடும் கூடங்கள், ஏலமிடும் மற்றும் வலை பின்னும் கூடம் சமுதாயக்கூடம் அமைத்தல் போன்ற இன்றியமையாத அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.—

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | பழையாறு—தஞ்சாவூர் மாவட்டம் | 27.18 |
| 2 | தொண்டி—இராமநாதபுரம் மாவட்டம் | 49.50 |
| 3 | வாலிநோக்கம்—இராமநாதபுரம் மாவட்டம் | 17.71 |
| 4 | ஏர்வாடி—இராமநாதபுரம் மாவட்டம் | 25.00 |
| 5 | முட்டம்—கன்னியாகுமரி மாவட்டம் | 12.60 |
| | மொத்தம் | 131.99 |

4.4.5. மேலும் 10 இறங்குதளங்களில் இதுபோன்ற அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவதற்கான திட்டம் தயாரிக்கப்படுகிறது.

4.5. மீன்பிடி படகுகள், இரவு நேரங்களில் கடலில் மூழ்கியிருக்கும் பவளப்பாறைகளில் மோதி சேதமடையாமல் இருக்கவும் பத்திரமாக கரைவந்து சேரவும் வழிகாட்டி விளக்குகள் ஒரு முக்கியமான கரையோர வசதியாகும். இது வரை அரசு 55 இடங்களில் ரூ. 15.88 இலட்சம் செலவில் வழிகாட்டி விளக்குகள் அமைத்திட செலவின அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**4.6. அண்மைக்கடல் அளவை நிலையங்கள் மற்றும் மீனவர் பயிற்சி நிலையங்கள்:**

சென்னை, கடலூர், மல்லிப்பட்டினம், இராமேஸ்வரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் செயல்படும் அளவை நிலையங்கள் நல்ல மீன்பாடு கிடைக்குமிடங்களை கண்டறிந்து மீன்பிடி கருவிகளை சரியாகவும் பயனளிக்கும் விதத்திலும் உபயோகிப்பதை மீனவர்களுக்கு விளக்குவதில் முக்கிய பங்காற்றுகின்றன. சென்னை, கடலூர், நாகப்பட்டினம், மண்டபம், தூத்துக்குடி மற்றும் குளச்சல் ஆகிய 6 இடங்களில் இயங்கி வரும் மீனவர் பயிற்சி நிலையங்கள் மீன்பிடி படகுகளை இயக்குதல் மற்றும் அவைகளின் பராமரிப்புக்கு பயிற்சி பெற்ற மீனவர்கள் கிடைக்கச் செய்கின்றன.

**5. உவர்நீர் பரப்புகளில் மீன் உற்பத்தி செய்தல்:**

5.1. விசைப்படகுகள் தொடர்ந்தும் தீவிரமாகவும் மீன் பிடிப்பதால், இயக்கச் செலவு கூடுவதுடன், கடற்கரை நெடுகிலும் இராலின் அளவு வெகுவாகக் குறைந்துள்ளது. பருவ நிலை வேறுபாடுகள், பல்வேறு அளவுள்ள இரால்கள்



கலந்து காணப்படுவது, அல்லது மீன்பாடு இல்லாததால் ஏற்படும் ஐயப்பாடுகள் போன்ற சிரமங்கள் வளர்க்கப்படாத மீன் பிடிப்பிலுள்ள சிரமங்களாகும். இவைகளினால், உலகம் முழுவதும் இரால் வளர்ப்பிற்கான தொழில் நுட்பத்தை அதிக அளவில் கடைப்பிடிப்பதற்கான நிலை ஏற்பட்டுள்ளது. கழிமுகங்கள், உப்பங்கழிகள் போன்ற இரால் வளர்ப்பிற்கு ஏற்றதென தெரிய வரும் சுமார் 60,000 ஹெக்டேர் பரப்புள்ள மிகப் பெரிய நீர்ப்பரப்பு இம்மாநிலத்திலுள்ளது. இந்த நீர்ப்பரப்புகளில் இரால் மற்றும் மீன் வளர்ப்பதற்கான தொழில் நுட்பம் விரைவாக கிடைத்து வருகிறது. இந்த தொழில் நுட்பத்தை மீனவர்களிடையே பரப்பவும், உவர்நீர் பரப்புகளில் இரால் உற்பத்தி செய்யுமாறு அவர்களை ஊக்குவிக்கவும், அரசு இதுவரை 9 இடங்களில் இரால் விளக்கப் பண்ணைகளை நிறுவியுள்ளது.

5.2. தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு உவர்நீர் பரப்புகளையும் அவற்றின் பரப்பளவையும் கண்டறிவதற்காக பட்டுக்கோட்டை மற்றும் இராமநாதபுரத்தில் உவர்நீர் அளவை மற்றும் விரிவாக்கம் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

5.3. உவர்நீர் பரப்புகளில் மீன உற்பத்தியைப் பெருக்கும் திட்டத்தை விரைந்து செயலாற்ற அரசு அளித்துள்ள கீழ்க் காணும் திட்டங்களை குறிப்பிட விழைகிறேன்:—

1. சிதம்பரத்திற்கு அருகிலுள்ள கிள்ளையில் ரூ. 15.80 இலட்சம் செலவில் அமைக்கப்பட்ட ஒரு 5 ஹெக்டேர் இரால் பண்ணை;

2. ரூ. 29.00 இலட்சம் செலவில் தஞ்சை மாவட்டத்திலுள்ள தொண்டியக்காடு என்னுமிடத்தில் 50 ஹெக்டேர் இரால் பண்ணை அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது;

3. ரூ. 12.69 இலட்சம் செலவில் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள காரங்காடு என்னுமிடத்தில் கட்டப்பட்டுவரும் 12 ஹெக்டேர் இரால் பண்ணை முடிவடையும் தருவாயில் உள்ளது;

4. தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள பரங்கிப்பேட்டையில் கட்டப்பட்டுவரும் ஒரு 2 ஹெக்டேர் இரால் பண்ணை;

**6.3. தேசிய மீன் பண்ணைகள் நிறுவுதல் :**

தேசிய மீன்குஞ்சு உற்பத்தித் திட்டத்தின் கீழ், பவானி சாகர் மற்றும் மணிமுத்தாறு ஆகிய இடங்களில் 10 ஹெக்டேர் மீன் பண்ணைகள் அமைத்திட மத்திய அரசு ஒப்புதலளித்துள்ளது. பவானிசாகர் மீன்பண்ணையின் கட்டுமானப் பணி ஜூன் 1987-ல் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது. மணிமுத்தாறு மீன் பண்ணையில் பணி கூடிய விரைவில் துவங்கப்படும். இவ்விரு பண்ணைகளும் கட்டி முடிக்கப்பட்டவுடன் கிடைக்கும் மீன்குஞ்சு உற்பத்தி பண்ணையின் பரப்பளவு 41 ஹெக்டேர் ஆக உயரும். இதனால் 100 மில்லியன் மீன்குஞ்சுகள் ஆண்டொன்றுக்கு கூடுதலாகக் கிடைக்க உதவி புரியும், இவ்விரு மீன்பண்ணைகளின் கட்டுமானப் பணிக்கென 1987-88-ம் ஆண்டுத் திட்டத்தில் ரூ. 80.01 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**6.4. சீனப்பொறிப்பகம் அமைத்தல் :**

மாநிலத்தில் மீன்குஞ்சு உற்பத்தி செய்ய பல்லாண்டுகளாக பயன்படுத்தப்பட்டு வரும் காடா துணியிலான ஹாப்பா பொறிப்பகம், கண்ணாடிக்குடுவை பொறிப்பகம் மற்றும் சீனப்பொறிப்பகம் ஆகிய மூவகை பொறிப்பக முறைகள் நடைமுறையில் உள்ளன. இம்மூன்றில் சீனப்பொறிப்பகம் நல்ல பயன்தரக்கூடியதாகவும், செம்மையுறச் செயல்படக் கூடியதாகவும் பொருளாதார ரீதியில் எற்றுக்கொள்ளக் கூடிய தாகவும் உள்ளது. சாத்தனூர் அணையில் பரிசோதனை முறையில் பயன்படுத்தப்பட்ட சீனப்பொறிப்பக முறையில் மீன் முட்டையி லிருந்து உயிர்ப்பித்து வரும் மீன்குஞ்சுகளின் பிழைப்பு விகிதம் 70 சதவீதத்திலிருந்து 80 சதவீதமாக இருந்தது. இது உற்சாக மூட்டுவதாக இருப்பதால், 3 சீனப்பொறிப்பகங்கள் முறையே வடஆற்காடு மாவட்டத்திலுள்ள சாத்தனூர் அணை, கோவை மாவட்டத்திலுள்ள ஆளியாறு ஆகியவிடங்களில் மாநிலத் திட்டத்தின்கீழ் ரூ. 6.20 இலட்சம் செலவிலும் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளின் மேம்பாடு திட்டத்தின் கீழ் ரூ. 3.5 இலட்சம் செலவில் மணிமுத்தாறிலும் அமைக்கப்பட்டு வருகின்றன. இப்பொறிப்பகங்கள் 100 மில்லியன் நுண் மீன்குஞ்சுகளையும் அதிலிருந்து இருப்பு செய்யக்கூடிய அளவி லான 30 மில்லியன் விரலளவு மீன்குஞ்சுகளையும் உற்பத்தி செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.



**6.5. மிதவைக்கூடுகள் :**

மீன்குஞ்சு உற்பத்தியை அதிகரிப்பதில், போதுமான மீன் நாற்றங்கால்கள் இல்லாதது பெரும் தடையை ஏற்படுத்தி யுள்ளது. மீன் நாற்றங்கால்கள் கட்ட அதிக அளவிலான நிலப்பரப்பு கிடைப்பதில்லையாதலாலும், இந்நாற்றங்கால் கள் கட்ட அதிக செலவினம் தேவைப்படுவதாலும், தேவையான இடங்களில், பிளாஸ்டிக் வலை கூடுகளில் மீன்குஞ்சுகள் வளர்க்கும் முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மீன்குஞ்சு வளர்ப்பில் 70 விழுக்காடு பிழைத்து வளரும். இம்முறை குறைந்த அளவிலான மீன் நாற்றங்கால்களில் மீன்குஞ்சுகளை வளர்க்க வேண்டிய நிர்பந்தத்தினை ஓரளவு குறைக்கவும் வளர்த்த மீன்குஞ்சுகளை அறுவடை செய்து அனுப்புவதில் ஏற்படும் தாமதத்தினால் அப்படியே நாற்றங்காலிலேயே வைத்திட இக்கூண்டு வளர்ப்புகள் உதவுவதால், இம்முறை பெரிய அளவில் மாநிலம் முழுவதும் விஸ்தரிக்கப்படவுள்ளது. தொடக்க நிலையில் ரூ. 2.50 இலட்சம் செலவில் 100 மிதவைக்கூடுகள் 1986—87-ல் வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

**6.6. மீன்குஞ்சு வளர்க்கும் தனியாருக்கு ஊக்க உதவியளித்தல் :**

தனிப்பட்ட மீன்வளர்ப்போரின் வருமானத்தை பெருக்கும் பொருட்டு அவர்களுக்கு மீன்குஞ்சு உற்பத்திக்கு நிதி ஊக்கத் தொகை அளிக்கப்பட்டு வருகிறது. 1987—88-ஆம் ஆண்டில் 2 சீனப் பொறிப்பகங்கள் மற்றும் 250 மிதவைக் கூடுகள் அமைத் திட தனியாருக்கு ரூ. 0.91 இலட்சம் மான்ய உதவித் தொகை வழங்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பொறிப்பகங்கள் கூடுதலாக 300 இலட்சம் கெண்டை மீன் குஞ்சுகளையும் மிதவை கூடுகள் 100 இலட்சம் மீன்குஞ்சுகளையும் உற்பத்தி செய்ய உதவி புரியும்.

**6.7. தரமுள்ள மீன் விதைகளை வாங்குதல் :**

தரமுள்ள மீன்குஞ்சுகளின் தேவைக்கும் உற்பத்திக்குமுள்ள இடைவெளியை குறைக்கும் பொருட்டு ரூ. 1.00 இலட்சம் செலவில் மேற்கு வங்கத்திலிருந்து 75 இலட்சம் மீன் விதைகளை வாங்கவும், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்திடமிருந்து 2.5 இலட்சம் மீன்குஞ்சுகளை கொள்முதல் செய்யவும் முன் மொழியப்பட்டுள்ளது.

### 6.8. பெரும் நீர்த்தேக்க மீன்பிடிப்பு :

மீன்துறை அநேகமாக எல்லா பெரும் மற்றும் சிறு நீர்த் தேக்கங்களை விரைவில் வளரக்கூடிய மீன்ரக குஞ்சுகளை இருப்பு, செய்து, பாதுகாத்து, வளர்த்து, தக்க தருணத்தில் மீன்பிடிப்பு செய்யவும் எடுத்துள்ளது. தற்போது இம்மாநிலத்திலுள்ள இந்த நீர்த்தேக்கங்களின் மீன் உற்பத்தி ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய 1,300 டன்கள் ஆகும். பெரும்பாலான நீர்த்தேக்கங்களின் நீர் பிடிப்பு பகுதிகளில் பருவமழை தவறியதால் அந்த நீர்த்தேக்கங்களின் மீன் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. 1987-88-ஆம் ஆண்டில் இவ்வுற்பத்தியை பெருக்கிட முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### 6.9. தீவிர உள்நாட்டு மீன் வளர்ப்பு மற்றும் விற்பனைத் திட்டம் :

இம்மாநிலத்தில் உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிக்கும் முனைப்பின் ஒரு பகுதியாக தென்னாற்காடு மற்றும் மதுரை மாவட்டங்களிலுள்ள பொதுப்பணித்துறை மற்றும் வருவாய்த் துறையை சேர்ந்த பெரும் மற்றும் சிறிய நீர்ப் பாசன நீர் பரப்புகளில், தீவிர மீன் வளர்ப்புக்கும் மற்றும் மீன்பிடிப்பிற்கும் திட்டமொன்று 1984-ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தென்னாற்காடு மாவட்டத்தில் 20,000 ஹெக்டேரிலும் மதுரை மாவட்டத்தில் 10,000 ஹெக்டேரிலும் தீவிர மீன்குஞ்சு இருப்பு செய்து, அப்பகுதியிலுள்ள மீனவ கூட்டுறவு சங்கங்களின் உதவியுடன் மீன்பிடித்து அவற்றை அச்சங்கங்களுக்கு, பகிர்ந்தளித்து செயல்படுகிறது. 1987-88 ஆம் ஆண்டில் தென்னாற்காடு மாவட்ட கள்ளக்குறிச்சி மற்றும் திருக்கோவிலூர் வட்டங்களில் கூடுதலாக 2,000 ஹெக்டேர் நீர்ப் பரப்பினை இத் திட்டத்தில் கொணர முன் மொழியப்பட்டுள்ளது.

### 6.10. மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை :

6.10.1. மைய அரசு உதவித் திட்டத்தின் கீழ் தஞ்சை, திருச்சி, மதுரை, தருமபுரி, தென்னாற்காடு, செங்கல்பட்டு, பெரியார், மற்றும் காமராஜர் ஆகிய மாவட்டங்களில் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் நிறுவப்பட்டுள்ளன. இம் முகமைகளின் பணியாளர் மற்றும் சில்லறைச் செலவினங்கள் நீங்கலாக மற்ற செலவினங்களை மைய அரசும் மாநில அரசும் சமமாக பகிர்ந்து கொள்கின்றன. இவற்றைத் தவிர தமிழ்நாடு அரசின் முழுச் செலவில் திருநெல்வேலி, வடாற்காடு, புதுக்கோட்டை மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலும் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் அமைக்கப்பட்டன.



6.10.2. இத்திட்டத்தின் கீழ் பஞ்சாயத்துக்கள் மற்றுமுள்ள துறைகளைச் சார்ந்த குளம் குட்டைகளை நீண்டகால குத்தகைக்கு எடுத்து மீன் வளர்ப்போருக்கு அதிகபட்சம் 10 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட மீன் வளர்ப்போருக்கு கலப்பின மீன் வளர்ப்பில் பயிற்சியளிக்கப்படுகிறது. மற்றும் அவர்களுக்கு குளங்களை செப்பனிடவும் இடுபொருட்களுக்கும், தேர்வு செய்த மீன் குஞ்சு வகைகளை வாங்கவும் கடன் மற்றும் மானிய வடிவத்தில் பொருளுதவி கிடைக்கச் செய்யப்படுகின்றன. இத்திட்டத்தில், சில மீன் வளர்ப்போர் முகமைகளில் எடுத்துக்கொள்ளப்பட்ட நீர்ப்பரப்புகளில் ஹெக்டேர் ஒன்றுக்கு 1,000 கிலோ கிராம் வரை மீன் உற்பத்தி பெருகியுள்ளன. மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் கூண்டு மீன்குஞ்சு வளர்ப்பினை மேற்கொண்டுள்ளன. அதன் விளைவாக அவை மீன்குஞ்சு தேவைகளில் தன்னிறைவு அடையலாம்.

6.10.3. தற்போதுள்ள மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளின் பலன்கள் ஊக்கமளிப்பதைத் தொடர்ந்து மைய அரசின் உதவித் திட்டத்தின் கீழ் அரசு அண்ணா மாவட்டத்தில் ரூ. 8.54 இலட்ச திட்டத்தில் இதே போன்ற முகமையை 1987-88 ஆம் ஆண்டு புதிதாக துவக்க அரசு முன்மொழிந்துள்ளது.

### 7. சிறப்பு திட்டங்கள்—பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

7.1. மலைப்பகுதிகளின் மேம்பாட்டுத் திட்டம், மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளின் மேம்பாட்டுத் திட்டம் போன்ற பகுதிகள் மேம்பாட்டிற்கான நடப்பு திட்டத்தில் மீன்வளர்ச்சி ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

7.2. மலைப்பகுதிகளின் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் அவலான்சி என்னுமிடத்தில் ட்ரவுட் மீன்குஞ்சு பொறிப்பகத்தின் மேம்பாட்டிற்கு ரூ. 4.10 இலட்சத்திற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

[1987 ஏப்ரல் 10

7.3. மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளின் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மணிமுத்தாறில் மீன்குஞ்சு உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன், ஒரு சினை பொறிப்பகம் நிறுவ ரூ. 3.50 இலட்சத்திற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

7.4. வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளின் மேம்பாட்டுத் திட்டம் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளில், உள்நாட்டு மீன் உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன், 1979-80 ஆம் ஆண்டிலிருந்து தருமபுரி, காமராஜர், இராமநாதபுரம் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களில் கீழ்க்காணும் உள்ளமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் பொருட்டு நிதி ஒப்பளிப்பு செய்து வருகிறது.

அ. தருமபுரி மாவட்டம்:

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சின்னார் மீன் பண்ணை .. .. .. | 6.60 |
| 2. | கிருஷ்ணகிரி மீன் பண்ணை .. .. | 7.47 |
| 3. | பாம்பார் தூண்டுதல் முறை மீன்குஞ்சு உற்பத்தி நிலையம் .. .. .. | 10.00 |
| 4. | ஒகேனக்கல் சினை மீன் பண்ணை .. .. | 5.15 |
| 5. | கிருஷ்ணகிரியில் குறைந்த அழுத்தமுள்ள பாலித்தின் பொறிப்பகம் .. .. .. | 2.80 |
| 6. | உள்நாட்டு நீர்நிலைகளில் தீவிரமாக மீன்குஞ்சு இருப்பு செய்தல் .. .. .. | |

ஒகேனக்கல்லில் ரூ. 3.50 இலட்சம் செலவில் ஒரு சினை பொறிப்பகம் நிறுவுவது 1986-87-ல் எடுத்துக்கொள்ளப்பட்ட புதிய திட்டமாகும்.



1987 ஏப்ரல் 10]

ஆ. காமராஜர் மாவட்டம்:

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | பெரிய நீர்பாசனக் குளங்களில் தீவிரமாக மீன் குஞ்சி இருப்பு செய்தல் .. .. .. | |
| 2. | பிலவக்கல்லில் அணைப்பகுதியில் ஒரு கண்ணாடிக் குடுவை பொறிப்பகம் நிறுவுதல் .. .. .. | 10·05 |
| 3. | பிலவக்கல்லில் பணியாளர் குடியிருப்பு மற்றும் அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல் .. .. | |
| 4. | வேம்பக்கோட்டையில் மீன் பண்ணை மற்றும் அலுவலர் குடியிருப்பு கட்டுதல் | 8.50 |

இ. இராமநாதபுரம் மாவட்டம்:

1987-88-ம் ஆண்டில் அரியாங்குண்டில் ரூ. 12.59 இலட்சம் செலவில் ஒரு இரால் பண்ணை அமைத்திட அரசு ஒப்பளித்துள்ளது.

ஈ. சிதம்பரனார் மாவட்டம்:

குளங்களில் தரமான மீன் குஞ்சுகளை இருப்பு செய்ய ரூ. 2.40 இலட்சம் ஒப்பளிப்பு பெறப்பட்டதையடுத்து, 1987-88-ல் இத்திட்டம் சிதம்பரனார் மாவட்டத்திற்கும் விரிவுபடுத்தப்படவுள்ளது.

8. மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்:

8.1. மீனவர்களின் சமூக பொருளாதார நிலையை உயர்த்துவதில் மீனவர் கூட்டுறவு சங்கங்கள் தொடர்ந்து முக்கிய பங்கை வகித்து வருகிறது. மீனவர்கள் கூட்டுறவின் மூலம் வளர்ச்சியடைய ஒன்றுபடுகிறார்கள். மீன்பிடி தொழிலுக்கு அதிகமான முதலீடு தேவையானது. கிடைக்கும் வசதிகளை ஒன்று திரட்டுவது இன்றியமையாததாகும். இதனால் கூட்டுறவும் அதன்மூலம் முன்னேற்றமும் வளர்ச்சியும் ஏற்படுகிறது. இந்தக் கூட்டுறவு சங்கங்கள் மீனவர்களுக்கு கடன் வழங்குதல், மீன்பிடி சாதனங்களையும் கருவிகளையும் விநியோகித்தல், அத்யாவசிய பண்டங்களை விநியோகித்தல், பிடித்த மீனை விற்பனை செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளுகிறது. மீனவர் முடிவான பொருளா

தார வளர்ச்சிக்கு கடன், உள்ளீடு மற்றும் விற்பனை ஆகியவை இந்த கூட்டுறவுகளில் ஒருங்கிணைக்கப்படுகின்றன. தமிழ் நாட்டில் 31—12—1986-ல் மொத்தம் 601 மீனவர் கூட்டுறவு சங்கங்கள் இயங்குகின்றன :—

| | | |
|---|---|---|
| 1. | உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்கள் ... | 238 |
| 2. | கடல் மீனவர் கூட்டுறவு சங்கங்கள் .. | 294 |
| 3. | மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் ... | 37 |
| 4. | இறால் வளர்ப்போர் மீனவர் கூட்டுறவு சங்கங்கள் | 5 |
| 5. | அரை மில்லியன் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தில் இயங்கும் கூட்டுறவு சங்கம். | 1 |
| 6. | மீனவர் கூட்டுறவு ஐக்கிய சங்கங்கள் .. | 7 |
| 7. | மீனவர் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் — | 9 |
| 8. | மீனவர் கூட்டுறவு இணையங்கள் | 10 |
| | மொத்தம் | 601 |

8.2. மீனவர்களின் ஒருமித்த வளர்ச்சிக்கு மீனவர் கூட்டுறவு சங்கங்கள் ஒரு சரியான கருவியாக இருக்க வேண்டுமானால், இச் சங்கங்களின் அமைப்பு பலம் வாய்ந்ததாகவும், நிதி வசதி தாராளமாகவும் இருத்தல் வேண்டும். ஆனால் பெருவாரியான சங்கங்கள் அவ்வாறு இல்லை. எனவே, இச்சங்கங்களுக்கு அரசு மானியம் மூலதனக் கடன், நடைமுறை மூலதனக் கடன், மேலாண்மை ஆகிய இனங்களில் உதவி புரிந்து வருகிறது. விசைப் படகுகள், சாதாரணப் படகுகள், மீனை விற்பனை செய்வதற்கான ஊர்திகள், பண்டகசாலைகளை கட்டுதல், மீன் பதனிடும் கூடங்களை அமைத்தல், மீன் விற்பனை செய்தல் ஆகிய இனங்களில் மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு 1978-79 முதல் தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் மிகப் பெருமளவில் உதவி புரிந்து வருகிறது. 1987-88 ஆம் ஆண்டில் இருந்து உதவியளிப்பதன் முறை கீழ்க் கண்டவாறு செயலிலிருந்து வருகிறது.



| திட்டம் | தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திலிருந்து மாநில அரசிற்கு. | மாநில அரசிடமிருந்து கூட்டுறவு சங்கத்திற்கு |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 முதலீட்டுதவி | தேவைக்கேற்ப உதவியின் அளவு சார்ந்திருக்கும். | தேசிய கூட்டுறவு, வளர்ச்சி கழகத்திடமிருந்து பெறப்படும் அதே தொகை சங்கங்களுக்கு செல்லும். |
| 2 போக்குவரத்து ஊர்தி வாங்க. | 75 விழுக்காடு கடன் | 50 விழுக்காடு கடன். மற்றும் 50 விழுக்காடு மான்யம். |
| 3 குளங்கள், பண்ணைகள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு | 80 விழுக்காடு கடன் | 100 விழுக்காடு கடன் |
| 4 பதனிடும் நிலையங்கள் | 80 விழுக்காடு கடன் | 55 விழுக்காடு கடன் 25 விழுக்காடு முதலீட்டுக் கடன் மற்றும் 20 விழுக்காடு மான்யம். |
| 5 கிடங்குகள்; இருப்பறைகள் கட்டவும் படகுகள், வலைகள் தளவாடங்கள் சில்லறை விற்பனை நிலையங்கள் பனிக் கட்டி கலன்கள் முதலியவை வாங்குதல் | 75 விழுக்காடு கடன் | 50 விழுக்காடு கடன் மற்றும் 50 விழுக்காடு மான்யம் முதலீட்டுக் கடன் |

இந்த தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக திட்டத்தின்கீழ் 1978-79 முதல் ரூபாய் 356.60 இலட்சம் 79 சங்கங்களுக்கு வழங்கப்பட்டு 13,914 அங்கத்தினர்கள் பயனடைந்துள்ளனர்.

**9. மீனவர் நலத் திட்டங்கள் :**

**9.1. மீனவர் குடியிருப்புகள்—**

அரசு 1974-75 முதல் செயல்படுத்தி வரும் மீனவர்களுக்கான இலவச வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், அரசு இதுவரை "தாட்கோ" மூலம் 9,856 வீடுகளும், மீன்துறை பொறியியல் பிரிவின் மூலம் 1,848 வீடுகளும் கட்ட ஒப்பளித்துள்ளது. இதுவரை "தாட்கோ" நிறுவனம் 9,160 வீடுகளும், மீன் துறையின் பொறியியல் பிரிவு 875 வீடுகளும் கட்டி முடித்துள்ளது. இத்திட்டம் 1987-88 ஆம் ஆண்டிலும் தொடரும். அதற்காக 1987-88 ஆம் ஆண்டுத் திட்டத்தில் ரூபாய் 50.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

9.2. மீனவ கிராமங்களில் வீட்டுவசதி, சாலை, குடிநீர், ஏலக் கூடம் மற்றும் வலை பின்னும் கூடம் மீன் இறக்கும் மேடைகள் மற்றும் பதனிடும் கொட்டகை போன்ற அவசியமான வசதிகளை வழங்க மாநிலங்களுக்கு தேசிய கழகத்தின்கீழ் நிதியுதவி வழங்க மைய அரசு முன்வந்துள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான மொத்த செலவினத் தொகையை மாநில அரசும் மைய அரசும் தலா 50 சதவீதத்தில் ஏற்றுக் கொள்ள வேண்டுமென இந்திய அரசு சுட்டிக்காட்டியுள்ளது. 1987-88 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மீனவ கிராமங்களிலாவது மேற்கண்ட உதவிகளை அளிப்பது குறித்து தமிழக அரசு பரிசிலனை செய்து வருகிறது.

9.3. மீனவர் பிடித்துவரும் மீன்களை அருகிலுள்ள விற்பனை மற்றும் பதனிடும் நிலையங்களுக்கு விரைவில் எடுத்துச் செல்ல வசதியான போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்புகளுக்கு மீனவர் கிராமங்களுக்கு இணைப்புச்சாலை அவசியமாகிறது. ஆதலால் 274 இலட்சம் ரூபாய் செலவில் 159 கி.மீ. தூரமுள்ள 108 சாலைகளை அரசு ஏற்கெனவே முடித்துள்ளது. 1987-88 ஆம் ஆண்டில் ரூ. 8.25 இலட்சம் செலவில் மேலும் கூடுதலாக இது போன்ற இணைப்புச் சாலைகளை அமைக்க இத்திட்டம் தொடரப்படும்.



**9.4. கடலரிப்புத் தடுப்புப் பணி :**

1986-87 ஆம் ஆண்டில் கடலரிப்புத் தடுப்புப் பணியை பொதுப் பணித் துறையில் இருந்து மீன்துறைக்கு மாற்றி ஒப்படைத்திட அரசு ஆணையிட்டுள்ளது. 5 இடங்களில் 144.50 இலட்ச ரூபாய் செலவில் பெரிய கற்பாறை துண்டுகளையும் கொண்டு கடலரிப்பினை தடுக்க அரசு இப்பணிக்கு ஒப்புதலளித்துள்ளது என அறிந்திட உறுப்பினர்கள் மகிழ்ச்சியடையலாம். 1987-88 ஆம் ஆண்டுத் திட்டத்தில் இப்பணியை மேற்கொள்ள வசதியாக 113 இலட்சம் ரூபாய் ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது.

**9.5. சேமிப்பு மற்றும் நிவாரணத் தொகை :**

மீன்பிடி தொழில் இல்லாத காலங்களில், கடலோர மீனவர்களுக்கு ஏற்படும் அல்லல்களை நீக்கும் முகத்தான் மீனவர்களுக்கான சேமிப்பு மற்றும் நிவாரணத் தொகை திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மீனவர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக உள்ள மீனவர் ஒவ்வொருவரிடமிருந்தும் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 10 வீதம் ஒரு ஆண்டில் 9 மாதங்களுக்கு வசூலிக்கப்பட்டு, அரசும் அதற்கீடான தொகையை அரசின் பங்காக அளித்து, இவ்வாறு சேர்ந்துள்ள மொத்த தொகையான ரூபாய் 180-ஐ மீன்பிடி தொழில் இல்லாத 3 மாதங்களுக்கு மாதம் ஒன்றுக்கு மீனவர் ஒருவருக்கு ரூபாய் 60 வீதம் வழங்கப்படுகிறது. இத்திட்டம் மீனவர்களுக்கு மிகவும் பயன் அளிப்பதாக (வரப்பிரசாதமாக) உணரப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டம் மீனவர் கூட்டுறவு சங்கம் வழியாக செயல்படுத்தப்படுகிறது. இதுவரை, இத்திட்டத்தில் 28,849 மீனவர்கள் சேர்ந்து பயன் அடைந்துள்ளனர்.

**9.6- மீனவர் விபத்துக் காப்புறுதித் திட்டம் :**

இத்திட்டத்தின் கீழ், மீனவர்களுக்கேற்படும் இறப்பு மற்றும் விபத்துக்களின்பால், மாநில மற்றும் மைய அரசு இரண்டுமே ஆண்டுக்கு தலா ரூபாய் 9 வீதம் பரிசில் கட்டணமாக செலுத்தி எந்தத் தொகையும் பெறாமல், மீனவர்கள் காப்புறுதி செய்கின்றனர். மேற்கண்ட காப்புறுதிக்கான பரிசில் தொகை எதும் மீனவர்களிடமிருந்து வசூலிக்கப்படுவதில்லை. மீனவர்கள் இறந்தாலோ அல்லது நிரந்தரமாக ஊனமுற்றாலோ ரூபாய் 15,000

காப்புறுதி பணமாக காப்புறுதி செய்தவருக்கு வழங்கப்படுகிறது. ஒரு கண், அல்லது ஒரு கால் அல்லது ஒரு கை இழப்பிற்கு ரூபாய் 7,500 நஷ்ட ஈடாகவும் பெற வகை உள்ளது. இதுவரை இத் திட்டத்தில் 1,36,647 மீனவர்கள் சேர்ந்துள்ளனர். 263 மீனவ குடும்பங்களுக்கு ரூபாய் 37,42,500 காப்புறுதி தொகையாக அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை ரூபாய் 20.03 இலட்சம் மீனவர் காப்புறுதிக்கான அரசின் பங்காக மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து செலுத்தப்பட்டுள்ளது.

**9.7. மீனவ மாணவர்களுக்குப் பரிசுத் தொகை:**

மீனவ சமுதாய குழந்தைகளை ஊக்குவிக்கும் பொருட்டு 10-வது வகுப்பில் மாநிலத்திலேயே அதிகமாக மதிப்பெண் பெறும் மாணவ/மாணவிக்கு தலா ரூபாய் 500 வீதமும் 12-வது வகுப்பில் மாநிலத்திலேயே அதிகமாக மதிப்பெண் பெறும் மாணவ/மாணவிக்கு தலா ரூபாய் 1,000 வீதமும வழங்க 1985-86 கல்வி ஆண்டிலிருந்து இந்த பரிசுத் திட்டம் உருவாக்கப் பட்டுள்ளது. இது 1987-88-ம் ஆண்டிலும் தொடரப்படும்.

**10. விரிவாக்கக் கல்வித் திட்டம்:**

10.1. மீனவர்களின் சமுதாய பொருளாதார மேம்பாட்டிற்கு வளர்ச்சிப் பணியில் அவர்களை ஈடுபடுத்துவதற்குரிய விரிவாக்கக் கல்வித் திட்டம் முக்கியமாக பங்கு வகிக்கின்றது. 9 இடங்களில் உவர்நீர் மீன் செயல் விளக்கப் பண்ணைகளும், பட்டுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் ஆகிய இரு இடங்களில் அளவை மற்றும் விரிவாக்க பணி பிரிவுகளும் அமைந்து, விரிவாக்கப் பணிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

**10.2. மீனவ மகளிர் விரிவாக்கத் திட்டம்:**

1981 ஆம் ஆண்டில் மூன்று மீன்பிடி கிராமங்களில் துவக்கப் பட்ட மீனவ மகளிர் விரிவாக்கத்திற்கான தனித் திட்டம் இம் மாநிலத்தில் தொடர்ந்து செயல்படுகிறது. இம்மாநிலத்திலும் 31—12—1986 வரை 37 மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் செயல் பட்டுக் கொண்டிருக்கின்றன. இச்சங்கங்களுக்கு மூலதன உதவி மற்றும் மேலாண்மை உதவி ஆகியவை ஒப்பளிக்கப்பட்டுள்ளன. விற்பனைக்கான கடன் வசதி, சேமிப்பு, வலை பின்னுதல், தையல், கைவினைப் பொருட்கள், நியாய விலைக்கடை நடத்துதல்,





கட்டுப்பாட்டு விலையில் துணிகள் வழங்குதல், சலுகை கட்டணத்தில் பால் வாடிகளை துவக்குதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவை மீனவ குடும்பங்களின் வருவாயை மேலும் சேர்க்க உதவுகின்றன. வரும் ஆண்டுகளில் மேலும் சில மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்படும்.

**11. ஒழுங்குக் கட்டுப்பாட்டு முறைகள்:**

11.1. மீன்பிடி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தவும், விசைப் படகு மற்றும் நாட்டுப் படகு மீன்பிடிகாரர்களிடையே சுமுகமாக செயல்பாடுகளை உறுதிப்படுத்தவும், 1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்கு படுத்தும் சட்டம் செயல்படுத்தப்பட்டது. இச்சட்டத்தின் சில பகுதிகள் உயர்நீதி மன்றத்தால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தை, பயன் உள்ளதாக அமுலாக்க தேவைப்படும் படகுகளின் ஒரு அங்கமாக ரூபாய் 8 இலட்சம் செலவில் ஒரு விரைவு விசைப்படகு பெறப்பட்டு, ஒழுங்குபடுத்தும் பணிக்குழு வலுவமைக்கப்பட உள்ளது.

11.2. உள்நாட்டு மீன் பிடிப்பை பொறுத்தவரையில் பெரு நீர்த்தேக்கங்கள், குளங்கள், ஆகியவற்றில் உரிமம் மற்றும் குத்தகை முறைகளில் மீனவர் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர் களுக்கும், உள்ளூர் மீனவர்களுக்கும் மீன்பிடிப்பு மேற்கொள்ள உரிமம் வழங்கி ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

**12. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்:**

12.1. வணிக நோக்குடைய மீன்துறையின் திட்டங்களை செயல் படுத்தும் நோக்குடன் 1974-ல் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் நிறுவப்பட்டது. இதற்கு 31—12—1986-ல் வரையறுக்கப் பட்ட மூலதனம் ரூபாய் 500 இலட்சமும், செலுத்தப்பட்ட மூலதனம் ரூபாய் 282.57 இலட்சமும் ஆகும்.

12.2. குறிக்கோள்கள்:

இக்கழகத்தின் முக்கியமான குறிக்கோள்களாவன:—

(i) (அ) ஆழ்கடல் மீன்பிடிப்பு, நாவாய்கள், சிறிய மீன் பிடி படகுகள், விசைப்படகுகள் ஆகியவற்றை கொண்டு மீன் பிடித்தல் முதலியவற்றை மேம்படுத்துதல்.

(ஆ) உள்நாட்டு மீன் வளர்ப்பு மற்றும் மீன்பிடிப்பு

(இ) மீன் கொள்முதல், பதனிடுதல் மற்றும் மொத்த மற்றும் சில்லரை விற்பனை மேற்கொள்ளுதல்.

(ii) பிராந்திய கடலிலும் தூரக் கடலிலும் பலதரப்பட்ட தளவாடங்களைக் கொண்டு மீன் பிடித்தல்.

(iii) எந்தவித மீன்பிடிப்பு அல்லது மீன் வளர்ப்புப் பணிக்கும் ஏற்ற எல்லாவிதமான உதவிகளையும் பணிகளையும் அளித்தல்.

கழகத்தின் முக்கிய செயல்பாடுகள் பின்வரும் பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளன.

**12.3. ஆழ்கடல் மீன்பிடிப்பு.**

12.3.1. தஞ்சை, நெல்லை ஆகிய இரண்டு மெக்சிகோ நாவாய் களுடன் 1986-87-ல் ஆழ்கடல் மீன் பிடிப்பு தொடரப்பட்டு, அவை களின் மூலம் நல்ல வருவாயும் ஈட்டப்பட்டுள்ளது. இந்த இரண்டு நாவாய்களும் 1987-88 ஆம் ஆண்டிலும் விசாகப்பட்டினத்திற் கப்பாலுள்ள கடலில் தொடர்ந்து மீன் பிடிப்பில் ஈடுபடுத்தப் படும்.

12.3.2. இதுவரை கர்நாடக மாநில மீன் வளர்ச்சி கழகத்தின் கூட்டு முயற்சியுடன் மங்களூர் கடலுக்கப்பால் மீன் பிடிப்பில் ஈடுபட்டு வந்த 6 பர்சின் பட்குகள் சென்னை, மண்டபம், மற்றும் கன்னியாகுமரி ஆகிய தமிழ்நாடு கரையிலிருந்து இயக்கும் பொருட்டு கொண்டு வரப்பட்டன.

**12.4. மீன் பதப்படுத்தும் நிலையம் மற்றும் எரியெண்ணெய் விற்பனை நிலையம்**

12.4.1. மீனவர்கள் கரையிறக்கிய மீனுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்வதில் பனிக்கட்டி உற்பத்தி மற்றும் குளிர் பதன நிலையங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. சென்னை, நாகப் பட்டினம், மதுரை, தூத்துக்குடி, மண்டபம் ஆகிய இடங்களி லுள்ள இந்நிலையங்கள் மீனவர்களின் தேவையை பூர்த்தி செய்வதில் தொடர்ந்து பணியாற்றுகின்றன





12.4.2. மண்டபம் பதப்படுத்தும் நிலையமும் எண்ணூரிலுள்ள உறைய் வைப்பு நிலையமும் தொடர்ந்து குத்தகை அடிப்படை யில் இயங்கி வருகின்றன. இராயபுரம், மல்லிப்பட்டினம், மற்றும் தூத்துக்குடியில் உள்ள எரி எண்ணெய் வழங்கும் நிலையங்கள் லாபத்தில் இயங்கி வருகின்றன.

**12.5. மீன் குஞ்சுகள் உற்பத்தியும், உள் நாட்டு நீர்த் தேக்கங் களின் நிர்வாகமும்:**

தமிழ் நாட்டில் 11 நீர் நிலைகளில், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மீன் வளத்தை பெருக்கி மீனைப் பிடித்து அருகிலுள்ள நகர்களில் தரமான மீன் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்கிறது. இந் நீர் நிலைகள் இருக்குமிடங்களில் நிறுவப்பட்டுள்ள மீன் பண்ணைகள் நல்ல முறையில் நிர்வகிக்கப்படுவதுடன், அவைகள் ஆண்டு தோறும் சுமார் 9 மில்லியன் தரமான மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்கின்றன. சாத்தனூரில் சீன பொறிப்பக முறை யில் மீன் குஞ்சுகள் உற்பத்தி வெற்றிகரமாக செய்யப்பட்டது. பரீட்சார்த்த முறையில் மிதக்கும் கூடுகளில் மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்யும் தொழில் நுணுக்கம் தேசிய வேளாண்மை அபி விருத்தி வங்கியின் மறுநிதியுதவியுடன் சீராக்கப்பட்டது.

**12.6. மீன் பிடி வலை தயாரிக்கும் தொழிற் கூடம்:**

மீன் வளத்தை உயர்ந்தபட்ச அளவுக்கு பெருக்குவதில் தரமான மீன் பிடி வலை இன்றியமையாதது. ஐப்பானிய நிதி யுதவி ரூ. 70.00 இலட்சம் மற்றும் மாநில அரசின் உதவி ரூ. 20,00 இலட்சத்துடன் சென்னை இராயபுரத்தில் 54 டன்கள் மீன்பிடி வலை தயாரிக்கும் திறன் கொண்ட ஒரு மீன்பிடி வலை பின்னும் கூடத்தை 1986-ஆம் ஆண்டில் கழகம் நிறுவியுள்ளது. இப்பிரிவு 1986 செப்டம்பரில் நடைமுறை உற்பத்தியை துவங்கியுள்ளது. இப்பிரிவு 31—1—1987 வரை ரூ. 19.2 இலட்சம் மதிப்புள்ள 19 டன்கள் எடையுள்ள நைலான் வலைகளை உற்பத்தி செய் துள்ளது.

**12.7. மீன் விற்பனை:**

மீனவர்கள் கரையிறக்கிய மீனை நல்ல முறையில் விற்பனை செய்யும் பொருட்டு கழகம் மீன் விற்பனையில் நேரடியாக இறங்கி, மீன் விற்பனையில் ஒத்துழைப்பை நல்குகிறது. மீனவர்களுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்வது மற்றும் நுகர்வோர்களுக்கு

நியாயமான விலையில் மீன் கிடைக்கச் செய்வது ஆகிய இரண்டு குறிக்கோள்களை அடைய மேற்கண்ட வசதிகளை ஏற்படுத்தியதன் மூலம் கழகம் வகை செய்துள்ளது. உள்நாட்டு நீர்த் தேக்கங்களில் பிடிக்கப்படும் மீன் மற்றும் கடல் மீன் உற்பத்தி ஆகியவை தவிர மீனவர்கள் கரையிறக்கிய மீனுக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்யவும், மீன் விற்பனைக்கு போதுமான மீனை கொள்முதல் செய்து இருப்பில் கொள்ளவும் கழகம் வெளிச் சந்தையிலும் மீன் கொள் முதல் செய்கிறது. சென்னை மற்றும் தமிழ்நாட்டிலுள்ள முக்கியமான நகரங்களில் நிறுவியுள்ள 36 மீன் விற்பனை நிலையங்களின் வழியாக இக்கழகம் தரமான மீன்களை நியாயமான விலையில் வழங்குவதின் மூலம் சாதாரண மனிதனின் தேவையை பூர்த்தி செய்கிறது.

12.8. கழகத்தின் கூட்டு முயற்சிகள் :

கழகத்தின் செயல்பாட்டினை விரிவு படுத்தும் நோக்குடன் முன்னிலையிலுள்ள தொழிற் நிறுவனங்களுடன் சேர்ந்து தமிழ்நாடு முத்து தனி நிறுவனம், மற்றும் தமிழ்நாடு மரைன் பிளாஸ்ட் தனி நிறுவனம் ஆகியவற்றை நிறுவியுள்ளது.

"சதர்ன் சீ புட் லிமிடெட்" என்ற நிறுவனத்துடன் சேர்ந்து, வர்த்தக ரீதியிலான ஒரு உவர் நீர் மீன் பண்ணையை தஞ்சை மாவட்டத்தில் துவக்கி நடத்த தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு அரசு கொள்கையளவில் அனுமதி வழங்கியுள்ளது. நாகப்பட்டினத்திற்கு அருகில் வேட்டக்காரன் இருப்பு என்னுமிடத்தில் ஒரு நவீன குஞ்சு பொறிப்பகத்துடன் கூடிய ஒரு இறால் மீன் பண்ணையை நிறுவ 200 ஹெக்டேர் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. நிலத்தடி நீர்வளம் குறித்த ஆய்வு முடிவுற்றவுடன் இதில் முன்னேற்றம் காண இயலும்.

12.9. கழகத்தின் புதிய திட்டங்கள் :

1. நீலங்கரை இறால் குஞ்சு பொறிப்பகம் :

மைய அரசின் உதவியுடன் கூடிய ஒரு இறால் பொறிப்பக திட்டம் சென்னைக்கருகிலுள்ள நீலங்கரையில் கட்டப்பட்டு வருகின்றது.



2. தொண்டியக்காடு உவர் நீர் மீன் பண்ணை :

ஊரக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தொண்டியக்காடு என்னுமிடத்தில் ஒரு 50 ஹெக்டேர் உவர் நீர் மீன் பண்ணை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு மானியமாக ரூ. 29 இலட்சம் வழங்கியுள்ளது. கட்டுமானப் பணி விரைவில் துவக்கப்படும்.

வரவு-செலவு ஒரு கண்ணோட்டம்.

| கணக்குத் தலைப்பு. (1) | கணக்குகள் 1985—86 (2) | வரவு-செலவு திட்ட மதிப்பீடு 1986—87 (3) | திருத்திய மதிப்பீடு 1986—87 (4) | வரவு-செலவு திட்ட மதிப்பீடு 1987—88 (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்). | | |
| மீனளம் வருவாய்(312) (2405) | | | | |
| திட்டம் .. ... .. | 132.36 | 176.00 | 150.64 | 198.67 |
| திட்டத்தில் சேராதது .. | 336.90 | 237.19 | 347.30 | 354.48 |
| மீனளம் மூலதனம்(512):(4405) | | | | |
| திட்டம் .. .. .. | 149.67 | 183.71 | 348.65 | 303.80 |
| திட்டத்தில் சேராதது (—) | 0.26 | 4.02 | 1.28 | 3.72 |
| மீனள கடன் (712) : (6405) | | | | |
| திட்டம் .. .. .. | 6.22 | 8.92 | 8.92 | 8.42 |
| திட்டத்தில் சேராதது .. | .. | .. | .. | .. |
| கூட்டுறவு வருவாய் (298): (2425) | | | | |
| திட்டம் .. .. .. | 11.86 | 6.98 | 9.35 | 2.61 |
| திட்டத்தில் சேராதது .. | 16.83 | 15.79 | 15.86 | 17.36 |
| கூட்டுறவு மூலதனம் (498): (4425) | | | | |
| திட்டம் .. .. .. | 3.75 | 5.01 | 8.25 | 5.01 |
| திட்டத்தில் சேராதது(—) .. | 0.61 | .. | .. | .. |
| கூட்டுறவுக் கடன் (698): (6425) | | | | |
| திட்டம் .. .. .. | 6.89 | 0.02 | 7.15 | 0.02 |
| வீட்டு வசதி வருவாய் (283) : (2216) | | | | |
| திட்டம் .. .. .. | 15.85 | 50.00 | 50.00 | 50.00 |
| வீட்டு வசதி மூலதனம் (483) : (4216) | | | | |
| திட்டம் .. .. .. | 1.02 | 0.01 | 0.60 | 3.94 |
| வீட்டு வசதி கடன் (683) : (6216) | | | | |
| திட்டம் .. .. .. | .. | 0.01 | 0.01 | 0.1 |



வரவு-செலவு ஒரு கண்ணோட்டம்.

| கணக்குத் தலைப்பு. (1) | கணக்குகள் 1985—86 (2) | வரவு-செலவு திட்ட மதிப்பீடு 1986—87 (3) | திருத்திய மதிப்பீடு 1986—87 (4) | வரவு-செலவு திட்ட மதிப்பீடு 1987—88 (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்). | | |
| பொதுப்பணிகள் வருவாய் (259) : (2059) | | | | |
| திட்டத்தில் சேராதது .. | 0.41 | 0.25 | 0.25 | 0.25 |
| மலைப்பகுதி முன்னேற்றம் (308) : (2501) | | | | |
| திட்டம் .. .. .. | 1.51 | 0.01 | 1.87 | 5.30 |
| இயற்கை பாதிப்பு நிவாரணம் (289) : (2245) | | | | |
| திட்டத்தில் சேராதது .. | .. | 0.01 | 0.01 | 0.01 |
| சாலைகளும் பாலங்களும் (537) : (5054) | | | | |
| திட்டம் .. .. .. | 23.92 | 11.00 | 11.00 | 8.25 |
| இயற்கை பாதிப்புகள் (695) : (6245) | | | | |
| திட்டத்தில் சேராதது .. | 1.60 | 0.30 | 0.30 | 0.30 |
| கடலரிப்புத் தடுப்பு வேலைகள் (333 மற்றும் 533) : (2711 & 4711) | | | | |
| திட்டம் .. .. .. | .. | .. | 65.76 | 85.03 |
| திட்டத்தில் சேராதது .. | .. | .. | 56.77 | 22.40 |
| இதர இனங்கள் (268) : (2075) | | | | |
| திட்டத்தில் சேராதது .. | .. | 26.00 | .. | 43.33 |
| மொத்தம் .. | 707.96 | 825.23 | 1,103.97 | 1,112.91 |

0

வரவு-செலவு திட்ட மதிப்பீடு 1987—88.

| கணக்குத் தலைப்பு. | திட்டம் | திட்டத்தில் சேராதது. | மொத்தம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| வருவாய் .. .. .. .. .. | 256.58 | 437.83 | 694.41 |
| மூலதனம் .. .. .. .. .. | 405.03 | 3.72 | 409.75 |
| கடன் .. .. .. .. .. | 8.45 | 0.30 | 8.75 |
| மொத்தம் .. .. | 671.06 | 441.85 | 1112.91 |

மீன்வளத் துறையின் வருவாய்.

| கணக்குத் தலைப்பு. | ணக்குகள் 1985—86 | வரவு-செலவு திட்ட மதிப்பீடு 1986-87 | திருத்தப் பட்ட மதிப்பீடு 1986-87 | வரவு-செலவு திட்ட மதிப்பீடு 1987-88 |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| மீனவம் (112) (0405) | 173.21 | 121.83 | 126,20 | 126,15 |

முடிவுரை :

மீனவர்கள் தங்களுடைய வருவாயை பெருக்கிக் கொள்ள ஏதுவாக மீன் உற்பத்தியை பெருக்குவதற்கான அரசின் கொள் கைகளை விளக்கியுள்ளேன். கூட்டுறவு சங்கங்களை பலப்படுத் தவும் நாம் திட்டமிட்டுள்ளோம். அதே சமயம் மாநிலத்திலுள்ள பெரும்பாலான நலிந்த மீனவர்களின் மேம்பாட்டிற்கும் பல் வேறு நலத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. இந்த குறிக்கோள்களுடன் நம்முடைய ஏழாவது திட்டம் வரையப் பட்டுள்ளது. நம்முடைய மீனவர்களின் ஒத்துழைப்புடன் நாட்டில் மீன் உற்பத்தியில் நம்முடைய மாநிலம் ஒரு முக்கிய இடத்தை பெறுவதில் தொடர்ந்து முன்னேறும் என நான் பெரிதும் நம்புகிறேன்.



1987 ஏப்ரல் 10]

இணைப்பு III

(70 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை.

கொள்கை விளக்கக் குறிப்பு.

மானியக் கோரிக்கை எண் 32.

1987-88.

## 1. முன்னுரை.

1987-88-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை எண் 32-ன் கீழ் "பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலம்" என்ற தலைப்பில் ரூ. 13,62,33,000 வழங்குமாறு நான் முன் மொழிகிறேன்.

பொருளாதாரம், சமூக நிலை மற்றும் கல்வித் தகுதிகளில் பிற்படுத்தப்பட்டோரின் நிலைமையைக் கருத்திற்கொண்டு பிற் படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் மேம் பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக 1969-ல் பிற் படுத்தப்பட்டோர் நலத்துறை ஏற்படுத்தப்பட்டது. இத்துறை ஓர் இ.ஆ.ப. அலுவலரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. மாவட்ட அளவில் துணை ஆட்சியர் தகுதியில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்கள் மேம்பாட்டுத் திட்டங் களை செயல்படுத்தி வருகின்றனர். பிரமலைக் கள்ளர்கள் முன்னேற்றத்திற்கென வகுக்கப்பட்ட திட்டங்களை நிறைவேற்று வதற்காக தனித் துணை ஆட்சியர் (கள்ளர் சீரமைப்பு) மதுரையில் செயலாற்றி வருகிறார்.

இத்துறையால் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு தக்க கவனம் செலுத்தும் பொருட்டு பிற்படுத்தப்பட்டோர் நலத்திற் கென தனி மானியக் கோரிக்கை 1971-ம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டது. 1967-68-ம் ஆண்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்

நலனுக்காக ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 1,61,40,000 படிப்படியாக அதிகரிக்கப்பட்டு 1987-88-ம் ஆண்டில் ரூ. 13,62,33,000 ஆக உயர்ந்துள்ளது. அதுபோல 1976-77-ம் ஆண்டில் மதுரை மாவட்டத்தில் பிரமலைக் கள்ளர் நலனுக்காக செலவழிக்கப்பட்ட தொகையான ரூ. 89,41,000, 1986-87-ம் ஆண்டில் ரூ. 3,24,09,500 ஆக உயர்ந்துள்ளது. இது பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நிலையை உயர்த்துவதற்கான திட்டங்களைச் செயல்படுத்துவதில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அடைந்துள்ள முன்னேற்றத்தைக் காட்டுகிறது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் மேம்பாட்டுக்காக அரசு மேற்கொண்டுவரும் பல்வேறு நலத் திட்டங்களின் விவரம் பின்வருமாறு :—

### 2. கல்வி.

பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் பெற கல்வி ஒரு முக்கியமான சாதனமாதலின் அரசு பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் கல்வியில் ஏற்றம் பெற தனிக் கவனம் செலுத்தி வருகிறது. மேற்கான் இனத்தைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்காக பள்ளிகள், விடுதிகள் போன்ற வசதிகளையும் உதவித் தொகை, மதிய உணவு, சீருடைகள், பாடப்புத்தகங்கள், பயிற்சி மற்றும் குறிப்பேடுகள் ஆகியவற்றை அளித்து வருகிறது.

### (அ) பள்ளிகள்.

அரசு 68 சாதிகளை இனவாரியாக சீர்மரபினர் என்று பிரித்து, அவர்கள் நிலையை மேம்படுத்துவதற்காக தனிச் சலுகைகளையும், வசதிகளையும் அளித்து வருகிறது. சீர்மரபினர் சிறார்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக தமிழ்நாட்டில் 277 பள்ளிகள் நடத்தப்படுகின்றன. 1986-87-ம் ஆண்டில் சுமார் 53,000 மாணவர்கள் பயனடைந்தனர்.

1986-87-ம் ஆண்டில் மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டத்தில் ராஜதானியில் உள்ள உயர்நிலைப்பள்ளி சுமார் ரூ. 6,94,000 மொத்த செலவில் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டது.



இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் கல்வித் தரத்தையும், வசதிகளையும் உயர்த்த கீழ்க்கண்ட திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன :—

1. உசிலம்பட்டி வட்டத்தில் உள்ள தாடையாம்பட்டி மற்றும் கருக்கட்டான்பட்டி ஆகிய இடங்களில் 2 கள்ளர் துவக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக ரூ. 70,000 செலவில் உயர்த்துதல்.

2. இரண்டு மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் ஒரு நடுநிலைப் பள்ளிக்கு ரூ. 1,50,000 மதிப்பில் மரச்சாமான்கள் வழங்குதல்.

3. ராஜதானியில் உள்ள கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பு அறைகள் கட்ட அரசு ரூ. 4,20,000 அனுமதித்துள்ளது. மதுரை மாவட்டத்தில் உள்ள நாட்டார்மங்கலத்தில் கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப்பள்ளிக்குக் கூடுதல் வகுப்பு அறைகள் கட்டுதல்.

4. உத்தமபாளையம் வட்டத்தில் உள்ள வெள்ளையம்மாள்புரம் மற்றும் நிலக்கோட்டை வட்டத்தில் உள்ள விளாம்பட்டி ஆகிய இடங்களில் உயர்நிலைப் பள்ளிகளுக்கு ரூ. 9,50,000 மதிப்பில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல்.

5. நாட்டார்மங்கலம் மற்றும் செக்கானூரணியில் உள்ள மேல் நிலைப்பள்ளிகளுக்கு 18 பட்ட மேற்படிப்பு ஆசிரியர்களை நியமித்தல்.

1986-87-ம் ஆண்டு இப்பள்ளிகளை நடத்த ரூ. 2,10,72,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பள்ளிகளில் பயிலும் சுமார் 53,000 மாணவ-மாணவியர் பயன்பெறும் வகையில் இப்பள்ளிகளைச் சிறப்பாக நடத்த 1987-88-ம் ஆண்டில் ரூ. 2,19,12,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பரிசுகள் வழங்குதல் :**

பள்ளிகளில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு மற்றும் சீர்மரபினர் மாணவர்களிடையே போட்டி உணர்ச்சியை வளர்க்க மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் கீழே விவரிக்கப்பட்ட வண்ணம் அவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன :—

மாநில அளவில் வழங்கப்படும் பரிசுகள் :

| | | |
|---|---|---|
| +2 பொதுத் தேர்வு .. | ஒரு முதல் பரிசு .. மாணவர் ஒருவர் மற்றும் மாணவி ஒருவர். | ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000 மற்றும் போக்குவரத்து செலவு ரூ. 100. |
| எஸ். எஸ். எல். சி. | ஒரு முதல் பரிசு- .. மாணவர் ஒருவர் மற்றும் மாணவி ஒருவர் | ஒவ்வொருவருக்கும் ரூ. 500. |

மாவட்ட அளவில் வழங்கப்படும் பரிசுகள் :

| | | |
|---|---|---|
| +2 பொதுத் தேர்வு .. | ஒரு முதல் பரிசு .. மாணவர் ஒருவர் மற்றும் மாணவி ஒருவர், | .. ஒவ்வொருவருக்கும் ரூ. 500. |
| எஸ். எஸ். எல். சி. | .. ஒரு முதல் பரிசு மாணவர் ஒருவர் மற்றும் மாணவி ஒருவர் | ஒவ்வொருவருக்கும் ரூ. 150 |
| | இரண்டாம் பரிசு மாணவர் ஒருவர் மற்றும் மாணவி ஒருவர் | ஒவ்வொருவருக்கும் ரூ. 100 |
| | மூன்றாம் பரிசு மாணவர் ஒருவர் மற்றும் மாணவி ஒருவர் | ஒவ்வொருவருக்கும் ரூ. 50 |
| எட்டாம் வகுப்பு | .. ஒரு முதல் பரிசு மாணவர் ஒருவர் மற்றும் மாணவி ஒருவர் | ஒவ்வொருவருக்கும் ரூ. 100 |
| | இரண்டாம் பரிசு- மாணவர் ஒருவர் மற்றும் மாணவி ஒருவர் | ஒவ்வொருவருக்கும் ரூ. 50 |



மொத்தத்தில் ஒவ்வொரு ஆண்டும் 244 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இப்பரிசுகளை வழங்க ரூ. 40,000 ஒதுக்கப்பட்டுள்ளது. மேல்நிலைப்பள்ளி மற்றும் பள்ளி இறுதி வகுப்பில் மாவட்ட அளவில் முதல் மற்றும் இரண்டாவதாக தேர்ச்சி பெற்று தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி பயில்வோருக்கும் பேரறிஞர் அண்ணா மற்றும் தந்தை பெரியார் நினைவு பரிசுகள் வழங்கும் திட்டம் பரிசீலனையிலுள்ளது.

*முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் :*

கிராம மற்றும் நகர்ப்புறப் பகுதியில் இத்துறை நடத்தும் சீர்மரபினருக்கான பள்ளிகள் அனைத்திலும் 5 வயது முதல் 9 வயது வரையிலும் உள்ள எல்லா மாணவ, மாணவிகளும் பயன் பெறும் வகையில் முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் 1—7—1982-லிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் 15—9—1984 முதல் மதுரை மாவட்டத்தில் இத் துறையால் நடத்தப்படும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 10 முதல் 15 வயது வரையிலுள்ள சுமார் 7,000 பள்ளி மாணவ மாணவியர் இத்திட்டத்தின்கீழ் வருவார்கள். 1986-87-ம் ஆண்டில் மொத்தம் 52,000 மாணவ-மாணவியர் பயன்பெற்றனர். இதற்காக ரூ. 28,25,000 செலவிடப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 1987-88 ம் ஆண்டிற்கு ரூ. 28,60,000 நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இத்திட்டத்தினால் 52,000 மாணவர்கள் பயனடைவார்கள்.

*புத்தகங்கள் மற்றும் எழுதுபலகைகள் வழங்குதல்:*

இத்துறை மூலம் நடத்தப்படும் சீர்மரபினர் பள்ளிகளில் எட்டாம் வகுப்பு வரை பயிலும் எல்லா மாணவ, மாணவியருக்கும் பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இவர் களுக்கு நோட்டுப்புத்தகங்களும் பலகைகளும் இத்துறையால் வழங்கப்படுகின்றன. 1986-87-ல் 49,000 மாணவர்கள் பயனடையும் வகையில் இத்திட்டத்திற்காக ரூ. 7,57,000 ஒதுக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக 1987-88-ம் ஆண்டிற்கு ரூ. 13,84,000 ஒதுக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் 49,000 மாணவ, மாணவியர் பயனடைவர்.

**உடைகள் (பள்ளிகள்):**

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை பள்ளிகளில் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் எல்லா மாணவ-மாணவியர்களுக்கும் இரண்டு ஜோடி உடைகள் வழங்கப்படுகின்றன. 1986-87-ம் ஆண்டில் 49,000 மாணவ-மாணவியர் பயனடைந்தனர். இதற்கு ரூ. 21,59,000 ஒதுக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக 1987-88 ஆம் ஆண்டிற்கு ரூ. 22,20,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 49,000 மாணவ-மாணவியர் பயனடைவர்.

**(ஆ) அரசு மாணவர் இல்லங்கள்:**

பள்ளி மற்றும் கல்லூரி மாணவ-மாணவியருக்கெனத் தனித் தனியே இல்லங்கள் நடத்தப்படுகின்றன. ஆண்டு வருமானம் ரூ. 5,000-க்கு மேற்படாத பெற்றோர்களின் பிள்ளைகள் இந்த இல்லங்களில் சேரத் தகுதியுடையவராவார்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவர்களின் நலனுக்காகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை தற்பொழுது 558 மாணவர் இல்லங்களை ஏற்படுத்தி நடத்தி வருகிறது. 32,704 மாணவ-மாணவியர் பயனடைகின்றனர். 1986-87 ஆம் ஆண்டு இதற்காக ரூ. 4,11,89,000 ஒதுக்கப்பட்டது. இந்த 558 மாணவர் இல்லங்களில், 69 இல்லங்கள் கல்லூரி மாணவ-மாணவியருக்கும், 3 இல்லங்கள் தொழிற்பயிற்சி பள்ளி மாணவர்களுக்கும், 486 இல்லங்கள் பள்ளி மாணவ-மாணவியருக்கும் இயங்கி வருகின்றன. 1987-88 ஆம் ஆண்டில் ரூ. 8,00,000 செலவில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்காக மேலும் 15 மாணவர் இல்லங்கள் திறக்கப்பட உள்ளன. இம்மாணவர் இல்லங்களின் பராமரிப்புக்கென 1987-88 ஆம் ஆண்டிற்கு ரூ. 4,24,82,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 33,454 மாணவ-மாணவியர் பயனடைவர்.

1986-87 ஆம் ஆண்டில் 20 கல்லூரி மற்றும் பள்ளி மாணவர் விடுதிகளுக்கு சமையல் எரிவாயு இணைப்புகள் ரூ. 3,09,000 செலவில் வழங்கப்பட்டுள்ளன. 1987-88 ஆம் ஆண்டில் மேலும் 15 விடுதிகளுக்கு சமையல் எரிவாயு இணைப்புகள் ரூ. 2,70,000 செலவில் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



**உணவுச் செலவு:**

தற்சமயம் உயர்ந்து வரும் வாழ்க்கைத் தரத்தைக் கருத்திற் கொண்டு 1—12—1986 முதல் மாணவர் இல்லங்களிலுள்ள மாணவ-மாணவியருக்குப் பின்வரும் விகிதத்தில் உணவுச் செலவு அதிகரிக்கப்பட்டுள்ளது :—

| தொடர் எண்ணும் மாணவர் இல்லங்களும். | மாதமொன்றுக்கு ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும் தொகை. | |
|---|---|---|
| | சென்னை மாநகர். | வெளியூர். |
| (1) | (2) | (3) |
| | ரூ. | ரூ. |
| 1. கல்லூரி மாணவர் இல்லங்கள். | 140 | 135 |
| 2. தொழிற் கல்வி மாணவர் இல்லங்கள். | 140 | 135 |
| 3. பள்ளி மாணவர் இல்லங்கள். | 85 | 85 |

இதனால் 32,704 மாணவ-மாணவியர் பயனடைந்து வருகின்றனர். அரசால் வரையறுக்கப்பட்ட உணவு வகைகளின்படி உணவு வழங்கப்படுகிறது.

மாணவர் இல்லங்களுக்கு மாவரைக்கும் இயந்திரங்கள் 1987-88-ல் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

வேலை வாய்ப்பகம் மூலமாக அல்லாமல் நேரடியாக பணியில் அமர்த்தப்பட்ட 264 சமையலர்களின் பணி வரன்முறைப் படுத்தப்பட்டு அவர்கள் விடுப்பு மற்றும் ஓய்வூதியம் போன்ற சலுகைகளைப் பெறத் தகுதியுடையோராகின்றனர். சில்லரைச் செலவினப் பட்டியலின் கீழ் பணிபுரியும் பணியாளர்கள் 5 ஆண்டுகளுக்கு மேலும் பணியில் தொடர்ந்திருந்தால் சில நிபந்தனைகளின் அடிப்படையில் முறையான சம்பள பணித் தொகுதிக்குள் கொண்டு வந்து பணி வரன்முறை செய்ய துறைத் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

[1987 ஏப்ரல் 10

**மாணவர் இல்லக் கட்டிடங்கள் கட்டுதல்:**

தற்போது இத்துறையால் 558 மாணவரில்லங்கள் நடத்தப்படுகின்றன. இவற்றில் 49 விடுதிகள் மட்டும் அரசுக்குச் சொந்தமான கட்டிடத்தில் உள்ளன. மற்றவை வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. மேற்கான் 49 விடுதிகளில், 32 மாணவரில்லங்கள் 'தாட்கோ' மூலமாக ரூ. 1,67,00,000 செலவில் கட்டப்பட்டன. எஞ்சிய 17 விடுதிகள் அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. கட்டிடங்கள் கட்ட பொதுப்பணித் துறையைச் சார்ந்த தலைமைக் கட்டிட வல்லுநரால் தயாரிக்கப்பட்ட புதிய வடிவமைப்பு அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அரசு விடுதிக் கட்டிடங்கள் கட்டும் பணியினைப் படிப்படியாக எடுத்துக் கொள்ளத் திட்டமிட்டதற்கேற்ப, 1986-87-ல் ரூபாய் 50,61,000 செலவில் 11 விடுதிகள் கட்டுவதற்கு அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. மேற்காண் 11 விடுதிக் கட்டிடங்கள் கட்டும் பணி பொதுப்பணித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் எல்லா விடுதிகளுக்கும் படிப்படியாக சொந்தக் கட்டிடங்கள் கட்டுவது குறித்த திட்டம் கைவிடப்பட்டது.

மேலும், இரண்டு விடுதிக் கட்டிடங்களைத் தலா ரூ. 5 இலட்சம் செலவில் புதியதாக கட்ட ஒரு திட்டம் ஆய்வில் உள்ளது. இப்பணிக்காக 1987-88-ல் ரூ. 5 இலட்சம் செலவிடப்படும்.

**சீருடைகள் வழங்குதல் (மாணவ-மாணவியர் இல்லங்கள்):**

1971-72 ஆம் ஆண்டு முதல் இத்துறை நடத்தும் பள்ளி மாணவ, மாணவியர் இல்லங்களிலுள்ளவர்களுக்கு இரண்டு ஜோடி சீருடைகள் அளிக்கப்படுகின்றன. 1986-87 ஆம் ஆண்டு 24,000 மாணவ-மாணவியர் பயனடைந்தனர். இதற்கு ரூ. 19.21.000 செலவிடப்பட்டது. 1987-88 ஆம் ஆண்டிற்கு இதற்காக ரூ. 21,67,000 ஒதுக்கப்பட்டுள்ளது. 24,000 மாணவ-மாணவியர் பயனடைவர்.



1987 ஏப்ரல் 10]

**பகுதிநேர போதனை ஆசிரியர்களை நியமித்தல் :**

மாணவர் இல்லங்களில் தங்கி ஒன்பது, பத்து மற்றும் மேல் நிலை வகுப்புகளில் படிக்கும் மாணவர்களுக்கு மட்டும் காலையில்/மாலையில் போதிப்பதற்கு உயர்நிலைப்பள்ளி இல்லங்களில் பகுதி நேர போதனை ஆசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர். ஆண்டுதோறும் உயர்நிலைப் பள்ளி விடுதிகளில் ஆறு திங்களுக்கு மட்டும் சுமார் 400 பகுதி நேர போதனை ஆசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர். பகுதிநேர போதனை ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதியத்தை ரூ. 90-லிருந்து ரூ. 120 ஆக உயர்த்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**உணவு மானியம் வழங்குதல் :**

தனியாரால் நடத்தப்படும் 39 மாணவர் இல்லங்களுக்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது. சென்னை நகரம், மாவட்டம் மற்றும் வட்டத் தலைமையிடங்களிலுள்ள இல்லங்களில், மாணவர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 45 வீதமும், மற்ற இடங்களில் உள்ள இல்லங்களில் ரூ. 40 வீதமும உணவுச் செலவு ஆண்டுக்கு பத்து மாதங்களுக்கு உணவு மானியமாக வழங்கப்படுகிறது. உணவு மானியம் பெறும் இல்லங்களில் தங்கிப் பயில ஆண்டு வருமானம் ரூ. 5,000-க்கும் குறைவாக உள்ள பெற்றோர்களின் பிள்ளைகளே தகுதியுடையவர்களாவர்.

1986-87-ல் சுமார் 2,500 மாணவர்கள் பயனடைந்தனர். இதற்காக ரூ. 8,87,000 செலவிடப்பட்டது. மானியத் தொகையை உயர்த்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இதற்காக 1987-88-ஆம் ஆண்டிற்கு ரூ. 9,03,000 ஒதுக்கப்பட்டுள்ளது—இத்திட்டத்தின் மூலம் சுமார் 2,600 மாணவ, மாணவியர் பயனடைவர்.

**(இ) படிப்புதவித் தொகைகள் :**

ஏழ்மை நிலையிலுள்ள பிற்படுத்தப்பட்ட பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைக் கல்வி பயிற்றுவிக்கும் எல்லா முயற்சிகளுக்கும் உறுதுணையாக தகுதி வாய்ந்த மாணவர்களுக்கு உதவித்தொகை அளிப்பதன் மூலம் அரசு பெரும் உதவி புரிந்து

வருகிறது. இவ்வுதவித் தொகையில் மாணவர்களின் படிப்புக் கட்டணம், தனிக் கட்டணங்கள், புத்தகங்களின் விலை, தேர்வுக் கட்டணம், விடுதிகளில் தங்கிப் படித்தால் அதற்கான உண்டி, உறையுள் கட்டணமும் நிர்ணயிக்கப்பட்ட விகிதங்களில் அடங்கும். பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு ஒன்பதாம் வகுப்பிலிருந்தும், சீர்மரபினர் இனத்து மாணவர்களுக்கு நான்காம் வகுப்பிலிருந்தும் இவ்வுதவித்தொகை வழங்கப்படுகிறது. இந்த இனங்களைச் சார்ந்த மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 5,000-க்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். இவ்வுதவித் தொகையைப் பெற பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் முந்தைய ஆண்டுத் தேர்வில் 40 சதவிதம் மதிப்பெண்ணிற்குக் குறையாமல் பெற்றிருக்க வேண்டும். ஆனால் சீர்மரபினர் மாணவர்கள் முந்தைய ஆண்டுத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தாலே உதவித் தொகை வழங்கப்படுகிறது. 1986-87 ஆம் ஆண்டில் பள்ளிப் படிப்பு மற்றும் பட்டப் படிப்பு மாணவ-மாணவியர் 2,55,000 பேர், ரூ. 3,67,25,000 மதிப்புள்ள உதவித் தொகையை பெற்றுள்ளனர். இவர்களில் 2,05,000 மாணவர்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர். 50,000 மாணவர்கள் சீர்மரபினர் ஆவர்.

1982-83 ஆம் ஆண்டிலிருந்து கல்லூரிகள் மற்றும் தொழிற் கல்வி நிறுவனங்களின் முதல்வர்களுக்கு அவர்களுடைய கல்லூரிகள், தொழிற்கல்வி நிறுவனங்களில் பயிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு படிப்பு உதவித் தொகையை விரைவில் வழங்க ஏதுவாக முந்தைய ஆண்டில் அந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட உதவித் தொகையில் கணிசமான பகுதி அந்நிறுவன முதல்வரிடம் முன் பணமாகக் கொடுக்கப்படுகிறது.

புதிதாக உதவித் தொகை கோரும் மாணவர்களுக்கு அவர்கள் தகுதி பற்றிய அட்டைகள் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர்களால் கல்வி நிறுவனங்களுக்கு கொடுக்கப்படுகின்றன. கலை, விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல், கால்நடை





மருத்துவம், வேளாண்மை, சட்டம், பட்டயப்படிப்பு மற்றும் சான்றிதழ் படிப்பு, பட்டயக் கணக்கர் படிப்பு போன்ற மெட்ரிக் படிப்பிற்கு பிந்திய பாட வகுப்புகளுக்கும் படிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

(ஈ) உணவு, உறைவிடக் கட்டணம்:

விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு உதவித் தொகையுடன் வழங்கப்படும் உணவு, உறைவிடக் கட்டண வீதம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது :—

| தொடர் எண்ணும் பாடமும். | பிற்படுத்தப் பட்ட வகுப்பினர். | சீர் மரபினர். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (மாதம் ஒன்றுக்கு ரூபாய்) | |
| சென்னை நகரம் : | | |
| 1 கலை, விஞ்ஞானம், சட்டம் .. | 60 | 70 |
| 2 மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம் இவற்றைச் சார்ந்த மற்ற படிப்புகள். | 60 | 7[illegible] |
| 3 தொழில் மற்றும் தொழில் நுட்ப கல்வி. | 50 | 60 |
| வெளியூர்: | | |
| 1 கலை, விஞ்ஞானம், சட்டம் .. | 50 | 55 |
| 2 மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம், இவற்றைச் சார்ந்த மற்ற படிப்புகள். | 55 | 70 |
| 3 தொழில் மற்றும் தொழில்நுட்ப கல்வி | 45 | 50 |

(உ) படிப்புக் கட்டணச் சலுகைகள் :

மேல்நிலைப்பள்ளி வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு தமிழ்நாடு கல்வி விதி 92-ன் கீழ் கல்வித்துறையின் மூலமும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் மூலமும் படிப்புக் கட்டணச் சலுகைகள் கீழ்க்கண்டவாறு வழங்கப் படுகின்றன :—

| வருமானம். | மிகவும் பிற்படுத்தப் பட்ட வகுப்பினர். | சீர்மரபினர். | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,500 வரை வருமானம் உள்ளவர்களுக்கு. | தமிழ்நாடு கல்வி விதி எண் 92-ன் படி முழுக் கட்டணச் சலுகை. | தமிழ்நாடு கல்வி விதி எண் 92-ன் படி முழுக் கட்டணச் சலுகை. | தமிழ்நாடு கல்வி விதி எண் 92-ன் படி அரைச் சம்பள சலுகை, பாதிப் படிப்புக் கட்டணம் உதவித் தொகையுடன் சேர்த்து பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையால் வழங்கப்படுகிறது |
| ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1, 501 முதல் ரூ. 5000 வரை வருமானம் உள்ளவர்களுக்கு. | கல்வித்துறையிடமிருந்து சலுகை எதுவும் கிடையாது. இம்மூன்று பிரிவினருக்கும் பாதிப் படிப்புக் கட்டணச் சலுகை பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலம் உதவித்தொகையுடன் சேர்த்து வழங்கப்படுகிறது. | | |

வருமான உச்ச வரம்பை உயர்த்துவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது. உதவித் தொகை வழங்குவதற்காக 1987-88 ஆம் ஆண்டிற்கு ரூ. 3,77,63,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் மூலம் 2,55,000 மாணவ, மாணவியர் பயனடைவர்.



(ஊ) கடன் உதவித் தொகை :

தொழிற் படிப்புகளைப் படிக்கும் மாணவ, மாணவியருக்கு அவரவர்களின் பெற்றோரின்/பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ. 5,001 முதல் ரூ. 10,000-க்கு உட்பட்டு இருந்தால் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 500 விதம் கடன் உதவித்தொகை வழங்கப் படுகிறது. ஒரு குறிப்பிட்ட படிப்பை படிக்கும் காலத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு மிகாமல் உதவித்தொகை ரூ. 2,500 ஆக வரையறுக்கப்பட்டுள்ளது. 1986-87-ல் 18 மாணவர்கள் பயனடைந்தனர். அவர்களுக்கு ரூ. 9,000 கடன் உதவித்தொகையாக வழங்கப்பட்டது. 1987-88 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கென ரூ. 1,13,000 ஒதுக்கப்பட்டுள்ளது. கடன் உதவித் தொகையை ரூ. 500-லிருந்து ரூ. 750 ஆக 1987-88 ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

### 3. பயிற்சி.

### இ.ஆ.ப., இ.கா.ப. போன்ற அனைத்திந்திய பணிகளுக்கான சிறப்பு பயிற்சி நிலையம்.

1971-ஆம் ஆண்டு டிசம்பரில் அனைத்திந்திய உயர் அரசுப் பணிகளுக்காக மைய அரசு தேர்வாணையம் நடத்தும் தேர்வுகள் எழுதும் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் மாணவர்களுக்கு அந்தந்த தேர்வு எழுத பயிற்சி அளிக்கும் வகையில் சிறப்பு பயிற்சி நிலையம் ஒன்று சென்னையில் தொடங்கப்பட்டு செயல் பட்டு வருகிறது.

1986-87 ஆம் ஆண்டு சென்னையிலுள்ள பயிற்சி நிலையத்தில் 84 மாணவர்கள் பயிற்சி பெற்றனர். இதற்காக ரூ. 5,49,000 செலவிடப்பட்டது. 1987-88 ஆம் ஆண்டிற்கு ரூ. 5,88,000 ஒதுக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 100 பேர் பயனடைவர்.

பொது நோக்கு பொறியியற் பட்டறைகள் :

இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூரிலும், மதுரை மாவட்டத்தில் செக்கானூரணியிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் வீரகேரளம்புதூரிலும் உள்ள மூன்று பொது நோக்கு பொறியியல் பட்டறைகள் வேலை வாய்ப்பு மற்றும்

பயிற்சி துறை இயக்குநரின் மேற்பார்வையில் நடத்தப்படுகின்றன. இவை 1984 ஆம் ஆண்டு ஜூலை திங்களிலிருந்து தொழிற்பயிற்சி நிலையங்களின் தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளன. இவற்றிற்காகும் செலவு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்த இட்டாட்டறைகளில் பொருத்துதல், பற்றவைத்தல் மற்றும் கடைசல் ஆகியவற்றில் தொழிற்பயிற்சி அளிக்கப்படுகிறது. சீர்மரபினர் மேற்கூறிய தொழில்களில் பயிற்சி பெற்று அவர்களுடைய பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ள ஏதுவாக, தானே தொழில்களை ஆரம்பிக்கவும் அல்லது வேலை வாய்ப்பு பெறும் வகையிலும் போதிய தொழில் நுட்பத் திறமையை வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஆண்டொன்றுக்கு 208 நபர்கள் இப்பயிற்சி நிலையங்கள் மூலம் பயன் பெறுவர்.

**தொழிற் பயிற்சிக் கூடங்கள் :**

சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோரின் நலனுக்காக கீழ்க்காணும் தொழிற்பயிற்சிகூடங்கள் செயல் படுகின்றன :—

1. தையல் மற்றும் ஆயத்த ஆடை பயிற்சி நிலையம், அண்ணா நகர், திருநெல்வேலி மாவட்டம்.

2. தையல் மற்றும் பூ வேலைப்பாடு நிலையம், தெற்குத் தெரு, மதுரை மாவட்டம்.

3. தையல் நிலையம், இராமவர்மபுரம், கன்னியாகுமரி மாவட்டம்.

4. தையல் நிலையம், திருவெண்ணெய்நல்லூர், தென் ஆற்காடு மாவட்டம்.

5. தையல் நிலையம், உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.

6. தையல் நிலையம், சேரன்மாதேவி, திருநெல்வேலி மாவட்டம்.



7. தையல் நிலையம், இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம்.

8. பிரம்பு மற்றும் நாரிழைப் பிரிவு, தக்கலை மற்றும் குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம்.

தையற் பயிற்சி நிலையங்கள் சமூக நலத்துறை இயக்குநரின் நிர்வாகத்தின்கீழ் இயங்கி வருகின்றன. பிரம்பு மற்றும் நாரிழை பயிற்சி நிலையங்கள் கன்னியாகுமரி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலரின் நிர்வாகத்தின்கீழ் இயங்கி வருகின்றன.

போதிய காட்சிக் கூடமோ, விற்பனை வசதியோ இல்லாததால் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பிரம்பு மற்றும் நார்ப்பயிற்சி நிலையங்களை இத்துறையின் கட்டுப்பாட்டிலிருந்து தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்திற்கு மாற்ற அரசு ஆய்வு செய்து வருகிறது.

இதற்காக 1986-87-ல் ரூ. 16,87,000 செலவழிக்கப்பட்டது. 1987-88-ல் ரூ. 18,75,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

**பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வேலை வாய்ப்பு பயிற்சித் திட்டம் :**

1984-85 ஆம் ஆண்டு முதல் பள்ளி மற்றும் கல்லூரியில் பயின்றவர்களுக்கு வேலை வாய்ப்பு படிப்புகளுக்கான கம்ப்யூட்டர் பயிற்சி மற்றும் நிறுவனங்களில் பணி நியமனங்களுக்கான போட்டித் தேர்வுகளுக்கு பயிற்சி அளிக்கும் திட்டத்தினை துவக்கி, இதற்கு ஆகும் மொத்த செலவையும் அரசு ஏற்கிறது. தகுதியுடைய பயிற்சி பெறும் மாணவர்களுக்கு உதவித் தொகை அல்லது உண்டி, உறையுள் வசதி செய்து தரப்படுகிறது. மூன்று மாதத்திற்கு 150 நபர்கள் வீதம் ஆண்டொன்றுக்கு 600 பேர் பயனடைவர்.

1986-87 ஆம் ஆண்டு 386 பேர்கள் பயனடைந்தனர். இப்பயிற்சியாளர்கள் பயிற்சிக் காலத்தில் சென்னையில் தங்கிப் பயில ஆண்களுக்காகவும், பெண்களுக்காகவும் இரண்டு விடுதிகள் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆண்கள் விடுதி 1984 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் திறக்கப்பட்டது. சென்னை

[1987 ஏப்ரல் 10

குரோம்பேட்டையில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரியில் கம்ப்யூட்டர் பயிற்சி பெறுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 50 மாணவர்கள் இவ்வில்லத்தில் தங்கி வருகின்றனர். எனவே, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களை நவீன கம்ப்யூட்டர் பயிற்சி பெற டெல்லிக்கு அனுப்புவது தேவை இல்லை எனக் கருதப்படுகிறது. இதற்காக 1986-87-ல் ரூ. 2,44,000 செலவழிக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக 1987-88 ஆம் ஆண்டிற்கு ரூ. 2,87,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

### சட்டப் பட்டதாரிகளுக்குப் பயிற்சி அளித்தல் :

பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த 20 சட்டப் பட்டதாரிகளை ஆண்டுதோறும் தெரிந்தெடுத்து அவர்கள் அனுபவம் பெறும் பொருட்டு பல்வேறு சட்டப் பிரிவுகளில் வல்லமை பெற்று சிறந்து விளங்கும் முதுநிலை வழக்குரைஞர்களிடம் 3 ஆண்டுகள் பயிற்சி பெறத் திட்டமொன்றினை அரசு உருவாக்கியிருக்கிறது. பயிற்சிக் காலத்தில் பயிற்சி பெறுவோருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 500 உதவித் தொகையாக வழங்கப்படும். முதுநிலை வழக்குரைஞர்கள் இத்திட்டத்தில் பங்கேற்பதைச் சிறப்பிக்கும் பொருட்டு அவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 5,001 மதிப்பூதியம் வழங்கப்படும். 1987-88 ஆம் ஆண்டிற்கு ரூ. 1,88,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

### நுழைவுத் தேர்வு :

திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் சென்னை ஆகிய நான்கு இடங்களில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டது. ஜூலை 1986-ல் 211 மாணவர்களுக்கு பயிற்சி அளித்ததில் 71 மாணவர்கள் நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர். 1987-88 ஆம் ஆண்டில் மேலும் 2 இடங்களில் இம்மாதிரி நுழைவுத் தேர்வுப் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.



1987 ஏப்ரல் 10]

## 4. பொருளாதார முன்னேற்றம்.

### தொழிற் கருவிகள் வழங்குதல் :

முடி திருத்தும் கருவிகள் மற்றும் துணித் தேய்ப்புப் பெட்டிகள் நாவிதர் மற்றும் வண்ணார் ஆகியோருக்கு முறையே இலவசமாக வழங்கப்படுகிறது. கல்லுடைக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள போயர்களுக்கு இலவசமாக தொழிற் கருவிகள் வழங்கும் திட்டம் 1978-79 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. தற்பொழுது இத் திட்டம் சென்னை மாநகரைத் தவிர எல்லா மாவட்டங்களிலும் செயலில் உள்ளது.

1986-87 ஆம் ஆண்டு இலவச தொழிற் கருவிகள் வழங்கும் திட்டத்தின்படி 5,605 பேர் பயனடைந்தனர். இதற்காக ரூ. 21,41,000 செலவிடப்பட்டது. 1987-88 ஆம் ஆண்டும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். அதிகத் தொகை செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### முடிதிருத்தும் நிலையம் அமைத்தல் :

நகராட்சி மற்றும் பேரூராட்சியில் முடி திருத்தும் நிலையம் அமைக்க ஒரு திருத்திய திட்டத்திற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. இத்திட்டத்தின்படி ரூ. 1,500 அரசின் மானியத் தொகையாகவும், ரூ. 3,500 வங்கிக் கடனாகவும் வழங்கப்படுகிறது. இத் திட்டத்திற்கு 1986-87 ஆம் ஆண்டிற்கு 76 பேர் பயனடையும் வண்ணம் ரூ. 1,14,000 ஒதுக்கப்பட்டது.

சலவைத் தொழிலாளர்களுக்கு துணித் தேய்ப்புப் பெட்டி இத்துறை மூலம் இலவசமாக வழங்கப்படுகிறது. இவர்களின் பொருளாதார நிலை உயர்வதற்காக அவர்களுக்கு ரூ. 5,000 செலவில் சலவையகம் திறக்க ஒரு திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளது. இதில் ரூ. 1,500 மான்யமாகும், ரூ. 3,500 வங்கிக் கடனாகும்.

**சலவைத்துறை கட்டுதல் :**

சலவைத்துறை கட்டுவது சலவைத் தொழிலாளர்க்கென்று செய்து கொடுக்கப்படும் முக்கிய வசதியாகும். பேரூராட்சிகளுக்கும் மற்றும் நகராட்சிகளுக்கும் சலவைத்துறை கட்ட பின் வருமாறு நிதி உதவி அளிக்கப்படுகின்றன:—

| | |
|---|---|
| 1. அரசின் உதவித் தொகை | 75 சதவிதம். |
| 2. உள்ளாட்சி மன்றத்தின் பங்கு | 20 சதவிதம். |
| 3. பயனடைவோரின் பங்கு | 5 சதவிதம். |

1987-88 ஆம் ஆண்டிற்கு ரூ. 1,00,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

**பாசனக் கிணறு தோண்டுதல் :**

சீர்மரபினர் பொருளாதார நிலையை மேம்படுத்தும் பொருட்டு அவர்களில் 2 ஏக்கருக்கும் குறையாத வேளாண்மை நிலம் உள்ளவர்களுக்கு பாசனக் கிணறு வெட்ட மான்யம் அளிக்கப்படுகிறது. ஒரு கிணறு வெட்ட வழங்கப்படும் அதிக பட்ச மான்யத் தொகை ரூ. 2,500 ஆகும். இத்திட்டத்தின் மூலம் 934 பேர் பயனடைந்துள்ளனர். 1986-87 ஆம் ஆண்டிற்கு ரூ. 1,18,000 ஒதுக்கப்பட்டது. 1987-88 ஆம் ஆண்டிற்கு இத் திட்டத்திற்கு ரூ. 1,18,000 ஒதுக்கப்பட்டுள்ளது

**வீட்டுவசதி :**

சீர்மரபினர் சமுதாயத்தினருக்காக தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 1979-80 மற்றும் 1980-81 ஆம் ஆண்டுகளில் 967 வீடுகள் கட்டும் பணி மேற்கொள்ளப் பட்டது. இவற்றில் 785 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. வட ஆற்காடு மாவட்டம், அரும்பருத்தி கிராமத்தில் 76 வீடுகள் நரிக்குறவர்களுக்காக கட்டப்பட்டுள்ளன. சீர்மரபினர் வீடு கட்டிக் கொள்வதற்காக வழங்கப்படும் உதவித் தொகையை உயர்த்தும் செயற் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.



**பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக வீட்டுமனைகள் கையகப் படுத்துதல்.**

பிற்படுத்தப்பட்ட வகுப்பினரில் மிகவும் நலிவுற்ற நிலையிலுள்ள மக்களுக்காக, குறிப்பாக, தொழில் அடிப்படையிலான வகுப்புக்களைச் சார்ந்தவர்களும் மிகவும் நலிந்த நிலையிலுள்ளவர்களுமான ஒட்டர், நாவிதர், வண்ணார், நரிக்குறவர் வகுப்பை சார்ந்தவர்களுக்கு வீட்டு மனைகள் வழங்க நிலங்களை கையகப்படுத்தும் சிறப்புத் திட்டமொன்றை அரசு 1981-82-லிருந்து செயல்படுத்தி வருகிறது. 1986-87-ம் ஆண்டில் இத் திட்டத்திற்காக ரூ. 10,50,000 ஒதுக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு 1987-88-ம் ஆண்டிற்கு ரூ. 13,38,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

**5. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்.**

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் அரசால் ஏற்படுத்தப்பட்டு 10—11—81-ல் பதிவு செய்யப் பட்டு தனது பணியினை 22-5-82 முதல் தொடங்கியது. இக் கழகத்திற்கென அங்கீகரிக்கப்பட்ட முதலீட்டுத் தொகை ரூபாய் பத்து கோடியாகும். அரசு இதுவரை ரூ. 30 இலட்சம் பங்கு மூலதனமாகவும் ரூ. 15 இலட்சம் வழிவகை ஏற்பாட்டு முன் பணமாகவும் வழங்கியுள்ளது.

**இக்கழகத்தின் நோக்கமாவது :**

1. பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் தங்களின் பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டு தொழில் தொடங்குவதற்கான தொடக்க முதலீட்டுத் தொகையை குறைந்த வட்டியில் வழங்குதல் ; மற்றும்

2. பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் பொருளாதார மேம் பாட்டிற்கு அவசியம் என்று கருதக்கூடிய வர்த்தக வணிக தொழில் ரீதியான மற்றும் பொதுவான நடவடிக்கைகளை நேரடியாக அல்லது மறைமுகமாக மேற்கொள்ளுதல்.

இக்கழகம் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு மட்டும் விவசாய முன்னேற்ற திட்டங்கள், கால்நடை வளர்ச்சி, கிராம மற்றும் குடிசைச் தொழில்கள் மற்றும் அதைப் போன்ற அனைத்து தொழில்கள் மூலம் பிற்படுத்தப்பட்ட மக்களின்

வாழ்க்கைத் தரம் உயர்வதற்காக நிதியுதவியை வழங்கி வருகிறது. இக்கழகம், தற்போதைய கழக விதி அமைப்புக் களின்படி, திட்ட மதிப்பீட்டில் 20 சதவீத தொகையையோ அல்லது அதிகபட்சமாக ரூ. 25,000-யோ 4 சதவீத எளிய வட்டியில் கடனாக கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கி வருகிறது. எஞ்சியுள்ள 80 சதவீத முதலீட்டுத் தொகையை நாட்டுடைமை யாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்தோ அல்லது கூட்டுறவு வங்கி களிடமிருந்தோ பெற்றுக் கொள்ள தக்க ஏற்பாடு செய்து வருகிறது. அண்மையில் அரசு ரூ. 50 இலட்சத்தை (ரூ. 10 இலட்சம் நிர்வாகச் செலவிற்காகவும், ரூ. 40 இலட்சம் திட்டங் களுக்காகவும்) இக்கழகத்திற்கு வட்டியில்லாக் கடனாக வழங்கி யுள்ளது.

இக்கழகம் உருவாக்கிய, பரிசீலனையில் உள்ள மற்றும் செயல் படுத்தும் திட்டங்களின் விவரம் பின்வருமாறு:—

| | திட்டங் களின் எண் ணிக்கை. | திட்ட மொத்த மதிப்பீடு | ஆரம்ப முதலீட்டு உதவி | பயன் பெறும் குடும்பங் களின் எண் ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1986–87— | | | | |
| அ. செயல்படுத்துபவை | 66 | 222.152 | 49.009 | 3,602 |
| ஆ. பரிசீலனையில் உள்ளவை. | 131 | 822.250 | 159.793 | 6,223 |
| இ. உருவாக்குபவை | 300 | 465.775 | 93.150 | 10,398 |
| மொத்தம் | 497 | 1510.177 | 301.952 | 20,223 |
| 1987-88— | | | | |
| உருவாக்குபவை | | 7,250.00 | 1,450.00 | 96,200 |

6. முடிவுரை.

இவ்வாறு இவ்வரசு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் வாழ்வை உயர்த்திட பல முன்னேற்றத் திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. இந்த மானியத்தை ஏற்று ஒப்பளிக்க இம்மாமன்றத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.



இணைப்புகள்.

1987–88–ம் ஆண்டிற்கான வரவு-செலவு மதிப்பீடு.

(ரூபாய் ஆயிரத்தில்).

மொத்தம் 136233

நிர்வாகத்தில் 9215 — திட்டத்தில் 118351

பல்வகை செலவு 8,667

| திட்டத்தின் பெயர் | திட்டத்தில் சேர்ந்தவை 17777 | | திட்டத்தில் சேராதவை 100574 | |
|---|---|---|---|---|
| | பி.வ. | சீ.ம. | பி.வ. | சீ.ம. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 உதவித்தொகை | 175 | 332 | 32617 | 4634 |
| 2 பள்ளிகள் | .. | 506 | .. | 21406 |
| 3 மதிய உணவு | .. | 667 | .. | 2193 |
| 4 புத்தகம் மற்றும் உடை | 1219 | 3569 | 392 | 591 |
| 5 உணவு மானியம் | 54 | .. | 846 | 3 |
| 6 விடுதிகள் | 7046 | 469 | 28057 | 6,910 |
| 7 பலகலைக்கழக மானியம் | .. | .. | 296 | .. |
| 8 ஆசிரியர்களுக்கு வீடுகள் | .. | 15 | .. | .. |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 விவசாயம் | .. | .. | .. | 118 |
| 10 தொழிற் பயிற்சி | .. | 260 | 175 | 1440 |
| 11 இலவசக் கருவிகள் | 1476 | .. | [illegible]0 | 1 |
| 12 குடிநீர் | .. | .. | .. | 10 |
| 13 சலவைத் துறை | 100 | .. | .. | .. |
| 14 சிறப்புப்பயிற்சி நிலையம் | .. | .. | 588 | .. |
| 15 சீர்மரபினருக்கு வீட்டுவசதி | .. | .. | .. | .. |
| 16 வீட்டுமனை கையகப்படுத்துதல் | 1 88 | .. | 25[illegible] | [illegible] |
| 17 சிறப்புப் பயிற்சி | .. | .. | 32[illegible] | [illegible] |
| 18 பட்டயக் கணக்கர் படிப்பு | .. | .. | 5[illegible] | [illegible] |
| 19 சிறந்த மாணவர்களுக்குப் பரிசு | 200 | .. | [illegible] | [illegible] |
| 20 பள்ளிகள்/விடுதிகள் கட்டுதல் (பழுது பார்த்தல்), | 25 | .. | [illegible] | [illegible] |
| 21 வேலை வாய்ப்புப் பயிற்சியாளர்களுக்கு விடுதிகள். | 287 | .. | [illegible] | [illegible] |
| 22 சட்ட பட்டதாரிகளுக்குப் பயிற்சி | 188 | .. | .. | .. |
| மொத்தம் .. | 11958 | 5819 | 63268 | 37306 |

1987–88-ல் மொத்தம் ரூ. 13,62,33,000
1986–87-ல் மொத்தம் ரூ. 12,89,61,000

136518
V811.31 N87
N87.38.2

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore. Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Counder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 55, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad
5 Puthagalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.